ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வாரருளிச் செய்த

திருவாய்மொழி - முதற்பத்து.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

திவ்யார்த்ததீபிகை யுரையுடன் கூடியது.

ஸ்ரீ ஸ்வாமியின்

ஷஷ்டி பூர்த்தி நினைவு மாலையின்

17-வது மலராக வெளியிடப்பட்டது.

பார்வர்ட் பிரிண்டர்ஸ், கும்பகோணம்,

கிடைக்குமிடம் :—

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

விலை 2—8—0

1953.

॥ श्रीः ॥

श्रीवैष्णव संप्रदाय पुस्तकसूची

॥ श्रीकाञ्ची - प्रतिवादि भयंकर अण्णङ्गराचार्य संमुद्रणम् ॥

		Rs. A
१.	श्रीमद्वेदान्तदेशिकग्रन्थमाला समग्रा समीचीनरक्षाबन्धनसहिता	४५—०
	— तस्याः प्रत्येकविभागाः रक्षाबन्धं विना —	
२.	अधिकरणसारावली शतदूषणी च	५—०
३.	मीमांसापादुका सेश्वरमीमांसा न्यायपरिशुद्धिः न्यायसिद्धाञ्जनं च	५—०
४.	सर्वार्थसिद्धिसहितः तत्त्वमुक्ताकलापः	६—०
५.	हंससंदेशः, सुभाषितनीवी, यादवाभ्युदयः, संकल्पसूर्योदयश्च	५—०
६.	ईशावास्योपनिषद्भाष्यम् चतुःश्लोकीभाष्यम् स्तोत्ररत्नभाष्यम् गद्यभाष्यं च	३—०
७.	गीतार्थसंग्रहरक्षा गीताभाष्यतात्पर्यचन्द्रिका च	८—०
८.	तत्त्वटीका, निक्षेपरक्षा, सच्चरित्ररक्षा पाञ्चरात्ररक्षा इत्यादि	६—०
९.	श्रीतत्त्वशोधन-वात्सल्यार्थप्रकाशिकादिकम्	२—०
१०.	श्रीमदण्णङ्गराचार्यसंस्कृतग्रन्थमाला १, २, ३,	५—०
११.	हयग्रीवस्तोत्रप्रभृति सर्वाणि स्तोत्राणि (आन्ध्राक्षरमुद्रितानि)	२—०
१२.	पादुकासहस्रम् (आन्ध्राक्षरेषु)	१—८
१३.	पूर्वाचार्यस्तोत्रमाला (श्रीवैष्णवसंप्रदायप्रवर्तनधुरंधर श्रीकुलशेखरसूरिप्रभृति श्रीवरवरमुनिशिष्यवर्गपर्यन्त सकलपूर्वाचार्यप्रणीता)	२—०
१४.	सिद्धित्रयम् —भगवद्यामुनमुनिभिरनुगृहीतम्	१—०
१५.	श्रीविष्णुसहस्रनामभाष्यम् भगवद्गुणदर्पणाख्यम् श्रीपराशरभट्टार्यानुगृहीतम्	२—८
१६.	यतीन्द्रमतदीपिका	१—०
१७.	वेदान्तवादावलिः—मैसूरु अनन्तार्यकृता	२४—०
१८.	श्रीवचनभूषणमीमांसाभाष्यम्—कुन्नत्तूरय्यनकृतिः ॥	३—०
१९.	वैदिकमनोहरा मासपत्रिका सञ्चिकाः १—७०	१२—०
२०.	श्रीवैष्णवसुधा (हिन्दी) मासपत्रिकासञ्चिकाः १—४८	१३—०
२१.	तर्कशास्त्रसर्वस्वम्	०—८
२२.	क्षेत्रतीर्थयात्रादर्शः	०—८
२३.	रहस्यरत्नमालिका	०—८
२४.	औत्तरदिव्यदेशदिव्य प्रबन्धावली	२—०
२५.	ब्रह्मव्याप्तिपरिष्क्रिया	०—८
२६.	यतिराजविंशतिव्याख्या (हिन्दीटीकायुता)	०—१२
२७.	श्रीभट्टनाथसूक्तसर्वस्वम्	१—०
२८.	तिरुप्पल्लाण्डुदिव्यप्रबन्धस्य संस्कृतव्याख्या	०—१२
२९.	आल्वारवैभवम् (हिन्दीभाषायाम्)	०—१२
३०.	तिरुप्पल्लाण्डुव्याख्या (हिन्दी) सकलदिव्यदेशसूची च	०—१२

वैदिकमनोहरानाम्नी संस्कृतपत्रिका प्रतिमासमवतरति । अन्वर्थनाम्नी सैषा पत्रिकेति विद्वांसः प्रशंसन्ति । अस्या वार्षिकमूल्यम्—रूप्यत्रयमात्रत् ॥

प्राप्तिस्थानम्—ग्रन्थमाला आफीस, काञ्चीपुरम्

P. B. ANNANGARACHARYA

Editor Granthamala Kancheepuram

(23-6-53)

ஸ்ரீ:
பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

பொதுத் தனியன்கள்

நம்பெருமாள் அருளிச்செய்தது

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||

கூரத்தாழ்வான் அருளிச்செய்தவை

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம் |
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||
யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே ||
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே.

ஆளவந்தார் அருளிச்செய்தது

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்

(பொதுத்தனியன்கள் முற்றும்.)

॥ श्रीः ॥

श्रीवैष्णव संप्रदाय पुस्तकसूची

॥ श्रीकाञ्ची - प्रतिवादि भयंकर अण्णङ्गराचार्य संमुद्रणम् ॥

		Rs. A
१.	श्रीमद्वेदान्तदेशिकग्रन्थमाला समग्रा समीचीनरक्षाबन्धनसहिता	४५—०
	— तस्याः प्रत्येकविभागाः रक्षाबन्धं विना —	
२.	अधिकरणसारावली शतदूषणी च	५—०
३.	मीमांसापादुका सेश्वरमीमांसा न्यायपरिशुद्धिः न्यायसिद्धाञ्जनं च	५—०
४.	सर्वार्थसिद्धिसहितः तत्त्वमुक्ताकलापः	६—०
५.	हंससंदेशः, सुभाषितनीवी, यादवाभ्युदयः, संकल्पसूर्योदयश्च	५—०
६.	ईशावास्योपनिषद्भाष्यम् चतुःश्लोकीभाष्यम् स्तोत्ररत्नभाष्यम् गद्यभाष्यं च	३—०
७.	गीतार्थसंग्रहरक्षा गीताभाष्यतात्पर्यचन्द्रिका च	८—०
८.	तत्त्वटीका, निक्षेपरक्षा, सच्चरित्ररक्षा पांचरात्ररक्षा इत्यादि	६—०
९.	श्रीतत्त्वशोधन—वात्सल्यार्थप्रकाशिकादिकम्	२—०
१०.	श्रीमदण्णङ्गराचार्यसंस्कृतग्रन्थमाला १, २, ३,	५—०
११.	हयग्रीवस्तोत्रप्रभृति सर्वाणि स्तोत्राणि (आन्ध्राक्षरमुद्रितानि)	२—०
१२.	पादुकासहस्रम् (आन्ध्राक्षरेषु)	१—८
१३.	पूर्वाचार्यस्तोत्रमाला (श्रीवैष्णवसंप्रदायप्रवर्तनधुरंधर श्रीकुलशेखरसूरिप्रभृति श्रीवरवरमुनिशिष्यवर्गपर्यन्त सकलपूर्वाचार्यप्रणीता)	२—०
१४.	सिद्धित्रयम्—भगवद्यामुनमुनिभिरनुगृहीतम्	१—०
१५.	श्रीविष्णुसहस्रनामभाष्यम् भगवद्गुणदर्पणाख्यम् श्रीपराशरभट्टार्यानुगृहीतम्	२—८
१६.	यतीन्द्रमतदीपिका	१—०
१७.	वेदान्तवादावलिः—मैसूरु अनन्तार्यकृता	२४—०
१८.	श्रीवचनभूषणमीमांसाभाष्यम्—कुन्नत्तूरय्यनकृतिः ॥	३—०
१९.	वैदिकमनोहरा मासपत्रिका सञ्चिकाः १—७०	१२—०
२०.	श्रीवैष्णवसुधा (हिन्दी) मासपत्रिकासञ्चिकाः १—४८	१३—०
२१.	तर्कशास्त्रसर्वस्वम्	०—८
२२.	क्षेत्रतीर्थयात्रादर्शः	०—८
२३.	रहस्यरत्नमालिका	०—८
२४.	औत्तरदिव्यदेशदिव्य प्रबन्धावली	२—०
२५.	ब्रह्मव्याप्तिपरिष्क्रिया	०—८
२६.	यतिराजविंशतिव्याख्या (हिन्दीटीकायुता)	०—१२
२७.	श्रीभट्टनाथसूक्तसर्वस्वम्	१—०
२८.	तिरुप्पल्लाण्डुदिव्यप्रबन्धस्य संस्कृतव्याख्या	०—१६
२९.	आल्वारवैभवम् - (हिन्दीभाषायाम्)	०—१२
३०.	तिरुप्पल्लाण्डुव्याख्या (हिन्दी) सकलदिव्यदेशसूची च	०—१२

वैदिकमनोहरानाम्नी संस्कृतपत्रिका प्रतिमासमवतरति । अन्वर्थनाम्नी सैषा पत्रिकेति विद्वांसः प्रशंसन्ति । अस्या वार्षिकमूल्यम्—रूप्यत्रयमात्रम् ॥

प्राप्तिस्थानम्—ग्रन्थमाला आफीस, काञ्चीपुरम्

P. B. ANNANGARACHARYA
Editor Granthamala Kancheepuram
(23-6-53)

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

பொதுத் தனியன்கள்

நம்பெருமாள் அருளிச்செய்தது

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||

கூரத்தாழ்வான் அருளிச்செய்தவை

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம் |
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||
யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே ||
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஸரணம் ப்ரபத்யே.

ஆளவந்தார் அருளிச்செய்தது

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத் பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ||

(பொதுத்தனியன்கள் முற்றும்.)

அலங்காரமாய் ஆழ்வார்க்குப் பூர்ண நிரூபகமுமான தாமிரபரணீ திவ்ய நதியையும் அநுஸந்தித்துப் பின்பு 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்னவேணுமென்கிறது. இதனால் உத்தேச்ய வஸ்துவின் ஸம்பந்த ஸம்பந்தம்பெற்ற வஸ்துக்களும் உத்தேச்யம் என்கிற சாஸ்த்ரார்த்தம் வெளியிடப்பட்டதாகும். எம்பெருமானது சேவடியை அநுஸந்திக்குமவர்கள் * வைகுந்த வானாடையும் * இறந்தால தங்குமூரான கண்ணன் விண்ணூரையும் * அமுத விரசையாற்றையும் அநுஸந்திக்குமாபோலே.

"வாய்ந்த வழுதிவளநாடன் மன்னு குருகூர்ச் சடகோபன்" என்றும் "நல்லார் நவில் குருகூர்நகரான்" என்றும் "பொருநற் சங்கணித்துறைவன்" என்றும் நாட்டையும் ஊரையும் ஆற்றையும் தமக்கு நிரூபகமாக ஆழ்வார் தாமே அருளிச்செய்திருக்கையாலே அம் மூன்றையும் அநுஸந்திக்கச் சொல்லிற்று.

தேளிந்து=ஆழ்வார் திருவடிகளை உபாயமும் உபேயமும் என்கிற தெளிந்த அத்யவஸாயங்கொண்டு என்றபடி. ... . (*)

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை யல்லா திறைஞ்சேன் — தனத்தாலும்
ஏதுங் குறைவிலேன் எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று.

மனத்தாலும்	நெஞ்சினாலும்	ஏதும் குறைவு இலேன்	எவ்விதமான குறையுமுடையே னல்லேன், (எதனாலென்னில்)
வாயாலும்	வாக்கினாலும்	எந்தை சடகோபன்	அஸ்மத் ஸ்வாமியான நம்மாழ்வாருடைய
வண் குருகூர் பேணும்	திருநகரியை ஆச்ரிக்கின்ற	பாதங்கள்	திருவடிகள்
இனத்தாரை அல்லாது	கோஷ்டியில் சேர்ந்தவர்களைத் தவிர (மற்றையோர்களை)	யாமுடைய	நம்முடைய
இறைஞ்சேன்	வணங்கமாட்டேன்;	பற்று	ஆதாரமாயிராநின்றது
தனத்தாலும்	செல்வத்தினாலும்		

* * * — ஆழ்வார் திருநகரியையே போற்றிக்கொண்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவகோஷ்டியில அங்வயித்த மஹான்களைத்தவிர மற்று எவரையும் வணங்கமாட்டேனென்றது, எப்போதும் அப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ சிகாமணிகளையே வணங்குவே னென்றபடி.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணுகையாவது— "திருக்குருகூரதனை உளங்கொள் ஞானத்து வைம்மின்" என்றும "திருக்குருகூரதனைப் பாடி யாடிப் பரவிச்சென்மின்கள்" என்றும ஆழ்வார் உபதேசித்தருளினபடியே திருக்குருகூரை நெஞ்சாலே சிந்தித்தும் வாயாலே சொல்லியும போருகை. மனமொழிகளிரண்டைச் சொன்னது மூன்றாவதான சரீரத்திற்கும் உபலக்ஷணம் என்று சிலர் கொள்வர். திருநகரியைச் சென்றடைதல மெய்யினால் பெறுதலாகும. திருக்குருகூரை நெஞ்சினால் நினைந்து வாயினால் மொழிதலே போதும், சென்று சேவிக்கவேணுமென்னும் நிர்ப்பந்தமில்லை என்பது இத்தனியனருளிச் செய்தவரின் திருவுள்ளமென்ப. "பேணுமினத்தாரை" என்றது, பேணுகிறவர்களின் ஜாதியைச் சேர்ந்தவர்களெல்லாரையும் குறிக்கும்.

ஆழ்வார் திருவடிகளே தமக்குத் தஞ்சமென்றும் அவையே தமக்கு வைத்தமாநிதியென்றும பின்னடிகளிற் சொல்லுகிறது. ஆழ்வார் திருவடிகளை ஆச்ரயிக்கப்பெற்ற நமக்கு இனியொரு குறையுமில்லை யென்கிறார். எம்பெருமானை ஆச்ரயித்தவர்கள் "தநம் மதீயம் தவ

பாதபங்கஜம்" என்று அவனது திருவடிகளையே தமக்குச் செல்வமாக நினைத்திருப்பதுபோல, ஆழ்வாரை ஆச்ரயித்தவர்கள் "விபூதிஸ் ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்" என்று ஆழ்வார் திருவடிகளையே ஸகலைச்வர்யமாக நினைத்திருப்பராகையாலே "தனத்தாலு மேதுங் குறைவிலேன்" என்றது.

எந்தை - என் தந்தை. முன்னடியில் இறைஞ்சேன் என்று ஒருமையாகச் சொல்லிப் பின்னடியில் யாமுடைய என்று பன்மையாகச் சொன்னது, இயல்புபற்றிய தனித்தன்மைப் பன்மை; ஸ்வஸம்பந்திகளையும் கூட்டிக்கொண்டு பேசுகிற தென்னவுமாம்...(*)

ஏய்ந்த பெருங்கீர்த்தி யிராமானுச முனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்—ஆய்ந்தபெருஞ்
சீரார சடகோபன் செந்தமிழ்வேதந்தரிக்கும்
பேராத வுள்ளம் பெற.

ஆய்ந்த	குற்றங் கலசாதம	உள்ளம்	நெஞ்சை
பெரு சீர	சிறந்த திருக்குணங்களினால்	பெற	பெறும் பொருட்டு
ஆர்	பரிபூர்ணரான	ஏய்ந்த பெருகீர்த்தி இராமநுச முனிதன	தகுதியான பெரும்புகழையுடைய எம்பெருமானாரது
சடகோபன	நம்மாழ்வார அருளிச்செய்த	வாய்ந்த பாதம் மலர்	பொருத்தமான திருவடித் தாமரைகளை
செந்தமிழ் வேதம்	செவ்விய தமிழ்வேதத்தை	வணங்குகின்றேன்	வணங்குகின்றேன்
தரிக்கும்	தாங்கிக்கொள்ளவல்லதாய		
பேராத	வேறொன்றில் செல்லமாட்டாததான		

* * * மேல் தனியனில் "தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்" என்னப்படுதலால திருவாய்மொழியை வளர்த்தவரான எம்பெருமானாருடைய திருவருளின்றித் திருவாய்மொழியை மனப்பாடமாகத் தரிக்கவல்ல சக்தி வாய்க்கமாட்டாததலால, செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெறுதற்காக இராமாநுசனது மலர்ப்பாதம் வணங்குகின்றே னென்கிறது இதில்.

எம்பெருமானார் தாம் *மாறனடி பணிந்துய்ந்த விராமாநுசனைப் *மாறன் பணித்த மறையுணர்ந்தோனை *தென்குருகைப்பிரான பாட்டென்னும் வேதப் பசுந்தமிழ்தன்னைத் தன்பத்தியென்னும் வீட்டினகண்வைத்த விராமாநுசனைப் *பண்டரு மாறன் பசுந்தமிழானந்தம்பாய்மதமாய விண்டிடும் வேழமாய * திருவாய்மொழியின மணந்தரு மின்னிசை மன்னு மிடந்தொறும் புகுந்து நிற்குங் குணந்திகழ கொண்டலாய *உறுபெருஞ் செல்வமுந் தந்தையுந் தாயும் உயர் குருவும் வெறிதரு பூமகள்நாதனும் மாறன் விளங்கியசீர் நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிருப்பாராய (நூற்றந்தாதியில) ப்ரஸித்தராகையாலே, திருவாய்மொழியைத் தரிக்கும் நெஞ்சு பெறுதற்கு அவரைப் பிரார்த்தித்தல் பொருந்துமென்க. இப்படிப்பட்ட அந்தரங்க பக்தராகையாலன்றோ ஆழ்வாரது திருவடிநிலைக்கு இராமாநுசன் என்றே திருநாமம் வழங்கி வருவது ஸம்ப்ரதாயமாயிற்று.

"எங்கள் கதியே யிராமாநுசமுனியே, சங்கைகெடுத்தாண்ட தவராசா, பொங்குபுகழ் மங்கையர் கோனீந்த மறையாயிரமனைத்தும், தங்குமனம் நீயெனக்குத்தா" என்ற பெரிய திருமொழித் தனியனையும் இங்கு ஸ்மரிப்பது. ... ... (*)

வான்திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும்—ஈன்ற
முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தா யிராமானுசன்

வான் திகழும் சோலை	ஆகாசத்தளவும் ஓங்கி விளங்குகின்ற சோலைகளையுடைய	தமிழ் மறைகள் ஆயிரமும	தமிழ் வேதமான ஆயிரம் பாசுரங்களையும
மதிள்	பெரிய பிராகாரங்களையும் உடைத்தான	ஈன்ற முதல் தாய்	பெற்ற முக்கியமான மாதா
அரங்கர்	திருவரங்கத்திற் பள்ளி கொண்டருளும் பெருமானுடைய	சடகோபன்	நம்மாழ்வாராவர்
		மொய்ம்பால்	மிடுக்குடனே
		வளர்த்த	அதனை வளர்த்த
வண் புகழ் மேல் ஆன்ற	திருக்கல்யாண குண விஷயமாக அமைந்த	இதத் தாய்	ஹிதமான மாதா .
		இராமானுசன்	எம்பெருமானாராவர்

* * * — கீழ்த் தனியனிலே "செந்தமிழ் வேதந்தரிக்கும் பேறாதவுள்ளம் பெற—இராமானுசமுனிதன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்" என்று பேசும்படி எம்பெருமானார்க்கும் திருவாய்மொழிக்குமுள்ள தொடர்பை வெளியிடுவது இப்பாசுரம். உலகத்தில் பிரஜைகளுக்குப் பெற்றதாய் என்றும் வளர்த்ததாய் என்றும் இரண்டு தாய்மார் ஏற்படுவதுபோல் திருவாய்மொழியாகிற ப்ரஜைக்கும் இரண்டு தாய்மாருண்டு; அவர்களாகிறார் நம்மாழ்வாரும் எம்பெருமானாரும். ஆழ்வார் பெற்றருளினர்; எம்பெருமானார் போஷித்தருளினார். கண்ண பிரானுக்கு தேவகிப்பிராட்டியும் யசோதைப்பிராட்டியும் போலே.

ஈன்ற தாய் பெற்றுப் போகட்டுப்போனால் வளர்க்குந்தாய் தன் மிடுக்காலே காத்து நோக்குமாபோலே எம்பெருமானார் திருவாய்மொழியைக் காத்தருளினவாறு என்னென்னில்; "பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாளயோகி திருவாய்மொழியைக் காத்த, குணவாளரென்று நெஞ்சே கூறு" என்று உபதேசரத்தினமாலையில் மணவாளமாமுனிகள் அருளிச்செய்தபடியே திருவாய்மொழியைக்காத்த ஆசிரியர் ஐவருள் முதல்வரான திருக்குருகைப்பிரான் பிள்ளானைக் கொண்டு ஆறாயிரப்படி வியாக்கியானமிடுவித்தது எம்பெருமானாரன்றோ. ("தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான், பிள்ளான் எதிராசர் பேரருளால்—உள்ளாரும், அன்புடனே மாறன் மறைப்பொருளை யன்றுரைத்தது, இன்பமிகுமாறாயிரம்" என்ற உபதேசரத்தினமாலை காண்க.) முதன்முதலாகத் திருவாய்மொழியை வளர்த்தவர் எம்பெருமானாரே யென்க. "பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்" என்றது முதலான ஆசார்யஹ்ருதய ஸூக்திப்படியே திருவாய்மொழியை யடியொற்றியே எம்பெருமானார் தாம் ஸ்ரீபாஷ்யத்தில் மஹார்த்தங்கள் யோஜிக்கப்பட்டிருத்தல் முதலான காரண விசேஷங்களும் இங்கு அநுஸந்திக்கவுரியன.

திருவாய்மொழியில "சங்குலும் பகலும்" என்ற ஒரு திருவாய்மொழி தவிர மற்று ஒரு பாசுரத்திலும் திருவரங்கநாதனுடைய ப்ரஸ்தாவமே இல்லை யாயிருக்க "மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும்" என்று திருவாய்மொழி ஆயிரமும் ஸ்ரீரங்கநாதன் விஷயமாக அருளிச்செய்யப் பட்டதாகப் பேசுகைக்கு அடியென்? என்னில; நம் பூருவாசாரியர்களனைவரும் நிர்வஹிப்பது இப்படியே; ஆழ்வார் திருவரங்கநாதனுக்கென்றே திருவாய்மொழி யாயிரத்தையும் ஸங்கல்பித்து அதிலிருந்து மற்றைத் திருப்பதி யெம்பெருமான்களுக்குப் படியளந்தார் என்றாய்த்து பட்டர் அருளிச்செய்யும்படி; "திருவேங்கடத்துக்கிவைபத்தும்"

"வண்திருமோகூர்க்கு ஈத்தபத்திவை" என்றாற்போன்ற சொற்போக்கில் இந்த நிர்வாஹம் ஸ்வரஸமாக விளங்குமென்ப.

ஈற்றடியில், ஹிதம் என்னும் வடசொல் இதம் எனத் திரிந்தது. ... ... (*)

மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியுந் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன்
யாழினிசை வேதத்தியல்.

குருகையர் கோன்	திருநகரியிலுள்ளார்க்குத தலைவரான ஆழ்வார் (அருளிச்செயத)
யாழின் இசை வேதத்து இயல்	வீணாகானம்போன்ற திருவாய்மொழிப் பாசுரங்கள்
மிக்க இறை நிலையும்	ஸர்வோத்க்ருஷ்டனான எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும்
மெய்யாம் உயிர் நிலையும்	நித்யனான ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தையும்
தக்க நெறியும்	ஸ்வரூபாநுரூபமான உபாயத்தின் ஸ்வரூபத்தையும்
தடை ஆகி தொக்கு இயலும் ஊழ் வினையும்	(பகவத்ப்ராப்திக்குப்) ப்ரபந்தகமாகிச் சேர்ந்து கிடக்கிற முன்னை வினைகளாகிற விரோதி ஸ்வரூபத்தையும்
வாழ்வினையும்	வாழ்வாகிற பரமபுருஷார்த்த ஸ்வரூபத்தையும்
ஓதும்	கூறுவன.

* * * — திருவாய்மொழியிற் சொல்லுகிற அர்த்தங்கள் இன்னவையென்கிறது இதில். திருமந்திரத்திற் சொல்லுகிற அர்த்தமே திருவாய்மொழியிற் சொல்லப்படுகின்றன: அதாவது அர்த்தபஞ்சகம். ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ப்ரமேயமாயிருக்கும் அந்த அர்த்தங்கள் இத் தனியனில் அடைவே சொல்லப்படுகின்றன. சேதநர்களால் அடையப்படவேண்டியவனான எம்பெருமானுடைய ஸ்வரூபம், அவ்வெம்பெருமானை அடைகின்ற சேதநர்களின் ஸ்வரூபம், அடைவிக்கின்ற வழியின் ஸ்வரூபம், அடையவொட்டாமல் தடை செய்யுமதான ப்ரதிபந்தகத்தின் ஸ்வரூபம். ப்ரதிபந்தகம் தொலைந்து பெறக்கடவதான பலத்தின் ஸ்வரூபம் —என்பதே அர்த்தபஞ்சகமாகும்.

எம்பெருமானே ஸர்வஸ்மாத்பரன், ஜீவாத்மா அவ்வெம்பெருமான் பக்கலில் சேஷத்வத்தையே தனக்கு நிரூபகமாகவுடையவனாயிருப்பன், சரணாகதியே எம்பெருமானைப் பெறுதற்கு வழி, பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுககு மழுக்குடம்புமாகிற வினையே ப்ரதிபந்தகம், ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்வதே பரமபுருஷார்த்தம் என்கிற இவ்வைந்து அர்த்தங்களும் இத் திருவாய்மொழியில் பன்னிப்பன்னி யருளிச்செய்யப்படுமாறு காண்க.

- - - - - - - - - - - - - - -

ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியர்
இயற்றிய திருவாய்மொழி
திவ்யார்த்த தீபிகையில்

உரை

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்:

திருவாய்மொழி - அவதாரிகை

இது, மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களுள் தலைவரும் ப்ரபந்நஜன கூடஸ்தரு மான நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு திவ்ய ப்ரபந்தங்களுள் நான்காவதான ப்ரபந்தம்; சரமப்ரபந்தமெனப்படும். திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களும் நம்மாழ்வாருடைய திவ்ய ஸூக்திகளாம். இந்நான்கும் முறையே நான்கு வேதங்களின் ஸாரமாம். நாலாயிரப் பிரபந்தத்தில் திருவாய்மொழி நான் காவது ஆயிரமாக அமைக்கப்பட்டுள்ளது; இது ஸாமவேத ஸாரமாகும்.

ஆழ்வார் தமது ஞானக்கண்ணுக்கு இலக்கான எம்பெருமானை நோக்கி "தேவரீரை அநுபவிப்பதற்கு இடையூறான தேஹ ஸம்பந்தத்தை யறுத்துத் தந்தருளவேணும்" என்று ஸம்ஸாரஸம்பந்த நிவ்ருத்தியை அபேக்ஷித்தார் முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில். ஆழ்வார் அப்படி பிரார்த்தித்தபோதிலும் எம்பெருமான் இவ்வாழ்வாரைக்கொண்டு நாட்டுக்கு நன்மையாகச் சில திவ்யப்ரபந்தங்களை வெளியிடுவித்து ஸம்ஸாரிகளைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம் பற்றினவனாகையாலே "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக் குடம்பும் இந்நின்ற நீர்மையினியாமுறாமை" என்று இவர் அபேக்ஷித்தபோதே இவருடைய பிரார்த்தனையைத் தலைக்கட்டித் தந்தருளவில்லை. இவ்வாழ்வார் இந்த ஸம்ஸாரத்தைவிட்டு விலகி ஒரு *நலமந்தமில்லதோர் நாட்டிலே போய்ச்சேரவேணுமென்று பாரிப்பது நம்முடைய குணங்களை அநுபவிப்பதற்காகவேயன்றி வேறொன்றுக்காகவன்றே; அந்த குணாநுபவத்தை இவர்க்கு நாம் இவ்விடத்திலேயே வாய்க்கச்செய்வோம்; இங்கேதானே இவர் குணாநுபவம் பண்ணிக் களித்தாராய் அவ்வநுபவம் உள்ளடங்காமல் புறவெள்ள மிட்டுப் பிரபந்தங்களாகப் பெருகி லோகோபகாரமும் செய்தாராகட்டும்" என்று எம்பெருமான் திருவுள்ளம்பற்றித் தனது ஸ்வரூபரூபகுண விபூதிகளைக்காட்டிக்கொடுக்க, ஆழ்வார் அவற்றைக்கண்டு பரமாநந்தம் பொலிய அநுபவித்தார் திருவாசிரியத்திலே. அப்படி அநுபவித்த பகவத்விஷயத்திலே அவ் விஷயத்திற்குத் தகுதியாக ஆசை கரைபுரண்டு பெருகிச் செல்லுகிறபடியைப் பேசினார் பெரிய திருவந்தாதியில்.

தாயானவள் தனது பிரஜைக்கு அஜீர்ணத்தை யறுத்துப் பசியை மிகுத்துச் சோறிடுமா போலே எம்பெருமான் தமக்கு ருசியைப் பிறப்பித்தபடியையும், அந்த ருசிதான் பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளாய்க்கொண்டு பக்குவமான படியையும், பின்பு பிரகிருதி ஸம்பந்தமற்றுப் பேற்றோடே தலைக்கட்டினபடியையும் அருளிச் செய்கிறார் இத் திருவாய்மொழியில்.

ஸ்ரீசக்ரவர்த்தி திருமகனார் காட்டுக்கெழுந்தருளின பிறகு மாதுல க்ருஹத்தினின்றும் அயோத்திக்கு மீண்டுவந்த பரதாழ்வானை நோக்கிக் கைகேயியானவள் 'ராஜந்!' [அரசனே!] என்று அழைத்தவளவில் பரதன் அச் சொல்லைக்கேட்டு என்ன ஸங்கடமடைந்தனனோ அந்த ஸங்கடம் ஆழ்வார்க்குத் திருவிருத்தத்திலேயாயிற்று. பிறகு அப்பரதன் சில பரிஜனங்களைக் கூட்டிக்கொண்டு சித்திரகூடஞ்சென்று இராமபிரானை மீட்டு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருவதாகப் புறப்பட்டுச் செல்லும்போது அப்பரதனது நெஞ்சில் என்ன தரிப்பு இருந்ததோ அவ்வகையான தரிப்பு ஆழ்வார்க்குத் திருவாசிரியத்திலே யாயிற்று. பிறகு பரதன் ஸ்ரீநந்திக்கிராமத்திலே யிருந்துகொண்டு பதினான்கு வருஷம் தனது ஆசையை வளர்த்துக் கொண்டிருந்த நிலைபோலும் பெரிய திருவந்தாதியில் ஆழ்வாருடைய நிலை. பெருமாள் மீண்டு திருவயோத்திக் கெழுந்தருளித் திருவபிஷேகஞ் சண்டருளி அப்பரதனும் ஸ்வரூபாநுரூப மான பேறு பெற்றாப்போலேயாம் இத் திருவாய்மொழியில் ஆழ்வார் பெறும்பேறு.

திருவாய்மொழி என்பதற்கு - மேன்மையையுடைய வாயினாற் சொல்லுஞ் சொற்களினாலாகிய நூல் என்பது பொருள். திரு என்பது வாய்க்கும் அடைமொழி [விசேஷணம்] ஆகலாம், வாய்மொழிக்கும் அடைமொழியாகலாம். வாய்மொழி என்னும் முதற்கருவியின் பெயர் அதன் காரியமாகிய பிரபந்தத்திற்கு ஆனது, ஆகுபெயர். அது திரு என்னும் அடைமொழியினால் அடுக்கப்பட்டதுபற்றி அடையடுத்த ஆகுபெயரெனப்படும்.

திரு—உயர்வை விளக்கும் அடைமொழி. இந்த அடைமொழி கொடுக்கும்படி ஆழ்வாரது வாக்குக்குள்ள விசேஷம் அவரது திருநாவீறுடையபிரான் என்னுந் திருநாமத்தாலும் விளங்கும். திருமங்கையாழ்வாரருளிச் செயலாகிய திருமொழியினும் வேறுபாடு விளங்குதற்குத் திருவாய்மொழி யெனப்பட்டது. வாய்மை தங்கிய மொழியெனபாருமுளர்.

இப் பிரபந்தம் நூறு பதிகங்களாக அமைந்த ஆயிரத்தொருநூற்றிரண்டு செய்யுள்களையுடையது. பத்துப் பத்தாக அமைந்தது. இப் பிரபந்தம் முழுவதும் அந்தாதித்தொடையாற் பாடப்பட்டது. அந்தாதித் தொடையாவது—முன்னின்ற பாசுரத்தின் இறுதி அடுத்துவரும் பாசுரத்தின் முதலாக அமைவது. இவ்வந்தாதி, சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலை என்ற தொடர்நிலைவகை யிரண்டனுள் சொற்றொடர் நிலையாகும்: "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" என்றார் தண்டியலங்காரத்தும். இத் திவ்யப்ரபந்தத்தின் பாசுரங்கள் பொருளில் ஒன்றை ஒன்று தொடர்ந்து நிற்பது தோன்ற அறிவிற் சிறந்த ஆசிரியர்கள் வியாக்கியானித்தருள்வதனால் இது பொருட்டொடர் நிலையுமாம். "பொருளினுஞ் சொல்லினு மிருவகை தொடர்நிலை" என்னுந் தண்டியலங்காரச் சூத்திரத்தின் உரையில் "இரண்டென்றது வகையென்ற மிகையான் மூன்றாவது—பொருளினுஞ் சொல்லினுந் தொடர்தலு முண்டெனக்கொள்க" என்றது காண்க. நெடுக ஒரு கதையாகக் கூறுதலல்லாமல் ஸ்தோத்ரரூபமாக அருளிச் செய்யப்பட்ட பாசுரங்களாதலால் சொற்றொடர் நிலையாகவே கொள்ளலாம் என்பது ஒருசாரார்கொள்கை.

தொல்காப்பியத்துச் செய்யுளியலிற் கூறப்பட்ட அம்மை அழகு தொன்மை தோல விருந்து இயைபு புலன் இழைபு என்ற எண்வகை வனப்பினுள் இந்நூல் விருந்தென்னும் வனப்பின் பாற்படும். "விருந்தேதானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்ற தொல்காப்பியச் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் "விருந்துதானும் பழங்கதைமேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்துவரத் தொடுத்துச் செய்யப்படும் தொடர்நிலை மேலது" என்றும், "அது, முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளும் என உணர்க; கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப" என்றும் உரைத்துள்ளமை காண்க.

ஆழ்வார்களுள் நம்மாழ்வார்க்கு ஏற்பட்ட ஒப்புயர்வற்ற அதிசயம் போலவே இத் திருவாய்மொழிக்கும் மற்றை அருளிச்செயல்களிற் காட்டில் ஏற்றம் உண்டு. திருவாய்மொழி திருவீதிகளில் ஸேவிக்கப்படாமல் ஆஸ்தானத்திலேயே ஸேவிக்கப்பட்டுவருகிற ஸம்ப்ரதாயமும், இத் திருவாய்மொழிக்கே பலபல வியாக்கியானங்கள் ஏற்பட்டிருக்கின்றமையும் இதன் ஏற்றத்தை வற்புறுத்தும்.

இந்தத்திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படி, நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி, பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த இருபத்துநாலாயிரப்படி, நம்பிள்ளை அருளிச்செய்ததை வடக்குத்திருவீதிப்பிள்ளை பட்டோலை கொண்ட ஈடு முப்பத்தாறாயிரப்படி, வாதிகேஸரி அழகிய மணவாளசீயர் அருளிச்செய்த பன்னீராயிரப்படி என்னும் ஐந்து வியாக்கியானங்கள் ப்ரஸித்தமாக வழங்கிவருகின்றன. (வடவாசார்ய ஸம்ப்ரதாயத்திலும் ஒன்பதினாயிரப்படி, பதினெண்ணாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி என்று சில வியாக்கியானங்கள் உண்டு.) மேற்கூறிய வியாக்கியானங்களைத் தழுவியும் ஆவச்யகமான மற்றும் பல விஷயங்களைச் சேர்த்தும் இத்தீபிகையுரை எழுதப்படுகின்றது.

இத் திருவாய்மொழிக்குப் பாசுரங்களின்மேல் வியாக்கியானமாக அல்லாமல் ஒவ்வொரு திருவாய்மொழியினுடையவும் ஒவ்வொரு பத்தினுடையவும் ஸாரஸங்க்ரஹ ரூபமாக வடமொழியிலும் தென்மொழியிலும் சில திவ்யக்ரந்தங்கள் நம்பூருவர்களால் அருளிச்செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் அருளிச்செய்த த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி, த்ரமிடோபநிஷத்ஸாரம், அழகிய மணவாளச்சியர் அருளிசெய்த த்ரமிடோபநிஷத் ஸங்கதி என்பவை ஸம்ஸ்க்ருத ப்ரலோகரூபமானவை. மணவாளமாமுனிகள் அருளிச்செய்த திருவாய்மொழி நூற்றந்தாதி ஸுப்ரஸித்தம.

அரிய பெரிய ஆழ்பொருள்கள் உள்ளடங்கியிருக்கப்பெற்ற இந்த த்ராவிட வேதஸாகரத்திலே சிற்றறிவினனாகிய அடியேன் வாய்வைகககச் சிறிதும் யோக்யதையுடையேனல்லேனாயினும், ஆசிரியாகள் காட்டியருளின வழியைப் பின்பற்றி எழுது மிவ்வுரையை குணக்ராஹிகளான ரஸிகர்கள் இயற்கையின்னருளால் நோக்கியருள்க. ... ... (*)

திருவாய்மொழி அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

திருவாய்மொழி

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய

திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது

முதற் பத்து — முதல் திருவாய்மொழி

உயர்வறவுயர்நலம் உடையவன்யவனவன் *
மயர்வறமதிநலம் அருளினன்யவனவன் *
அயர்வறுமமரர்கள் அதிபதியவனவன் *
துயரறுசுடரடி தொழுதெழென்மனனே.

என் மனனே	எனது மனமே!
உயர்வு அற	(தன்னைப் பார்க்கிலும்) உயர்த்தி இல்லாதபடி
உயர்	உயர்ந்த
நலம்	(ஆனந்தம் முதலிய) கல்யாண குணங்களை
உடையவன்	(சுயமாக) உடையனானவன்
யவனவன்	யாவனொருவனோ,
மயர்வு அற	அஜ்ஞானம் நசிக்கும்படி
மதி நலம்	ஞானத்தையும் பக்தியையும்
அருளினன்	(அடியேனுக்குக்) கிருபை பண்ணினவன்
யவனவன்	யாவனொருவனோ,
அயர்வு அறும்	மறப்பு இல்லாத
அமரர்கள்	நித்யஸூரிகளுக்கு
அதிபதி யவன்	ஸ்வாமி யாவனொருவனோ
அவன்	அந்த எம்பெருமானுடைய
துயர் அறு சுடர் அடி	துக்கங்களைப் போக்குகிற சோதிமயமான திருவடிகளை
தொழுது	வணங்கி
எழு	நீ கடைத்தேறக்கடவை.

* * * இதில், மஹோபகாரங்களைத் தமக்குச் செய்தருளின எம்பெருமானுடைய திருவடிகளைத் தொழுது மேன்மை பெறும்படியாக ஆழ்வார் தமது திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிறார்.

புறமதத்தவருடைய கொள்கைப்படி எம்பெருமான் நிர்க்குணனல்லன், ஸமஸ்த கல்யாண குணாத்மகன் என்கிற வேதாந்த ஸித்தாந்தத்தை முதலடியிலே வெளியிட்டருளுகிறார். இதனால், எம்பெருமான் தனது திருக்கல்யாண குணங்களைக் காட்டி இவ்வாழ்வாரை ஈடுபடுத்திக்கொண்டமை விளங்கும்.

குணங்களுக்குத் தோற்று அடிமைப்படுதல் என்றும் ஸ்வரூபமாகவே அடிமைப்பட்டிருத்தல் என்றும் இருவகைப்பட்டுள்ளதான அடிமையில் குணப்ரயுக்தமான அடிமையிற்காட்டிலும் ஸ்வரூபப்ரயுக்தமான அடிமையே சிறக்குமென்பது ஸம்ப்ரதாய ஸாரார்த்தமாயினும், ஆழ்வார் தம்மை எம்பெருமான் அகப்படுத்திக்கொண்டது திருக்குணங்களைக்கொண்டாதலால் தாம் இழிந்த துறையை முதலிலே பேசுகிறாரென்க. ஸ்வரூப ப்ரயுக்தமான அடிமையும் ஆழ்வார்க்குக் குறைவற்ற தென்னுமிடம் "ஆகிலுங் கொடியவென்னெஞ்ச மவனென்றே கிடக்குமெல்லே" என்ற பாசுரத்தால் வெளியிடப்படுகின்றமை காண்க.

ஸ்வரூப ப்ரயுக்தமான அடிமை இயற்கையிலேயே இருக்கச்செய்தேயும் சேஷியானவன் கல்யாணகுணங்கட்கும் கொள்கலமாயிருப்பதனால் இக்குணங்களும் அடிமைக்கு ஓர் உபாதியாக அமைகின்றனவென்றுணர்க. ஸ்ரீராமபிரானுடைய வநவாஸ ஸமயத்திலே அத்ரிபகவானுடைய ஆச்ரமத்தில் பெருமாள் எழுந்தருளி மஹர்ஷியை அநுவர்த்தித்திருந்த பின்பு அவருடைய தேவியான அநஸூயையைப் பிராட்டி அநுவர்த்தித்திருக்கிறவளவிலே, அவள் பிராட்டியைப் பார்த்து 'உற்றாரையும் செல்வத்தையும்விட்டுப் பெருமாளை பின்னே காட்டுக்குவந்த வித்து தைவ யோகத்தாலே உமக்கு நன்றாகக்கூடிற்று; நகரத்திலிருக்கிலுமாம், காட்டிலிருக்கிலுமாம்; பெண்டிர்க்குத் தெய்வம் பர்த்தாவே கிடீர். நீர் இப்படியே எப்போதும் பெருமாள் விஷயத்திலே அநுகூலித்திருக்கக் கடவீர்' என்று சொல்ல; பிராட்டி வெட்கமடைந்து கவிழ்தலையிட்டிருந்து 'எனக்குப் பெருமாள்பக்கலில் அநுராகம் ஸ்வரூபமாகவே உண்டாயிருக்கச்செய்தே அவர் தாம் குணங்களிற் சிறந்தவராகையாலே என்னுடைய அநுராகத்தை குணப்ரயுக்தமாக நாட்டார் நினைக்கக்கூடும்; எப்போதாவது ஒருஸமயம் அவரைக் குணங்களைவிட்டுப் பிரித்துக்காட்டக் கூடுமாகில் அப்போது என்னுடைய அநுராகம் ஸ்வரூபப்ரயுக்தமேயன்றி குணப்ரயுக்தமல்ல என்பது நன்கு விளங்க அவகாசமுண்டாகும்; அப்படி ஒரு நொடிப்பொழுதும் காட்டமுடியாதபடி அவர் எப்பொழுதும் ஸமஸ்தகல்யாணகுணாம்ருதஸாகரமாக இருப்பதால் நான் அவர் பக்கல் இருக்குமிருப்பை அறிவிக்கப்பெறுகிறிலேன்; அவர் குணஹீநருமாய் விரூபருமாயிருந்தபோதிலும் நான் அவர்பக்கல் இப்படியே காணுமிருப்பேன்' என்றாள் என்பது ப்ரஸித்தம். இளையபெருமாள் திருவடியோடே தம்மைப்பற்றிச் சொல்லிக் கொள்ளும்போது "அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்ய முபாகத:" என்று பெருமாளுடைய திருவுள்ளத்தாலே நான் அவர்க்கு உடன் பிறந்தவனாகிறேன்; என்னுடைய கருத்தினால் குணங்கட்குத் தோற்று அவர்க்கு அடிமைப்பட்டவன் நான் என்றதும் இங்கு நினைக்கத்தக்கது.

உபநிஷத்துபபோலே பகவத்குணத்தை அளவிடப்புகுந்து பின்வாங்கிப் பரிபவப்படாமல் ஆழ்வார் "உயர்வறவுயர் நலமுடையவன்" என்று அழகாகப்பேசி முடித்தனரென்ப.

உயர்வு அற உயர்நலம்—உயர்ந்தவையென்று பேர்பெற்ற மற்ற வஸ்துக்களெல்லாவற்றினுடையவும் உயர்த்தி உண்மையன்றென்னும்படியும் தன்னுயர்த்தியே சாச்வதமாகும்படியும் உயர்ந்த கல்யாணகுணங்களை யுடையவன் என்றதாயிற்று.

இனி, உயர்வு என்று †வருத்தத்திற்கும் பேருண்டாதலால், வருத்தமில்லாமல் உயர்த்தி பெற்றனவான குணங்களையுடையவன் என்றலுமொன்று. மற்றையோர்க்கு ஒரு உயர்த்தியுண

† உயவு என்னுஞ் சொல்லுக்கே வருத்தமென்ற பொருளுண்டென்றும் உயர்வு என்பதற்கு அப்பொருளில்லை யென்றும் சிலர் கூறுவர்; பூருவாசாரியர்களின் வியாக்கியானங்களில் இவ்வர்த்தமுள்ளது.

டாக வேண்டுமானால் மிக்க வருத்தத்தாலன்றி உண்டாகமாட்டாது; "யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:, புநஸ் த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி சுச்ரும." என்று—நான்முகக்கடவுள் பல்லாயிரம் யுகங்கள் விஷ்ணுவை ஆராதித்து ஸித்தி பெற்றானென்று சொல்லிற்று; பாடசிவன் முதலிய ஒவ்வொரு கடவுளரும் இங்ஙனமே வருத்தப்பட்டு ஸித்தி பெற்றமை வேத வேதாங்கங்களிற் கூறப்பட்டுள்ளது. அவர்களைப்போலன்றிக்கே எம்பெருமானது குணோத்கர்ஷம் ஆயாஸத்தாலுமன்றி இயற்கையாகவே அமைந்ததாயிற்று.

ஆளவந்தார் முதலிய நம் ஆசாரியர்கள் எம்பெருமானுடைய குணசாலித்வத்தை அருளிச்செய்யுமிடங்களில "ஸ்வாபாவிகாநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணகண:" என்றருளிச்செய்வது காண்க. இதில 'ஸ்வாபாவிக' என்றது—வருத்தமின்றி இயற்கையாகவே அமைந்த என்றபடி.

"உயர்வறவுயர்நல முடையவன்" என்னாதே 'நல முடையவன்' எனகையாலே அவனது திருக்குணங்கள் முழுதும் பரம போக்யம் என்னுமிடம் பெறப்படும். நன்மையே உருவெடுத்திருக்கும்போலே. நலம் என்பது பால்பகா அஃறிணைப் பெயராதலால் பன்மைப்பொருள்பட்டு குணஸமூஹங்களைச் சொல்லக்கடவது. ஆனந்தகுணமொன்றையே சொல்வதாகவுங்கொள்வர்; அப்போது மற்ற குணங்கட்கும உபலக்ஷணமாகிறது. ஆநந்தாவஹமான விபூதியையுடையவன் என்றலுமொன்று; காரியத்தைச சொல்லும் பதத்தினால் காரணத்தை லக்ஷிக்கிற முறைமையில் காரியமான ஆனந்தத்தைச் சொல்லுகிற நல மென்னுஞ் சொல் காரணமான விபூதியை லக்ஷிக்கக் குறையில்லையென்க. இரட்டுற மொழிதலால், உயர்வறவுயர்ந்த திருக்குணங்களையும் விபூதியையு முடையவன் என்றும் முதலடிக்குப் பொருள் கொள்ளத்தகும்.

கூரத்தாழ்வான் இம்முதலடியிலே மிகவும் ஈடுபட்டிருப்பராம்: 'எம்பெருமானுக்குக் குணமில்லை, விபூதியிலலை' என்கிற குத்ருஷ்டிகளின் மிடற்றைப பிடித்தாற்போல உபக்ரமத்திலதானே உயர்வறவுயர்நலமுடையவன் எனற அழகு என்னே! என்று உருகிப்போவராம்.

மயர்வுஅற மதிநலமருளினன் = அடியோடு ஞானமே இல்லாமையும், ஒன்றை வேறொன்றாக அறிகையும், அதுவோ இதுவோவென்று ஸந்தேஹங்கொள்ளுதலும், தெரிந்ததை மறந்தொழிகையுமாகிற இவையெல்லாம் மயர்வு எனபபடும்; அது அறும்படியாக ஜ்ஞாந பக்திகளிரண்டையும் தமக்குத் தந்தருளினபடியைக கூறினர். மதிநலம் எனபதை 'நலம்மதி' எனக்கொண்டு 'நல்ல ஞானத்தையருளினன்' எனவும் பொருள் கூறுவர்; முளைக்கும்போதே வயிரம் பற்றி முளைக்கும் பதார்த்தம்போல உபக்ரமமே பக்திதசையாகப்பெற்ற ஞானம் என்றபடி.

'எனக்கு அருளினன்' என்ன வேண்டாவோ? எனக்கென்பதை ஏன்விட்டார்? என்னில்: எம்பெருமானுடைய விஷயீகாரம் பெறுதற்கு முன்பு தம்மை அஸத்கல்பராக [இல்லாதவராக] நினைத்திருக்கின்றமையால் 'மயர்வறமதிநல மருளினன்' எனபதற்கு முன்னே 'எனக்கு' என்று ஸ்வஸத்தையைக்கூறத் திருவுள்ளம்பற்றிலர் என்பர். துயரறு சுடரடி தொழுது என்ற பிறகே தம்மை உளராக நினைத்தார்போலும; அதன்பிறகேயன்றோ என் என்று தமது ஸத்தையை வெளியிட்டுக்கொண்டார்:

'மயர்வறமதிநலமருளினன்' என்ற இரண்டாமடியால், இத்தலையில் நினைவின்றியேயிருக்க, தானேவந்து அருளினன் என்றார்: அங்ஙனம் தானாகவே வந்து அருளினவன் தன்னருள் கொள்வாரிலலாத ஒருவனோ? என்ன; அவனருளையே எதிர்பார்த்திருப்பார் ஒருநாடாகவுளர் என்கிறார் மூன்றாமடியால்.

அயர்வறுமமரர்களதிபதி = அயர்வாவது மறப்பு; அது ஒருநாளுமில்லாதவர்களான நித்யஸூரிகளுக்கு நியாமகன் என்க.

துயரறு சுடரடி = அடியார்களுடைய துக்கங்களையெல்லாம் போக்கி அதனால் ஒளிபெற்று விளங்குகின்ற திருவடி என்று எம்பெருமானார்க்கு முந்திய முதலிகள் நிர்வஹிக்கும்படி:

அதாவது—துயரறுக்குஞ் சுடரடி என்று கொண்டார்கள். அங்ஙனன்றியே எம்பெருமானார் 'துயரறும் சுடரடி' என்று பொருள் நிர்வஹிப்பராம். அதாவது—அடியார்கள் துயர்தீர, தான் துயர் தீர்ந்தானாயிருக்கை. எம்பெருமான் பரதுஃக்கதுஃக்கியாகையால் ஆஶ்ரிதருடைய துஃக்க நிவ்ருத்தியைத் தன்னுடைய துஃக்க நிவ்ருத்தியாகக் கொள்ளுமியல்வினன் என்பதாம்.

எழு = அதோகதியடைவதைத் தவிர்ந்து உயர்கதியடைந்திடு என்றவாறு: உஜ்ஜீவித்துப் போ என்றதாயிற்று.

இப் பிரபந்தத்தில் நிரூபிக்கப்படுகிற தத்துவ ஹித புருஷார்த்தங்களைச் சுருங்கச்சொல்லுகிறது இப்பாசுரம். திருமாலே பரதத்துவமென்றும் அவனது அடி தொழுகையே பரம ஹிதமென்றும், (தத்க்ரதுந்யாயத்தாலே) அதனை ப்ராபிக்கையே புருஷார்த்தமென்றும் சொல்லிற்றுகிறது.

பிரபந்தம் இடையூறின்றி முடிவதற்காகப் பிரபந்தாரம்பத்தில் இயற்றப்படவேண்டிய இஷ்ட தேவதாநமஸகாரம் முதலான மங்களமும சுடரடிதோழுதெழு என்பதனால் இயற்றப் பட்ட தென்றுணர்க.

இப்பாட்டில், யவனவன் என்பதை ஒரே சொல்வடிவாகக்கொண்டு பொருளுரைக்கப் பட்டது. (வடமொழியில் 'யோஸௌ' என்பதுபோல இதனைக்கொள்க.) அன்றியும், யவன்—யாவனொருவன், அவன்—அவனுடைய எனறு முதல் மூன்றடிகளிலும் பொருள் கூறி ஒவ்வொரு அடியோடும் 'தொழுதெழென்மனனே!' என்று கூட்டி மூன்று வாக்கியமாயும் யோஜித்துப் பொருள்கூறுவர். உயர்வறவுயர்நல முடையவன் யவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழு; மயர்வறமதிநலமருளினன் யவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழு; அயாவறுமமரர்களதி பதியவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழு—என்றிப்படி மூன்று வாக்கியமாகிறது. இது வன்றி, (முதலடியில்) யவன் - யாவனொருவனோ, அவன்...அருளினன் என்றும், (இரண்டாமடியில்) யவன்-அப்படி அருளினவன் யாவனோ, அவன்.. அதிபதி என்றும், (மூன்றாமடியில்) யவன்-அப்படி அதிபதியானவன் யாவனோ, அவன் - அவனுடைய, அடி தொழுது எழு என்றிப்படி வாக்யைக வாக்யமாகவும் யோஜிப்பதுணடு. [வாக்யைக வாக்யம் - பல சிறு வாக்கியங்கள் உள்ளடங்கிய மஹாவாக்யம்.]

யவனவன் என்னுமிடங்களில் யாவன் என்பது யவன் எனக் குறுகியுள்ளது. 1. "நெஞ்சினால் நினைப்பான் யவன்" 2. "பயிலுந் திருவுடையார யவரேலுமவர்கணடீர்" 3. "விண்ணுங் கடந்தும்பரப்பால்மிக்கு மற்றெப்பால் யவர்க்கும்" எனறவிடங்களிலும் இவ்வாறே. இங்கே யாவின எஞ்சாமைப் பொருளது. 4. "ஆவோடல்லது யகரமுதலாது" என்ற விதியைக்காட்டி (மேற்குறித்தவிடங்களில்) யவன், யவர், யவர்கரும் என்றுளள பாடங்களை மறுத்து எகர முதலதாகப் பாடங்கொளளவேணுமென்று சிலர் வற்புறுத்துவர்; அது அஸம்பிரதாயம். ஏட்டுப்பிரதிகளிலெல்லாம் யகர முதலதான பாடமே காணகிறது; "ஆவோடல்லது யகர முதலாது" என்ற விதிக்குக் கதியில்லையோவெனின்; அச் சூத்திரவிதி இயற்கை மொழிக்கேயன்றிச் செய்யுளில் வேண்டுழிக் குறுக்கல் பெற்ற மொழிக்கு விலக்காகாது என்று கற்றுணர்ந்த பெரியோர்கூறுவர்.

இப்பாட்டில், முதலடியால் கல்யாணகுணமுடைமையும், இரண்டாமடியால் அவற்றுள் முக்கியமான காருண்யமும், மூன்றாமடியால் நித்யவிபூதியாட்சியும், நான்காமடியால் திருமேனியுடைமையும் அருளிச்செயததனால் இப்பாசுரம் முழுதும் குத்ருஷ்டிகட்குக் கழுத்துப்பிடியாமென்ப.

ஸ்ரீ ஹஸ்திசைல ஶிகரோஜ்ஜ்வல பாரிஜாதனான பேரருளாளனுடைய திருவடிகளைத் † துயரறு சுடரடி என வ்யவஹரித்தல் ஸம்ப்ரதாயமாதலால் இப்பாசுரம் தேவப்பெருமானை நோக்கியதென்று பெரியோர் பணிப்பர். ... ... (1)

---

1. திருவாய்மொழி 3-6-9. 2. ஷை 3-7-1. 3. திருவிருததம் 43.
4. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - மொழிமரபு 32.

† திருவேங்கடமுடையான் திருவடிகளைப் பூவார்கழல்களென்றும், அழகியமணவாளன் திருவடிகளைப் பொது நின்ற பொன்னங்கழல் என்றும் திருப்பொலிந்த சேவடி என்றும் வழங்குதல் போல.

மனனகமலமற மலர்மிசையெழுதரும் *
மனனுணர்வளவிலன் பொறியுணர்வவையிலன் *
இனனுணர்முழுநலம் எதிர்நிகழ்கழிவினும் *
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே. 2

மனனகம்	மனத்திலேயிருக்கிற
மலம் அற	(காமம் கோபம் முதலிய) தீக்குணங்கள் கழியக் கழிய (அதனால்)
மலர்	மலர்ந்ததாகி
மிசை எழு தரும்	மேலே மேலே விருத்தி யடைகிற
மனன் உணர்வு	மாநஸ ஜ்ஞான மென்கிற யோக வுணர்ச்சியால்
அளவிலன்	அளவிடப்படாதவனும்
பொறி உணர்வு அவை இலன்	(மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும்) வெளியிந்திரியங்களின் ஞானத்தினால் அளவிடப்படாதவனுமாய்
இனன்	இப்படிப்பட்டவனும்
முழு உணர் நலம்	பரிபூர்ண ஞானனந்த ஸ்வரூபியும்
எதிர் நிகழ் கழி வினும்	எதிர்காலம் நிகழ்காலம் இறந்தகாலம் என்ற மூன்றுகாலங்களிலும்
இனன் இலன்	ஒப்பு இல்லாதவனும்
மிகுநரை இலன்	மேற்பட்டவ ரில்லாதவனுமா யிருப்பவன்
என நன் உயிர்	எனக்கு நல்ல ஆத்மா.

* * * —எம்பெருமான் இவ்வாழ்வாரை வசப்படுத்திக்கொண்டது தனது திருக் கல்யாண குணங்களைக் காட்டி யாதலால் அக்குணங்களிலே முற்பட இழிந்து பேசினர். அக் குணங்கள் ஸ்வரூபத்தைப்பற்றி நிற்குமேயொழிய நிராச்ரமாய் நில்லாது; ஆகவே அக்குணங் களுக்கு ஆச்ரயமான ஸ்வரூபத்தை அவன் அவன் என்று கீழ்ப்பாட்டிலேயே ப்ரஸ்தாவித்தார். அந்த திவ்ய ஸ்வரூபமானது சித்து அசித்து என்கிற இரண்டு தத்துவங்களிற்காட்டிலும் விலக்ஷணமாயிருக்கிறபடியை இப்பாட்டில் அருளிச்செய்கிறார்.

“மனனகமலமற மலர் மிசையெழுதரும் மனனுணர்வளவிலன்” என்னுமளவால் ஜீவாத்மஸ்வரூபத்திற்காட்டிலும் பரமாத்மஸ்வரூபம் விலக்ஷணம் எனப்படுகிறது. “பொறி யுணர்வவையிலன்” என்று ஜடப்பொருள்களிற்காட்டில் விலக்ஷணம் எனப்படுகிறது. ஞான மும் ஆனந்தமுமே வடிவெடுத்ததாயும், முக்காலங்களிலும் ஒப்புயர்வற்றதாயுமிருக்கிற அந்த பரமாத்ம ஸ்வரூபம் அடியேனுக்குத் தாரகமாயுமிராநின்றது என்கிறார் பின்னடிகளில். எனனுயிர் என்றதையும் ஒரு விசேஷணமாகக்கொண்டு அப்படிப்பட்டவனது சுடரடிதொழு தெழென்மனனே!—என்று முன் பாட்டோடே கூட்டிப் பொருளுரைத்துக்கொள்வதுமுண்டு.

அற என்றதை ‘அற அற’ என்று இரட்டித்துக்கொள்க. ‘க்ரமமாகவொழிய’ என்பது பொருள். மனனகமலம்=“காமஃ க்ரோதஸ்ச லோபஸ்ச ஹர்ஷோ மாநோ மதோ த்ருதிஃ— விஷாதச்சாஷ்டமஃ ப்ரோக்தஃ இத்யேதே மாநஸா மலாஃ” என்று சொல்லப்பட்ட காமம் குரோ தம் முதலிய துர்க்குணங்கள் படிப்படியாகக் கழிந்துகொண்டேவர, அதனால் மனவுணர்ச்சி யானது விகாஸம் பெற்று மேன்மேலுங் கொழுந்துவிட்டுக் கிளர்ந்துவரும். அப்படிப்பட்ட மாந ஸஜ்ஞாநத்தாலே ஜீவாத்மா உணரப்படுவன்; எம்பெருமானோவெனில் அப்படி உணரப்படமாட் டான் என்க.

[மனன் அகம்] அகம்—ஏழாம்வேற்றுமையுருபு; மநஸ்ஸிலே என்றபடி. மன னுணர்வு—மாநஸஜ்ஞானம்; (அதனாலே) அளவு—பரிச்சேதித்தல்; அதை யுடையவன் ஜீவாத்மா; அஃதில்லாதவன் எம்பெருமான் என்க. இங்ஙனன்றியே, மனனுணர்வு என்ப தற்கே ‘மனத்தினாலுணரப்படும் ஜீவாத்மா’ என்று பொருள்கொண்டு, அதனளவல்லாதவன் எம்பெருமான் என்றும், பொறியுணர்வவை என்பதற்கு—கண் முதலிய இந்திரியங்களால் உணரப்படும் பொருள்கள் என்று பொருள்கொண்டு, அவைபோலல்லாதவன் எம்பெருமான் என்றும் உரைப்பர்.

பகவத் ஸ்வரூபமானது சேதநாசேதந ஸ்வரூபங்களிற் காட்டில் விலக்ஷணம் என்று சொல்லவேணுமானால் 'ஜீவாத்மாவைப்போலல்ல; ஜடப்பொருள்போலல்ல' என்றிப்படி எளிதாகச் சொல்லலாமே; அங்ஙனம் சொல்லாமல் "மனனகமலமற" என்று தொடங்கி 'ஜீவாத்மா மாநஸஜ்ஞானத்திற்கு விஷயமாகவல்லவன், ஜடப்பொருள் பாஹ்ய இந்திரியங்களுக்கு விஷயமாகவற்று' என்கிற விஷயங்கள் சொல்லப்படுதற்குக் காரணம் ஏதென்னில்; உலகத்திற் சில பதார்த்தங்களுக்குப் பரஸ்பர வைலக்ஷண்யம் குறையற்றிருக்கச் செய்தேயும் ஏதாவது ஒரு ப்ரகாரத்தாலே ஸாம்யமும் சொல்லக்கூடியதாயிருக்கும்: காண்மின்; பொன்னும் கரியும் ஒன்றோடொன்று நெடுவாசி பெற்றிருக்கச்செய்தேயும், பொன்னைக் காணகிற கண்ணே கரியையுங் காண்கிறது; கரியைக் காணகிற கண்ணே பொன்னையுங் காணுகின்றது என்று இப்படியால் ஒரு ஸாம்யமும் சொல்லக்கூடியதாயிருக்குமே; அப்படிப்பட்ட ஸாம்யமாவது எம்பெருமானுக்கு சேதநாசேதநங்களோடு உண்டோவென்னில் அதுவுமில்லை யென்கைக்காக ஜீவாத்மாவை க்ரஹிக்கிற இந்திரியம் இன்னதென்றும் ஜடப் பொருள்களை க்ரஹிக்கிற இந்திரியங்கள் இன்னவையென்றும் கூறப்பட்டதென்க.

இங்ஙனம் சொல்லக்கூடுமோ? எம்பெருமான் பாஹ்ய இந்திரியங்களாலே க்ரஹிக்கக் கூடியவனல்லனாயினும் அழுக்கற்ற மனத்தினால் க்ரஹிக்கக்கூடியவனாக ஓதப்பட்டிருக்கின்றானே, அதற்கு மாறாக "மனனுணர்வளவிலன்" என்னக்கூடுமோ? என்னில்; கூடும். எம்பெருமான் விசுத்தமான மனத்தினால் க்ரஹிக்கக்கூடியவன் என்று ப்ரமாணங்கள் சொன்னதற்குக் கருத்து யாதெனில்; 'எம்பெருமான் அப்படிப்பட்டவனல்லன், அவ்வளவனல்லன்' என்றிப்படி அறியக்கூடியவன் என்று சொல்லுவதேயாம். ஆதலால் அந்தஃகரணத்தினால் ஜீவாத்மா க்ரஹிக்கப்படுவதற்கும் பரமாத்மா க்ரஹிக்கப்படுவதற்கும் நெடுவாசியுண்டென்க.

எம்பெருமான் அடியோடு ஞானத்திற்கே விஷயமல்லன் என்று சொல்லிவிட்டால் ஆகாசத்தாமரை, மலடிமகன், முயற்கொம்பு முதலிய வஸ்துக்கள்போல் எம்பெருமானும் ஒரு அஸத்பதார்த்தம் [இல்லாத பொருள்] என்று சொன்னதாக முடியுமாதலால், அப்படிப்பட்ட துச்சத்வசங்கை எம்பெருமானிடத்து உண்டாகாமைக்காக விசுத்தமான அந்தஃகரணத்தினால் க்ரஹிக்கக்கூடியவனாகச் சொல்லிற்றேயன்றி, உண்மையில், அணுத்ரவ்யமான ஜீவாத்மா க்ரஹிக்கப்படுவதுபோல் விபுத்ரவ்யமான பரமாத்மா க்ரஹிக்கப்பட முடியாதென்ப.

இனன் = இப்படிப்பட்டவன். முன்னடிகளிற் சொன்ன தன்மைகளையே உட்கொண்டு 'இப்படிப்பட்டவன்' என்று அநுபாஷிக்கிறபடி. முன்பு சொல்லப்பட்டதையே மீண்டும் அநுபாஷணஞ் செய்தல் ஈடுபாட்டின் மிகுதியை விளக்கும்.

உணர் முழுநலம் = உணர் என்றது உணர்வு என்றபடி; ஞானம் என்க. நலம்—ஆனந்தம். முழு என்றதை இரண்டோடுங் கூட்டுக. கட்டடங்க ஞானமுமாய் கட்டடங்க ஆனந்தமுமாயிருக்குமென்றவாறு. பரமாத்ம ஸ்வரூபத்தில் ப்ரகாசமல்லாததும் அநுகூலமல்லாததுமான பாகமே கிடையாதென்றதாயிற்று. ஆனந்தமும் ஞான விசேஷமே யாதலால் ஒன்றைச்சொன்னாலே போதுமே; ஆனந்தம் ஞானம் என்ற இரண்டையுஞ் சொல்லத் தேவையில்லையேயென்னில்; அப்போது இனன் என்றதற்கு 'உபமானம்' என்று பொருள் கொண்டு, நேராகத் தன்னை அறியமுடியாமையாலே எப்போதும் உபமானத்தினாலேயே அறியப்படுவதான முழுநலமாயிருக்கும் என்று உரைத்துக்கொள்ளலாம். உபநிஷத்து "யதா ஸைந்தவகநঃ" என்று ஓர் உபமானத்தையிட்டேயன்றோ பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை நிரூபிப்பது. ஆழ்வார் தாமும் 1 "கடிசேர்நாற்றத்துள்ளாலை யின்பத்துன்பக்கழிநேர்மை, ஒடியாவின்பப் பெருமையோன்" என்று ஓர் உபமானத்தையிட்டு நிரூபிக்கின்றமை காண்க.

நம் தர்சனத்தில், சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்துவமே உள்ளது. ஈச்வரன் மற்றை யிரண்டு தத்துவங்களிற் காட்டில் விலக்ஷணன் என்பது முன்னடிகளிலேயே வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்க, 'எதிர்நிகழ்கழிவினும் இனனிலன்' என்று மூன்று காலங்

1. திருவாய்மொழி - 8-8-2.

களிலும் ஒப்பில்லாதவன் என்று மறுபடியும் சொல்வதற்குப் பயன் என்? என்னில்; கேண்மின்; ஸாதர்மிய த்ருஷ்டாந்தமென்றும் வைதர்மிய த்ருஷ்டாந்தம் என்றும் த்ருஷ்டாந்தம் இருவகைப் படும்; 'அவனைப்போல இவனிருக்கிறான்' என்று அந்வயமுகத்தாலே ஒப்புச்சொல்லுகை ஸாதர்மிய த்ருஷ்டாந்தம்; 'அவன் எப்படி அயோக்யனாயிருக்கிறானோ அப்படி இவன் அயோக்ய னல்லன்' என்று வ்யதிரேகமுகத்தாலே சொல்லுகை வைதர்மிய த்ருஷ்டாந்தம். இப்பாட்டின் முன்னடிகளால் எம்பெருமானுக்கு ஸாதர்மிய த்ருஷ்டாந்தமில்லையென்றது, 'இனனிலன்' என் பதால் வைதர்மிய த்ருஷ்டாந்தமும் இல்லை யென்னப்படுகிறது. 'சேதநாசேதநங்களைப்போல எம்பெருமானும் இந்திரிய க்ராஹ்யன்' என்னக்கூடுமானால் அப்போது ஸாதர்மிய த்ருஷ்டாந்த முண்டாகும்; அங்ஙனல்லன் என்று சொல்லப்பட்டமையால ஸாதர்மிய த்ருஷ்டாந்தமில்லை யென்று முன்னடிகளிற் சொல்லிற்றாயிற்று. இனி, 'எம்பெருமான் அவைபோலல்லன்' என்று சொல்லுகிற முகத்தால் வைதர்மிய த்ருஷ்டாந்த ஸத்பாவமாவது எம்பெருமானுக்குச் சொல்லக் கூடுமோ வென்று விமர்சித்துப் பார்த்தது அதுவுமில்லை யென்கிறது இனனிலன் என்பது.

இப்படிச் சொல்லும்பக்ஷத்தில் 'எம்பெருமான் சேதநாசேதநங்கள் போலல்லன் என் றுஞ் சொல்லமுடியாது' என்பதாகத் தேறுகின்றது; ஆகவே 'எம்பெருமான் சேதநா சேதநங்களைப் போன்றவன்' என்று முன்னடிகட்கு மாறாக ஸ்தாபிக்கப்பட்டதாகிறதே என்று சிலர் சங்கிக்கலாம்: அப்படியல்ல. வைதர்மிய த்ருஷ்டாந்தமில்லையென்று சொல் வதன் கருத்து யாதெனில்; 'வஸிஷ்டன் சண்டாளனைப்போலல்ல' என்று ஒருவன் சொன் னால், 'சீ சீ, அப்படி சொல்லாதே' என்று ஒருவன் அதனை மறுத்துச் சொன்னானாகில் 'வஸிஷ்டர் சண்டாளனைப்போன்றவர்தாம்' என்று ஸ்தாபிப்பதா அதன் கருத்து? அல்ல; எடுத்துக்கழிக்கவும் தகாத ஒரு ஹேயவஸ்துவோடே ஸர்வோத்க்ருஷ்ட வஸ்துவுக்கு ஸாம்யம் உண்டென்கையும் ஸாம்யம் இல்லையென்கையும் இரண்டும் இகழ்வாம்; ஸாம்யப்ரஸக்தியேயில் லாத வஸ்துவோடே ஸாம்யத்தை மறுப்பதும தகாததேயாம்.

இவ்வளவு அர்த்தங்களையுஞ் சுருக்கி ஒன்பதினாயிரப்படியிலே நஞ்சீயர் அருளிச்செய் கிறார் — "அவனோடு ஒவ்வாதென்று சொல்லுகைக்கும் ஸத்ருசமாயிருப்பதொரு பதார்த்தத்தை யுடையனல்லன் என்கிறது" என்று.

இங்ஙனேயாகில், "கார்வண்ணந் திருமேனி கண்ணும்வாயும் கைத்தலமுமடியிணையுங் கமலவண்ணம்" என்றும் "நீலமேகநிபம்" என்றும் இப்படியே பலரும் பல த்ருஷ்டாந்தங் களைக்கொண்டு எம்பெருமானை வருணிப்பது சேருமோ? எனில்; சேராதுதான: நெஞ்சில் ஒருபடியாகப் பதிவதற்காக ஏதோ சில உபமானங்களைக் கூட்டிச்சொல்லுகிறதே யொழிய, உண்மையில், பரஞ்சோதிக்கு ஸர்வாத்மநா விஸத்ருஶமான வஸ்துக்களை உவமை கூறுதலும் இகழ்வேயா மென்பதை இவ்வாழ்வார் தாமே மேலே "ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் புகழ்வெல் லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ!" என்று ஸ்பஷ்ட மாகவே அருளிச்செய்கிறார்.

இனனுணர்முழுநலம் என்பதற்கு "நேராகத் தன்னை அறிய முடியாமையாலே எப்போ தும் உபமானத்தாலேயே அறியப்படுவதான முழுநலமாயிருக்கும" என்றும் ஒரு பொருள் கொள்ளலாமென்று மூன்றாமடியில் சொல்லிவைத்தது, நான்காமடியில்வந்து இனனிலன் [உபமானமற்றவன்] என்று சொல்லுவது நேர்விரோதமன்றோ வென்று சிலருடைய நெஞ்சு குழம்பியே கிடக்கும். இதற்கு நாம் என்செய்வோம்!. ஏதாவதொரு உபமானத்தையிட் டுப் புகழ்ந்தாலன்றி வஸ்துஸ்வரூபம் தெரியமாட்டாதாகையாலே உபமானத்தைக்கொண்டே உணரவேண்டியதாயிராநின்றது; உபமானத்துக்கு அர்ஹமானவஸ்து எதுவுமில்லை என்கிற உண்மைப்பொருளை மறையாதே வெளியிடவேண்டியதாயுமிராநின்றது: ஆகையாலே இந்த விரோதம் அபரிஹார்யமாய் ஸஹ்யமாகக்கடவது. இதனை எதுபோலக் கொள்ளவேணுமென் றால், — "எனதாவி தந்தொழிந்தேன் இனி மீள்வதென்பதுண்டே" என்று ஆத்மஸமர்ப்பணம்

பண்ணி "எனதாவியார் யானார் தந்த நீ கொண்டாக்கினையே" என்று அந்நே உடனே மறுத்துக்கூறுமிடத்து 'ஆத்மஸமர்ப்பணம் பண்ணவும் வேணும், ஐயோ! அந்யாயமாகப் பண்ணினோமே! என்று அநுதாபப்படவும் வேணும' என்று சாஸ்த்ரார்த்தம் தேறுவது போல், எம்பெருமானை உபமானமுகத்தாலே புகழவும் வேணும், உடனே, ஐயோ! விலக்ஷண வஸ்துவுக்கு ஒப்புச்சொல்லி அபசாரத்தை விளைத்தோமே! என்று அநுதாபப்படவும் வேணும என்று சாஸ்த்ரார்த்தமாகக் கொள்ளத்தக்கது.

மிகுநரை இலன் = மிகுநர் என்றால் தன்னைப்பார்க்கிலும் மேற்பட்டவர்; எம்பெருமான தானே ஸர்வஸ்மாத்பரனாகையாலே அவனுக்கு மேற்பட்டார் ஆருமில்லையென்கிறது. அவனுக்கு ஸமானமானவர்களே இல்லை என்று முடித்தபின்பு, மேற்பட்டாரிருக்கக்கூடுமோ வென்கிற சங்கையே உண்டாக இடமில்லாதிருக்க, 'மிகுநரையிலன்' என்னக்கூடுமோ வெனின்; "ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே" என்ற ச்வேதாச்வதர உபநிஷத்தின் சாயையை அடியொற்றிச் சொல்லுகிறபடி. அவ்வுபநிஷத்துத்தான் அப்படி சொல்லக்கூடுமோவென்னில்; எம்பெருமானுக்கு மேற்பட்டவர்கள் எப்படி அஸம்பாவிதர்களோ அப்படியே ஒத்தாரும் அஸம்பாவிதர்களென்று உபமாநராஹித்யத்தைத் திடப்படுத்துவதற்காகவே சொல்லுகிறதென்று நஞ்சீயர் ஒருவழிகாட்டினர்.

முதற்பாட்டில் உயர்வில்லாதவனென்றார்; உயர்வில்லாவிடினும் ஒப்புண்டோ என்று சங்கித்து, 'மிகுநரையிலனே' என்று கொண்டு முன் சொன்ன உயர்வில்லாத ஸர்வேச்வரனைச் சுட்டி, அவன் சேதநாசேதந விலக்ஷணஜ்ஞாநாநந்த ஸ்வரூபியாதலால் எதிர் நிகழ்கழிவினும், இனனிலன்—ஸமாநனில்லாதவன் என்றார் இப்பாசுரத்தில் என்றுங்கொள்ளலாம். அப்பொழுது, இனன்—இப்படிப்பட்டவனுடைய என்று பொருள்கொண்டு, சுடரடிதொழுதெழென் மனனே! என்று முன்பாட்டோடே கூட்டிக்கொள்க.

எனனுயிர என்பதை, என் நன் உயிர் என்றும், என்ன உயிர் என்றும் இரண்டுவகையாகவும் பிரிக்கலாம்.

மனன் இனன் என்ற விடங்களில் மகரனகரப்போலி அறிக. மனம் என்றாலும் மனன் என்றாலும், இனன் என்றாலும் இனம் என்றாலும் ஒக்குமென்க. இனன் என்பதற்கு இப்படிப் பட்டவனென்று பொருளாகும்போது, இனன் என்று னகர வீற்றதாகவே சொல்வடிவமாகும். ... ... (2)

இலனதுஉடையனிது எனநினைவரியவன் *
நிலனிடைவிசும்பிடை உருவினனருவினன் *
புலனொடுபுலனலன் ஒழிவிலன்பரந்த * அந்
நலனுடையொருவனை நணுகினம் நாமே. 3

அது இலன (என)	அந்தப்பொருள் (தனக்கு) இல்லாதவனென்றும்
இது உடையன என	இந்தப்பொருளையுடையவன் என்றும்
நினைவு அரியவன	நினைப்பதற்கு அருமைப் பட்டவனாகியும்
நிலன இடை	பூமி முதலான (கீழ்) உலகங்களிலும
விசும்பு இடை	ஆகாசம் முதலான (மேல்) உலகங்களிலும (உள்ள)
உருவினன்	ரூபியான அசேதநப் பொருள்களை யுடையவனாகியும்
அருவினன்	ரூபியல்லாத சேதனர்களை யுடையவனாகியும்
புலனொடு	(இப்படிப்) புலன்களுக்கு விஷயமாகிற பொருள்களோடு (கலந்து நின்றாலும்)
புலன அலன	(தான) புலன்களுக்கு விஷயமாகாதவனாகியும்
ஒழிவு இலன் பரந்த	எப்பொழுதும் எங்கும் வியாபித்திருக்கிற
அ நலன் உடை ஒருவனை	முன் சொன்ன கல்யாண குணங்களையுடைய ஒப்பற்ற எம்பெருமானை
நாம் நணுகினம்	நாம் கிட்டப்பெற்றோம்.

* * * கல்யாணகுணமுடைமையையும் நித்யவிபூதியாட்சியையும் திவ்யமங்களவிக்ரஹமுடைமையையும் முதற்பாட்டிலே அநுஸந்தித்தது, அவற்றிற்கு ஆச்ரயமான திவ்யாத்மஸ்வரூபத்தின் வைலக்ஷண்யத்தை இரண்டாம் பாட்டிலே அருளிச்செய்தது, அவற்றோடே சேர்த்து ஒரு கோர்வையாக அநுபவிக்கத்தக்கதான லீலாவிபூதியுடைமையை இப்பாட்டிலே அருளிச்செய்கிறார்.

பரமபோக்யமான கல்யாணகுணம் முதலியவற்றை ஒரு பெரிய திருநாள்போலே அநுபவியாநின்ற இவர்க்கு அத்யந்த ஹேயமாய *இருள்தருமாஞாலமென்று பெயர்பெற்றதான இந்த லீலாவிபூதியின் ஆட்சியை அநுபவித்தல் ப்ராப்தமாகுமோ? ஞானிகள் அருவருக்கும் படியாயன்றோ இவ்விபூதியிருப்பது; இதனை அநுஸந்திக்க இவர் எங்ஙனே யிழிந்தார்? என்று சங்கை பிறக்கக்கூடும்; இவ்விபூதி இருள்தருமாஞாலமாயிருந்தாலும் ஆழ்வார் மயர்வற மதிநலமருளப் பெற்றவராகையாலே அந்த ஞானவிளக்கத்தினால் இவ்விபூதியின் இழிவை நோக்காது 'இதெல்லாம் எம்பெருமானுடைய ஆட்சியின்கீழ் அமைந்தது' என்றுகொண்டு ததீயத்வாகாரத்தைவிட்டுப் பார்க்குமவரான பின்பு அவனுடைய ஐச்வரியங்களையெல்லாம் ஒன்று விடாமல் அநுபவிக்கிற அடைவிலே இதனையும் அநுபவிக்கிறார் என்று கொள்க.

இங்கே ஈடு முப்பத்தாறாயிரப்படி யருளிச்செயல்:— "ராஜாக்களுக்கு நாடெங்கும் செல்லாநிற்கச்செய்தே மஹிஷிகளும் தாங்களுமாகச் சில பூந்தோட்டங்களைக் குடநீர் வார்த்து ஆக்குவது அழிப்பதாய் லீலாரஸ மநுபவிக்குமாபோலே 'திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான் பெய்தகாவுகண்டீர் பெருந்தேவுடை மூவுலகு" என்கிறபடியே ஸர்வேச்வரனும் பெரிய பிராட்டியாருமாகக் கடாக்ஷித்தபோது உண்டாய் இல்லையாகில் இல்லையாய் அவர்களுக்கு லீலாரஸ விஷயமாயிருக்கிற லீலாவிபூதியை அநுபவிக்கிறார்" என்று.

இலன் அது, உடையன் இது—என நினைவு அரியவன்—'இவனுக்கு அது இல்லை' என்றும் நினைக்கமுடியாது; 'இவனுக்கு அது உண்டு' என்றும் நினைக்கமுடியாது.—'இவனுக்கு அது இல்லை' என்று நினைக்குமிடத்துக் குறைவுபாடு ஏற்படுமாகையாலே அப்படி நினைக்கக் கூடாததாயினும் 'இவனுக்கு அது உண்டு' என்று நினைப்பதற்குத் தடை என்ன? என்னில், 'இராமனுக்கு வியாகரணம் தெரியும்' என்றால் அவனுக்கு மீமாம்ஸைதெரியாது, தர்க்கம் தெரியாது, வியாகரணமொன்றுதான் தெரியும், என்று நினைக்க இடமுண்டாவதுபோல, ஒரு பொருளைச் சுட்டி 'எம்பெருமான் அதனையுடையன்' என்றால் 'அது தவிர மற்ற பொருள்கள் அவனுக்கு இல்லை' என்று தோற்ற இடமுண்டாகிக் குறையாய்த் தலைக்கட்டுமாதலால் 'இவனுக்கு அது இல்லை, என்று சொல்வதோடு 'இவனுக்கு அது உண்டு' என்று சொல்வதோடு வாசியற இரண்டும் ஒண்ணாதவையே என்றுணர்க.

ஆனால் எம்பெருமானுடைய ஐச்வரியத்தை எப்படிதான் பேசக்கடவதென்றால், நிலனிடை விசும்பிடை யுருவினனருவினன் என்று பேசவேணுமென்கிறார். வேதபுருஷன் * பதிம் விச்வஸ்ய * என்று பேசினாப்போலே ஸர்வஸ்வாமி யென்னவேணுமென்க. பூமி முதற்கொண்டு பாதாளம் வரையிலுள்ள கீழுலகங்களிலும், பரமபதந் தவிர அதற்குக் கீழ்ப்பட்டதான மேலுலகங்களிலும் சேதநபதார்த்தங்களும் ஜடப்பொருள்களும் எததனையுண்டோ அவற்றை யெல்லா முடையவன் என்னவேணும். இதில் 'பரமபதந்தவிர' என்றதனால், பரமபதம் எம்பெருமானுடைய ஆட்சிக்கு உட்பட்டதன்றோவென்று சங்கிக்கவேண்டா; லீலாவிபூதிச் செல்வத்தை மாத்திரமே இப்பாட்டில அருளிச்செய்கிறாராகையாலும் நித்யவிபூதிச்செல்வத்தை முதற்பாட்டில் அருளிச்செய்தாராகையாலும்.

உருவினன் அருவினன்—'ரூபி' என்னும் வடசொல் உரு என்றும், 'அரூபி' என்னும் வடசொல் அரு என்றும் சிதைந்துகிடக்கிறது. ஜடப்பொருள்களெல்லாம் ஓரொருவகையான ரூபத்தையுடையனவாகக் காணப்படுதலால் அவை ரூபி யெனப்படும். (ரூபி - ரூபமுடையது.) ஜீவாத்மா உருவமற்றவனாதலால் அரூபி யெனப்படுவான். நிலனிடை விசும்பிடை யுருவினன், நிலனிடை விசும்பிடை யருவினன் என்க. நிலன்—நிலம்; மகரனகரப்போலி.

இப்படி ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரன் இந்த லீலாவிபூதியின் ரக்ஷணத்திலே உதாஸீநனாய்க்கொண்டு பரமபதத்திலே போகப்ரவணனாயிருப்பவனல்லன்; இவற்றினுடைய லாபநஷ்டங்களையே தன்னுடைய லாப நஷ்டங்களாகக்கொண்டு, புலப்படும் பதார்த்தங்களெல்லாவற்றிலும் அந்தர்யாமியா யிருப்பவன் என்கிறார் புலனொடு என்று. புலன் என்பது இங்குப் புலன்களாலறியப்படும் பொருள்களுக்காயிற்று. லக்ஷணை யென்க. புலப்படுகின்ற ஸகல பதார்த்தங்களோடும் அந்தராத்மாவாக கலந்து நின்றுனேயாகிலும் என்றபடி. அழுக்கு உடம்போடே உறைகின்ற அரும்பொருளும் அந்த ஸம்பந்தத்தாலே தானும் அழுக்கேறப்பெறுவதுபோல தோஷமே வடிவான பதார்த்தங்களிலே உறைகின்ற எம்பெருமானும் அவற்றின் தோஷங்கள் தன்னிடத்திலே தட்டப்பெற்று ஜடப்பொருள்களைப்போலே பரிணாமசாலியாயும் சேதநரைப் போலே ஸுகதுக்கங்கள் கலசியிருப்பவனாயும் ஆய்விடக்கூடுமோவென்று சங்கைபிறக்கக்கூடுமாதலால் அந்த சங்கையை ஒழிக்கிறார் புலனலன் என்று. புலன்களினுடைய படியையுடையவனல்லன். ஜடப்பொருள்போலே விகாராஸ்பதமல்லன்; ஒட்டற்று விளங்காநிற்குமவன் என்க.

ஒழிவு இலன் பரந்த—ஒழிவு இல்லாதவனாய் வியாபித்த என்கை. ஒரு வஸ்துவு மொழியமல் ஸகல வஸ்துக்களிலும் வியாபித்த என்றுவது, ஒருகாலமுமொழியாமல் ஸர்வகாலங்களிலும் வியாபித்த என்றுவது பொருள் காண்க.

கீழிரண்டு பாட்டிலுஞ் சொன்ன குணங்களோடு கூடியிருக்குந்தன்மையை அநுவாதஞ் செய்கிறார் அந்நலனுடையொருவனை என்று. இப்படி பரமவிலக்ஷணனான எம்பெருமானை நாம் கிட்டப்பெற்றோமேயென்று ஆனந்தம் தோற்ற முடிக்கிறார். நெடுங்காலம் பிறவிக்கடலிலே அழுந்தி எம்பெருமானுடைய கதையின் வாஸனையையும் அறியாதிருந்த நாம் இப்படி உபய விபூதியுக்தனாயிருந்துள்ள அவனைப் பூர்ணமாக அநுபவிக்கப்பெற்றோம என்னும மகிழ்ச்சி சொல் தொடையிலே விளங்கும்.

அனறியே, நணுகினம்நாமே! என்று காகுஸ்வரமாகக் கொண்டு, அப்படிப்பட்ட எம்பெருமானை நீசரில நீசரான நாமோ நணுகினோம்!; நணுகுவதற்கு நமக்கு யோக்யதையில்லாதிருக்க நணுகினதுபோல் தோற்றுகிறவிது ஒருகால் சித்தப்ரமமாக விருக்குமோ? என்பதாகவும் உரைப்பர். ... ... (3)

நாமவனிவனுவன் அவளிவளுவளெவள் *
தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது *
வீமவையிவையுவை அவைநலந்தீங்கவை *
ஆமவையாயவை ஆய்நின்றவவரே. 4

நாம்	நாம் முதலான தன்மைப் பொருள்களும	அவர் இவர் உவர்	அவர் இவர் உவர் என்னும் பலர்பால் சுட்டுப்பொருள்* களும்
அவன் இவன் உவன்	அவன் இவன் உவன் என்கிற ஆண்பால் சுட்டுப் பொருள களும்	அது இது உது	அது இது உது என்னும் ஒன்றன்பால் சுட்டுப்பொருள் களும்
அவள் இவள் உவள்	அவள் இவள் உவள் என்னும் பெண்பால் சுட்டுப்பொருள களும்	எது	எது என்னும் ஒன்றன்பால் வினாப்பொருளும்
எவள்	எவள் என்கிற பெண்பால் வினாப்பொருளும்	வீம் அவை	நசிக்குந்தன்மையுள்ள பொருள்களும்
தாம்	தாம் என்னும் பன்மைப் பொதுப்பொருளும்	இவை உவை அவை	இவை உவை அவை என்னும் பலவின்பால் சுட்டுப்பொருள் களும்

நலம் அவை	நல்ல வஸ்துக்களும்	ஆய நின்ற	ஆகின்ற எல்லாப் பொருள்களும்
தீங்கு அவை	கெட்ட வஸ்துக்களும்		
ஆம் அவை	எதிர்காலப்பொருள்களும்		
ஆய அவை	இறந்தகாலப் பொருள்களும்	அவரே	அந்த ஸர்வேச்வரனேயாம்.

* * * இப்பாட்டுமுதல் மேற்பாட்டுக்களெல்லாம் கீழ்ப்பாட்டிற் சொன்ன லீலாவிபூதிச் செல்வத்தைப் பன்னிப்பன்னி யுரைக்கின்றன. பரமபோக்யமான * நலமந்தமில்லதோர் நாடாகிய நித்யவிபூதியை [பரமபதத்தை] விட்டு இருள் தருமா ஞாலமாகிய இந்நிலத்தை விசேஷமாக வருணிப்பதேன்? என்னில்; அந்த திருநாட்டிலுள்ளவர்கள் அஜ்ஞானம் அந்யதாஜ்ஞானம் விபரீதஜ்ஞானம் அந்யசேஷத்வம் உபாயாந்தர பரத்வம் உபேயாந்தர பரத்வம் முதலிய குற்றங்குறைகளில் ஒன்றுமின்றியே எம்பெருமான் திருவுள்ளமுகக்குமாறு இருப்பவர்களாகையால் அந்த நாடு திருந்துவதற்காகச் சொல்லவேண்டிய பாசுரம் என்ன இருக்கிறது? ஸர்வாத்மா பாரதந்த்ரமாயிருக்கிற அந்தத் திருநாட்டைப்பற்றிப்பேச வேண்டியதொன்றில்லை. இந்த நாடு அதற்கு எதிர்தட்டாயிருக்கையாலே இதைப்பற்றியே பன்னியுரைக்க ப்ரஸக்தியுள்ளது. ஆகவே மேற்பாசுரங்களாலே லீலாவிபூதிச் செல்வத்தைப் பரக்க அருளிச்செய்வது பொருந்துமென்க.

எம்பெருமானார் கத்யத்தில் * ஸ்வாதீநத்ரிவிதசேதநாசேதநஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திபேதம் * என்று அருளிச்செய்வது—இப்பாட்டு முதல்முறையேயுள்ள மூன்று பாசுரங்களிலும் சொல்லுகிற பொருளையே ஸங்க்ரஹித்தபடியாம். ஸகல சேதநாசேதநங்களின் ஸ்வரூபம் எம்பெருமானுடைய அதீநமாயிருக்குமென்பது இப்பாட்டிற் சொல்லுகிறது; அப்படியே அவற்றின் ஸ்திதியும் [ரக்ஷணமும்] அவனதீநமாயிருக்குமென்பது மேற்பாட்டிற் சொல்லுகிறது. அவற்றின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் அவனதீநங்களாயிருக்குமென்பது அதற்கு மேற்பாட்டிற் சொல்லுகிறது.

இந்நாட்டிலுள்ள ஸகல பதார்த்தங்களினுடையவும் ஸ்வரூபம் எம்பெருமானுக்கு அதீநமென்னுமிடம் இப்பாட்டிற் சொல்லுகிறது. இவற்றின் ஸ்வரூபம் அவனதீநமாயிருக்கையாவது என்னென்னில்; ஸ்ருஷ்டிகாலத்திலே எம்பெருமான் தானே இவற்றையுண்டாக்கி ஜீவத்வாரா உட்புகுந்து வஸ்துவாகவும் ஒரு பெயருடையதாகவுமாக்கியும், பிறகு பிரளயகாலத்திலே இவற்றையெல்லாம் தன் பக்கலிலே ஸூக்ஷ்ம ரூபமாகக் கிடக்கும்படி ஏறிட்டுக்கொண்டு தரித்தும் போருகையாகிற இதுதான் இவற்றின் ஸ்வரூபம் அவனதீநமாயிருத்தலாம்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் தனித்தனியெடுத்துக்கொண்டு ‘இதன் ஸ்வரூபம் அவனதீநம், இதன் ஸ்வரூபம் அவனதீநம், இதன் ஸ்வரூபம் அவனதீநம்’ என்றிப்படி சொல்லுவதென்றால் இஃது ஒருநாளும் ஓயாத கதையாகும். இங்ஙனன்றியே, ‘ஸகல பதார்த்தங்களும் அவனதீநம்’ என்று ஒரே வார்த்தையாகச் சொல்லி முடித்துவிடலாமேயென்றால், இதில் ஸ்வாரஸ்யமில்லை; கேட்போர்க்கு ரஸிக்காது; ஆழ்வார்க்கும் திருப்திபிறவாது. ஆகவே பெருக்கமும் சுருக்கமுமின்றியே பேசியருளுகிறார்.

நாம் என்று தன்மையாக [உத்தமபுருஷனாக]ச் சொல்லிக்கொள்ளப்படுகிற வ்யக்திகளும், அவன் என்று தூரத்திலுள்ளவர்களாகச் சொல்லப்படுகிற ஸாமாந்ய புருஷவ்யக்திகளும், இவன் என்று ஸமீபத்திலுள்ளவர்களாகச் சொல்லப்படுகிற ஸாமாந்ய புருஷவ்யக்திகளும், உவன் என்று—மிக்க தூரத்திலுமல்லாமல் மிக்க ஸமீபத்திலுமல்லாமல் நடுவணுள்ளவர்களாகச் சொல்லப்படுகிற ஸாமாந்ய புருஷவ்யக்திகளும், அவள் என்று தூரத்திலுள்ளவர்களாகச் சொல்லப்படுகிற ஸ்த்ரீவ்யக்திகளும், இவள் என்று ஸமீபத்திலுள்ளவர்களாகச் சொல்லப்படுகிற ஸ்த்ரீவ்யக்திகளும், உவள் என்று நடுவணுள்ளவர்களாகச் சொல்லப்படுகிற ஸ்த்ரீவ்யக்தி

களும், எவள் என்று வினவப்படுகிற வ்யக்திகளும், அது, இது, உது, எது என்னப்படுகிற அஃறிணைப்பொருள்களும் [அதாவது—அசேதநவஸ்துக்களும்], அறியக்கூடிய பொருள்களும், நல்ல பொருள்களும் கெட்ட பொருள்களும், இனி உண்டாகப்போகிற பொருள்களும் கீழ் உண்டாகிக்கழிந்த பொருள்களுமாகிய அனைத்தின் ஸ்வரூபமும் எம்பெருமானுக்கு அதீநம் என்றதாயிற்று.

'எம்பெருமானுக்கு அதீநம்' என்று மூலத்தில் இல்லாதிருக்க இவ்விதம் அர்த்தம் செய்கிறது? மூலத்தில் அவரே என்றிருப்பதால் ஸகலவஸ்துக்களுக்கும் எம்பெருமானுக்கும் அபேதமேயன்றோ சொல்லப்படுகிறது; ஆகவே அத்வைதமாகச் சொல்லியிருக்க வேறுவகையாகப் பொருள்பணிப்பது எங்ஙனே? என்னில்; கேண்மின்;—மேல் ஏழாம்பாட்டில் "உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" என்று ஸர்வவஸ்துக்களிலும் எம்பெருமான் அந்தர்யாமியாக இருக்கிறானென்பதை வ்யக்தமாகப் பேசியிருக்கிற படியைக்கொண்டு ஸமந்வயம் காண்க.

*இப்பாட்டில் முதலடியிலுள்ள அவன் இத்யாதிகள் ஜாத்யேகவசனமாகக்கொள்ளத்தக்கன. இரண்டாமடியில் அவர் இத்யாதிகள் பன்மையாக இருக்கும்போது, அவன் இத்யாதியை ஜாத்யேகவசநமாகக் கொள்ளவேண்டிய அவசியமில்லையேயென்னில்; இரண்டாமடியில் அவர் இத்யாதியாகவுள்ள பன்மை வ்யக்திபஹுத்வத்தைச் சொல்லவந்ததன்று; 'பூஜாயாம் பஹுவசநம்' என்பதுண்டாகையால் பூஜ்யத்வத்தை மாத்திரம் காட்ட வந்த பன்மையாகக் கொள்ளத்தக்கது. பூருவர்களின் வியாக்கியானங்களிலும் இங்ஙனேயுள்ளது. இதைநோக்கி, முதலடியிலுள்ளவை ஸாமாந்ய புருஷ வாசகங்களென்று கொள்ளப்பட்டது. எவள் என்றதும் லிங்கநிர்த்தேசத்திற்கும் உபலக்ஷணமாகக் கொள்ளத்தக்கது. இங்ஙனமே, வீமவை என்று அறியக்கூடிய பொருள்களைச் சொன்னது அறியாப்பொருள்களுக்கும் உபலக்ஷணமாகும். அறியாப்பொருள்களின் ஸ்வரூபமும் எம்பெருமானுடைய அதீநமோ என்கிற சங்கையை ஆழ்வான ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் * இச்சாத ஏவ * என்கிற சுலோகத்தால் தீர்த்தருளினர்.*

நலம் தீங்கவை—*நன்மை தீமை என்று, பண்பை [தர்மத்தை]ச் சொல்லுகிறதாகவும் கொள்ளலாம்; நல்பொருள் தீயபொருள் என்று பண்பியை [தர்மியை]ச் சொல்லுகிறதாகவும் கொள்ளலாம். ஜாதியோடும் வ்யக்தியோடும் வாசியறவும், குணத்தோடும் த்ரவ்யத்தோடும் வாசியறவும், க்ரியையோடும் க்ரியாவத்தோடும் வாசியறவும் எல்லாவற்றின் ஸ்வரூபமும் எம்பெருமானதீநம் என்றதாயிற்று.*

ஆமவை *என்று எதிர்காலப்பொருள்களையும்* ஆயவை *என்று இறந்தகாலப்பொருள்களையும் சொன்னதுபோல நிகழ்காலப்பொருள்களையும் சொல்லவேண்டியிருக்கச் சொல்லாது விட்டதேன்? எனில்; நிகழ்காலமென்பது ஒரு நொடிப்பொழுதேயாகும்; இது இறந்த காலத்திலும் எதிர்காலத்திலும் அடங்கிப்போகக்கடவதாதலால் தனிப்படச் சொல்லவேண்டிய அவசியமில்லையென்பர்.*

ஆக இப்பாட்டால், ஆண், பெண், அலி, சிறந்தபொருள்கள், அழியும் பொருள்கள், விலக்ஷணப் பொருள்கள், அவிலக்ஷணப்பொருள்கள், இறந்தகாலப்பொருள்கள், எதிர்காலப் பொருள்கள்—என்று சில வகைகளாலே இந்த லீலா விபூதியிலுள்ள ஸகல பதார்த்தங்களையும் நிர்த்தேசித்து, இவற்றின் ஸ்வரூபம் எம்பெருமானதீநமென்று அருளிச்செய்தாராயிற்று....(4)

அவரவர்தமதமது அறிவறிவகைவகை *
அவரவரிறையவர் எனவடியடைவர்கள் *
அவரவரிறையவர் குறைவிலரிறையவர் *
அவரவா விதிவழி அடையநின்றனரே. 5

அவர் அவர்	அந்தந்த அதிகாரிகள்
தம தமது	தங்கள் தங்களுடைய
அறிவு	ஞானத்தாலே
அறி	அறியப்படுகிற
வகை வகை	பலபல படிகளாலே
அவரவா	அந்தந்த தெய்வங்களை
இறையவர்என	ஸ்வாமிகளென்றெண்ணி
அடி அடைவர்கள்	ஆச்ரயிப்பர்கள்,
அவரவர் இறையவர்	அந்தந்த அதிகாரிகளால் தொழப்படுகி தெய்வங்கள
குறைவு இலா	(அவரவர்கள் விரும்பின பலன்களைக் கொடுப்பதில்) குறை யற்றனவே ;
	(எதனாலே என்னில்)
இறையவர்	ஸர்வஸ்வாமியான ஸ்ரீமந் நாராயணன்
அவரவர்	அந்தந்த அதிகாரிகள்
விதி வழி	தங்கள தங்கள் அத்ருஷ்டாநுஸாரமாக
அடைய	பலன்பெறும்படியாக
நின்றனர்	(அந்தந்த தேவதைகளுக்கு) அந்தர்யாமியாக எழுந்தருளியுள்ளான. [அதனாலே காண்மின்.]

* * * ஸகல பதார்த்தங்களினுடையவும் ஸ்வரூபம் எம்பெருமானதீநமென்று கீழ்ப்பாட்டிற் சொல்லிற்று ; ஸ்வரூபம்போலவே ஸ்திதியும [அதாவது — ரக்ஷணமும்] எம்பெருமானதீநமே என்கிறது இப்பாட்டில். இவ்வுலகில் ரக்ஷகர்களென்று பேர்சுமப்பவர்கள் பலவகைப்பட்டிராநின்றனர். ஒருவன் ஒரு வீட்டுக்குமாத்திரம் ரக்ஷகனென்றிருப்பன், ஒருவன் ஒரு க்ராமத்துக்காக ரக்ஷகனென்றிருப்பன் ; ஒரு நாட்டுக்காக ரக்ஷகனென்றிருப்பன் ஒருவன் மூவுலகுக்கு ரக்ஷகனென்றிருப்பன் ; ஒருவன் பதினாலுலகுக்கு ரக்ஷகனென்றிருப்பன். ஆகவிப்படிப்பட்ட அவரவர்கள் ரக்ஷகரென்னும்படி நிற்பது அந்த வ்யக்திகளில் எம்பெருமான் அந்தராத்மாவாய் நின்று நடத்துகையாலத் தன்னையன்றி, இவனுடைய அநுப்ரவேசமின்றி ஒருவராலும் ஒரு ரக்ஷணமும் பண்ண முடியாது என்பது ஸகல சாஸ்த்ரங்களிலும் முறையிடப்பட்டுள்ளது. * ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே - ஸமர்த்தோ த்ருச்யதே கச்சித் தம் விநா புருஷோத்தமம்., * ஸம்பத்துக்களைச் சேமித்துக்கொடுப்பதிலும் ஆபத்துக்களைத் தவிர்த்தொழிப்பதிலும எம்பெருமானுக்கன்றி மற்றொருவற்கும் சக்தியில்லை என்று சொல்லிற்று. இதனை இப்பாட்டில் அருளிச்செய்கிறார்.

உலகத்திலுள்ள சேதநர்கள் ஸாத்விகராகவும் ராஜஸராகவும தாமஸராகவுமுள்ளார்கள், சுத்த ஸாத்விகராயிருப்பவர்கள் “ உன்னித்து மற்றொரு தெய்வந்தொழாள் அவனையல்லால் ” “ களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் ” என்னுமாபோலே எம்பெருமானையன்றி மற்றொரு தெய்வத்தையும் தொழாதவர்களாயும் ஒரு பிரயோஜனத்தையும் விரும்பாதவர்களாயு மிருப்பார்கள் ; அன்னவர்களைப்பற்றி இங்குச் சொல்லவேண்டியதொன்றுமில்லை. மற்ற குணங்கட்கு வசப்பட்டவர்கள் ஆரோக்யம, ஐச்வரியம் ஸந்தாநம் முதலிய க்ஷுத்ர பலன்களை விரும்பினவர்களாய், அப்படிப்பட்ட பலன்களையும் நேர்கொடுநேரே எம்பெருமானிடத்துச் சென்று விரும்புதலின்றியே தாம் தாம் அபிமானித்திருக்கிற தெய்வங்கள் பக்கலிலே விரும்புமவர்களாயிருப்பர்கள் ; அப்படிப்பட்டவர்களைக் குறிக்கிறார் அவரவா என்று.

தமதமது அறிவு — ஒவ்வொரு சேதநருடையவும் ஞானம ஒவ்வொருவிதமாயிருக்குமன்றோ. இங்கு ஞானமென்று ருசியைச் சொல்லுகிறது. தங்கள் தங்களுடைய ருசியினாலே யென்றபடி. ஒருவனுக்கு ஸ்வர்க்கபோகத்திலே ருசியுண்டாகும் ; மற்றொருவனுக்கு இஹலோக போகங்களிலே ருசியுண்டாகும் ; இன்னொருவனுக்கு இனனொன்றிலே ருசியுண்டாகும் ; ஆகவே அதிகாரிகள் பலவகைப்பட்டிருக்கிறபோலவே அவர்களுடைய ருசிகளும் பலவகைப்பட்டிருக்கும். தமதமது என்கிற இரட்டிப்பால அந்த ருசி பேதங்கள் காட்டப்படுகின்றன.

அப்படிப்பட்ட ருசிபேதங்களினால்; அறி — அறியப்பட்ட, வகைவகை—சேதநர்கள் பல வகைப்பட்டிருக்கிறாப்போலவும் அவர்களுடைய ருசிகள் பலவகைப்பட்டிருக்கிறாப்போலவும் அவர்கள் கோலின பலன்களுக்காக அநுஷ்டிக்கும் ஸாதனங்களும் பலவகைப்பட்டிருக்கும்:— ‘வகைவகை’ என்ற இரட்டிப்பால் அது சொல்லப்படுகிறது. சிலர் த்யானத்தினாலும், சிலர் யஜ்ஞங்களினாலும், சிலர் அர்ச்சனையினாலும், சிலர் திருநாமஸங்கீர்த்தனங்களினாலும், சிலர் அபிஷேகத்தினாலும் ஆகவிப்படி வெவ்வேறுபட்ட வகைகளாலே தெய்வங்களை வழிபடுபவர்களன்றோ; அந்த வகைகளெல்லாம் இங்குக் குறிகொள்ளத்தக்கன, அப்படிப்பட்ட உபாயங்களைக்கொண்டு.

அவரவர் இறையவரென அடியடைவர்கள் — முதலடியிலுள்ள ‘அவரவர்’ என்றது வழிபடுகின்ற சேதநர்களைச் சொல்லிற்று; இவ்வடியிலுள்ள ‘அவரவர்’ என்பது வழிபாடு செய்யப்படுகிற பலபல தெய்வங்களைக் குறிக்கின்றது. இந்திரனென்றும் சந்திரனென்றும் சிவனென்றும் பிரமனென்றும் காளியென்றும் ஐயனென்றும் அம்மனென்றும் இப்படி உரைக்கப்படுகின்ற நாமபேதங்களைத் திருவுள்ளம்பற்றி அவரவர் என்கிறார். இறையவரென — ‘இறையவர் என்கிற வாசகம் ஸ்ரீமந்நாராயணனுக்கே அஸாதாரணமாயினும், ப்ரதிபத்தி செய்கிற சேதனர்களின் அபிமானத்தைப்படி போற்றி [அவர்களது கருத்தாலே] இறையவர் என்கிறார்; ஒவ்வொருவர் ஒவ்வொரு தெய்வத்தை ஸ்வாமியாகக் கொள்வர் என்றவாறு.

“தொழுது மாமலர்நீர்சுடர் தூபங்கொண்டு, எழுதுமென்னுமிது மிகை” என்கிறபடியே தொழுது எழுவதுதானும் மிகையாம்படியான பகவத் விஷயத்திலே வாஸனை பண்ணிப் போருகின்ற ஆழ்வார் திருவாக்கில் அடியடைவர்கள் என்கிற வாசகமே பாயத்தது வரக்கூடியது.

அவரவரிறையவர்குறைவிலா— அவரவர்களுடைய இறையவர் என்றாவது, அவரவர்களாகிய இறையவர் [அதாவது, அந்தந்த இறையவர்] என்றாவது உரைக்கலாம். முதற்பொருளில், ஆச்ரயிப்பவர்களான அந்தந்த சேதநர்களினால் போற்றப்பட்ட தெய்வங்கள் என்றபடி. குறைவிலா—தம்மை அடுத்தவர்கட்கு வேண்டிய பலன்களையளிப்பதில் தகுதியுடையார் என்றபடி. ஆனால், அத்தெய்வங்கள் தாமாகவே பலனளிப்பதில்லை; எம்பெருமான் தங்களிடத்தில் அநுப்ரவேசித்திருப்பதனால் தான் தாங்கள் பலனளிக்கத் திறமைபெறுகிறார்களென்கிறார் வாக்ய சேஷத்தினால். [அவரவர் விதிவழியடைய இறையவர் நின்றனர்] என்று அந்வயிப்பது.

ஈடு முப்பத்தாறாயிரப் படியில் இங்கே “ஐயன்பாழியிலானை போர்க்கு உரித்தாமன்றாயிற்று அவ்வோ தேவதாமாத்ரங்களுக்கு பலப்ரதாநஸாமர்த்யமுள்ளது” என்று ஸ்ரீஸூக்தியுள்ளது; இதன் கருத்தாவது — பிடாரிகோவில்களின் வாசலில் குயவன் செய்த பெரிய பெரிய யானை குதிரைகள் நிறுத்தப்பட்டிருக்கும். ஆனால் அவை போர்செய்யமாட்டா; ஒழுங்காக அங்கு நிற்குமத்தனையேயன்றி ஒருகாரியமும் செய்யமுடியா; அதுபோலவே தேவதாந்தரங்களும் என்றபடி. [ஐயன் பாழி—சாஸ்தா என்கிற தெய்வத்தின் கோவில் என்க. ஆனை—யானை குதிரை முதலானவை. போர்க்கு உரித்தாமன்று—யுத்தஞ்செய்ய உபயோகப்படுமேயானால் என்றவாறு.]

ஆக இப்பாட்டால் சொல்லிற்றாயிற்று என்னெனில்; உலகத்தில் நடக்கிற ரக்ஷணத்தொழில் யாவும் எம்பெருமானுடையதே. அக்நி, இந்திரன், சிவன், பிரமன் முதலிய இதர தெய்வங்களைக்குறித்து அவரவர்கள் வழிபாடுகள் செய்து தாம் தாம் கோலின பலன்களைப் பெறுவதாகக் கண்டாலும் அதுவும் எம்பெருமான்றானே அத்தெய்வங்களுக்கு உள்ளீடாக இருந்து நடத்துகிற ரக்ஷணமேயன்றி அத்தெய்வங்களே ஸ்வதந்திரமாகச்செய்துவிடுகிற ரக்ஷணமன்று என்றதாயிற்று. ... ... (5)

நின்றனரிருந்தனர் கிடந்தனர் திரிந்தனர் *
நின்றிலரிருந்திலர் கிடந்திலர் திரிந்திலர் *
என்றுமோரியல்வினர் எனநினைவரியவர் *
என்றுமோரியல்வொடு நின்றவெந்திடரே. 6

நின்றனர்	நிற்பவர்கள்
இருந்தனர்	இருப்பவர்கள்
கிடந்தனர்	கிடப்பவர்கள்
திரிந்தனர்	திரிபவர்கள் (ஆக இப்படிப் பட்டவர்களினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதலாகிற ப்ரவ்ருத்திகளெல்லாம் அப் பெருமானுடைய அதீநமே:)
நின்றிலர்	நில்லாதவர்கள்
இருந்திலர்	இராதவர்கள்
கிடந்திலர்	கிடவாதவர்கள்
திரிந்திலர்	திரியாதவர்கள் (ஆக இப்படிப் பட்டவர்களினுடைய நில்லாமை இராமை கிடவாமை திரியாமையாகிற நிவ்ருத்திகளெல்லாமும் அப்பெருமானுடைய அதீநமே:)
என்றும்	எப்போதும்.
ஓர் இயல்வினர் என நினைவு அரியவர்	ஒரேவிதமான இயற்கையையுடையவரென்று நினைக்க முடியாதவரும் (அவரே.)
	(அவர் தாம் யாவரென்னில்;)
என்றும்	எப்போதும்
ஓர் இயல்வொடு நின்ற	ஒரேவிதமான இயற்கையோடு கூடியிருக்கின்றவராய்
எம் திடர்	திடமான பிரமாணத்தினால் விதிதரான நம்முடையவர்.

* * * லீலாவிபூதியின் ஸ்வரூபமும் ரக்ஷணமும் எம்பெருமானுடைய அதீநமென்பது கீழிரண்டு பாசுரங்களில் அருளிச்செய்யப்பட்டது; அதனுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் அவனுடைய அதீநமே யென்கிறது இப்பாட்டில். இதில் முதலடியில் ப்ரவ்ருத்திகளைச் சொல்லுகிறது; இரண்டாமடியில் நிவ்ருத்திகளைச் சொல்லுகிறது.

நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்—நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் என்கிற காரியங்களைச் செய்கின்ற புருஷர்களைச்சொல்லுகிற சொற்கள் இவையாயினும் புருஷர்கள் வரையில் விவக்ஷிக்கவேண்டிய அவசியம் இங்கு இல்லை: கீழ் நாலாம்பாட்டிலேயே உலகத்திலுள்ள ஸகல வ்யக்திகளினுடையவும் ஸ்வரூபம் எம்பெருமானுடைய அதீநம் என்பது சொல்லப்பட்டுவிட்டபடியால் அதனையே ஈண்டுஞ் சொல்லுவதாகக் கொள்ளில் பயனில்லை; அபூர்வமான பொருளே இங்குக்கூறப்பட்டதாகவேண்டும். ஆகவே, நின்றனர் இத்யாதிக்கு-நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் என்கிற தொழில்கள் மாத்திரமே இங்குப்பொருளாக அமையும். இங்ஙனமே இரண்டாமடியிலும் நின்றிலர் இத்யாதிக்கு - நில்லாமை இராமை கிடவாமை திரியாமை என்பவைகளே பொருளாகப்பொருந்தும். மூலத்தில் தர்மிவாசகசப்தம் இருக்கச் செய்தேயும் தர்மியை விட்டு தர்மத்தை மாத்திரம் பொருள்கொள்ளுமிது ஸமஸ்க்ருத சாஸ்திர மர்யாதைக்கு மிகவும்இணங்கினதேயாகும்: எங்ஙனே யென்னில்:—

* அருணயா பிங்காக்ஷ்யா க்ரீணாதி * என்று வேதத்திலுள்ளது. யஜ்ஞத்திற்காக ஸோமம் ஸம்பாதிக்க வேண்டுமென்றும் அதனை விலைகொடுத்து வாங்கவேணுமேயன்றி வேறுவகையால் ஸம்பாதிக்கலாகாதென்றும் சொல்லி வருகிற பிரகரணத்திலே அந்த வாக்கியம் [யஜுர்வேதம் - ஆறாவது காண்டம் முதல் ப்ரச்நம 45வது பஞ்சாதி.] உள்ளது. சிவந்ததாயும் பொன்வர்ணமான கண்களையுடைத்தாயுமிருக்கின்ற பசுவை விலையாகக்கொடுத்து ஸோமம் வாங்கவேண்டியது என்பது இதன் பொருள். இவ்விடத்தில், இரண்டு விசேஷணங்களோடு கூடின விசேஷ்யமான பசுவாகிற வ்யக்தி மூலத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் அதில் நோக்கில்லை; பசுவைக்கொண்டுதான் ஸோமம் வாங்கவேண்டுமென்பது முன்னமே கீழ்வாக்கியங்களிலும் இதர விதிவாக்கியங்களிலும் ஸித்தித்துவிட்டபடியால் இங்கே விசேஷ்யமான அம்சத்தில் நோக்கு இன்றியே விசேஷணமான அம்சத்தில் மாத்திரமே நோக்கு என்று கொள்ள வேணும்: இப்படியே சாஸ்திரஜ்ஞர்கள் கொண்டிருக்கிறார்கள். அதாவது, 'சிவப்பு நிறமுடைய பசு' என்கிறவரையில இங்கு விதேயமல்ல; சிவப்பு நிறம் என்பதுமாத்திரமே இங்கு விதேயம் என்று கொண்டார்கள்.

மற்றோரிடமுங் காண்மின் :—* லோஹிதோஷ்ணீஷா ருத்விஜஃ ப்ரசரந்தி * என்பதாக ஓதப்பட்டுள்ளது ; அபிசார கருமத்தில் ருத்விக்குக்கள் சிவந்த தலைப்பாகையுடையவர்களா யிருத்தல் வேண்டுமென்று சொல்லிற்று. தலைப்பாகையோடுகூடியிருக்கவேண்டுமென்பது ஏற்கெனவே வேறு பிரமாணத்தினால் கிடைத்திருப்பதால் அந்தத் தலைப்பாகையில் சிவப்பு மாத்திரமே இங்கு விதிவிஷயம் என்று கொண்டார்கள். ஆக இப்படிப்பட்ட வழியாலே இப் பாசுரத்திலும் விசேஷ்யாம்சத்தைத் தவிர்த்து விசேஷணாம்சத்தில மாத்திரமே [அதாவது நிற்றல் இருத்தல், கிடத்தல், திரிதல்: நில்லாமை இராமை கிடவாமை திரியாமை என்கிற ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி அம்சங்களில் மாத்திரமே] நோக்காகக்கொள்வது ஆவச்யகமும் பொருத்தமுடையதுமாம்.

நின்றனர் இத்யாதிக்கு நிற்றல் முதலியவற்றைறைப் பொருளாகக்கொண்டாலும் அந்த நிற்றல் முதலியவை எம்பெருமானுடைய ஸங்கல்பாதீந மென்பது மூலத்தில சொல்லிற்றில லையே யென்னில் ; நன்கு சொல்லிற்று ; எங்ஙனேயென்னில் ; நின்றனா (முதலிய யாவரும்) எம் திடர்' என்று மூலத்திலுள்ளதன்றோ ? திடர் என்றது திடமான பிரமாணமாகிய வேதத்தினால் ஸித்திக்கும் எம்பெருமான் என்றபடி. 'நின்றனர் முதலான யாவரும் எம்பெருமான்' என்று ஸாமாநாதிகரண்யத்தாற் சொல்லுகிறவிதற்குக் கருத்து 'எம்பெருமானுக்கு அதீநம்' என்று சொல்லுமதுவேயாம்.

இங்கே ஒரு சங்கை:—பிரவ்ருத்திரூபமான காரியங்களெல்லாம் எம்பெருமானுடைய ஸங்கல்பாதீநம் என்பதில் தட்டில்லை ; நிவ்ருத்தியும் அவனுடைய அதீநம் என்று ஏதுக்கு இசையவேண்டும்? ஒரு வியாபாரமுமற்றிருக்கையாகிற நிவ்ருத்தி ஸ்வயமாகவே யுள்ளதன்றோ? உயர வீசி யெறியப்படுங் கல்லானது தன்னடையே கீழே விழாநின்றால் அந்த நிவ்ருத்தியும் பகவத ஸங்கல்பாதீநமென்று கொள்ளவேணுமோ? என்று. இந்த சங்கைக்கு எமபார் அருளிச்செய்த ஸமாதானமாவது :— 'ஸ்வர்க்கத்தில் நின்றும் விழுகிற த்ரிசங்குவை சக்திமாந் நிற்கச்சொல்ல நிற்கவேண்டிற்றுக் கண்டாயே : அப்படியே நிவ்ருத்திக்கும் அவன் வேணுங் காண்' என்றருளிச்செயதாராம்.

என்றும் ஓரியல்வினரெனநினைவரியவர்—எம்பெருமானுடைய படிகள் பலபலவாகையாலே எத்தனைநாள் ஆராய்ந்தாலும் இன்னபடிப்பட்ட ஸ்வபாவத்தையுடையவனென்று நெஞ்சால் நினைக்கவுங்கூட முடியாதவனெம்பெருமான். "என்று மோரியல்வினரென நினைவரியவர்" என்று சொல்லிவைத்து உடனே "என்றுமோரியல்வோடுநின்ற" என்றுரைத்தது பொருந்துமோ எனின் ; கேண்மின் : * என்று மோரியல்வினரென நினைவரியவர் என்று சொல்லப்பட்ட இயல்வு என்றைக்கும் ஒருப்படிப்பட்டிருக்கு மெனபதே ஈற்றடியின் கருத்தாம்.

திடர்—த்ருடமான வேதப்ரமாணத்தினால் ஸித்திப்பவர் என்றபடி. எம்பெருமான் அப்படி ஸித்திப்பது வைதிகோத்தமராகிய தமக்குப் ப்ரமலாபம் என்பது தோன்ற "எம் திடர்" என்கிறார். ... ... (6)

திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை *
படர்பொருள்முழுவதுமாய் அவையவைதோறும் *
உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன் *
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே. 7

திடம்	உறுதியான	நிலம்	பூமியென்ன
விசும்பு	ஆகாசமென்ன	இவை மிசை	ஆகிய இவற்றை ஆதாரமாகக்கொண்டு
எரி	அக்நியென்ன	படர் பொருள் முழுவதும் ஆய்	படர்ந்த பதார்த்தங்கள் யாவும் தானும்படி அவற்றுக்கு உபாதாநமாய் [அவற்றை உண்டாக்கி]
வளி	வாயுவென்ன		
நீர்	ஜலமென்ன		

அவை அவை தொறும்	அந்தந்த பதார்த்தங்களெல்லாவற்றிலும்
உடல் மிசை உயிர் என	சரீரத்தில் ஆத்மா வியாபிப்பதுபோல
கரந்து	மறைந்து
எங்கும் பரந்து	உள்ளிலும் வெளியிலும் வியாபித்து.
சுடர்மிகு சுருதியுள் உளன்	தேசுபொலிந்த வேதத்தில் உள்ளவனான எம்பெருமான்
இவை உண்ட சுரன்	(ஸம்ஹாரகாலத்தில்) இவற்றையெல்லாம் தன் பக்கலிலே யாக்கிக்கொள்ளும் தேவனான்.

* * * கீழ்ப்பாசுரங்களில் எல்லாப் பொருள்கட்கும் எம்பெருமானே நியாமகன் என்று சொல்லவேண்டியிருக்க அங்ஙனம் சொல்லாமல் ‘எல்லாம் எம்பெருமானே’ என்று [ஸமாநாதிகரணமாகச்] சொல்லியிருப்பதால் அத்வைதாபிப்ராயம்போல் தோன்றக்கூடுமன்றோ? உண்மையில் அப்படியில்லை. ஸகல சேதநாசேதநங்களும் சரீரமாய எம்பெருமான் ஸகலாந்தர்யாமித்வேந சரீரியாய் நிற்றலால் இப்படிப்பட்ட சரீர சரீரிபாவ ஸம்பந்தத்தைப்பற்றவே ஐக்கியம் சொல்லப்பட்டதென்று நிரூபிக்கிறது இப்பாசுரம். விசிஷ்டாத்வைதக் கோட்பாட்டை இப்பாட்டு ஸாரமாக எடுத்துரைக்கின்றது என்றுணர்க.

திடவிசும்பு என்று தொடங்கி முழுவதுமாய் என்னுமளவும்—பஞ்சபூதமடியாகவுண்டாகின்ற ஸகல பதார்த்தங்களுக்கும் எம்பெருமானே உபாதாநகாரணம் என்று சொல்லுகிறது. ஆகாசம் அக்நி வாயு ஜலம் பூமி என்கிற ஐந்து பூதங்களின் காரியப்பொருளாக விரிகின்ற தேவமநுஷ்யாதி ஸகல பதார்த்தங்களையும் உண்டாக்கி என்றபடி. முதலிலுள்ள திடம் என்னும் அடைமொழி ஆகாசமொன்றில் மாத்திரம் அந்வயிப்பதாகவுமாம்; மேலுள்ள நிலமீறான பூதங்களிலும் அந்வயிப்பதாகவுமாம். காரியங்கள் அழிந்துபோனாலும் காரணங்களான பூதங்கள் சிறிது காலமளவும் அழியாதிருத்தல்பற்றித் திடமென்று பூதங்களை விசேஷிப்பதாகக் கொள்க. இது ஆகாசத்திற்கு மாத்திரம் விசேடணமென்று கொள்ளில், ஆகாசமானது மற்றுள்ள பூதங்களுக்கு முன்னே யுண்டாகி அவை யழிந்தாலும் சிலநாள் நிற்கக்கடவதாகையாலே திடமென்றதென்க. அன்றியும் லோகாயதிகன் முதலான சிலர் ‘ஆகாசந் தவிர நான்கேபூதங்கள்’ என்று கொள்ளுகிறபடியால் அக்கொள்கையைக் கண்டித்து ஆகாசம் திடமாகவுண்டென்று காட்டுகிறபடியுமாம்.

முழுவதுமாக்கி என்னுமதே ஆய் என்றது—* பஹுஸ்யாம் ப்ரஜாயேய * என்கிற உபநிஷத்தின் சாயையை அடியொற்றியென்ப.

அவையவைதோறும் உடன்மிசை உயிரெனக்கரந்து எங்கும் பரந்துளன்—உண்டான ஒவ்வொரு பொருளிலும் சரீரத்தில் ஆத்மா உறையுமாபோலே மறைந்திருந்து எல்லாவற்றிலும் தனித்தனியே குறைவற வியாபித்திருக்குமெம்பெருமான். [உடன்மிசை உயிரென] நம்முடைய சரீரத்துக்கு ஆத்மா தாரகனாய நியாமகனாய சேஷியாயிருப்பதுபோல அந்த சரீராத்மாக்களுக்கு எம்பெருமான்தான் தாரகனாய் நியாமகனாய் சேஷியாயிருக்குமென்றபடி. கரந்து என்றது ஒருவர்க்குந் தெரியாமல் என்றபடி. எங்கும் பரந்து என்றது உள்ளும் புறமும் வியாபித்து என்றபடி.

ஆழ்வார் தாம் இப்படி நிஷ்கர்ஷித்து அருளிச்செய்கிற விஷயத்திற்கு மூலப்ரமாணம் வேதமேயென்று காட்டுகிறார் உளன் சுடர் மிகு சுருதியுள் என்று.

இவையுண்ட சுரன்—கீழ்ப் பாசுரங்களில் ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதிகள் எம்பெருமானுடைய அதீனமென்று சொல்லிற்று; ஸம்ஹாரமும் அவ்வெம்பெருமானுடைய செயலேயென்கிறது இதனால். பிரளயகாலத்திலே எம்பெருமான் ஸகலலோகங்களையும் தனது திருவயிற்றிலே வைத்தடக்கி ஆலந்தளிரிலே பள்ளி கொள்வதாக நூற்கொள்கை. ... (7)

சுரரறிவருநிலை விண்முதல் முழுவதும் *
வரன்முதலாயவை முழுதுண்டபரபரன் *
புரமொருமூன்றெரித்து அமரர்க்குமறிவியந்து *
அரனயனென உலகழித்தமைத்துளனே. 8

சுரர் அறிவு அரு நிலை	(பிரமன் முதலிய) தேவர்களுக்கும் அறியவொண்ணாத நிலைமையை உடைத்தான
விண் முதல் முழுவதும்	மூலப்ரக்ருதி முதலாகவுள்ள ஸகலவஸ்துக்களுக்கும்
வரன் முதல் ஆய்	சிறந்த காரண பூதனாய் [அவற்றையெல்லாம் படைத்தவனும்]
அவை முழுது உண்ட	அவற்றையெல்லாம் (பிரளய காலத்தில்) திருவயிற்றிலே வைத்து நோக்குபவனாயுமுள்ள
பரபரன்	பரமபுருஷன்
அரன் என	ருத்ரமூர்த்தியின் உருவத்தைத்தரித்தவனாகி
ஒரு மூன்று புரம் எரித்து	இணையில்லாத திரிபுரங்களைத் தஹித்தும்
உலகு அழித்து	உலகங்களை அழித்தல்செய்தும்
அயன் என	நான்முகக்கடவுள் என்னும்படியாக நின்று
அமரர்க்கு	தேவர்களுக்கு
அறிவுஇயந்தும்	ஞானத்தைக்கொடுத்தும்
உலகு அமைத்து	உலகங்களைப்படைத்தல் செய்தும்
உளன்	அவர்களுக்குள்ளே ஆத்மாவாயிருக்குமவன்.

* * * வேதாந்தங்களில் ஸித்திப்பவனும் எம்பெருமானேயென்றும் அனைத்துக்கும் ஆத்மாவாய் நிற்பவனும் அவனேயென்றும் உலகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்துகிறவனும் அவனேயென்றும் கீழ்ப்பாசுரங்களில் அருளிச்செய்த ஆழ்வாரைநோக்கிச் சிலர் 'இப்படி எல்லாப் பெருமைகளையும் ஒருவன் தலையிலேயே ஏற்றிச் சொல்லிவிடலாமோ? பிரமன் சிவன் முதலான தேவர்களும் சிலசில அரியபெரிய காரியங்களை நடத்திப்போருவதாக ப்ரமாணங்களில் விளங்காநின்றதே; சிவபிரான் த்ரிபுரஸம்ஹாரமாகிற மிகப்பெரிய அருந்தொழிலை நடத்தினனென்றும் ஸகலலோகத்தின் ஸம்ஹாரத்தொழிலுக்கு அதிகாரியாயிருக்கின்றானென்றும், பிரமனும் தேவர்களுக்கெல்லாம் ஜ்ஞானப்ரதானம் பண்ணினானென்றும் லோகஸ்ருஷ்டியை நடத்திப் போருகிறானென்றும் பிரமாணங்களால் நன்கு விளங்கும்போது எல்லாப்பெருமைகளையும் விஷ்ணுவாகிற ஒரு வ்யக்தியின்மேலேயே ஏறிட்டுச்சொன்னால் பக்ஷபாதத்தாலே சொல்லுகிறதாக ஆகுமே' என்று கூற, அவர்களுக்குத் தெளிவுபிறக்குமாறு அருளிச்செய்யும் பாசுரம் இது.

முன்னடிகளில் ஸ்ருஷ்டியையும் ஸம்ஹாரத்தையும் பேசியிருப்பதன் கருத்து—இந்த இரண்டு தொழில்களையும் பிரமனுக்கும் சிவனுக்கும் அஸாதாரணமாகச் சிலர் நினைப்பதனால் அந்த நினைவைக்குலைப்பதற்குத் தம்முடைய ஸித்தாந்தத்தை ஸ்தாபித்துச் சொல்லுகிறபடி. ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களென்னும் மூன்று காரியங்களில் ரக்ஷணமாகிற ஸ்திதி என்னும் காரியம் மாத்திரம் எம்பெருமானுடையது, மற்ற இரண்டு காரியமும் ப்ரஹ்மருத்ரர்களினுடையது என்று பலர் நினைத்திருப்பார்கள்; அன்னவர்களுடைய நினைவின்படி ரக்ஷணத்தொழில் எம்பெருமானுடையதே என்பதில் விவாதமொன்றுமில்லாமையால பிரதிபக்ஷிகளாலும் அங்கீகரிக்கப்பட்ட அவ்விஷயத்தை மீண்டும் நாம் எடுத்து ஸ்தாபிக்கவேண்டிய அவசியமில்லையென்றும் விவாதாஸ்பதமான மற்ற இரண்டு காரியங்களைப்பற்றியே இங்கு உண்மையைப் பேசவேண்டுமென்றும் திருவுள்ளம்பற்றி ஆழ்வார் அவ்விரண்டையுமே இப்பாட்டில் பிரஸ்தாவித்து உண்மை யுணர்த்துகின்றாரென்று உணர்க.

* கஸ்மிந் நு கலு ஆகாச ஓதச்ச ப்ரோதச்ச * என்கிற உபநிஷத்வாக்யத்தில் ஆகாச சப்தத்தினால் ப்ரக்ருதியைச் சொல்லுகிறதாக வேதாந்திகளின் ஸித்தாந்தம். அந்த ரீதியில் இங்கு விண் என்கிற ஆகாசவாசக சப்தமும் ப்ரக்ருதி வாசகமாகுமென்று ஆசார்யர்கள் நிர்-

பரந்த	எங்கும் வியாபித்த
தண் பரவையுள்	குளிர்ந்த கடலினுள்
நீர் தொறும்	ஜலபரமாணுதோறும்
பரந்த அண்டம் இது என பரந்து உளன	விஸ்தாரமான இவ்வண்டத்தி லிருக்குமாபோலே நெருக்குண்ணுமல் இருப்பவனாய் (இப்படி)
நிலம்	பூமியிலும்
விசும்பு	மேலுலகங்களிலும
ஒழிவு அற	ஒனறொழியாமே
கரந்த சில் இடம் தொறும்	அதி ஸூக்ஷ்மமாய் அற்பமான இடஙகள் தோறும்
இடம்	அவ்வவ்விடங்களிலே
திகழ்	விளங்காநின்ற
பொருள்தொறும்	ஆத்மவஸ்துக்கள் தோறும்
கரந்து	(வ்யாப்யவஸ்துக்களும் அறியாதபடி) மறைந்து
எங்கும் பரந்து உளன	எல்லாவிடங்களிலும் வியாபித்திராநின்றான் (யாவனெனில்;)
இவை உண்ட கரன	இவ்வஸ்துக்களை ஸம்ஹாரதசையிலும் தனக்குளளே யடக்கி, தான் ஸதிரமாயிருக்கு மெம்பெருமான்.

* * * [பரந்ததண்பரவையுள்] பரத்துவத்தைப் பேசுவதான இப்பதிகத்தில் ஸ்ரீமந் நாராயணனுக்கே பரத்வமுள்ளதாக ஸ்தாபித்தல் ஆழ்வாருடைய திருவுள்ளத்திலுள்ளது. அந்த நாராயணத் திருநாமத்தை மேற்பதிகங்களிலே ஸ்பஷ்டமாகப் பேசியருளுகிற ஆழ்வார் இந்தப் பதிகததிலே ஒருவாறு மறைத்தே காட்டினர். கீழ் ஏழாம்பாட்டில் "சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே" என்றது முககியமாக நாராயணத் திருநாமத்தைத் திருவுள்ளம் பற்றியேயாமென்பது ஸம்பிரதாயம். சுருதி யென்றால் வேதம்; மிகுசுருதி யென்றால் வேதாந்தமாகிய உபநிஷத்து; சுடர்மிகுசுருதியென்றால் நாராயணாநுவாகம். ஆகவே நாராயணாநுவாக ஸித்தனான எம்பெருமானுககே இப் பதிகத்தில் பரத்துவம் பேசப்பட்டதென்பது குறிக்கொள்ளத்தக்கது. ஸர்வவ்யாபகத்வமே நாராயண நாமத்தின் தேர்ந்த பொருளாதலால் அதனை இபபாட்டில் அருளிச்செயகிறார்.

பரந்து குளிர்ந்திருந்துள்ள கடலில் நீர்த்திவலைகள்தோறும் வியாபித்திரா நின்றான் என்று முதலடியில் கூறினர். சாந்தோக்ய உபநிஷத்தில் சாண்டில்ய வித்யையில்* ஏஷமஆத்மா அந்தர்ஹ்ருதயே ஜ்யாந் ப்ருதிவ்யா: ஜ்யாயாநந்தரிக்ஷாத் ஜ்யாயாந் திவோ ஜ்யாயாநேப்யோ லோகேப்ய:* என்று மிகப் பெரிதாக ஓதப்படடுள்ள பரம்பொருள் நீர்த்திவலையிலே வியாபியாநின்றால் அவகாசம அற்பமாகி நெருக்குப்படடிருக்குமோவென்ன அப்படிப்பட்ட வருத்தமில்லையென்று வ்யாப்தியின் ஸௌகரியத்தை இரண்டாமடியாற் கூறுகின்றார். ஓர் அண்டத்தை ஸ்ருஷ்டித்து அதிலே ஏகாகியை வைத்தால் எப்படியிருக்குமோ அப்படி அஸங்குசிதமாகவே வ்யாப்தியுள்ள தென்றவாறு.

இப்படி ஜலபரமாணுக்களிலே வியாபித்துவிடுமிவ்வளவேயோவென்ன; நிலவிசும்பொழிவற என்று பூமியிலும் ஆகாசததிலும் அப்படியே யென்கிறார். ஸகல பதார்த்தங்களிலும் வியாப்தியுண்டென்று சொன்னபடி. அதனையே பின்னடிகளில் விவரிக்கின்றார் [கரந்தசிலிடந் தோறும் இத்யாதியால்.] இமையோடு இமைபொருந்தும்போதைக் காற்றிலே முடியும்படியான ஸூக்ஷ்மமான அல்ப சரீரங்கள்தோறும் அந்தந்த சரீரங்களிலே ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய்க் கொண்டு விளங்காநின்ற ஆத்மாக்கள்தோறும், யார்க்கும் தெரியாதபடி வியாபிததிருக்கும்.

ஜீவாத்மாவானவன் சரீரத்திலே வியாபித்திருப்பது ஞானத்தினாலேயன்றி ஸ்வரூபத்தாலேயன்று; பரமாத்மா அஙஙனன்றியே ஸ்வரூபத்தாலே எங்கும வியாபித்திராநின்றானென்க.

இப்படி சொல்லக்கூடுமோ? ஜீவஸ்வரூபமோ அணுவாக ஓதப்பட்டது; பரமாத்மஸ்வரூபமோ விபுதாக ஓதப்பட்டது. அணுவஸ்துவினுள்ளே விபுவான வஸ்து குறையற வியாபித்திருக்குமென்றால் இது எஙஙனே ஸம்பாவிதம்? என்ன, இவையுண்டகரனே என்பது இதற்கு ஸமாதானம்போலுள்ளது. "சிறுவடிவைக்கொண்டு பெரியவற்றையெல்லாம் தன்

வயிற்றிலே வைத்தால் * தாழ்குழலார்வைத்த தயிருண்டபொன்வயிறு, இவ்வேழுலகமுண்டு மிடமுடைத்தால்* என்கிறபடியே பின்னையும் அவ்வயிறே இடமுடைத்தாம்படி யிருக்கவல்ல ஸர்வசக்தி சிறியவயிற்றிலே குறைவற இருக்கமாட்டாரோ என்கிறார் " என்பது ஈடு.

கரன்=வடசொல்விகாரம் ; திடமாகவுள்ளவன் என்றபடி: திடமான பிரமாணமாகிய வேத வேதாந்தங்களில் ஸித்தன் என்றவாறு. ... ... (10)

கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை *
வனவில்திறல்வரலி அளிபொறையாய்நின்ற *
பரனடிமேல் குருகூர்ச்சடகோபன்சோல் *
நிரனிறையாயிரத்து இவைபத்தும்வீடே. 11

கரம்	திடமான
விசும்பு	ஆகாசமென்ன
எரி	அக்னியென்ன
வளி	வாயுவென்ன
நீர்	ஜலமென்ன
நிலம்	பூமியென்ன (ஆகிய)
இவை மிசை	இவற்றின்மீதுள்ள [இவற்றிற்கு ஸ்வபாவங்களாயுள்ள]
வரன்	சிறந்த
நவில்	சப்தமென்ன
திறல்	(கொளுத்தும்) சக்தியென்ன
வலி	(எதையும்தூக்கவல்ல) பலமென்ன
அளி	குளிர்சசியென்ன
பொறை	எதையும் பொறுத்துக்கொண்டிருப்பதாகிற க்ஷமையென்ன
ஆய் நின்ற	ஆகிய இததருமங்களெல்லாம் தனவசமாயிருக்கப்பெற்ற
பரன்	ஸர்வேச்வரனுடைய
அடிமேல்	திருவடிவிஷயமாக
குருகூர் சடகோபன் சொல்	திருநகரியில் திருவவதரித்த நம்மாழ்வாா அருளிச்செய்த
நிரல் நிறை	சப்தபூர்த்தியும் அர்த்த பூர்த்தியுங்கொண்ட
ஆயிரத்து	ஆயிரம பாசுரங்களிலே
இவை பத்தும்	இப்பததுப்பாசுரமும்
வீடு	மோக்ஷப்ராபகம்.

* * * இப்பதிகம் கற்பார்க்குப் பலன்சொல்லித் தலைக்கட்டுகிறது இது. இவை பத்தும்வீடே யென்றது இபபத்துப் பாசுரமும் வீடாகிய மோக்ஷ ஸாமராஜ்யத்தைத் தரவல்லது என்றபடி.

பரனடிமேல் குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆயிரத்தில் இப்பத்தும் வீடளிக்குமென்க. பரனுக்கு அடைமொழியாய நிரப்பன முன்னிரண்டடிகள். முதலடியில் ஐந்து பூதங்கள் சொல்லப்படுகின்றன. இரண்டாமடியில் அந்தப் பூதங்களின் குணங்கள் முறையே சொல்லப்படுகின்றன.

(1) விசும்பு-ஆகாசம் ; அதன் குணம்-நவில்-சப்தம்.
(2) எரி-அக்நி ; அதன் குணம்-திறல் தஹநசக்தி.
(3) வளி-வாயு ; அதன் குணம்-வலி-மிடுக்கு.
(4) நீர்-ஜலம் ; அதன் குணம்-அளி-குளிர்ச்சி.
(5) நிலம்-பூமி ; அதன் குணம-பொறை-க்ஷமை. என்று உணர்க.

இவையாய்நின்ற பரன் என்றது—இப்படிப்பட்ட பூதங்களையும் அவற்றின் குணங்களையும் உண்டாக்கி அவையெல்லாம் தானிட்ட வழக்காம்படி யிராநின்ற பரமபுருஷன என்றபடி. பஞ்சபூதங்களையும் அவற்றின் குணங்களையும் சொன்னது மற்றுமுள்ள தத்துவங்களையுஞ் சொன்னபடியாய் லீலாவிபூதி முழுவதையுஞ் சொல்லிற்றாகி, நித்ய விபூதிக்கும் அது உபலக்ஷணமாகி, ஆக உபயவிபூதி நிர்வாஹகனாயிருக்கிற பரம புருஷனென்றதாயிற்று.

குருகூர்='குருகா என்னும் வடசொல் குருகையென ஐயீறுயிற்று. ஆழ்வார் திருநகரி வடமொழியில் 'குருகாபுரி' என வழங்கப்பட்டது; அதுவே தமிழில் குருகூரென வழங்கலாயிற்று.

ஆழ்வார் தாமே * குருகூர்ச்சடகோபன்சொன்ன என்று பிறர்போலக் கூறினது கவிஸம்ப்ரதாயம். பக்தி தலையெடுத்துத் திவ்யப் பிரபந்தங்களை அருளிச்செய்கிற ஆழ்வார் தமது திருநாமத்தை நிர்தேசித்துக் கொள்வது—பின்புள்ளார் ஆதரித்துப் பரிக்ரஹித்தற் பொருட்டாம்.

நிரனிறையாயிரத்து என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரப்படி ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"நிரல்நிறை என்னுதல், நிரன் நிறை என்னுதல். நிரல் நிறை என்றபோது சப்தங்களும் நிறைந்து அர்த்தங்களும் புஷ்கலமாயிருக்கை. நிரன நிறை என்றபோது நேரே நிறுத்தப்படுகை. லக்ஷணங்களிற் குறையாமே எழுத்துஞ் சொலலும் பொருளுமந்தாதியும் க்ரமத்திலே நிறுத்தப்படுகை."

ஆயிரம்=ஆயிரம் பாசுரம் பாடவேணுமென்று ஆழ்வார் ஸங்கல்பஞ்செய்துகொண்டு அருளிச்செய்யப்புகவில்லை; * மயர்வற மதிநலமருளப்பெற்றவராகையாலே ஆயிரம் பாசுரங்கள் தம் திருவாக்கில் அவதரிக்குமென்றுணர்ந்து அருளிச்செய்தபடி. எம்பெருமான் விஷயத்திலே ஆயிரம்பாசுரம் பேசியல்லது தரிக்கமாட்டாத தம்முடைய நிலைமையைக்கொண்டு அருளிச்செய்தபடியாகவுமாம்.

இவைபத்தும் வீடு=இப்பத்துப்பாசுரங்களும் எம்பெருமானுடைய திருவடிகளின்மே லேவிடப்பட்டன-ஸமர்ப்பிக்கப்பட்டன என்றும்பொருளுரைப்ப. 11

முதல்திருவாய்மொழியுரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

இரண்டாந்திருவாய்மொழி — வீடுமின்—அவதாரிகை.

ஆழ்வார் தாம் அநுபவிக்கும் பகவத்விஷயம் தனியே அநுபவிக்கக்கூடியதல்லாமையாலே *மச்சித்தா மத்கதப்ராணா: "போதயந்த: பரஸ்பரம்" * என்று கீதாசார்யன் பணித்தபடியே பிறரோடு உசாவியே போதுபோக்கித் தரிக்கவேண்டியவரான தாம் அப்படிப்பட்ட அதிகாரிகளைப் பெறுதற்காக நாற்புறமும் கண்வைத்துப்பார்த்தார்; எல்லாரும் ஸம்ஸாரிகளாயிருந்தனர்; தாம் பகவத்விஷயத்திலே ஊன்றியிருக்கிறாப்போலே அவர்கள் விஷயாந்தரங்களிலே ஊன்றியிருக்கக் கண்டார் ஆழ்வார். அன்னவர்களுடைய அநர்த்தத்தைத் தவிர்க்காமல் நிற்கமாட்டிற்றிலர். அவர்களை எப்படி மீட்கலாமென்று பார்த்தார். "இவர்களோ சேதநராயிருந்தார்கள்; விஷயாந்தரங்களிலே வாசியறிந்து தீயவற்றைக்கழித்து நல்லவற்றைக் கைக்கொள்பவராயிராநின்றார்கள்; காய்கறி முதலானவற்றிலும் நன்மை தீமைகளை ஆராய்ந்து நல்லவற்றைப் பரிக்ரஹிக்கவும் தீயவற்றைப் பரிஹரிக்கவும் வல்லவரான இவர்கள் இன்னமும் சிறிது ஆராய்ச்சியைச் செலுத்தமாட்டாதே யிராநின்றார்கள்; பகவத்விஷயத்தின் நன்மையையும் விஷயாந்தரங்களின் தீமையையும் நாம் எடுத்துக்காட்டினால் உண்மையை ஆராய்ந்து பார்த்து ஹேயவிஷயங்களை விட்டு உபாதேய விஷயத்தைப் பற்றக்கூடுமே; ஆதலால் அதை உபதேசித்துப் பார்ப்போம்" என்று திருவுள்ளம்பற்றி, எம்பெருமானுடைய நன்மையையும்,

ஸம்ஸாரிகள் பற்றிக்கிடக்கிற விஷயாந்தரங்களின் அற்பத்தன்மை அநித்யத்தன்மை முதலிய வற்றையும் அருளிச்செய்யாநின்றுகொண்டு விஷயாந்தரங்களில் நசையற்று பகவத்பக்தியைப் பண்ணுங்கோளென்று உபதேசிக்க இழிகிறார். ... ... (*)

வீடுமின்முற்றவும் * வீடுசெய்து * உம்முயிர்
வீடுடையானிடை * வீடுசெய்ம்மினே. 1

முற்றவும்	(பஜந விரோதியான ஸாத்ய ஸாதனங்கள்). எல்லாவற்றையும்	உம் உயிர்	உங்களுடைய ஆத்மவஸ்துவை
வீடுமின்	விட்டுவிடுங்கள்,	வீடு உடையான் இடை	மோக்ஷ நிர்வாஹகனான ஸ்வாமியிடத்திலே
வீடு செய்து	அப்படி விட்டு,	வீடு செய்ம்மின	ஸமர்ப்பியுங்கள்.

எம்பெருமானைத் தவிர்ந்த மற்றெல்லா விஷயங்களையும் விட்டு எம்பெருமானது திருவடிகளிலே ஆத்மாவை ஸமர்ப்பியுங்கோளென்கிறார். "முற்றவும் வீடுமின்" என்று அடைவே சொல்லலாயிருக்க, அப்படிச்சொல்லாமல், தொடங்கும்போதே வீடுமின் என்பானென் னென்னில்; ஒரு சிறு குழந்தை கையிலே ஒரு பாம்பைப் பிடித்துக்கொண்டு கிடந்தால் 'போடு, போடு' என்று சொல்லி, பிறகு 'பாம்பு' என்னுமாபோலேயும், ஒருவன் வீட்டினுள்ளே கிடந்து உறங்காநிற்க வெளியிலே நெருப்புப்பற்றி எரியாநின்றால் 'புறப்படு, புறப்படு' என்று கோஷித்துவிட்டுப் பிறகு 'நெருப்பு' என்னுமாபோலேயும் முந்துற, விடுங்கோளென்கிறார்.

எதை விடுவதென்ன, முற்றவும் என்கிறார். அஹங்கார மமகாரங்களாலே தூஷிக்கப்பட்டவற்றிலே சிலவற்றை வைத்துக்கொண்டு சிலவற்றை விடுவதென்பது கூடாதே; முழுவதையும் விடவேண்டுமாதலால முற்றவும் என்கிறார்.

உம்உயிர்வீடுடையானிடை = இதற்குப் பலபடியாகவும் பொருளுரைக்கலாம். உங்களுடைய உயிரையும் அதற்கு வீடாகிய சரீரத்தையும் தனக்குச் சரீரமாகவுடையனான பகவானிடத்தில் என்னலாம்: உங்களுடைய உயிரை வீடாகவுடையனான எம்பெருமானிடத்தில் என்னலாம். உம் உயிர்-உங்களாத்மாவை, வீடு—விடுமிடத்தில், உடையானிடை-ஸ்வாமியிடத்தே, வீடு செய்மின—என்னலாம். வீடுடையானிடை—வீடாகிய பரமபதத்தையுடையவனான எம்பெருமானிடத்தில், உம்முயிர் வீடு செய்மின் என்னலாம்.

"அநித்யமான சரீரத்திற்கு ஒரு நன்மை தேடிக்கொள்ளச் சொல்லுகிறேனல்லேன், நித்யமான ஆத்மவஸ்துவுக்கன்றோ நானொரு நன்மை தேடிக்கொள்ளச் சொல்லுகிறது" என்ற கருத்தும், "என் உயிர்க்கா நான நன்மைதேடச்சொல்லுகிறேன், உங்கள் உயிர்க்கன்றோ" என்ற கருத்தும 'உம்முயிர்' எனபதில் தோன்றும்.

'வீடு செயமினே' என்றும் 'வீடு இசைமினே' என்றும் இரண்டு பாடங்களும் வியாக்யானங்களில் பரிக்ரஹிக்கப்பட்டுள்ளன; "வீடு இசைமினே" என்றது—விட இசையுங்கோள் என்றபடி. விடவேண்டியவற்றை விடாமற்போனாலும் விடவேணுமென்கிற அபேக்ஷையையாவது நெஞ்சிற் கொள்ளுங்கோள் என்றவாறு. ஆபிமுக்ய்யம் காட்டுகிறவளவிலேயே பரம ஸந்தோஷமடையுமியல்வினனான எம்பெருமானுக்கு இந்த சேதநன் விஷயாந்தரங்களை அறவிடுவதிற்காட்டிலும, விட இசைவதுதானும் மகிழ்ச்சிக்குறுப்பாகும் என்க. ... ... (1)

மின்னின்னிலையில * மன்னுயிராக்கைகள் *
என்னுமிடத்து - இறை யுன்னுமின் நீரே. 2

உயிர் மன்னு	ஆத்மா பொருந்தி வர்த்திக்கிற	என்னும் இடத்து	என்றுசொல்லுமளவில்
ஆக்கைகள்	சரீரங்கள்	நீரே	நீங்களே
மின்னின்	மின்னலைக்காட்டிலும்	இறை	சிறிது
நிலையில	நிலையுடையனவல்ல;	உன்னுமின்	ஆராய்ச்சி பண்ணிப்பாருங்கள்.

எம்பெருமானைத் தவிர்த்த மற்ற விஷயங்களை விட்டு அவன் பக்கலிலே ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணப் பாருங்கோள் என்றார் கீழ்ப்பாட்டில்; அதுகேட்டவர்கள் 'இது எங்ஙனே ஸாத்யமாகும்? நெடுநாளாக வாஸனை பண்ணித் தொடர்ந்துவருகிற விஷயங்களை விடமுடியுமோ?' என்ன அவற்றின் குற்றங்குறைகளைக்காணவே நன்கு விடலாமென்கிறார் இப்பாட்டில்.

'உயிர்மன்னு ஆக்கைகள் மின்னின்னிலையில' என்றும் அந்வயிக்கலாம், 'மன்உயிர் ஆக்கைகள் மின்னின்னிலையில' என்றும அந்வயிக்கலாம். ஆத்மாக்கள் விஷயபோகங்களுக்கு ஆயதனமாகப் பற்றியிருக்கிற சரீரங்களானவை மின்னல்போலவுங்கூட நிலைத்திராதவை; என்றும், நித்யர்களான ஆத்மாக்கள் கொண்ட சரீரங்களானவை—என்றும் முறையே உரைத்துக்கொள்க. மின்னின்=மின்னல்போல; மின்னலைக்காட்டிலும்.

என்னுமிடத்து இறையுன்னுமின்நீரே=இந்த விஷயத்தை நீங்களே ஆராய்ந்து பார்க்கலாமே; இதற்காக ஒரு ஆசார்யோபதேசம் வேணுமோ? என்றவாறு.

பன்னீராயிர வுரையின்படிக்குப் பின்னடிகளின் கருத்தாவது—மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள் என்று சொல்லும்படியாதலால் நீங்கள் இறை—ஸ்வாமியை, உன்னுமின் - மநநம் பண்ணுங்கோள் என்பதாம். ... ... (2)

நீர்நுமதென்றிவை * வேர்முதல் மாய்த்து * இறை
சேர்மினுயிர்க்கு * அதன் நேர்நிறையில்லே. 3

நீர் நமது என்ற இவை	அஹங்கார மமகாரங்களாகிற இவற்றை	சேர்மின்	அடையுங்கள்;
வேர் முதல் மாய்த்து	(ருசி வாஸனைகளாகிற) பக்க வேரோடே முதலறுத்து	உயிர்க்கு	ஆத்மாவுக்கு
		அதன் நேர்	அதனோடொத்த
இறை	ஸ்வாமியை	நிறை இல்	பூர்த்தி இல்லை.

விடவேண்டிய வஸ்துக்கள் பலபல கிடப்பதால் அவற்றையெல்லாம் தனித்தனியே எடுத்துரைத்தல் பெரும்பாடாகுமாதலால் விடவேண்டியவற்றைச் சுருங்க அருளிச்செய்கிறாரிதில். [*அநாத்மந்யாத்ம புத்திர் யா அஸ்வே ஸ்வமிதி யாமதிః, அவித்யாதருஸம்பூதிபீஜமேதத் த்விதா ஸ்திதம் *] என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்திற் சொல்லப்பட்டது. இதைத் திருவுள்ளம் பற்றியே ஆழ்வார் "நீர்நுமதென்றிவை வேர் முதல்" என்றார். இங்கு 'நான எனதென்றிவை' என்றோ 'நாம் நமதென்றிவை' என்றோ இருக்கவேண்டும; அப்படியிருந்தால்தான் அஹங்கார மமகாரங்களுக்குப் பர்யாயமாகும்: ஆழ்வார் அப்படியருளிச்செய்யாது நீர் நுமது என்றது:— அநுவாதரீதியாலுங்கூட அஹங்கார மமகார ஸ்பர்சம் தமக்குககூடாதென்ற கருத்தினாலென்க. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காணமின்—"நான் எனது என்று தம் வாக்காலே சொல்ல மாட்டாரே, நாக்கு வேம் என்று." ... ... (3)

இல்லதுமுள்ளதும் * அல்லதவனுரு *
எல்லையிலந்நலம் * புல்குபற்றற்றே. 4

அவன் உரு	அந்த எம்பெருமானுடைய ஸ்வரூபமானது,	எல்லை இல்	எல்லையில்லாத
இல்லதும் அல்லது	விகாராஸ்பதமாகையாலே அஸத்து எனனப்படுமதான அசேதநத்தின்படியையுடையதுமன்று,	அ நலம்	அப்படிப்பட்ட ஆநந்தஸ்வரூபியாயிருக்கும்; (ஆதலால்)
உள்ளதும் அல்லது	ஸத்து என்னப்படுமவனான ஜீவாத்மாவின் படியையுடையதுமன்று;	பற்று அற்று	ஹேய விஷய ஸங்கத்தைவிட்டு
		புல்கு	(அப்பெருமானை) ஆச்ரயிக்க.

விடவேண்டிய விஷயத்தின் தோஷ மிகுதியை இரண்டாம் பாட்டிலருளிச்செய்தார்; பற்றவேண்டிய பகவத்விஷயத்தின் நன்மை மிகுதியை இப்பாட்டிலருளிச்செய்கிறார். அவனுரு உள்ளதுமல்லது இல்லது மல்லது=நம்முடைய ஸித்தாந்தத்தில் எல்லாம் உள்ள வஸ்துக்களேயன்றி இல்லாத வஸ்து ஒன்றுமேயில்லையே; அப்படியிருக்க இல்லது என்பதேன்? எனில்; கேண்மின்: இங்கே இல்லது என்றதற்கு 'அடியோடு இல்லாதது' என்றாவது 'பொய்யானது' என்றாவது பொருளில்லை; 'அழியுந்தன்மையுடையது' என்று பொருள். உள்ளது என்றது அழியாத பொருள் என்றபடி. அசித்தையும் சித்தையும் சொன்னவாறு. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் இரண்டாவது அம்சத்தில் பன்னிரண்டாவது அத்யாயத்தில் * ஜ்யோதீம்ஷி விஷ்ணுர் புவநாநி விஷ்ணு: வநாநி விஷ்ணு: கிரயோ திசச்ச, நத்யஸ் ஸமுத்ராச ச ஸ ஏவ ஸர்வம் யதஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய * என்றுள்ள ச்லோகத்தில் அஸ்தி சப்தத்தாலே சித்தையும் நாஸ்தி சப்தத்தாலே அசித்தையும் சொல்லியிருக்கையாலும், தைத்திரீய உபநிஷத்தில் * ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத் * என்ற விடத்து ஸத்ய சப்தத்தாலே சித்தையும் அந்ருத சப்தத்தால் அசித்தையும் சொல்லியிருக்கையாலும் அவற்றை அடியொற்றி ஆழ்வாரும் உள்ளது இல்லது என்ற சப்தங்களினால் சித்தையும் அசித்தையும் குறித்தனர்.

இனி உள்ளது—உள்ளேயிருப்பது [சரீரத்தினுள்ளேயிருப்பது] என்று பொருளாய் ஆத்மாவைச் சொல்லிற்றாகி, இல்லது—(இல்-வீடு) வீடாகவுள்ளது, [ஆத்மாவுக்கு இருப்பிடமாகவுள்ளது] என்று பொருளாய் உடலைச்சொல்லிற்றாகி ஆக இவ்வழியாலே சித்தையும் அசித்தையும் சொல்லிற்றாகவுங் கொள்ளலாமென்பர். பரமாத்மாவினுடைய ஸ்வரூபம் சேதந அசேதந விலக்ஷணம் என்கை.

ஆனால் பரமாத்ம ஸ்வரூபம் எங்ஙனே யிருக்குமென்ன, எல்லையிலந்நலம் என்கிறது. எல்லையில்லாத ஆநந்தமயமாயிருக்குமென்றவாறு. அப்படிப்பட்ட பரமபொருளை, பற்றற்றே புல்கு=* புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விட்டே பற்றவேணும். புல்கு என்னும் ஏவலொருமைவினைமுற்றுக்குச்சேர விளி வருவித்துக்கொள்க. நாட்டைநோக்கிச் சொல்வதாகக் கூறுப. ... ... (4)

அற்றது பற்றெனில் * உற்றது வீடுயிர் *
செற்றது மன்னுறில் * அற்றிறைபற்றே. 5

பற்று அற்றது எனில்	விஷயாந்தரஸங்கம் அற்றொழிந்தது என்னுமளவிலேயே	மன்னுறில்	நிலைநிற்கும்படி பகவத் விஷயத்தைக் கிட்டப் பார்க்கில்
உயிர்	ஆத்துமா		
வீடு உற்றது	மோக்ஷத்தைப் பெற்றானவன்; [கைவல்ய மோக்ஷமுண்டாகும்;]	அற்று	(ஆச்ரயிக்கும்போதே) எம்பெருமானுக்கென்றே அற்றுத் தீர்ந்து
அது	அந்தக் கைவல்ய மோக்ஷத்தை	இறை	அந்த எம்பெருமானை
செற்றது	வெறுத்தது	பற்று	பற்றுக.

எம்பெருமானைப் பற்றுதற்கு இடையூறாகக் கைவல்ய மோக்ஷத்தில் நசையுண்டாகக் கூடியதாதலால் அந்த இடையூறுதன்னை விலக்கிக்கொள்ளுமாறு உபதேசித்தருளுகிறார் இப்பாட்டில்.

உலகத்தில் அவரவர்களது ருசியின்படி விருப்பங்கள் பலவகைப்படும். இஹலோகத்துப் பரிபூர்ண ஐச்வரியத்தையே சிலர் விரும்புவர்; தேவேந்திர பட்டத்தில் விருப்பமுள்ளவர்கள் இவ்வுலகச் செல்வங்களிற் கண்வையார். நான்முகக் கடவுளது பதவியை விரும்புமவர் இந்திரபதவியிற் கண்வையார். ஆத்மாநுபவமாகிற கைவல்ய மோக்ஷத்தில் விருப்பமுடையார் கீழ்ச்சொன்னவற்றிற் கண்வையார். * உயர்வறவுயர்நலமுடையவனாய் * அயர்வறுமமரர்

ராஜகுமாரன் ஒரு அழகிய தோட்டத்தைக்கண்டு உள்ளே புகநினைத்தும் கட்டுங்காவலுமாயிருந்தது கண்டு அஞ்சி நிற்குமளவில் “இஃது உன் தகப்பனது தோட்டங்காண்” என்னவே நினைத்தபடி புகுந்து திளைத்துப் பரிமாறலாமன்றோ; அதுபோலக் கொள்க. அடங்க எழில்; தொகுத்தல் விகாரம். சம்பத்து—ஸம்பத் என்ற வடசொல் விகாரம்.

ஈசனடங்கெழிலஃதென்று—‘அஃதடங்க ஈசனெழிலென்று’ என அந்வயித்துக்கொள்ளவேணும். அஃதெல்லாம் நமது ஸ்வாமியானவனுடைய ஸம்பத்து என்று அநுஸந்தித்து என்றபடி.

உள்ளே அடங்குக=எம்பெருமானது விபூதியினுள்ளே தானுமொருவனாக அடங்கப் பார்க்கவேணும். அதற்கு வெளிப்பட்டால் விநாசமே பலிக்கும்; அதனுட்பட்டு விட்டால் கூசவேண்டிய அவசியமேயில்லை யென்க. ... ... (7)

உள்ளமுரைசெயல் * உள்ளவிம்மூன்றையும் *
உள்ளிக்கெடுத்து * இறையுள்ளிலொடுங்கே. 8

உள்ளம்	நெஞ்சு என்றும்	உள்ளி	ஆராய்ந்துபார்த்து
உரை	வாக்கு என்றும்	கெடுத்து	அவற்றிற்குள்ள விஷயாந்தரப்பற்றைத் தவிர்த்து
செயல்	உடல் என்றும்		
உள்ள	ஏற்கெனவே யுள்ள	இறை உள்ளில்	எம்பெருமான்பக்கலிலே
இம்மூன்றையும்	இந்த மூன்று உறுப்புக்களையும்	ஒடுங்கு	ஒப்பது.

* * * என்ன உபகரணங்களைக்கொண்டு எம்பெருமானுக்கு அடிமை செய்வது? என்ன, புதிதாக ஸம்பாதிக்கவேண்டாமல் ஏற்கெனவே அமைந்திருந்துள்ள மனமொழி மெய்களை மூன்றையும் ‘இவை எம்பெருமானுக்கு அடிமைசெய்வதற்குறுப்பாகவே கண்டவை’ என்று அநுஸந்தித்து, புறம்புண்டான விஷயங்களில் நின்றும் மீட்டு எம்பெருமான் பக்கலிலே ஊன்றவைப்பதென்கிறாரிப்பாட்டில்.

ஒடுங்கு என்பதைத் தன்வினையாகவும் பிறவினையில் வந்த தனவினையாகவுங்கொள்ளவர். நீங்கள் ஒடுங்கவேணுமென்றும் உங்கள் உறுப்புக்களை ஒடுங்கச்செய்யவேணுமென்றும் முறையே பொருள்காண்க. ஒடுங்குதல் அந்வயித்தல். .... (8)

ஒடுங்கவவன்கண் * ஒடுங்கலுமெல்லாம் *
விடும்பின்னுமாக்கை * விடும்பொழுதெண்ணே. 9

அவன் கண்	அந்த எம்பெருமான் பக்கலிலே		விட்டு நீங்கும்;
ஒடுங்க	அந்வயிக்கவே	பின்னும்	அதற்குப்பிறகு
எல்லாம் ஒடுங்கலும்	(ஆத்மாவை) ஒடுங்கப் பண்ணுவதான அவித்யை முதலானவையெல்லாம்	ஆக்கை விடும் பொழுது	சரீரம் தொலையும் நாளை
		எண்	எதிர்பார்த்திருப்பது.

* * * எம்பெருமானோடு நமக்குள்ள உறவின உணர்ச்சி யுண்டாகவே கூசாமல் அநுபவிக்கலாமென்றார் ஏழாம்பாட்டில். அவன் தன்விஷயத்தில் உபயோகப் படுத்துதற்காகவே தந்தருளின உறுப்புக்களை அவன் விஷயத்திலேயே உபயோகப்படுத்து மதத்தனையே வேண்டுவது என்றார் எட்டாம்பாட்டில், இவற்றைக்கேட்ட உலகர்கள் ‘ஆழ்வீர்! நாங்கள் ஸ்வாதந்திரியம் பாராட்டி அதனால் பகவத்விஷயத்தில ஊற்றமற்றிருக்கின்றோமல்லோம், எம்பெருமானுடைய போக்யதையை அறியாமலிருக்கிறோமல்லோம்; அப்ராப்தங்களான விஷயாந்தரங்களை விட்டு ப்ராப்தனான அவனையே பஜிக்கவேணுமென்றும் விருப்பம் மிகவுடையோமாயினும் பஜிக்க

வொட்டாத விரோதிகள் கனக்க உண்டாயிருப்பதனாலன்றோ நாங்கள் பஜியாமலிருக்கிறோம்' என்ன; நீங்கள் அவனைக் கிட்டவே அந்த விரோதிகளெல்லாம் உடனே விட்டு நீங்குமென்கிறார் இப்பாட்டில். ... ... (9)

எண்பெருக்கந்நலத்து * ஒண்பொருளீறில *
வண்புகழ்நாரணன் * திண்கழல்சேரே. 10

எண் பெருக்கு	எண்ணிக்கை பெருகிக் கொண்டே யிருக்கும்படி அளவிறந்த	ஈறு இல	முடிவில்லாத
அ நலத்து	அப்படிப்பட்ட ஞானம் முதலிய குணங்களையுடைய	வண் புகழ்	திருக்கல்யாண குணங்களையும் உடையனான
ஒண் பொருள்	சிறந்த பொருளாகிய ஜீவாத்மவர்க்கத்தையும்	நாரணன்	நாராயணனுடைய
		திண் கழல்	(அடியாரை ஒருநாளும்) கைவிடகில்லாத திருவடிகளை
		சேர்	ஆச்ரயிப்பது.

* * * கீழே ஆழ்வார் உபதேசித்தபடிகளையெல்லாங்கேட்ட ஸம்ஸாரிகள் "ஆழ்வீர் அப்படியே செய்வோம்; எம்பெருமானைப் பஜிப்போம்; பஜநத்திற்கு ஆலம்பனமாக ஒரு மந்த்ரம் வேணுமே அது என்ன மந்த்ரம்?" என்ன, அந்த மந்த்ரம் இன்னதென்று தெரிவித்தருளுகிறாரிப்பாட்டில். நாராயணத் திருநாமத்தின் பொருளை அநுஸந்தானஞ் செய்து கொண்டே அத்திருநாமத்தை வெளியிட்டருளுகின்றார் காண்மின்.

இப்பாசுரம் திருமந்த்ரார்த்தம் என்னுமிடம் ஆழ்வானுடைய இதிஹாஸத்தினால் நன்கு விளங்கும்; அது வருமாறு:—அழகியமணவாளனுடைய அநுக்ரஹத்தினால் ஆழ்வானுக்கு இரண்டு திருக்குமாரர்கள் திருவவதரிக்க, ஆழ்வான் அக்குமாரர்கட்கு நாமகரணம் முதலியன செய்வித்தற்கு உடையவர் கடவரென்று எண்ணித் தாம ஒன்றுஞ்செய்யாதிருக்க, நம்பெருமாள் திருவருளால் ஆழ்வானுக்கு உபய குமாரர்கள் உதித்ததாகப் பெருமகிழ்ச்சி கொண்டிருந்த ஸ்ரீபாஷ்யகாரர் அக்குழந்தைகள் பிறந்த பதினோராநாளிலே சிஷ்ய வர்க்கத்துடன் ஆழ்வான் திருமாளிகைக்கெழுந்தருளித் தமது பிரதான சிஷ்யர்களில் ஒருவரான எம்பாரை நோக்கி 'குழந்தைகளை எடுத்துக்கொண்டு வாரும்' என்ன, அவர் அங்ஙனமே பிரபன்ன குலக்கொழுந்தான அக்குழந்தைகளை எடுத்துவரும்போது த்ருஷ்டிதோஷாதிகள் தாங்காதபடி ரக்ஷையாக த்வயமென்னும் மந்த்ரரத்னத்தை* அநுஸந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானார்க்குக் காட்டினர். அவர் மிக்க களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களால் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத்தெய்வீக சிசுக்களின் தேஜோவிசேஷத்தைக்கண்டு வியப்புக்கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே, இங்ஙனம் ஆகுமாறு என்செய்தீர்?' என்று வினவ; எம்பார், 'குழந்தைகட்குக் காப்பாக த்வயாநுஸந்தானஞ் செய்துகொண்டு வந்தேன்' என்றுசொல்ல, உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரைப்பார்த்து 'நீர் இக்குழந்தைகள் உய்யும்வகையை நாடிச் செய்தற்கு முற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்' என்று நியமித்துவிட்டார். இக்குமாரரிருவர்க்கும் ஒருகால் கூரத்தாழ்வான் திருவாய்மொழிப் பொருள் சொல்லி வரும்போது * எண்பெருக்கந்நலத்து இத்யாதியான இந்தப்பாசுரம் வந்த வளவிலே இது திருமந்திரார்த்தத்தை விவரிக்கிறதாதலாலும் மந்த்ரார்த்தம் ஆசார்யரிடத்திலேயே கேட்டறியவேண்டியதாதலாலும் அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசார்யர் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்ல, அதனை விரைவில் அறிந்துகொள்ளவேணுமென்னும் அவாவினால் உடனே அவர்கள் எழுந்து தங்கள் ஆசார்யரான எம்பார் எழுந்தருளியிருக்குமிடத்தைக் குறித்துப் போகப்புக்கவளவில், ஆழ்வான் யாக்கை நிலையாமையைத் திருவுள்ளத்திற்கொண்டு அவர்களை யழைத்து, 'இன்னபோது இன்றிருப்பார் இன்னார் போவாரென்று தெரியாது, ஆதலால் இருந்துகேளுங்கள்' என்று திரு

மந்திரத்தைச்சொல்லி இப்பாடடின் பொருளையும் விவரித்து, இப் பாசுரத்தைத் திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்' என்று பணித்தருளினார்—என்பதாம்.

ஈறிலவான ஆத்மாக்களையும் ஈறிலவான கல்யாணகுணங்களையு முடையனாகையாயிற்று நாராயணனாகையாவது. அப்படிப்பட்ட நாராயணனுடைய திண்கழல்சேர=அடியவர்களை ஒரு நாளும் கைவிட மாட்டாத திருவடிகளைச் சேருங்கள் என்றவாறு. இப்பாட்டிலும் விளி வருவித்துக்கொள்வது. ... ... (10)

சோத்தடத் * தென்குருகூர்ச்சடகோபன்சொல்
சீர்த்தொடையாயிரத்து * ஓர்த்தவிப்பத்தே. 11

சேர் தடம்	செறிந்த தடாகங்களையுடைய	சீர் தொடை	கவியுறுப்புக்களெல்லாம் நன்கு அமையப்பெற்ற
தென் குருகூர்	திருநகரியில் அவதரித்த	ஆயிரத்து	ஆயிரத்தினுள்ளே
சடகோபன் சொல்	நம்மாழ்வார் அருளிச்செய்த	இ பத்து	இப்பத்துப் பாசுரமும்
		ஓர்த்த	ஆராய்ந்து சொல்லப்பட்டது.

* * * —இத்திருவாய்மொழி வாயவந்தபடி சொல்லிற்றன்று, சேதநருடைய ஹிதத்துக்கீடாக ஆராய்ந்து சொல்லப்பட்டதென்று நிகமனஞ் செய்கிற பாசுரம் இது.

சேர்த்தடத்தென்குருகூர்ச்சடகோபன்சொல்=இங்கு ஈடுமுப்பத்தாறுயிரப்படியில் "சோத்தடம் என்கிற வித்தைச சேர்தடமாக்கி" என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. இலக்கணப்படிக்குச் சேர்தடமென்று இயல்பாகவே யிருக்கவேண்டுமல்லது சேர்த்தடமென்று தகர வொற்று மிகவேண்டியது அவசியமில்லை; ஆனாலும், மற்ற மூன்றடிகளிலும் இதே ஸ்தானத்தில் வல்லொற்றுமிக்கிருப்பதனால் அதற்கிணங்க முதலடியிலும் மிக்கது. சொற்செறிவு அங்ஙனமிருந்தாலும் பொருட்சேர்த்திக்கு ஏற்பத் தகர வொற்று இன்றியே கொள்க என்கிறார் நம்பிள்ளை.

பாட்டின் முதலிலுள்ள சேர் என்பதை வினைமுற்றாகவுங் கொள்ளலாம்; இப்பத்தே சேர்—இப்பத்துப் பாட்டையுஞ் சேருங்கள், (அதாவது) அநுஸந்தானஞ் செய்யுங்கள் என்றபடி. முதற்பாட்டில வீடுமின் என்ற பன்மைக்குச்சேர இங்கும பன்மையாகவே பொருள் கொள்ள வுரியது. ... ... (11)

இரண்டாந்திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

மூன்றாந்திருவாய்மொழி — பத்துடையடியவர் அவதாரிகை.

முதற்றிருவாய்மொழியில எம்பெருமானுடைய பரத்துவத்தைப் பேசினார்; அங்ஙனம் பரனான அப்பெருமானைப் பஜியுங்கோளென்று இரண்டாந் திருவாய்மொழியில் உபதேசரூபமாக அருளிச்செய்தார். அங்ஙனம் உபதேசித்த ஆழ்வாரை நோக்கி ஸம்ஸாரிகள் "ஸ்வாமிந்! பஜியுங்கோள் பஜியுங்கோள் என்று பலகாலும அருளிச்செய்கின்றீர்; இருகை முடவனை நோக்கி 'ஆனையேறு, ஆனையேறு' என்றால அவனால ஏறப்போமோ?' அப்படியே, ஸர்வேச்வரனை "நாகணைமிசை நம்பரர் செல்வர் பெரியர்" எனனும்படி மிகப்பெரியனாயிருக்கின்ற அவனை

நீசரான ஸம்ஸாரிகளாலே பற்றப்போமோ ?" என்ன, அவ்வாணைதானே அவ்விருகை முடவனுக்கும் ஏறலாம்படி படிந்து கொடுக்குங்கால் ஏறத் தட்டில்லையன்றே ; அப்படியே ஸம்ஸாரிகளுக்குப் பஜிக்கலாம்படி அவன் தன்னைத் தாழவிட்டு எளியனுமாகில் பஜிக்கத் தட்டில்லையே யென்கிறார்:

எம்பெருமானுடைய பரத்வத்தை எவ்வளவும் பேசலாம் ; எளிமையைப் பேசுவதென்பது அரிது ; 'அப்படிப்பட்ட பெரியவன் இப்படித் தாழ்நின்றானே!' என்று * உள்ளெலாமுருகிக்குரல் தழுத்தொழிந்து உடம்பெலாங் கண்ணநீர் சோரப் பேசவேண்டிய விஷயமாகையாலே தெளிந்திருந்து பேசப் போகாது. ஆழ்வாரை ஆறுமாதம் மோஹிக்கப் பண்ணின விஷயமாயிற்று இது. ... .

பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன் * மலர்மகள் விரும்பும் நமரும்பெறலடிகள் *
மத்துறுகடைவெண்ணெய்களவினில உரவிடையாப்புண்டு *
எத்திறமுரலினோடு இணைந்திருந்தேங்கியவெளிவே. 1

பத்து உடை	பக்தியையுடைய
அடியவர்க்கு	அடியார்களுக்கு
எளியவன்	ஸுலபனும்
பிறர்களுக்கு	மற்றையோர்களுக்கு
அரிய	துர்லபனுமிருக்கிற
வித்தகன்	ஆச்சரியபூதனும்,
மலர் மகள் விரும்பும்	பெரியபிராட்டியார் விரும்புதற்கிடானவனும்
பெறல் அரு	பெறுதற்கு அரியனுமான
நம் அடிகள்	நமது ஸ்வாமி
மத்து உறு கடை வெண்ணெய் களவினில்	(யசோதைப்பிராட்டி) மத்தையுறுத்திக் கடைகின்ற வெண்ணெயினுடைய களவில்
உரம் இடை	மார்வினிடையிலே
ஆப்புண்டு	கட்டுண்டு
உரலினோடு இணைந்திருந்து	உரலோடு பொருந்தியிருந்து
ஏங்கிய	ஏங்கியிருந்த
எளிவு	எளிமைக்குணம்
எத்திறம்	எப்படிப்பட்டது!

* * * எம்பெருமானுடைய ஸௌலப்யம் நன்கு விளங்கினது அவதாரங்களிலாதலால் அப்படிப்பட்ட அவதாரங்களுள்ளும் நீர்மைக்கு எல்லையான க்ருஷ்ணாவதாரத்திலேயிழிந்து, அதிலேயும் பரத்வத்தோடு ஸமமாகச் சொல்லக் கூடிய நிலைகளிற் செல்லாதே, வெண்ணெய் களவுகண்டு கட்டுண்டு வருந்தியேங்கி நின்ற நிலையிலே யகப்பட்டு இப்படியும் ஒரு எளிமைக்குணமுண்டோவென்று ஈடுபடுகிறார்.

பத்துடையடியவர்க்கு எளியவன்— "முற்ற முதிர்ந்த பக்தியையுடையார்க்கு எளியன்" என்றுரைப்பது ஆழ்வாருக்கு விவக்ஷிதமாயிராது ; 'தன் பக்கலில் சிறிது ஆசை வைத்தவர்களையும் தான் விடமாட்டாமலிருக்கிறான்' என்றுசொல்லுவதே ஏற்றதாகும். ஆகவே, அத்வேஷமாத்திரமே இங்குப் பத்து என்னுஞ்சொல்லுக்குப் பொருளாகவுரியதாம்.

எளியவனாயிருக்குந்தன்மை எல்லாவிடத்துங் காட்டப்பட்டால் அனர்த்தமாகுமே! உகந்தவர்கட்கு மாத்திரம் எளியனாய, உகவாதார்க்கு அருமைப்பட்டவனாயிருந்தால் தானே அன்பர் தேறியிருக்கமுடியும் ; அதற்காக அருளிச் செய்கிறார் பிறர்களுக்கு அரிய வித்தகன் என்று. எம்பெருமானையே உபாயமாகக் கொள்ளாமல் பிறிதொன்றை உபாயமாகக் கொள்ளுமவர்கள் இங்குப் பிறர்களாவார் ; அன்னவர்கட்கு அருமைப்பட்டிருத்தலாகிற ஆச்சரியத்திற்கு ஆஸ்பதன் எம்பெருமான் என்க. என்ன ஆச்சரியமென்னில் ; யசோதைப்பிராட்டி முதலானார்க்கு விதேயனாயிருந்த நிலைதன்னிலேயே பூதனை, சகடம், மருதம் முதலியவற்றிற்கு அணுகவொண்ணாதிருந்தமை காண்க.

மலர்மகள் விரும்பும் அரும்பெறல் நம் அடிகள் = தாமரை மலரிலே பிறந்து அதனையே இருப்பிடமாக வுடையளாயிருந்த பிராட்டி அங்கே அடிக்கொதித்து அதனைவிட்டு "அகலகில்

லேனிறைபுமென்று அலர்மேன்மங்கை யுறைமார்பா" என்கிறபடியே திருமார்பை விருமபி விடாதேயிருக்கப் பெற்ற பெருமான்.

முதல் திருவாய்மொழியில் "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்று ஆழ்வார் ஏகாந்தமாகக் காட்டின லக்ஷ்மீஸம்பந்தம் இப்பாட்டில நனகு வெளியிடப்பட்டதாயிற்று.

முதலடியில் "பத்துடை யடியவர்க்கெளியவன்" என்று சொன்ன பக்தபராதீனத்வமானது பினனடிகளில் உபபாதிக்கப்படுகிறது— மத்துறு கடை வெண்ணெய் என்று தொடங்கி.

யசோதைப்பிராட்டி மத்தையுறுத்தித் தயிர் கடையும்போது அவளது நிழலிலேயொதுங்கியிருந்து களவுவழியிலே வெண்ணெயை அள்ளி அமுது செய்யக் கையோடே பிடியுண்டு உரலோடே மார்வை நெருககிக்கட்டியிட்டு வைக்கப் பெற்று அழுது ஏங்கிநின்ற நிலைமை என்னே! என்று கரைகின்றாராழ்வார்.

"உரலினோடிணைந்திருந்தேங்கிய வெளிவு எத்திறம்!" என்று சொல்லிக் கொண்டே ஆழ்வார் மோஹித்துவிட்டாரென்பது "த்வாமங்யகோபக்ருஹகவ்யமுஷம் யசோதா குர்வீத்வதீயமவமாநமம்ருஷ்யமாணு, ப்ரேம்ணுத தாமபரிணுமஜுஷா பபந்த தாத்ருக் நதே சரிதமார்யஜநஃ ஸஹந்தே" என்ற அதிமானுஷஸ்தவஸ்ரீஸூக்தியில் ஏற்படியால் வெளியிடப்பட்டது கூரத்தாழ்வானல. ஆசாயஹ்ருதயததிலும் "மூவாறுமாஸம் மோஹித்து" என்றருளிச்செய்யப்பட்டது. ... ... (1)

எளிவருமியல்வினன் நிலைவரம்பிலபலபிறப்பாய்*
ஒளிவருமுழுநலம் முதலிலகேடிலவீடாம்*
தெளிதருநிலைமையது ஒழிவிலன்முழுவதுமிறையோன்*
அளிவருமருளினோடு அகத்தனன்புறத்தனனமைந்தே. 2

நிலை வரம்பு இல பல பிறப்பு ஆய் } ஒரு நிலையும் ஒரு நியதியும் இல்லாத பலவகைப்பட்ட பிறப்பையுடையனாய்

முதல் இல கேடு இல முழு நலம் } முதலுமில்லாமல் முடிவுமில்லாம லிருக்கின்ற கல்யாண குணங்களெல்லாம

ஒளி வரும் — ஒளிமல்கும்படியான

எளிவரும் இயல்வினன் } ஸௌலப்யத்தையே இயல்வாக வுடையவராய்

வீடு ஆம் தெளி தரு நிலைமை அது முழுவதும் } மோக்ஷமாகிற தெளிவைத் தருதலாகிற அந்த நிலைமையை முழுவதும்

ஒழிவு இலன் — எப்போதும் உடையவனான

இறையோன — ஸ்வாமியானவன்

அளிவரும் அருளினோடு அமைந்து } அளிந்த கிருபையோடே கூடி

அகத்தனன் } (அடியவர்க்கு) அந்தரங்கனாய்

புறத்தனன் } (மற்றையோர்க்கு) அணுகததகாதவனுயிருப்பன்.

* * * — ஸ்ரீமதுரகவிகள் முதலான ஸத்துக்களடங்கலும் மோஹிதரான ஆழ்வாரைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். திருவாய்மொழியை அநுபவிக்கப்பிறந்த மஹான்களின் பாக்கியத்தினுல் மோஹங் கழிந்து தெளிவுபெற்ற ஆழ்வார் ப்ரஸ்துதமான ஸௌலப்ய குணத்தை விசேஷித்து அருளிச் செய்யத் தொடங்குகிறார்இதில்.

எளிவருமியல்வினன் = கீழ்ப் பாட்டில் "பத்துடை யடியவர்க்கு எளியவன்" என்று ஸ்நேஹிகளுக்கு ஸுலபனுயிருப்பவன் என்று சொன்னது தகுதியன்றென்று திருவுள்ளம் பற்றி எளிமைதானே ஸ்வரூபமாயிருக்குமென்கிறது.

நிலை வரம்பில பலபிறப்பாய் = நிலையில்லாதனவும் வரம்பில்லாதனவுமான பலவகைப் பட்ட அவதாரங்களைச் செய்பவனென்றபடி. இன்ன யோநியில் தான் பிறப்பதென்று ஒரு வ்யவஸ்தை கொள்ளாமையாலே 'நிலையில' என்றது; இன்ன சேஷ்டிதந்தான் செய்வது

என்று ஒருவ்யவஸ்தை கொள்ளாமையாலே 'வரம்பில' என்றது—என்று பூர்வாசார்யர்கள் நிர்வஹித்தார்களாம். பட்டர் 'நிலையில' என்பதற்கே அவ்விரண்டு பொருளையுங் கொண்டு, இனி 'வரம்பில' என்பதற்கு— வரம்பில்லாமையாவது, அவதரித்து எளியனாய் நின்ற நிலை தன்னிலே பரத்வத்தோடொக்க நின்றாலும் நிற்கையாம்" என்று அருளிச் செய்வராம். எங்ஙனே யென்னில், அர்ஜுனனுக்குச் சாரதியாய் நின்று தாழ நிற்கச் செய்தேயும் விச்வரூபத்தைக் காட்டினபடியும், சிவபிரான் பக்கல் பத்திரவரம் வேண்டிப்போகா நிற்கச்செய்தே கண்டாகர்ணனுக்கு முக்தியளித்தபடியும் ஏழுபிராயத்திலே கோவர்த்தனமலையைக் குடையாகவெடுத்தபடியும் முதலானவை நோக்கப்படுவன, ஒன்றிலும் ஒரு நியதியில்லை, ரக்ஷிப்பதற்கு உறுப்பாகுமதனையே வேண்டுவது என்ற திருவுள்ளம் விளங்கும்.

பலபிறப்பாயொளிவரு முழுநலம்=பிறக்கப் பிறக்க நாம் புகாழிந்து வாரா நின்றோம்; அங்ஙனல்லாமல் எம்பெருமான் பிறக்கப் பிறக்கக் கல்யாணகுணங்கள் மிகவும் புகர் பெற்று விளங்குமாயிற்று. * ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாநஃ * என்று வேதமும் ஓதிற்று. [ஸஃ (பகவாந்) ஜாயமாநஸ்ஸந் ச்ரேயாநேவ பவதி] என்றபடி. கருமமடியாகப் பிறந்தாலன்றோ பிறக்கப் பிறக்கப் புகர் அழிவது; அநுக்ரஹமடியாக வருகிற அவதாரமாதலால் ஔஜ்ஜ்வல்யம் மிக்கிருக்குமென்க.

முதலில கேடில=ஒரு நாளில் தோன்றி ஒருநாள்வரையிலே முடியுமவையல்லாமல் நித்ய ஸித்த குணங்கள் என்றவாறு.

வீடு ஆம் தெளிதருநிலைமையது முழுவதும் ஒழிவிலன்=வீடு—மோக்ஷம்; அதுவாகிற தெளிவைத் தந்தருளுமியல்வு என்றைக்கு மொருபடிப்பட்டிருக்கப் பெற்றவன் என்கை. இதனால் மோக்ஷப்ரதத்வ மென்கிற குணம் சொல்லப்பட்டதாயிற்று. இக்குணம் கீழே முழுநலம் என்றதிலேயே அடங்கக்கூடுமாயினும், இது சிறந்த குணமாதலால் தனிப்படச் சொல்லலாயிற்று.

தெளிவு என்னுஞ்சொல தெளி என்று குறைந்து கிடக்கின்றது. பரமபதத்தைத் "தெளிவிசும்பு" என்றே வழங்குவர். தெளிவே வடிவெடுத்திருக்குமிடமாதல் அறிக. இந்த லீலாவிபூதி கலக்கத்திற்கே ஏற்பட்டதுபோல அந்த நித்யவிபூதி தெளிவுக்கே ஏற்பட்டதென்றவாறு.

அருளுக்கு அளிவருதலாவது நிர்ஹேதுகத்வமாம். பாண்டவர் போல்வார்க்குக் கையாளாயிருக்கையும் துரியோதனுதியர்க்கு ஆளிட்டுவிடுகையும் ஈற்றடிக்கு விஷயம். ... (2)

அமைவுடையறநெறி முழுவதுமுயர்வறவுயர்ந்து *
அமைவுடைமுதல்கெடல் ஒடிவிடையறநிலமதுவாம் *
அமைவுடையமரரும் யாவையும் யாவரும் தானும் *
அமைவடைநாரணன்மாயையை அறிபவர்யாரே. 3

அமைவு உடை	நல்ல பலபரிபாகத்தை யுடைத்தான
அறம் நெறி முழுவதும்	தரும மார்க்கம் எல்லாவற்றுலும்
உயர்வு அற உயர்ந்து	இதற்கு மேல் உயர்த்தியில்லை என்னும்படியாக மிகவுமுயர்ந்தவைகளாகி,
அமைவு உடை	(ஆசரிக்கப்படத்தகுந்த) அமைதியையுடைய

அற	மிகவும்
நிலம் அது ஆம்	கைவந்திருக்கப்பெறுவதாகிற
அமைவு உடை	சதிரையுடையரான
அமரரும்	பிரமன்முதலிய தேவர்களும்
யாவையும்	எல்லா அசேதனங்களும்
யாவரும்	எல்லாச் சேதனர்களும்
தான் ஆம்	தானேயாம்படியான
அமைவு உடை	பொருத்தம் பொருந்திய
நாரணன்	நாராயணனுடைய

முதல்	ஸ்ருஷ்டியென்ன	மாயையை	அவதார ரஹஸ்யத்தை
கெடல்	ஸம்ஹாரமென்ன	யாரே அறிபவர்	ஆர் தாம அறியவல்லார்? [ஆருமில்லை]
இடை ஒடிவு	அவாந்தர ஸம்ஹாரமென்ன (ஆகிய இவை)		

* * * எம்பெருமானுடைய அவதாரரஹஸ்யம் ஒருவர்க்கும் அறியவொண்ணாததென்கிறது இப் பாட்டில். முதலடியில் அமைவுடை யென்று தொடங்கி, மூன்றாமடியில அமைவுடை என்னுமளவும் அமரர்கு (விசேஷணம்) அடைமொழி.

அமைவுடையறநெறி முழுவது முயர்வறவுயர்ந்து = ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்குக் கடவரான பிரமன் முதலிய அமரர்கள் என்றும் இடையூறென்றுமின்றி ஸபலங்களான தருமங்கள் எல்லாவற்றாலும் மேம்பட்டவர்களாம்.

அவர்கள் இனனமும் எப்படிப்பட்டவர்களென்னில்; அமைவுடை முதல் கெடலோடிவிடையற நிலமதுவாமமைவுடையர் = முதல் என்று ஸ்ருஷ்டியைச சொல்லுகிறது; கெடல் என்று ஸமஹாரததைச் சொலலுகிறது. ஒடிவிடை என்பது 'இடையொடிவு' என்றாகி அவாந்தரஸம்ஹாரததைச சொல்லுகிறது. ஆகிய இக்காரியங்களை, அற—மிகவும, நிலமதுவாம்அமைவுடை = கைவந்திருககும பூர்த்தியை யுடையார் என்றபடி.

அமரரும் யாவையும் யாவரும் தானுமமைவுடை நாரணன் = கீழ்ச்சொன்ன கடவுளர்களென்ன, ஸகல அசேதநப் பொருள்களென்ன, மற்றுள்ள ஸகல சேதனப்பொருள்களென்ன, ஆகிய எல்லாம் தான் என்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படியான அமைதியையுடையனாய், இதுபற்றியே நாராயணனென்னுந் திருநாமம் படைத்தவனை எம்பெருமானுடைய என்றபடி.

மாயையையறிபவர்யாரே? = இப்படிப்பட்ட எம்பெருமானுடைய அவதார ரஹஸ்யம் ஒருவர்க்கும அறியப் போகாதென்றவாறு. மாயையென்று ஆச்சரியமாய், தனக்குப் புத்திரப்ராயர்களான தசரத வஸுதேவாதிகளைத் தனக்குத் தந்தையராகக் கொண்டு, அவர்கள் என்மகனென்று அபிமானிக்கும்படி வந்து பிறந்த ஆச்சரியத்தை ஆரும் அறியகில்லார் என்று முரைப்ப.

யாரே அறிபவர்? = நித்யஸூரிகள் பரத்வாநுபவத்திலே போதுபோக்குகையாலே இதனை அறியார்கள்; ஸம்ஸாரிகள் உண்டியே உடையே உகந்தோடுமவர்களாகையாலே அறியார்கள்; மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார்களோ மோஹித்துக் கிடப்பர்கள்; ஆகையாலே ஒருவருமறியார்கள். ... ... (3)

யாருமோர் நிலைமையனென அறிவரியவெம்பெருமான் *
யாருமோர் நிலைமையனென அறிவெளியவெம்பெருமான் *
பேருமோராயிரம் பிறபலவுடையவெம்பெருமான் *
பேருமோருருவமும் உளதில்லையிலதில்லைபிணக்கே. 4

பேரும	(விக்ரஹத்தைப் பற்றின) திருநாமங்களும்	யாரும்	எப்படிப்பட்ட ஞானிகளுக்கும்
பிற	(... திருநாமங்களுக் ...) விக்ரஹங்களும்	ஓர் நிலைமையன் என அறிவு அரிய எம்பெருமான்	'ஒரு படியையுடையவன்' என்று அறுதியிட வொண்ணாத பெருமானாய்
பல ஆயிரம் உடைய	... உடையனாய்க் ... தோற்றி	யாரும்	(அன்பர்களாகில்) அறிவில்லாதவர்களானார்க்கும்
எம்பெருமான்	எமக்கு நாதனானவனாய்,		

ஓர் நிலைமையன் என	ஒருபடிப்பட்டவனென்று	உளது இல்லை	உண்டாயிருப்பதில்லையென்று (பிரதிகூலர்க்கும்)
அறிவு எளிய எம்பெருமான்	அறியக்கூடிய பெருமானான பகவானுக்கு	இலது இல்லை	இல்லையாய் இருப்பதில்லையென்று (அநுகூலர்க்கும்)
ஓர் பேரும்	ஒரு பேரும்		
ஓர் உருவமும்	ஒரு ரூபமும்	பிணக்கே	நிதய விவாதமாயேயிருக்கும்.

* * * எம்பெருமானுடைய திவ்யாவதாரங்கள ஒருவர்க்கும் அறியப் போகாதோவென்ன, அடியவர்க்கு எளிதில் அறியக் கூடியவையாய் மற்றையோர்க்குச் சிறிதும அறியப் போகாதனவாயிருககுமென்கிறாரிதில்.

யாரும் ஓர் நிலைமையனென அறிவு அரிய எம்பெருமான்=எவ்வளவேனும அறுதியிட்ட ஞானத்தையுடையரேலும் அப்படிப்பட்டவர்களும் தமது முயற்சியாலே காண விரும்பினாலும் இன்னபடிபட்டிருப்பதொரு ஸ்வபாவத்தையுடையவனென்று அறியவொண்ணாத எம்பெருமான்—எம்பெருமானுடைய நிர்ஹேதுகவிஷயீகாரத்திற்கு இலக்காகப் பெறாதவர்கள எவ்வளவு சீரியராயினும எம்பெருமானது நிலைமையை ஒரு ஸதூலாகாரமாகவும அறியகிலாராய்க்கிடப்பரென்றபடி.

யாருமோர்நிலைமையனென அறிவு எளிய எம்பெருமான்=பிறப்பாலும் செய்கையாலும் ஞானத்தாலும் எத்தனை தாழ்ந்தவர்களாகிலும் தன்னுடைய நிர்ஹேதுக விஷயீகாரததிற்கு இலக்காகப் பெற்றவர்களாகில் அன்னவர்களாலே எளிதிலறியக கூடிய படிகளையுடையனாயிருப்பன்.

பேருமோராயிரம்=அநுபவிக்குமடியவர்க்கு இழிந்தவிடமெல்லாம் துறையாம்படி பல்லாயிரந் திருநாமங்களையுடையனாயிருப்பன். ஆயிரமென்றது அநேக பர்யாயம். பிறபலவுடைய எம்பெருமான்=இங்குப் ‘பிற’ என்பது திவ்யமங்களவிக்ரஹத்தை நோககியது. நாமத்திற்கும் ரூபததிற்கும் எங்கும் ஒரு சேர்த்தியுண்டாகையாலே இங்ஙனே பொருள் கொள்ளுதல் பொருந்தும். “பேருமோருருவமும்” என்ற ஈற்றடியுங் காண்க. திருநாமவாச்யங்களாயும் தன் இச்சையாலே பரிக்ரஹிக்கப் படுமவைகளாயுமுள்ள பலபல திருவுருவங்களையுடையானென்றவாறு.

பேரும் ஓருருவமும் உளதில்லை இலதில்லை பிணக்கே=இதற்குப் பலபடியாகப் பொருள்கொள்ளலாம். ‘பேரும் ஒருருவமும் உளது, இலதில்லை, பிணக்கு இல்லை’ என்று மூன்று வாக்கியமாகக்கொண்டு—அப்படிப்பட்ட எம்பெருமானுககு விலக்ஷணமான நாமங்களும் ரூபங்களும் உணடு; இல்லையென்பது கிடையாது; ஆகையால் சாஸ்த்ர விசுவாஸசாலிகளுக்கு விவாதமில்லை—என்பதாக ஒரு யோஜனை. அன்றியே, பேரும் ஓர் உருவமும் உள இல்லை=(எம்பெருமான் பக்கலில் அன்பு இல்லாதார்க்கு) ஒரு திருநாமமும் ஒரு விக்ரஹமும் உண்டாயிருப்பதில்லை (என்று தோற்றியிருக்கும்); இலதில்லை— (எம்பெருமான் பக்கலில் அன்புடையார்க்கு) அந்த நாம ரூபங்கள் உண்டாகியே தோற்றும். பிணக்கே—அன்புடையார்க்கும் அன்பிலாதார்க்கும் இப்படி விவாதமாயே யிருக்கும் என்றுமாம். மற்றும் பல வகைகளும் காண்க. .... (4)

பிணக்கறவறுவகைச்சமயமும் நெறியுள்ளியுரைத்த *
கணக்கறுநலத்தனன் அந்தமிலாதியம்பகவன் *
வணக்குடைத்தவநெறி வழிநின்றுபுறநெறிகளைகட்டு *
உணக்குமின்பசையற அவனுடையுணர்வுகொண்டுணர்ந்தே. 5

அறுவகை சமயமும் பிணக்கு அற	ஆறுவகைப்பட்ட மதங்களும் (வைதிகமார்க்கத்தோடு) பிணக்கம் ஒழியும்படி
நெறி	வேதமார்க்கத்தை
உள்ளி	ஆராய்ந்து
உரைத்த	அருளிச் செய்த
கணக்கு அறு நலத்தனன்	எண்ணிறந்த கல்யாணகுணங்களையுடையவனும்
அந்தமில் ஆதி	முடிவில்லாத முதல்வனும்
அம் பகவன்	அழகான ஞானம் முதலிய ஆறு குணங்களையுடையவனுமான எம்பெருமானது
வணக்கு உடை	வணக்கத்தையுடைய
தவம் நெறி வழி நின்று	பக்தி (அல்லது) ப்ரபத்தி ஆகிற மார்க்கத்தில் நின்று
புறம் நெறி களை	வேறு மார்க்கங்களாகிற களையை
கட்டு	பறித்து
அவனுடை உணர்வு கொண்டு	அவனளித்த கீதையைக் கொண்டு
உணர்ந்து	உணர்ச்சி பெற்று
பசை அற	வாஸநாரூபமான பற்றும் அறும்படி
உணக்குமின்	உலர்த்திவிடுங்கள்.

* * * —'ஆச்ரயிக்கத் தக்கவனை எம்பெருமான் எளியனென்பது அறிந்தோம்; அன்னவனை ஆச்ரயிக்கும் வழி என்ன?' என்று ஸம்ஸாரிகள் கேட்பதாகக் கொண்டு, அவன் கீதையிலே அருளிச் செய்துவைத்த பக்திமார்க்கத்தாலே அவனை ஆச்ரயியுங்கோள் என்கிறார்.

அறுவகைச் சமயமும் பிணக்கு அற நெறி உள்ளியுரைத்த = ஸாங்கியம், யோகம், காணாதம், பௌத்தம், ஜைனம், பாசுபதம் என்ற ஆறுவகைப்பட்ட சமயங்களும் வைதிக சமயத்தோடு பிணக்கங்கொண்டிருக்கும்; அந்தப்பிணக்கம் தீருமாறு வேதமார்க்கத்தை ஆராய்ந்து அருளிச் செய்தவனும் எண்ணிறந்த திருக்கல்யாணகுணங்களையுடையவனும் ஒரு நாளும் முடிவில்லாத ஜகத்காரணபூதனும் 'பகவாந்' என்று அஸாதாரணமான திருநாமத்தையுடையனுமான எம்பெருமான் திறமான பக்தியோகத்திலே நின்று பிராகிருதவிஷயங்களாகிற களையைக்கடிந்து அவற்றின் ஸங்கத்தையும் விடுங்கோள்; எங்ஙனே விடுவதென்னில் அவனருளிச் செய்த கீதையாலே அவனையுணர்ந்து புறம்புண்டான பற்றுக்களையெல்லாம் விடுவது என்றவாறு.

ஸாங்கமான ஸகலவேதங்களுக்கும் தானே பொருள் என்பதை ஸ்ரீகீதையிலே அருளிச் செய்கையாலே அறுசமயக் கொள்கைகள் அவத்யமென்று கழியுண்டனவாயிற்று. கீதை அவதரியாவிடில் அறுசமயங்களுக்கும் வைதிகசமயத்திற்கும் பரஸ்பரம் ஏற்பட்ட பிணக்கு அறாதேயிருக்கும்; வைதிகமார்க்கத்தை நிலைநிறுத்தி கீதை அவதரித்துவிட்டபடியாலே அந்தப் பிணக்கு அற்றதென்க.

பசை அற உணக்குமின் = கீதையில் இரண்டாவது அத்யாயத்தில் (59) "விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந: . ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே" என்று ஓதப்பட்டது காண்க.

இதெல்லாம் எதுகொண்டு என்ன, அவனுடையுணர்வுகொண்டு என்கிறார். இவ்விடத்தில் உணர்வு எனகிறது உணர்வுக்கு உறுப்பான கீதையை. கீதாசாஸ்திரத்தைக் கொண்டு தெரிந்துகொண்டு பசையற வுணக்குமின் என்க. (5)

உணர்ந்துணர்ந்திழிந்தகன்று உயர்ந்துருவியந்தவிந்நிலைமை *
உணர்ந்துணர்ந்துணரிலும் இறைநிலையுணர்வரிதுயிர்காள்! *
உணர்ந்துணர்ந்துரைத்துரைத்து அரியயனரனென்னுமிவரை *
உணர்ந்துணர்ந்துரைத்துரைத்து இறைஞ்சுமின்மனப்பட்டதோன்றே. 6

உணர்ந்து உணர்ந்து	உணர்வையே இயற்கையாக வுடையனாகி
இழிந்து அகன்று உயர்ந்து	(அந்த உணர்வு அகண்டமாகையாலே) பத்துத்திக்கிலும் வியாபித்து
உரு வியந்த	ஜடப்பொருளில் நின்றும் வேறுபட்டிருக்கிற
இந்நிலைமை	இந்த ஆத்மாவின ஸ்வரூபத்தை
உணர்ந்து	கேள்வியாலே அறிந்து
உணர்ந்து	மனத்தினாலே அறிந்து
உணரிலும்	யோகத்தாலே ப்ரத்யக்ஷமாக அறிந்தாலும்
இறை நிலை உணர்வு	ஸர்வேச்வரனுடைய நிலைமையை அறிவதானது
அரிது	அருமையாயிருக்கின்றது; (ஆயினும்;)
உயிர்காள்	சேதநர்களே!

அரி அயன் அரன் என்னும் இவரை	விஷ்ணு பிரமன் ருத்ரன் என்று சொல்லப்படுகிற இவர்களை
உணர்ந்து உணர்ந்து	(ஒவ்வொருவருடையவும்) குணம் முதலியவற்றைக் கொண்டு பலகாலும் ஆராய்ந்து
உரைத்து உரைத்து	(அதற்கு இணங்கப்) ப்ரமாணங்களை வ்யவஹரித்துப்பார்த்து
மனப்பட்டது ஒன்று	உங்கள் மனதில் நிச்சயமாகத் தோன்றின ஒரு பொருளை
உணர்ந்து உணர்ந்து	பலகாலும் அநுஸந்தித்து
உரைத்து உரைத்து	(அப்பொருளின் மந்திரம் திருநாமம் முதலியவற்றைப்) பலகாலும் சொல்லி
இறைஞ்சுமின்	உபாஸியுங்கோள்.

* * * —ஸம்ஸாரிகள் ஆழ்வாரை நோக்கி "ஆழ்வீர் அவதாரத்திலே ஆச்ரயிக்கும்படி சொல்லா நின்றீர்; "மத்யே விரிஞ்சகிரிசம் ப்ரதமாவதாரः" [ஸ்ரீரங்கராஜஸ்தவம்— உத்தர சதகம்.] என்கிறபடியே, பிரமனுக்கும் சிவனுக்கும் நடுவே அவதரித்து நிற்கிற நிலையாயிருந்தது முதலவதாரம்; அதில் மூவரும் ஒரு நிகரானவர்போலத் தோற்றியிரா நின்றார்கள்; அம்மூவரும் முக்கியர்களேயோ? அல்லது மூவரிலே ஒருவன் முக்கியனோ! அல்லது மூவர்க்குமப்பால் ஒருவன் முக்கியனோ? என்று எங்களால் ஆராய்ந்து அறுதியிடப்போகாமையாலே ஆச்ரயிப்பதிலே ஒரு ஆலோசனை உண்டாயிற்று; அதனை நீக்கி ஆச்ரயணீய வஸ்துவை நிஷ்கர்ஷித்துத் தரவேணுமே நாங்கள் ஆச்ரயிக்கும்படி" என்று விஜ்ஞாபிக்க, த்ரிமூர்த்தி ஸாம்ய ப்ரமத்தைப் பரிஹரிக்குமடைவிலே அருளிச் செய்கிற பாசுரம் இது.

ஜீவாத்மஸ்வரூபத்தை ஒருபடி ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றாலும் பரமாத்மஸ்வரூபம் அறுதியிடவரியது என்கிறார் முன்னடிகளால்.

ஜீவாத்மஸ்வரூபம் எப்படிப்பட்டதென்னில்; உணர்ந்துணர்ந்து இழிந்து அகன்று உயர்ந்து உருவியந்த= ஞானமாத்திரஸ்வரூபமன்றியே ஞானத்திற்கு ஆச்ரயமாயிருக்கும்படியை 'உணர்ந்துணர்ந்து' என்பதனால் அருளிச் செய்தபடி. 'இழிந்து அகன்று உயர்ந்து' என்பதனால் ஸர்வ வ்யாப்தி சொல்லப்படுகிறது; ஜீவஸ்வரூபம் அணுவானதாயினும் தர்மபூத ஜ்ஞானத்வாரா வ்யாப்தி உண்டாதலால் இங்ஙனமருளிச் செய்யக் குறையில்லை எனக. இங்கே ஈடு;—"இச்சேதனன் தான் அணுபரிமாணனாயிருக்கச் செய்தேயும், ஈச்வரன் ஸ்வரூபத்தாலே எங்கும் வ்யாபித்திருக்குமா போலே ஜ்ஞானத்தாலே எங்கும் வ்யாபித்திருக்குமென்கிறது." என்பதாம். இழிந்து என்பதனால் கீழ் நிலங்களில் வியாப்தியும், அகன்று என்பதனால் நடுநிலங்களில் வியாப்தியும், உயர்ந்து என்பதனால் மேல் நிலங்களில் வியாப்தியும் சொல்லுகையாலே ஸர்வவ்யாப்தி சொல்லிற்றாயிற்று.

உருவியந்த என்பதனால் தேஹத்திற்காட்டிலும் விலக்ஷணன் என்னுமிடம் சொல்லப்பட்டது. உரு என்று ரூபவத்தான அசேதநவஸ்துஸமுதாயத்தைச் சொல்லுகிறது. வியந்த என்றும் பிரிக்கலாம், இயந்த என்றும் பிரிக்கலாம்; பொருள் ஒன்றே.

ஆக இப்படிப்பட்டதான இந்நிலைமை உணர்ந்துணர்ந்து உணரிலும் = ஆத்மாவினுடைய ஸ்வரூபத்தை ச்ரவணம் மநநம் முதலியவற்றால் ஸாக்ஷாத்கரிக்கக் கூடினாலும் — தேஹாதிரிக்தமாயிருக்கிற ஆத்மாவின் ஸ்வரூபத்தை யோகசாஸ்த்ரத்திற் சொல்லுகிற க்ரமத்தாலே யிழிந்து வருந்தி ஒருவகையாய் அறிந்தாலும் என்றபடி.

உயிர்காள்! இறைநிலை உணர்வரிது = சேதனர்களே! ஸர்வேச்வரன் பிரமருத்திரர்களுக்கு அந்தராத்மாவாய் அவர்களைச் சரீரமாகக் கொண்டு தான் சரீரியாய நிற்கிற நிலை அறியமுடியாதென்கை.

"இறைநிலைஉணர்வரிது" என்று சொல்லிவிடலாகுமோ? அல்பஜ்ஞர்களான எங்களால் அறியமுடியாதென்பது உண்மையே; அறிந்தவர்களில் தலைவரான தேவரீர் நிஷ்கர்ஷித்து அருளிச்செய்தால் நாங்கள் அறிந்துகொள்ளத் தடையில்லையே என்ன; மத்யஸ்த த்ருஷ்டியாலே ஆராய்ந்து பார்க்கும்படி அருளிச் செய்கிறார் அரியயனரனென்னுமிவரை உணர்ந்துணர்ந்துரைத்துரைத்து இத்யாதி. நாராயணனென்றும் நான்முகனென்றும் ருத்ரனென்றுமுள்ள மூன்று மூர்த்திகளின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் ஆராய்ந்து பாருங்கோள்; அந்த ஸ்வரூபஸ்வபாவங்களைத் தெரிவிக்கின்ற பிரமாணங்களையும் ஒருவர்க்கொருவர் சொல்லிப் பாருங்கோள்; ஒருவன் படைப்பவனும் இருவர் படைக்கப்படுமவர்களாய, ஒருவன் ஸாத்விகனும் இருவர் ராஜஸதாமஸர்களாய்ப் புலப்படுமவர்கள். அங்ஙனம் புலப்படுமவர்களில் நிஷ்பக்ஷபாதமாய எந்தத் தெய்வம் உங்கள் நெஞ்சில் சிறந்ததாகத் தோன்றுகின்றதோ அதனை நீங்களே நிஷ்கர்ஷித்துப் பற்றுதல் நன்று என்றாராயிற்று. ... . (6)

ஒன்றெனப்பலவென அறிவரும் வடிவினுள்நின்ற *
நன்றெழில் நாரணன் நான்முகனரனென்னுமிவரை *
ஒன்றநும்மனத்துவைத்து உள்ளிநும்மிருபசையறுத்து *
நன்றெனநலஞ்செய்வது அவனிடை நம்முடைநாளே. 7

ஒன்று என	ஒன்றென்றும்
பல என	பலவென்றும் [அதாவது —ஒருவன் ப்ரதானனென்றும் பலர் ப்ரதானரென்றும்
அறிவு அரு	அறிதற்கு அரிதான
வடிவினுள்	உருவுகளுள்ளே
நின்ற	நிலைத்திருக்கிற
நன்று	விலக்ஷணமான
எழில்	கல்யாண குணங்களாலே ப்ரகாசிக்கிற
நாரணன்	ஸ்ரீமந்நாராயணன்
நான்முகன்	ப்ரமன்
அரன்	ருத்ரன்
என்னும் இவரை	என்கிற த்ரிமூர்த்திகளை
ஒன்ற	மத்யஸ்த த்ருஷ்டியாக
நும் மனத்து வைத்து	உங்களது நெஞ்சில் வைத்து
உள்ளி	(அவர்களது ஸ்வரூபஸ்வபாவங்களை ப்ரமாணங்கொண்டு) ஆராய்ந்து
நும்	உங்களுக்குண்டான
இரு பசை அறுத்து	இருவர் திறத்திலாகும் ஈச்வர புத்தியை யொழித்து
அவனிடை	அந்த நன்றெழில்நாரணன் பக்கலிலே
நம்முடை	நம்முடைய
நாள்	வாழ்நாளில்
நன்று என	நன்றாக

நலம் செய்வது பக்தி பண்ணுதற்கு உரியது.

* * * ஆராயவேண்டியபடியை விசதமாகவுபதேசித்து விரைவாக ஆச்ரயியுங்கோளென்கிறாரிப்பாட்டில்.

ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள்நின்ற = அரி அயன் அரன் என்கிற மூன்று மூர்த்திகள் பிரதானர்களாய், மூவர்க்கும் மூன்று சரீரங்களிலும் ஒரு ஆத்மாவே உள்ளானோ? அன்றியே, மூன்றிலும் மூன்று சேதநர் தனித்தனி புகுந்து நிற்கின்றனரோ? என்று ஸந்தேஹம்வரின் நிர்ணயம் பெறமுடியாதபடி யிருக்கின்ற வடிவையுடையரான நாராயணன் நான்முகன் அரன் என்கிற மும்மூர்த்திகளையும் நிஷ்பக்ஷபாதமாக நெஞ்சிலேகொண்டு ஆராய்ந்து பார்க்கவேணும்; அங்ஙனம் பார்த்தவாறே அவற்றுள் ஒரு மூர்த்தி முக்கியமாகவும் மற்ற இரு மூர்த்திகள் அமுக்கியமாகவும் புலப்படும்; அப்போது, அவ்விரு மூர்த்திகளின் பக்கலிலே நம்முடைய வாழ்நாளில் விரைவாக அநந்ய ப்ரயோஜநமான பக்தியைச் செலுத்தப்பார்ப்பது என்றாயிற்று.

மூன்றாமடியில், ஒன்ற என்றது நிஷ்பக்ஷபாதமாக என்றபடி. ஆராய்வதற்குமுன்னே விஷ்ணுவுக்கே சிறப்பு வேணுமென்றாவது, மற்ற இருவர்க்கே சிறப்பு வேணுமென்றாவது ஆக்ரஹம்கொள்ளாமல் பிரமாணகதியின்படியே எங்ஙனம் தேறுகின்றதோ அங்ஙனம் கொள்வதே கடமையென்று தேறி என்பது கருத்து. இருபசையறுத்து = இரு மூர்த்திகளிலேயுள்ள பசையை யறுத்து என்றபடி. (7)

நாளுநின்றடுநமபழமை அங்கொடுவினையுடனே
மாளும்*ஓர்குறைவில்லை மனனகமலமறக்கழுவி*
நாளுநந்திருவுடையடிகள்தம் நலங்கழல்வணங்கி*
மாளுமோரிடத்திலும் வணக்கொடுமாள்வதுவலமே. (8)

மனனகம	மனத்திலுண்டான
மலம் அற	(மும்மூர்த்திகளும் ஸமமாவர் என்னும் விப்ரதிபத்தியாகிற) அழுக்கு ஒழியும்படி
கழுவி	விவேகத்தாலே பரிசுத்தப்
நாளும்	நாள்தோறும்
நம்	நமக்கென்றே உரிய
திரு உடை அடிகள் தம்	திருமகள் கொழுநனான ஸ்வாமியினுடைய
நலம் கழல்	அழகிய திருவடிகளை
வணங	

நாளும் நின்று அடும நம பழமை அம் கொடு வினை உடனே மாளும்	எப்போதும் விடாதுநின்று வருத்துகின்ற நாமறிந்தே நமக்கென்று தேடின பழமையாகிய மிகவும் கொடிய பாபங்கள் ஆச்ரயித்தவுடனே தொலையும்;
ஓர் குறைவு இல்லை	ஒரு குறைவுமுண்டாகாது;
(இப்படி ஆச்ரயிக்குமிடத்தில்)	
மாளும் ஓர் இடத்திலும்	சரீரத்தை விடுகிற காலத்திலும்
வணககொடு	வணக்கத்தோடு
மாள்வது	முடிவது
வலம்	நன்று

* * * —கீழ்ப்பாட்டில் "நன்றென நலஞ்செய்வதவனிடை" என்றருளிச்செய்ததைக் கேட்ட ஸம்ஸாரிகள், அநாதிகாலமாக நாங்கள் பண்ணிக் கூடு பூரித்துக் கிடக்கிற ப்ரபல கருமங்கள் பிரதிபந்தகமாயிருக்க நாங்கள் எப்படி எம்பெருமானை ஆச்ரயிக்கமுடியும்? அன்றியும் எங்களுடைய வாழ்நாள் வெகுவாயக கழிந்து ஒழிந்ததாகையாலே இனி ஆச்ரயிக்க நாள் தானுமில்லையே! என்ன, அவர்களுக்கு உத்தரம்போல் அருளிச் செய்யும் பாசுரம் இது. நீங்கள் செய்து கிடக்கிற பாவங்களை நினைத்து அஞ்சவேண்டா; நீங்கள் எம்பெருமானை ஆச்ரயிப்பதாக முயன்றவளவிலே விரோதி கருமங்களடங்கலும் தொலைந்துபோம்; அவற்றைத் தொலைக்கப் பிராட்டிஸந்நிதானமுண்டுகாணும்; வாழ்நாள் பெரும்பாலுங் கழிந்தொழிந்ததே யென்றிருக்கவும் வேண்டா; நீங்கள்* தண்டுகாலாவூன்றியூன்றித்தள்ளி நடக்கும்போதாகிலும் அக்கோலோடே சாய்ந்தால அது தானும் ஒரு நமஸ்காரமாகக் கணக்கிடப்பெறலாகும் என்கிறார்.

"மனனகமலமறக்கழுவி நாளும் நம் திருவுடையடிகள் தம் நலங்கழல் வணங்க, நாளும் நின்றடுநமபழமை யங்கொடுவினையுடனேமாளும், ஓர் குறைவில்லை; மாளுமோரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே" என்று அந்வயிப்பது.

இப்பாட்டின் முதலடிக்குச் சார்பாக அறியவேண்டிய வேதாந்தப் பொருள் கேண்மின் :- ப்ரஹ்மவித்யையை உணர்ந்த அதிகாரிக்கு அவ்வித்யையின் மஹிமையினால் உத்தரபூர்வபாபங்களின் அச்லேஷ விநாசங்கள் கூடும். ஏனெனில் வித்யாமஹிமையை விவரிக்கப் பிறந்த *ஏவம் விதி பாபம் கர்ம ந ச்லிஷ்யதே* *ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாநः ப்ரதூயந்தே* என்ற ச்ருதிகள் இங்ஙனம் கூறுகின்றனவன்றோ. அஃது எங்ஙனே? *நாபுக்தம் க்ஷீயதே கர்ம* [கரும பலன் அநுபவித்தேயறவேணும்] என்கிற சாஸ்திரத்தோடு விரோதிக்கின்றதேயென்னில், விரோதமொன்றுமில்லை; விஷயபேதங்கொண்டு இரண்டு சாஸ்திரங்களையும் பொருந்தவிடத்தட்டில்லை. இனி, விஷயபேதம் எவ்வாறெனில், "கருமபலன் அநுபவித்தே அறவேணும்' என்கிற சாஸ்திரம்—கருமங்கள் பலன் தருவதில் திண்ணிய சக்தியுடையன எனக்கூறுதலை விஷயமாகவுடையது. *ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாநः ப்ரதூயந்தே* இத்யாதிச்ருதிகள் ப்ரஹ்மவித்யை ப்ராசீநபாபங்களுக்குள்ள பலப்ரதாந சக்தியை நாசஞ்செய்வதிலும் பவிஷ்யத் பாபங்களுக்குள்ள பலப்ரதாந சக்திஉத்பத்தியைத் தடைசெய்வதிலும் வல்லமையுள்ளதெனக் கூறுதலை விஷயமாகவுடையன, ஆகையால் இரண்டிற்கும் விஷயம் வேறுபட்டதாயிற்று. அக்நிக்கு தாஹ ஸாமர்த்தியத்தையும் ஜலத்திற்கு தாஹநிவாரண ஸாமர்த்தியத்தையும் கூறுகின்ற இரண்டு பிரமாணங்கள் விஷய பேதத்தாலே அவிருத்தமாவதுபோல இதனைககொள்க.

இப்பாட்டின் முதன்மூன்றடிகட்குச் சங்கையாக * "த்வதங்க்ரிமுத்திச்ய கதாபி கேநசித் யதா ததாவாபி ஸக்ருத் க்ருதோஞ்சலிः, ததைவ முஷ்ணாத்யசுபாந்யசேஷதः சுபாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே" என்ற ஆளவந்தார் ஸ்தோத்ரரத்ந ஸ்ரீஸூக்தி அநுஸந்திக்கவுரியது.

மூன்றாமடியின் முடிவில், வணங்கி என்றது எச்சத்திரிபாய் வணங்கவென்றபடி வணங்கின் என்ற பாடத்தில் இங்ஙனங்கொள்ளவேண்டிய அருமையில்லையாயினும் அது பாடமன்று.

மூன்றாமடிக்கு ஒரு ஸம்வாதமருளிச்செய்கிறார் நம்பிள்ளை; அதாவது—"ஸர்வேச்வரனை ஆச்ரயித்தானாகில் அவன் பலப்ரதனாகிறான், பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றவேண்டுகிறதென்? என்று நஞ்சீயர் பட்டரைக்கேட்க, *நாளுநம் திருவுடையடிகள்தம் நலங்கழல் வணங்கி யென்று அவள் முன்னாக ஆச்ரயிக்கவேணுமெனனின்றது கண்டீரே! என்று அருளிச்செய்து, அவனை ஆச்ரயிக்குமிடத்தில் இவன் குற்றம் பாராதே தன்னிழலிலே இவனை வைத்து அவன் பக்கல் முகம் பெறறவாறே குற்றத்தைப் பொறுப்பிக்குமவள் முன்னாகப் பற்றவேணும் என்றருளிசசெய்தார்" என்பதாம்.

நலங்கழல்= பிராட்டி புருஷகாரமாகப் பற்றினாருடைய குற்றங்களைக் கணிசியாதே கைக்கொள்ளவல்ல திருவடிகள் என்றவாறு. இதுவாயிற்றுத் திருவடிகட்கு நன்மை.

மாளுமோரிடத்திலும் வணக்கொடு மாள்வதுவலமே= இராவணன் "த்விதா பஜ்யேயமப் யேவம் ந நமேயம் து'கஸ்யசித்" என்றான், நான் உடல் பிளந்து செத்துப்போகும்படி நேர்ந்தாலும் சரீரம் இருதுண்டாகப் பிளவுபட்டுக் குறுக்கே விழுமத்தனையொழிய அப்போதும் ஒருவனை வணங்கினாற்போல விழமாட்டேன' என்றான். அப்படிப்பட்ட விருத்தஸங்கல்பமின்றியே, சாகிறபோதாவது தலை கவிழ்ந்து சாவப்பெறறால நன்று என்கிறாராழ்வார். ... (8)

வலத்தனன்திரிபுரமெரித்தவன் இடம்பெறத்துந்தித்
தலத்து * எழுதிசைமுகன்படைத்த நல்லுலகமும் தானும் *
புலப்படப் பின்னுந்தன்னுலகத்தில் அகத்தனன் தானே *
சோலப்புகிலிவைபின்னும் வயிற்றுள இவைபவன்துயக்கே. (9)

ஏழ	பதினான்கு லோகங்களையும் நிர்வஹித்தற்குரிய ஏழுச்சியையுடைய
திசைமுகன்	நான்முகக் கடவுள்
படைத்த	ஸ்ருஷ்டி செய்த
நல் உலகமும் தானும்	நல்ல லோகங்களும் தானுமாக
துந்தித் தலத்து இடம் பெற	திருநாபியில் இடம் பெற்றிருக்க,
திரிபுரம் எரித்தவன்	முப்புரங்களை எரித்தவனாகிய ருத்திரன
வலத்தனன்	வலதுபக்கத்திலிருப்பான்;
பின்னும்	மேலும்
அவன் புலப்பட	அவன் கண்ணுக்கு இலக்காக
தானே	தானே
தன் உலகத்தில்	தன்னதான லோகத்தில்
அகத்தனன்	அவதரித்து உள்ளே யிருப்பன்;
சொல புகில்	இப்படி சொல்லப்பார்த்தோமாகில்
இவை	இந்தக் குணங்கள்
பின்னும்	பின்னையும்
வயிறு உள	தொலையாமல் உள்ளே யிருக்கும்:
இவை அவன் துயக்கு	இவைகளை அவன் மயங்கப் பண்ணும்படி.

* * * கீழ்ப்பாசுரங்களில் பிரமன் முதலானோருடைய அவரதன்மையையும் நம்பெருமானுடைய பரத்வத்தையும் குறிப்பிட்டருளினர். இப்பாட்டில், அந்தப் பிரமனும் சிவனும் எம்பெருமானைப்பற்றியே தங்கள் ஸ்வரூபம் பெற்றிருக்கிறபடியையும், அந்த ஸாமாந்ய தெய்வங்களும் காவிடமாட்டாத இந்நிலவுலகத்திலே எம்பெருமான ஆசரிதர்க்காக வந்து திருவவதரிக்கிறபடியையும் அருளிச்செய்கிறார்.

முப்புரமெரித்த கடவுளாகிய ருத்ரன் எம்பெருமானுடைய வலவருகை ஆச்ரயித்திருப்பன்; நான்முகக்கடவுளும் அவன் படைத்த வுலகமும் திருநாபிக்கமலத்திலே நெருக்கமறப் பொருந்தியிருப்பன; இப்படியாலே பரதத்துவமான ஸ்ரீமந்நாராயணன் "காணவாராய" என்று விரும்பி வேண்டுமவர்களுடைய கண்ணுக்கு இலக்காவதற்காகத் தானே [கருமத்தாலன்றியே தன் இச்சையாலே] உலகத்தினிடையே அவதரித்து நிற்கும். ஆகவிப்படி எம்பெருமானுக்கு ஏற்பட்டிருக்கின்ற குணங்களைச் சொல்லப்பார்த்தோமாகில், சொல்லித் தீர்ந்த குணங்கள் சிலசிலவேயாம், சொல்லப்படாமல் வயிற்றினுள்ளேயிருக்கும் குணங்கள அசீதமாய்த் தொலையாதவையாயிருக்கும். இப்படிகளை எல்லாம் தெரிந்துகொள்ளாமற்போவதேன்? என்னில்; விமுகராயிருக்குமவர்களுக்கு ஸம்சய விபர்யயங்களை அவன்தானே பண்ணிவைக்கிறானத்தனை என்றாராயிற்று.

வலத்தனன் திரிபுரமெரித்தவன் என்பதனால், ருத்ரன் எம்பெருமான் திருமேனியின் ஏகதேசத்தைப்பற்றி உளனாகிறானென்பதோடு எம்பெருமானது ஸௌசீல்ய குணமும் அநுபவிக்கப்படுகிறது. தாமஸ தெய்வமான ருத்ரனுக்கும் தனது திருமேனியின் வலப்பக்கத்தில் இடங்கொடுத்து ஆதரிக்குமவனன்றோ எம்பெருமான. இப்பாட்டின் ஈட்டில்—"பச்யைகாதசமே ருத்ராந் தக்ஷிணம் பார்ச்வமாச்ரிதாந்" என்ற மோக்ஷதர்மவசநம் உதாஹரிக்கப்பட்டுள்ளது. "தபஸா தோஷிதஸ் தேந விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா - ஸ்வபார்ச்வே தக்ஷிணே சம்போः நிவாஸः பரிகல்பிதः" என்றொரு வசனமும இருபத்தினாலாயிரப்படியிற் காணப்படுகிறது. [பண்ணின தவத்தினாலே திருவுள்ளமுவந்த திருமால அவனுக்குத் தனது வலவருகிலே வாஸஸ்தானம் அமைத்துக்கொடுத்தருளினன் என்பது இதன் பொருள்.]

"ஏறாளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும், கூறாளுந்தனி யுடம்பன" என்றும் "அக்கும்புலியினதளுமுடையாரவரொருவர், பக்கம் நிற்கநின்ற பண்பர்" என்றும் ஆழ்வார்கள் அடிக்கடி அருளிச்செய்கிறார்களே; சிவன் முதலானோர் எப்போதும் எம்பெருமானுடைய திருமேனியைப் பற்றியிருக்கிறார்களோ? என்றொரு சங்கை பிறக்கக்கூடும்; இந்த சங்கையும் இதற்குப் பரிஹாரமும் பூருவர்களின் வியாக்கியானங்களிலேயே உள்ளன எங்ஙனே யென்னில்;

“ஸர்வகாலமும் இவர்கள் எம்பெருமானுடைய திருமேனியிலே யிருப்பர்களோ வென்னில்; ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுத்தருளும்; அது மஹா குணமாகையாலே ஆழ்வார்கள எப்போதுமொக்க அருளிச்செய்து கொண்டு போருவர்கள். ஸாமந்தர்கருப் புறம்பே நாடுகள் கனக்கவுண்டாகிலும் மாளிகைக்குள்ளே செம்பாலே நாழியரிசியைத் தங்களுக்கு வரிசையாக நினைத்திருப்பர்களிறே; அப்படியே இவர்களும் திருமேனியில் பண்ணிவைக்கும் ப்ராப்தி விடார்களிறே. ஓரோகலஹங்களிலே அடையவளைந்தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து கலஹந் தெளிந்தவாறே புறம்பே புறப்பட்டாலும் ‘இவ்விடம் இன்னார் பற்று, இவ்விடம் இன்னார் பற்று’ என்று பின்னும் ப்ராப்தி சொல்லிவைக்குமா போலே.”

என்றருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் காணத்தக்கன.

முற்காலத்தில் தாரகாசுரனுடைய புத்திரர்களாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும மூவரும் மிக்க தவஞ்செய்து பிரமனிடம் பெருவரம்பெற்று, வானத்துப் பறந்து செல்லும் தன்மைவாய்ந்த மூன்று பட்டணங்களையடைந்து மற்றும் பல அசுரர்களோடு அங்ககரங்களுடனே தாம் நினைத்தவிடங்களிற் பறந்துசென்று பலவிடங்களின்மேலும்இருந்து அவ்விடங்களைப் பாழாக்கி வருகையில் அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்திரஸூரியர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் மஹாமேருவை வில்லாகவும் ஆதிசேஷனை வில்நாணியாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைந்து அக்நியை முனையாகவுடைய அம்பாகவும் அமைத்துக்கொண்டு யுத்தஸந்நத்தனாய்ச் சென்று போர் தொடங்கும்போது சிரித்து அச்சிரிப்பில்நின்று உண்டான நெருப்பினால் அவ்வசுரர்களை அங்ககரங்களுடனே எரித்திட்டான்—என்பது திரிபுரமெரித்த வரலாறு.

திரிபுரம் = திரிந்துகொண்டிருந்த பட்டணங்கள் எனப் பொருள்படுதலால் வினைத்தொகை. இனி, த்ரிபுரம் என்னும் வடசொல் திரிபுரமெனத்திரிந்ததாகவும் கொள்ளலாம்; மூன்று பட்டணங்கள் என்பது பொருள்.

பின்னும் தன்னுலகத்திலகத்தனன், புலப்பட = இப்படி அவர்களுக்குத் தன் திருமேனியிலே இடங்கொடுத்ததுக்கு மேலே, * காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து அலமந்து அழைக்குமவர்களுக்கு ஸேவைஸாதிக்கும் பொருட்டு இந்த ஸம்ஸார நிலத்திலே வந்து அவதரித்தானென்கிறது.

இவை பின்னும் வயிற்றுள என்பதற்கு—அவன் இப்படி அவதரித்துப் பண்ணும் ரக்ஷணங்களில ஏதோ சில பாகம் சொல்லிலல்லது சொல்லக்கூடுமேயன்றி எல்லாஞ்சொல்லித் தலைக்கட்டப்போகாது; சொல்லப்புகில் உள்ளே யுள்ளே யாமித்தனை, வெளிவந்து முடிவுபெறமாட்டா; எனகிற பொருள்தவிர மற்றொரு பொருளும் கூறுவர்;— இந்த ஜகத்துக்கு ஓர் ஆபத்து வந்தால் வயிற்றினுள்ளே வைத்து நோக்கும்படியைச் சொல்லிற்றாகவுமாம். “தளிர்மதிச்சடையனும் நான்முகக்கடவுளும், தளிரொளியிமையவர் தலைவனும் முதலா,யாவகையுலகமும் யாவருமகப்பட, நிலநீர் தீ கால சுடரிருவிசும்பும், மலர்சுடர்பிறவும் சிறிதுடன் மயங்க ஒரு பொருட் புறப்பாடின்றி முழுவதும் அகப்படக் கரந்து, ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமா, மாயனையல்லது, ஒருமா தெய்வம் மற்றுடையமோ யாமே” என்றதிருவாசிரியப் பாசுரங் காண்க. .... (9)

துயக்கறுமதியில்நன்ஞானத்துள் அமரரைத்துயக்கும் *
மயக்குடைமாயைகள வானிலும்பெரியனவல்லன் *
புயற்கருநிறத்தனன் பெருநிலங்கடந்தநல்லடிப்போது *
அயர்ப்பிலனலற்றுவன் தழுவுவன் வணங்குவனமர்ந்தே. (10)

துயக்கு அறு	கலக்கமற்ற
மதியில்	நெஞ்சில் பிறந்த
நல்ஞானத்துள்	நல்ல ஞானத்தையுடையரான
அமரரை	தேவர்களையும்
துயக்கும்	கலங்கப்பண்ணுகிற
மயக்கு உடை	மயக்குகிற வல்லமையையுடைய
மாயைகள்	அவதார ஆச்சரியங்கள்
வானிலும்	எல்லையற்ற ஆகாசத்திற்காட்டிலும்
பெரியன வல்லன்	பெரியனவாகச் செய்ய வல்லவனாய்,
புயல்	நீலமேகம்போலே
கரு நிறத்தனன்	கருநிறத்தையுடையனான எம்பெருமானுடைய
பெரு நிலம் கடந்த	பெரிய பூமிப்பரப்பை எளிதாக அளந்த
நல	விலக்ஷணமான
அடி போது	திருவடித்தாமரைகளை
அமர்ந்து	வேறு பிரயோஜனங்களில் பற்றற்று அமர்ந்து
அயர்ப்பு இலன்	மறப்பில்லாதவனாய
அலற்றுவன்	முறைமாறி அவன் குணங்களை வாயாலே சொல்லுவேன்;
தழுவுவன்	ஆலிங்கனம் பண்ணுவேன்;
வணங்குவன்	தலையாலே வணங்குவேன்.

* * * — எம்பெருமான் தன்னிடத்து அமர்ந்த காதல் அமையப்பெறாதவர்கள் திறத்தில் பண்ணும் மாயமயக்குக்களை முன்னடிகளில் அருளிச்செய்து, அதுதான் எப்படியேயானாலும், அவன் காட்டின வழியே காணவிருக்கின்ற நாம் மனமொழிமெய்களாலே நம் விடாய்கெட உலகளந்த திருவடிகளை அநுபவிப்போமென்று தாம்கொண்ட பாரிப்பைப் பின்னடிகளில் வெளியிடுகிறார்.

துயக்காவது ஸம்சய விபர்யயங்கள். 'அதுவோ இதுவோ! அப்படியோ இப்படியோ!' என்று ஐயங்கொள்ளுதலாகிற ஸம்சயமும், ஒன்றை வேறொன்றாகவே துணிந்துவிடுதலாகிற விபர்யயமும் இல்லாத மதியையுடையராய் உள்ளது உள்ளபடியே க்ரஹிக்கவல்லவர்களான தேவர்களையும் கலங்கப்பண்ணும் ப்ராமகத்வ [ப்ரமஜநகத்வ] சக்தியையுடைய ஆச்சரியமான தன்மைகளுக்கு எல்லையில்லாதவன் என்பன முன்னடிகள்.

இங்கு அமரர் என்றது இந்திரன் முதலிய தேவர்களை என்றும், நித்ய ஸூரிகளை யென்றும் அருளிச்செய்வர். இந்திராதி தேவர்களுக்கு ரஜோகுண தமோகுணங்கள் மிக்கிருக்கச் செய்தேயும் ஸத்வகுணம் தலையெடுத்தாலும் அதுவும் அப்படியே கனத்திருக்கும். அப்படி ஸத்துவம் தலையெடுக்குங்காலத்து 'நம்முடைய காரியம் நம்மாற் செய்துநிறைவேற்றுவித்துக்கொள்ள முடியாது; எம்பெருமானே நம காரியத்துக்கு நிர்வாஹகன்' என்றிருந்து அவன் பக்கலிலே யாசித்துக் காரியத்தையும் நிறைவேற்றுவித்துக்கொண்டு அடுத்த க்ஷணத்திலே எதிரிடுவர்கள். இந்திரனுடைய கதையே இதற்கு உதாஹரணமாகும். இங்கே நம்பிள்ளையீடு:—

"தங்களிருப்பிடமுமிழந்து ஸ்த்ரீகளும் பிடியுண்டு எளிமைப்பட்டவளவிலே அத்தைப் பரிஹரித்துத் தரவேணுமென்று இரந்து பின்னை இவனும்போய் நரகவதம்பண்ணிச் சிறைகிடந்த ஸ்த்ரீகளையும் மீட்டுக்கொடுத்துப் போராநிற்கச் செய்தே, புழுக்கடைக்கே நின்றதொரு பூண்டைப் பிடுங்கிக்கொண்டு போர, வஜ்ரத்தைக்கொண்டு தொடர்ந்தானிறே" என்பதாம்.

இனி, அமரர் என்பதற்கு நித்யஸூரிகளென்று பொருள்கொள்ளும் பக்ஷத்தில பெரிய திருவடியின் இதிஹாஸம் உதாஹரிக்கத்தக்கது. இங்கே நம்பிள்ளையீடு:—

"அனந்தரமே, நன்ஞானத்துளமரர் என்கிறது நித்யஸூரிகளையாய் ஜ்ஞாநாதிகனான பெரிய திருவடியும் 'தேவரீரையும் நாய்ச்சிமாரையும் வஹித்தேன் நானன்றோ' என்றாற்போல சிவியார் சொல்லும் வார்த்தையைச் சொன்னானிறே"

என்பதாம்.

இப்படி இந்திராதி தேவர்களையும் நித்யஸூரிகளையும் மயக்கவல்ல மாயைகள் எம்பெருமானிடத்தில் அளவிடமுடியாதவை யிருக்கின்றன என்பது கிடக்கட்டும்; அவனநுக்ரஹத்தாலே காட்டின வடிவழகை நாமநுபவிப்போமெனகிறார் மேலடிகளில். நீர்கொண்டெழுந்த காளமேகம் போன்ற திருமேனியையுடையவனும், பரம்பின நிலத்தை அளக்கிறவிடத்து வஸிஷ்ட சண்டாள விபாகமின்றியே எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்தவனுமான எம்பெருமானுடைய, “நீயொருநாள் படிக்களவாக நிமிர்த்த நின்பாதபங்கயமே தலைக்கு அணியாய்” என்று ஆசைப்படவேண்டும்படி மிகவழகிய திருவடித் தாமரைகளை மனமொழி மெய்கள் மூன்றினாலும் அனுபவிக்கப்பெறுவேனாகவேணுமென்று மநோரதிக்கின்றார்.

ஈற்றடியிலுள்ள வினைமுற்றுகளுக்குப் பிரார்த்தனைப் பொருள் கொள்ளாமல் இயல்வுப் பொருள் கொண்டு ‘அலற்றுவதையும் தழுவுவதையும் வணங்குவதையுமே ஸ்வபாவமாகவுடையேன்’ என்பதாகவும் உரைப்பர். (இது ஆறுயிரப்படி நிர்வாஹம்.) ... ... (10)

அமரர்கள்தொழுதெழ அலைகடல் கடைந்தவன் தன்னை *
அமர்பொழில்வளங்குருகூர்ச் சடகோபன் குற்றேவல்கள் *
அமர்சுவையாயிரத்து அவற்றினுளிவைபத்தும்வல்லார் *
அமரரோடுயர்வில்சென்று அறுவர்தம்பிறவியஞ்சிறையே. (11)

அமரர்கள்	தேவர்கள்	அமர் சுவை	சுவையமைந்த
தொழுது எழ	ஸேவித்து விருத்தியையடைய	ஆயிரத்து அவற்றினுள்	ஆயிரம் பாட்டுக்குள்
அலை கடல்	அலையெறிகின்ற திருப்பாற்கடலை	இவை பத்தும்	இந்தப் பத்துப் பாசுரமும்
கடைந்தவன்	கடைந்தவனை ஸர்வேச்வரனைக் குறித்து,	வல்லார்	கற்கவல்லவர்கள்
அமர்	பொருந்தின	அமரரோடு	நித்ய ஸூரிகளோடு
பொழில் வளம்	சோலைவளமுள்ள	உயர்வில்	பரமபதத்தில்
குருகூர்	திருக்குருகூரில் அவதரித்த	சென்று	சேர்ந்து
சடகோபன	ஆழ்வாருடைய	தம்	தம் பிறப்பாகிற
குற்றேவல்கள்	(வாசகிலுலாகிய) கைங்கர்யமான	அம	உறுதியான பந்தத்தில்
		அறுவர்	நீங்கப்பெறுவர்கள்.

* * * — இத்திருவாய்மொழி வல்லவர்கள் நித்யஸூரி களோடொக்க உயர்த்தியைப் போய்ப்பெற்று ஸம்ஸார ஸம்பந்தமறப் பெறுவரென்று பலன சொல்லித் தலைக்கட்டுகிற பாசுரம் இது.

அமரர்கள் தொழுதெழ அலைகடல் கடைந்தவன்தன்னை = தேவர்கள் வணங்கி வேண்டினவளவிலே அவர்களது வேண்டுகோளுக்கிரங்கி அலைகடலைக் கடைந்தவனை என்றும் பொருள் கொள்ளலாம். அமரர்கள் தொழுதெழும்படியாக அலைகடலைக் கடைந்தவனை என்றும் பொருள் கொள்ளலாம். முதற்பொருளில் (தொழுதெழ என்பது) இறந்தகாலத்தில் வந்த வினையெச்சம்; இரண்டாம் பொருளில் எதிர்காலத்து வந்த வினையெச்சம். இரண்டாம் பொருளையே ஆசாரியர்கள் இனிதாகக் கொள்ளுவர்கள். கடல்கடையாகக் கலிநந்துகொண்டு ‘உப்புச்சாறு எப்போது கிளரப்போகிறதோ?’ என்று தங்களுடைய நோக்கிக்கொண்டிருந்த பரயோஜநாந்தரபரமான தேவஸமூஹமுங்கூட, தோளும் தோள்மாலையுமாய் ஒரு கடல் ஒரு கடலைநின்று கடையுமா போலே கடைந்த அழகுக்குத் தோற்றுப் பரவசமாய் வணங்கும்படியாக என்றவாறு. இதனால் விமுகரையும் ஈடுபடுத்தவல்ல அழகுடைமை சொல்லிற்றுகிறது.

இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயமாக, சோலை வளம் பொருந்திய திருக்குருகூர்க்குத் தலைவரான ஆழ்வார் வாக்கினாலடிமைசெய்தபடியான, ரஸமே வடிவெடுத்த திருவாய்

மொழி யாயிரத்தினுள்ளும் இப்பத்துப் பாசுரங்களை ஓதவல்லார் நித்யஸூரிகளோடொத்த உயர்த்தியையுடையராய்த் தங்களுடைய பிறப்பாகிற விலங்கு விட்டகலப் பெறுவர்கள் என்றதாயிற்று. .... (11)

மூன்றாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

திருவாய்மொழி முதற்பத்து

நான்காந் திருவாய்மொழி — அஞ்சிறையமடநாராய்

அவதாரிகை. எம்பெருமானை அநுபவித்தல் பலவகைப்பட்டிருக்கும்; அவனுடைய திருநாமங்களைச் சொல்லியநுபவித்தல், திருக்கல்யாண குணங்களைச் சொல்லியநுபவித்தல், வடிவழகை வருணித்து அநுபவித்தல், அவனுகந்தருளின திவ்யதேசங்களின் வளங்களைப்பேசியநுபவித்தல், அங்கே அபிமானமுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களின் பெருமையைப்பேசியநுபவித்தல்,— என்றிப்படி பலவகைப்பட்டிருக்கும் பகவதநுபவம். இவ்வகைகளில் பரம விலக்ஷணமான மற்றொரு வகையுமுண்டு; அதாவது—ஆழ்வார் தாமான தன்மையைவிட்டுப் பிராட்டிமாருடைய தன்மையை ஏறிட்டுக்கொண்டு வேற்றுவாயாலேபேசியநுபவித்தல். இப்படி அநுபவிக்குந்திறத்தில், தாய்பாசுரம், தோழி பாசுரம், மகள் பாசுரம் என்று மூன்று வகுப்புகளுண்டு. அப்போது ஆழ்வாருக்குப் பராங்குசர் என்ற ஆண்மைப் பெயர் நீங்கி, 'பராங்குச நாயகி' என்று பெண்மைப் பெயர் வழங்கப்பட்டுவரும். தாய்சொல்வதுபோலவும் தலைமகள் சொல்வதுபோலவும் தோழி சொல்வது போலவும் பாசுரங்கள் வெளிவந்தாலும், பாசுரம் பேசுகிறவர் ஆழ்வாரேயாவர். ஒரு ஆறானது பல வாய்க்கால்களாகப் பெருகினாலும் அவற்றுக்குப் பிரதானமான பெயர் ஒன்றேயாயிருக்குமாபோலே, இம்மூன்று நிலைமைகளாகச் சொல்மாலை வழிந்து புறப்பட்டாலும் "அமர் பொழில் வளங்குருகூர்ச் சடகோபன் குற்றேவல்கள்" என்று ஆழ்வார் பாசுரமாகவே தலைக்கட்டும்.

ஆழ்வார் தாமான தன்மையை விட்டிட்டு ஸ்த்ரீபாவனையை ஏறிட்டுக்கொள்ளுதல் எதுக்காகவென்னில்; ஆழ்வார் தாமாக ஏறிட்டுக் கொள்ளுகிறாரல்லர்; அந்த அவஸ்தைதானே பரவசமாகவந்து சேருகின்றது. புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன் உலகமடங்கப் பெண்தன்மையதாயிருக்கையாலும், ஜீவாத்மாவுக்கு ஸ்வாதந்திரிய நாற்றமேயின்றிப் பாரதந்திரியமே வடிவாயிருக்கையாலும் இவ்வகைகளுக்கேற்ப ஸ்த்ரீபாவனை வந்தேறியன்று என்றே கொள்ளலாம். தண்டகாரண்ய வாஸிகளான முனிவர் இராமபிரானது ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டுப் பெண்மை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயர் மங்கையராய்க் கண்ணனைக் கூடினர் என்ற ஐதிஹ்யமுமுண்டு. ஆழ்வார்கள் அப்படியன்றியே அப்போதே பெண்மையையடைந்து புருஷோத்தமனை அநுபவிக்கக் காதலிக்கின்றனர்.

ஆண் பெண் என்ற வ்யவஹாரங்கள் சிற்றின்ப நுகர்ச்சிக்கன்றோ ஏற்பட்டவை; பேரின்பவநுபவத்திலே ஊன்றின ஆழ்வார்கள் பெண்மை யெய்துவதாகவும், கோங்கை முதலிய சொற்களையிட்டுப் பாசுரங்கூறுவதாகவும் நிகழ்கிறவிது என்னோ? எனின்; விஷயாந்தர காமம் என்றும் பகவத்விஷய காமம் என்றும் காமம் இருவகைப்படும்; வேதாந்தங்களில் விதிக்கப்பட்ட பக்தியே ஆழ்வார்களுக்கு ச்ருங்கார முறைமையில் பரிணமித்து நிற்கும். சிற்றின்பவநுபவத்திற்குக் கொங்கை முதலியன ஸாதனமாயிருப்பதுபோல, பகவத் விஷயாநுபவத்திற்குப் பரபக்தி பரஜ்ஞான பரம பக்திகள் இன்றியமையாதனவாயிருப்பதால் அவையே கொங்கை முதலிய சொற்களால் இவ்வருளிச் செயல்களிற் கூறப்படுகின்றனவென்று கொள்க.

ச்ருங்கார ரஸத்தின் ஸம்பந்தம் சிறிதுமின்றியே கேவலம் சுத்தபக்திரஸமாகவே பாசுரங்கள் அருளிச்செய்யக் கூடுமாயினும், ஆழ்வார்கள் ச்ருங்கார ரஸத்தையும் கலந்து பாசுரங்கள்

பேசுவதற்குக்காரணம் யாதெனில்; ஆரோக்கியத்திற்குக் காரணமாகிய வேப்பிலையுருண்டையை உட்கொள்ள இருக்குமவர்களுக்கு வெல்லத்தை வெளியிற் பூசிக்கொடுத்துத் தின்பிப்பது போலச் சிற்றின்பம் கூறும் வகையாற் பேரின்பத்தைககாட்டி நாட்டுகின்றனரென்ப.

பகவத் விஷயத்தில் அபிநிவேசம் மீதூர்ந்தகாலத்தில் தன் நிலை மாறிப் பெண்நிலை பெற்றுப் பேசுமிடத்தில் தாய்பாசுரமென்றும தலைவி பாசுரமென்றும தோழி பாசுரமென்றும் இப்படி வகுத்துக் கூறுவதற்கும் உட்கருத்து உணடு;—தோழியாகப் பேசுவதற்குக் கருத்து:— நாயகனையும் நாயகியையும் இணக்கிச் சேர்க்குமவள் தோழியாவள்; திருமந்திரத்தில் பிரணவத்தினால் எம்பெருமானோடு இவ்வாத்மாவுக்குச் சொல்லப்பட்ட அநந்யார்ஹ சேஷத்வம் முதலிய ஸம்பந்தங்களை உணருகையே அப்பெருமானோடு இவ்வாத்மா சேருகைக்கு ஹேதுவாகையாலே அந்த ஸம்பந்த ஞானமாகிற ப்ரஜ்ஞாவஸ்தையைத் தோழியென்பதாகக் கொள்க.

பெற்று வளர்த்து பெணபிள்ளை யௌவன பருவத்தில் நாயகனிடத்துள்ள அன்பு மிகுதியால் அவனிருப்பிடத்துக்குச் செல்லவேணுமென்று பதறுமளவில் படிகடந்து புறப்படுகை குலமரியாதைக்குப் பொருந்ாதென்று தடுப்பவள் உலகில தாய் எனப்படுவள்; ஸித்தோபாயமான எம்பெருமானைப் பற்றினவர்கள் பேற்றை விளம்பித்துப் பெறுதலில் காரணமில்லாமையாலே அதனை விரைவில் பெறவேணுமென்கிற ஆவலைப் பிறப்பிதது அதனால் படிகடந்து நடக்கவேண்டிவந்தவளவில இது ப்ரபந்நர் குடிககட்டுப்பாட்டுக்குச் சேராதென்று விலக்கி 'எம்பெருமான் தானே வந்து விஷயீகரிககக் கண்டிருக்கவேணும்' என்று சொல்லித் துடிப்பை அடக்கப்பார்ககிற நமஃபதத்திற் கூறப்பட்ட உபாய அத்யவஸாயமாகிற ப்ரஜ்ஞாவஸ்தையைத் தாய் என்பதாககொள்க.

உறவினர் கூட்டக் கூடுகையன்றியே தானாகவே புணர்ந்து நாயகனுடைய மேம்பாட்டிலே ஈடுபட்டுக் குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல் 'அவனைக் கிட்டியல்லது நான் உயிர் வாழ்ந்திருக்கமாட்டேன்' எனனும் பதற்றத்தையுடையவளாயிருப்பள் உலகில் மகள்; பிரணவத்தினாலும் நமஸ்ஸாலும் சேஷியென்றும்சரண்யனென்றும் உணரப்பட்ட எம்பெருமானுக்கு நாராயண பதத்தினாற் கூறப்பட்ட ஸ்வரூபம ரூபம் குணம் விபூதி முதலியவற்றின் சேர்ககையாலுள்ள பெருமையை அநுஸந்தித்து அதனாலே அவனைத் தாமதிதது அநுபவிக்க நிறக மாட்டாமல் 'அவனே உபாயம்' என்ற கோட்பாட்டை அதிக்ரமிதது, கிட்டியநுபவித்தாலொழியத் தரிப்புற்றிருக்கவொண்ணாதபடி நடக்கிற ப்ரஜ்ஞாவஸ்தையை மகள் என்பதாகக் கொள்க.

இம்மூன்று அவஸ்தைகளுள் முதல் அவஸ்தை நடக்கும்படியைத் தோழி பாசுரத்தாலும் இரண்டாவது அவஸ்தை நடககுமபடியைத தாய பாசுரததாலும் மூன்றாவது அவஸ்தை நடக்கும்படியை மகள் பாசுரத்தாலும வெளியிடுவரெனறதாயிறறு. ஆகவே, தலைமகள் பாசுரமாகச் சொல்லுகிற இத்திருவாய்மொழியில எமபெருமானை அநுபவிப்பதில் ஆழ்வாருக்கு மிக்க விரைவு உண்டானமை விளங்கும்.

நாயகி பாசுரமாச் செல்லுகிற இததிருவாய மொழியில் சில பறவைகள் தூது விடப்படுகின்றன. இதற்கு உள்ளுறைபொருள [ஸ்வாபதேசம்] "சேர்ப்பாரைப் பக்ஷிகளாககி ஜ்ஞாந கர்மங்களைச சிறகெனறு குருஸப்ரஹமசாரி புத்ரசிஷ்யஸதாநே பேசும" என்று ஆசார்யஹ்ருதயத்தில அருளிச் செய்யபபட்டுளது. பகவத்விஷயததில அந்வயிப்பிககுமவர்களைப் பக்ஷிகளாக ப்ரதிபததி பண்ணுகிறது. பறவையானது இரணடு சிறகுகளாலே எபபடி உயர்கதியையடைகின்றதோ அப்படியே ஞான அனுஷ்டானஙகளினால உயர்கதியையடைகின்றார்களவர்கள். ஆசார்யர்களென்ன, உடன் கலவி பயினறவாகளென்ன, புத்திரர்களென்ன, சிஷ்யர்களென்ன ஆகியஇவர்கள் தூதுவிடப்படுகின்றார்களாக [அவ்வவ்விடஙகட்கு ஏற்ப]க் கொள்ளப்படுவர்கள்.

திருவாய்மொழியில் தூதுவிடும் பதிகங்கள நான்கு:—(1) அஞ்சிறையமடநாராய். (2) வைகல்பூங்கழிவாய். (3) பொன்னுலகாளீரோ. (4) எங்கானலகங்கழிவாய்.

"தம்பிழையும் சிறந்த செல்வமும் படைத்த பரப்பும் தமரோட்டை வாஸமும் மறப்பித்த க்ஷமாதிக்ஷாஸாரஸ்ய ஸௌந்தர்யங்களை யுணர்த்தும் வ்யூஹவிபவ பரத்வ த்வயார்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தியும் அதன் வியாக்கியானமும் இங்கு உணரத்தக்கன. [வ்யூஹத்திலே தூதுவிடுவது* அஞ்சிறைய மடநாரையில், விபவத்திலே தூதுவிடுவது * வைகல் பூங்கழிவாயில். பரத்வத்திலும் அந்தர்யாமித்வத்திலும் தூதுவிடுவது * பொன்னுலகாளீரில். அர்ச்சையில் தூதுவிடுவது * எங்கானல்கங்கழிவாயில]

முதல் தூதாகிய இத்திருவாய்மொழியில் "என்பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்க்கு என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" "கடலாழிநீர்தோற்றி யதனுள்ளே கண்வளரும் மடலாழியம்மானைக் கண்டக்கால் இது சொல்லியருள்" என்கிற பாசுரங்கள் உயிர்நிலையானவை—எம்பெருமான் தானது ஸௌசீல்யத்தினாலே முதலில் என்னோடு கலந்துவிட்டான், கலந்தபிறகு என்னுடைய தோஷங்களைக் கண்டான்; அதனால் உபேக்ஷித்துப் பிரிந்தான். தன்னிடத்தில் க்ஷமாகுணம் நிரம்பியிருக்கும் போது என் பிழைகளை அவன் லக்ஷியம் பண்ணக்காரணமேயில்லை, என்னுடைய பிழைகளானவை அவனது பொறுமைக்குணத்தையும் மறப்பித்தனபோலும்: அக்குணத்தைச் சிறிது நினைப்பூட்டிவிட்டால் போதும் என்று நினைத்த ஆழ்வார் அந்த க்ஷமாகுணத்தை நினைப்பூட்டுதற்கே தூதுவிடுகின்றாரென்கொள்க. இஃது எந்த இடத்தை நோக்கிவிடும் தூதென்றால்? "கடலாழி நீர்தோற்றி அதனுள்ளே கண்வளரும் மடலாழியம்மானைக் கண்டக்கால் இது சொல்லி" என்றதனால் ஜகத்ஸ்ருஷ்டிக்காக ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினவனுக்கு ஸ்ருஷ்டிப்ரயோஜனம் "விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்" என்கிறபடியே திருவடிகளிலே அடிமை கொள்ளுகையன்றோவென்று இதனைச்சொல்லவேணுமென்று வ்யூஹத்திலே விடுகின்ற தூது

சகுந்தலை துஷ்யந்த மஹாராஜனோடு கலந்து பிரிந்தாற்போலே ஒருவிளையாடுசூழலிலே பரமபுருஷனாகிற தலைவனோடு கலந்து பிரிந்ததொரு பிராட்டியின் நிலைமையை ஏறிட்டுக்கொண்ட ஆழ்வார், அவ்வெம்பெருமான் விரைந்து மீண்டு வரக்காணாமையாலும் அவனைப்பிரிந்து தான் ஆறியிருக்கமாட்டாமையாலும் தானே அவனிருப்பிடம் நோக்கிச் செல்லுதற்கு இயலாதபடி மேனி மெலிந்து கிடக்கையாலும் கண்ணிற்கண்டவற்றை குருகு வண்டு முதலிய பறவைகளைத் தூதுவிடுகிறார், அதாவது ஆழ்வார் ஞானமுடையனவான இவை நன்றாகவேயுடையரான சில மஹான்களைத் தம்மை எம்பெருமான் பக்கலிலே சேர்ப்பதற்கு உரிய ஆசாரியர்களாகவரித்து அவர்களை நோக்கிச் சொல்லுகின்றாரென்றதாயிற்று.

இங்கே பட்டர் அருளிச்செய்வதொரு வார்த்தையுண்டு;—"சக்ரவர்த்தி திருமகனார் [ஸ்ரீராமபிரான்] திருவவதரித்த பின்பு வாநரஜாதி விறுபெற்றதுபோல, ஆழ்வார்கள் திருவவதரித்தபின்பு பக்ஷிஜாதி விறுபெற்றது" என்றும். இராமபிரான் * முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்ததுபோல ஆழ்வார்கள் * அஞ்சிறைய புட்களைத்தமை ஆழியானுக்குத் தூதுவிடுகின்றார்களெனக.

முற்காலத்தில் ஸாமாந்யனாயிருப்பானொருவன், விரக்தர்களும் வைதிகர்களுமான மஹான்கள் புலரும் திருவாய்மொழியைப் பரிக்ரஹிக்கையாலே இது தத்வபரமாயிருக்கு

மென்று கருதி இத்திவ்யப்ரபந்தத்தை அதிகரித்துவந்து, இத்திருவாய்மொழியில் வந்தவாறே 'இது காமுகவாக்யமாயிருக்கின்றது!' என்று உபேக்ஷித்துவிட்டுப் போனானும். வேதாந்தங்களில் விதிக்கப்படுகிற பகவத்காமமே இப்படிப்பட்ட பாசுரங்களாகப் பரிணமித்ததென்று அவன் அறிந்திலன் கருவிலே திருவிலாமையாலே— என்று நம்பிள்ளை மிக வருந்திப்பேசுவர்.

வேதாந்ததேசிகன் "பாஞ்சாலீகாத்ர சோபாஹ்ருதஹ்ருதய வதூவர்க்கபும்பாவ நீத்யா பத்யௌ பத்மாஸஹாயே ப்ரணயிநி பஜத: ப்ரேயஸீபாரதந்த்ர்யம்| பக்தி: ச்ருங்காரவ்ருத்த்யா பரிணமதி முநேர்பாவ பந்தப்ரதிம்நா யோகாத்பராங்குசத பாவஸ்திதி ரிஹ விரஹோ தேசிகாஸ் தத்ர தூதா:||" என்று த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலும், "போகதும் தவ ப்ரியதமம் பவதிவ கோதே! பக்திம் நிஜாம் ப்ரணயபாவநயா க்ருணந்த:| உச்சாவசை: விரஹஸங்கமஜைருதந்தை: ச்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவ ஸ்த்வதீயா:||" என்று கோதாஸ்துதியிலுமருளிச்செய்ததவை இங்கு ஸ்மரிக்கத்தக்கன.(*)

அஞ்சிறையமடநாராய் அளியத்தாய்* நீயும்நின்
அஞ்சிறையசேவலுமாய் ஆவாவென்றெனக்கருளி*
வெஞ்சிறைப்புள்ளுயர்த்தார்க்கு என் விடு தூதாய்ச்சென்றக்கால்*
வன்சிறையிலவன்வைக்கில் வைப்புண்டாலென்செய்யுமோ.* **(க)**

அம் சிறைய	— அழகிய சிறகுகளையுடைய
மடம்	இளமைதங்கிய [அல்லது, விதேயமான]
நாராய்	— நாரைப் பறவையே!,
அளியத்தாய்	—தயைபண்ணுதற்கு உரியாய்',
நீயும்	— நீயும்
நின்	— உன்னுடைய
அம் சிறைய சேவலும் ஆய்	அழகிய சிறகுகளையுடைய ஆணுமாய் [இருவருங் கூடி]
ஆ ஆ என்று எனக்கு அருளி	ஐயோவென்று என் விஷயத்தில் கருணைகூர்ந்து,
வெம் சிறை புள் உயர்த்தார்க்கு	விரோதி பயங்கரமான சிறகுகளையுடைய பெரிய திருவடியைக் கொடியாக வெடுத்த பெருமானுக்கு
என் விடு தூது ஆய்	என்னால் விடப்பட்ட தூதாய்
சென்றக்கால்	— போனால்,
அவன்	— அந்த எம்பெருமான்
வன் சிறையில வைக்கில்	கடினமான சிறையிலே வைத்திட்டால்
வைப்புண்டால்	அதை நீ அநுபவித்திருப்பாயானால்
என் செய்யும்	என்ன கெடுதலுண்டாகும்?

* * * —பிரிவாற்றாமையோடு கூடியிருக்கின்ற பராங்குசநாயகி "பிரிந்தாரிரங்குவது நெய்தல்நிலத்திலே' என்ற தமிழர்களது கொள்கையின்படி இப்போது நெய்தல்நிலத்திலேயிருக்கின்றாளென்று கொள்ளவேணும். [முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என நிலத்தை நால்வகையாகப் பிரித்தனர் தமிழர். காடும் காடுசார்ந்த இடமும் முல்லையாம், மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியாம், நாடும் நாடுசார்ந்த இடமும் மருதமாம், கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தலாம். இவைதவிர, பாலைநிலமென்று தனியே ஒரு நிலமுண்டென்பது சிலரது கொள்கை: அது, நீரும் நிழலுமில்லாத கொடுநிலம். கீழ்ச்சொன்ன நால்வகை நிலங்களும் தம் தம் தன்மை கெட்டவிடத்தே

பாலையாமெனகிற கொள்கை உணரத்தக்கது.] நீர்நிலத்தருகேயிராநின்ற பராங்குச நாயகி, தன் ஸமீபத்திலிருப்பதொரு நாரையைப் பார்த்து ‘நாராய்! நீ என் நிலைமையைக் கருளக்கொடியொன்றுடையானுக்கு அறிவித்து என்னையும் அவனையுஞ் சேர்க்க வேணும்’ என்று இரக்கின்றாள். எம்பெருமானைப் பிராரத்திக்கும்போது புருஷகார பூதையான பிராட்டியை முன்னிட்டுப் பிரார்த்திக்கும் தம் இயற்கையினாலே இங்கும் பேடையை முன்னிட்டுச் சேவலைப்பற்றுகின்றனரென்க.

அஞ்சிறைய மடநாராய்!=குழந்தை தாயினுடைய எல்லா அவயவங்களுங்கிடக்க முலையிலே வாய்வைப்பதுபோல, இந்த நாரையினுடைய மற்ற அவயவங்களைவிட்டு சிறகிலே கண்வைப்பது—விரைந்து செல்லுதற்கு அதுவே ஸாதனமென்பதுபற்றி. நாரையே! நீ அழகிய சிறகுகள் படைத்திருப்பது எனக்காக விரைந்து தூதுசெல்லுதற்காகவன்றோ என்றவாறு. சொன்ன சொல்மறுக்காமல் உடனே புறப்பட வேண்டியதுமா யிருப்பதுபோலக் காணுதலால் ‘மட’ என்று விசேஷிக்கப்பட்டது. ஏவின காரியங் கொள்ளலாம்படி பவ்யமாயிருக்கின்ற நாரையே! என்றபடி. **நாரை** என்பதன் விளி—**நாராய்** என்பது, நங்காய், காளாய் என்பனபோல.

அளியத்நாய்=என்மீது கருணைபுரிவதற்கு உரியாய் என்றபடி. அவன் உபேக்ஷித்துவிட்டுப்போயிருக்கும் ஸமயத்திலே என்வருத்தங்களை முறையிட்டுக்கொள்ள லாம்படி வந்து முகங்காட்டினாய் உன் கருணையே கருணை என்று கொண்டாடுகின்றமை தோற்றும். பம்பா ஸரஸ்ஸின் கரையிலே அநுமன் வந்து காட்சிதந்தபோது இராம பிரானுக்கு உண்டான மகிழ்ச்சி இங்கு ஒப்பு நோக்கத்தக்கும்.

நீயும் நின் அஞ்சிறைய சேவலுமாய்=பெடையும் ஆணும் விட்டுப்பிரியாமல் தூதுபோகவேணுமென்கிறது. “ஆசாரியன் பக்கலிற்போலவே ஆசாரியன் தேவி களின் பக்கலிலும் பக்திபூண்டிருத்தல் வேண்டும்” என்கிற சாஸ்த்ரார்த்தம் இங்கு ஸூசிதமாகலாம்.

ஆ! ஆ!! என்று எனக்கருளி=ஐயோ ஐயோ! என்னும் பொருள்தான **ஹாஹா** என்கிற வடசொல் **ஆவா** வென்றதிரியும். அவனோடே கலந்து பிரிந்து அவனை மீண்டுங் கண்ணாலே காணப்பெறப்போமோவென்று விடாய்த்துக்கிடக்கிற என் விஷயத் தில் கருணைகூர்ந்து, விரஹம் தின்ற என்வடிவைக்கண்டு ‘இப்படியும் ஒரு ஆபத்து விளைவதுண்டோ’ என்று இரங்கவேணுமென்கிறது.

நாங்கள் இரங்கிச் செய்யவேண்டிய காரியம் என்னவென்று நாரை கேட்க, தூதுசெல்லவேணுமென்று ஆழ்வார் சொல்ல, யாரிடத்தில் தூதுசெல்லவேணு மென்று கேட்க, எம்பெருமானிடத்தில் என்று சொல்ல, ‘உம்மையே உபேக்ஷித்திருக் கின்ற அவர் எங்களுடைய வார்த்தைக்கோ இரங்கப்போகிறார்?’ என்று சொல்ல, “அப்படி நினைக்கவேண்டா, அடியார்களை நோக்குவதற்கென்றே அவர் கொடிகட்டிக் கொண்டு இருக்கின்றாராதலால் சிறிது ஞாபகப்படுத்தவே அரைகுலையத் தலைகுலைய ஓடிவருவர்” என்று விடையளிப்பதான கருத்துப்பட **வெஞ்சிறைப்புள்ளுயர்த்தார்க்கு** என்கிறார். கூடியிருந்தகாலத்தில் திடீரென்று பிரித்துக்கொண்டுபோனான் கருடன் என்றிட்டு அவன்மீது மாச்சரியம் தோற்ற **வெஞ்சிறைப்புள்** என்றது.

என்விடுதூதாய்ச் சென்றக்கால்= எம்பெருமான் நாயகி பக்கலில் தூதுவிடுவது ஸ்ரீராமாயணாதிகளிலே கண்டோம்; நாயகன் விடுகிற தூதைக்காட்டிலும் நாயகி விடுகிற தூதுக்கு ஏற்றமுண்டு. எங்ஙனே யென்னில், இராமபிரான் "முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து" என்கிறபடியே மாருதியை இலங்கைக்குத் தூது விட்டான்; அங்கே அக் குரக்கரசனுக்குச் சிறை கட்டுதல் சிங்கவிளக்கெரித்தல் முதலிய பரிபவங்கள் நேர்ந்தன; அந்த மாருதி தானே பிராட்டியின் தூதாக ஸ்ரீராமனிடம் மீண்டு வந்தபோது "ஏஷ ஸர்வஸ்வபூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத:, மயா காலமிமம் ப்ராப்ய தத்தஸ் தஸ்ய மஹாத்மந:" என்கிறபடியே திருமார்போடே அணைக்கப் பெற்றான். ஆதலால் அவன்விடுதூதாய்ச் செல்வதன்றியே என் விடு தூதாய்ச் செல்வது உங்களுடைய பாக்கியமேயாகும் என்ற குறிப்பு.

வன்சிறையில் அவன் வைக்கில் வைப்புண்டால் என் செய்யுமோ?= இங்கே சிறை வைப்பதாகச் சொல்வது — எம்பெருமான் முகங்கொடாமல் உதாஸீநனாயிருக்கையை யென்க. இங்கு நின்றும் தூது செல்கின்ற பறவைகளைப் பிடித்து அவன் சிறைவைப்பதென்பது ஸம்பாவிதமன்றே, முகங்கொடாமல் அந்யபரனாயிருக்குந்தன்மையே சிறை வைப்பதாகச் சொல்லப்பட்டது. இங்கே நம்பிள்ளை யீடு;— "இவள்பாடு நின்றும் சென்றவற்றைச் சிறையிட்டுவைக்கிறானன்றே; இவற்றுக்கு முகங்கொடாதே அந்யபரனாகையிறே சிறையிட்டுவைக்கையாவது: ராஜபுத்ரர்களுக்கு ப்ராப்தகாலங்களிலே (3) வெள்ளிலையிடாதபோது மாந்துவார்களிறே."

வைப்புண்டால் என் செய்யுமோ? — அப்படி அவன் உபேக்ஷித்துவிட்டாலும் பாதகமில்லை யென்றபடி. 1. "செம்மையுடைய திருமார்பில் சேர்த்தானேலும் ஒரு நான்று, மெய்ம்மைசொல்லி முகம்நோக்கி விடைதான் தருமேல் மிகநன்றே" என்றும் 2. "பாவிநீயென்று ஒன்று சொல்லாய் பாவியேன் காணவந்தே" என்றும் எம்பெருமானுடைய அநுக்ரஹத்தோடு நிக்ரஹத்தோடு வாசியற இரண்டும் போக்யமே யென்று கொள்ளுகிற நிலைமையும் ஒன்று உண்டாதலால் இங்ஙனே சொல்லிற்றென்க. அவனுடைய அநுக்ரஹத்தையே எதிர்நோக்குகின்ற இவர்கள் நிக்ரஹத்தையும் போக்யமாகக் கொள்ளும்படி எங்ஙனே? என்னில், நெஞ்சு முறிந்து சொல்லுகிற வார்த்தைகாணும், 'எம்பெருமானுடையதாகக் கிடைப்பது ஏதாகிலுமாம்' என்ற கருத்து சில ஸமயங்களில் தோன்றிவிடும்.

இப்பாட்டில் நாரையை விளித்துக் கூறினதற்கு ஸ்வாபதேசம் ஆசார்யஹ்ருதயத்தில் கூறப்படுகின்றது:—

"ஆசறுதூவியென்னும் பாஹ்யாப்யந்தர சுத்தியோடே திரையுகளும் வயஸந் வயத்தையற்றுத் தாம் வாயிலுண்ணும் பிள்ளைக்கு இரைதேடி வைகலுடன் மேய்ந்து நுங்கால் பைங்கானமென்று ப்ரஹ்மாதம் பண்ணிக் கொடுத்தவை கொண்டு நல்ல பதத்தையும் வேண்டேனென்னும் தனிப்பெரும்பித்தர் நம் முதலிகள் போல்வாரை நாரை கொக்கு குருகென்னும்" என்று. (1)

1. நாச்சியார் திருமொழி 13—9. 2. திருவாய்மொழி 4-7-3. 3. வெள்ளிலை—வெற்றிலை

என்செய்ய தாமரைக்கண் பெருமானார்க்கென் தூதாய் *
என்செய்யும் உரைத்தக்கால் இனக்குயில்காள் நீரலிரே *
முன்செய்த முழுவினையால் திருவடிக்கீழ்க் குற்றேவல் *
முன்செய்ய முயலாதேன் அகல்வதுவோ விதியினமே. (2)

இனம் குயில்காள் —	கூட்டமான குயில்களே!,	நீர் அலிரே	(நெடுநாளாகப் பழகிப் போந்த) நீங்களல்லீர்களோ?
என் —	என்னுடைய	முன் செய்த —	முற்பிறப்பில் பண்ணின
செய்யதாமரை கண்	செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய	முழு வினையால் —	பெரும்பாவத்தினால்
பெருமானார்க்கு —	எம்பெருமானுக்கு	திரு அடி கீழ் —	திருவடிகளின் கீழே
என் தூது ஆய் —	நான் விட்டதூதாகி	குற்றேவல் செய்ய	கைங்கரியம் பண்ணுதற்கு
உரைத்தக்கால்	சென்று சமாசாரமறிவித்தால்	முன் முயலாதேன்	முன்னம் முயற்சி செய்யாத நான்
என் செய்யும்	(அந்தச் செயல் உங்களுக்கு) என்ன தீமையை விளைவிக்கும்?	இனம் —	இன்னமும்
		அகல்வதுவோ விதி	விலகியிருப்பதேயோ முறைமை?

* * *—கீழ்ப்பாட்டில் நாரையைத் தூதுபோகுமாறு இரந்த தலைவி, அங்குப்போனால் சொல்லவேண்டிய செய்தியைச் சில குயில்களுக்குச் சொல்லுகின்றாள். ஒருவரை யழைத்துவிட்டு மற்றொருவர்க்கு ஸமாசாரஞ் சொல்லுகிறவிதனால் மிக்க கலக்கம் விளங்கும். இத்தகைய கலக்கத்தை யுண்டுபண்ணுவதேயாயிற்று விஷயாந்தரங்களிற்காட்டில் பகவத் விஷயத்திற்குண்டான ஏற்றம்.

என்செய்ய தாமரைக்கட்பெருமானார்க்கு=எம்பெருமான் இப்போது உறவறுத்துக்கொண்டு உபேக்ஷித்துப்போயிருக்க இந்த ஸமயத்தில் **என்** என்று உறவுகொண்டாடிச் சொல்லலாமோ? எனின்; அவன் கூடியிருந்தகாலத்தில் அளவுகடந்த உறவு கொண்டாடி இவளிட்டவழக்காக இருந்ததனால் பிரிந்தபோதிலுங்கூட உறவு அறாமல் தொடருகிறபடி. அன்றியே, அவன் பிரிகிற ஸமயத்தில் 'எங்குச்செல்லுகின்றீர்? எத்தனைநாளில் திரும்பிவருவீர்?' என்று நாயகி கேட்பளே; அப்போது 'நங்காய்' இந்த வஸ்து எங்குப்போனாலென்ன? எங்கிருந்தாலென்ன? உன்னுடைய சரக்கன்றோவிது' என்று உத்தரங்கூறுவனாகையாலே அதனை நினைந்து சொல்லுகிறபடியாகவுமாம்.

செய்யதாமரைக்கண் பெருமானார்க்கு= எம்பெருமானுடைய பரத்வத்தை உபபாதிக்கிறவளவிலே ஆளவந்தார் **"க: புண்டரீகநயந:!"** என்று செந்தாமரைக்கண்ணுடைமையை ஒரு லக்ஷணமாக அருளிச்செய்கையாலே இயற்கையாகவே செய்ய தாமரைக்கட்பெருமானார்; அதற்குமேலே ஸவிய வஸ்துக்களிடத்துண்டான ப்ரேமத்தாலும் கண் சிவக்கும்; தலைவியோடு கலந்ததனாலுண்டான களிப்பினாலும் சிவக்கும், பிரிவாற்றாமையாலுஞ் சிவந்திருக்கும்.

பெருமானுக்கு என்னாதே "பெருமானார்க்கு" என்று பெருமைக்குமேலேயும் ஒரு பெருமையை யேற்றிச் சொல்லியிருப்பது—எம்பெருமான் இயற்கையான ஐச்வர்யத்துக்குமேலே இவள் தன் பக்கலுள்ள செல்வங்களையும் அபஹரித்துப்போனதனாலுண்

டான ஐச்வரிய விரட்டிப்பைக் காட்டுதற்கென்ப (1.) "நான் மறையின் சொற்பொருளாய் நின்றார் என்மெய்பொருளுங் கொண்டாரே" (2.) "ஓ துள்ளுநீர்க் கண்ணபுரந்தொழுதாளிவள் கள்வியோ, கைவளை கொள்வது தக்கதே" இத்யாதி பாசுரங்களினால் இத்தலையிலுண்டான செல்வங்களைக் கவர்தல் அறிக.

"என் தூதாய்" என்று தன் உடம்பைத் தொட்டுக்காட்டுகிறாள்போலும்; கடலேறி வடிந்தாற்போலேயன்றோ நானிருக்கிறேன், அவனோடு கலந்து பிரிந்து வெறுந் தரையாயன்றோ நானிருக்கிறேன்; இப்படிப்பட்ட எனக்குத் தூதாய்ச் செல்லுகை தருமமன்றோ என்கிறாள்.

என்செய்யுமுரைத்தக்கால்=எனக்காக அவன் பக்கலிற்சென்று தூதுசொன்னால் உங்களுக்கு என்ன தீங்குவரும்? 'ஒரு தீங்கும் வராது என்கிறவளவேயோ? உபய விபூதியும் உங்களுக்குப் பரிசாகக் கிடைக்குமன்றோ' என்பதாகக் கருத்தை விரிக்க. "உரைத்தக்கால் என் செய்யும்" = எம்பெருமானை இங்கே கொண்டுவந்து சேர்க்க வேணுமென்கிறேனோ? அத்தனை வருத்தம் வேண்டாவே; என் நிலைமையை அங்குச் சென்று அறிவித்தால் போதுமே; இவ்வளவு காரியஞ்செய்தால் என்ன கெடுதி யுண்டாமுங்களுக்கு?

இனக் குயில்காள்!=என்னைப்போலே நீங்களும் தனியாயிருக்கவில்லையே; கூடிக் களித்திருக்கின்ற நீங்கள் ஸந்தோஷமாக இது செய்யலாமே யென்றபடி. இங்ஙனஞ் சொல்லியும் அவை கேளாமையாலே **நீர் அலிரே** என்கிறாள். **அல்லீர்** என்பது **அலிர்** என்று தொகுத்தலும் குறுக்கலும்பெற்றுக்கிடக்கிறது. "வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல், விரித்தல் தொகுத்தல் வருஉஞ் செய்யுள் வேண்டுழி" என்பது நன்னூல். **நீர் அல்லீரே?**=நீங்கள் நீங்களல்லவோ? அவனும் நானுமாய்க் கூடியிருந்த போது கேட்ட வார்த்தைகளுக்கெல்லாம் மறுமொழி கூறிக்கொண்டிருந்த நீங்கள் அவன் பிரிந்துபோனவாறே வேறுபட்டீர்களோ?

'ஒரு நொடிப்பொழுது தாமதித்தவளவால் இப்படியுஞ் சொல்லலாமோ? எம்பெருமான் பக்கலில் நாங்கள் சென்று சொல்லவேண்டிய செய்தி என்?' என்று குயில்கள் கேட்டனவாகக்கொண்டு பின்னடிகளில் ஸமாசாரங்கூறுகின்றாள் [**முன்செய்த முழுவினையால்** இத்யாதி.] அநாதிகாலமாகத் திரட்டின பாபத்தாலே திருவடிவாரத்திலே அந்தரங்க கைங்கரியம்பண்ணுதற்கு ஏற்கவே முயலப்பெறாத நான் அகன்று போக வேண்டுவதேயோவென்று கேளுங்கோளென்கிறாள். **முன்**—எனக்குத் தெரியாத காலம் முதலாக என்றபடி. **செய்த**—பாவஞ்செய்யவேணுமென்று நினைத்தமாத்திரமேயன்று, செய்துமுடிக்கவும் பட்டதென்கை. **முழுவினையால்**—செய்ய நினைத்த பாவங்களில் சில செய்து சில விட்டதுமுண்டோ? குறையற முழுதுஞ்செய்தற்றதென்றவாறு.

முழுவினையென்றவிடத்திற்கு ஒரு ஐதிஹ்யங்காட்டியருளுகிறார் நம்பிள்ளை,—பட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்தகாலத்து அங்குத் தெற்காழ்வானென்றும் கோளரியாழ்வானென்றும் இரண்டுபேர்களுண்டு, அவர்களில் கோளரியாழ்வான் நற்குண

1. நாச்சியார் திருமொழி 11—6. பெரிய திருமொழி 8-2-1.

நல்லொழுக்கங்களுடையவன்; தெற்காழ்வான் ஸாமாந்யனாயிருப்பன். இவ்விருவரும் ஒரு விசேஷதிவஸத்தில் ஒன்று சேர்ந்தார்கள். கோளரியாழ்வான் தெற்காழ்வானை நோக்கி 'அப்பா! இன்று புண்யதினமாயிற்று, இன்றாகிலும் ஒரு முழுக்கிட மாட்டாயோ?' என்றானாம்; அதுகேட்ட தெற்காழ்வான் 'முழுக்கிடவேணுமென்கிற உன்னுடைய அபிப்ராயம் என்னுடைய பாவங்கள் இந்த முழுக்கினால் தொலையக்கூடுமென்பதுதானே; அந்தோ! என்னுடைய பாபம் (திருக்கோட்டியூர்) ஸௌம்ய நாராயணப்பெருமானுடைய திருக்கையில் திருவாழியாலே போக்கினால் போகுமேயல்லது ஒன்றிரண்டு முழுக்கால் போகக்கூடியதன்றுகாண்' என்றானாம். அந்த வார்த்தை பட்டருடைய திருச்செவியிலே விழுந்தவளவில் 'ஆ! ஆ!! எவ்வளவு ஆஸ்திகனாயிருந்தால் இந்த வார்த்தையை சொல்லமுடியும், இவனை மேலெழுந்தவாரியாகப் பார்த்து நாஸ்திகனென்று நினைத்திருந்தோம், இவ்வளவு பேசும் பரிபாகமுடையவனோ இவன்!' என்று மிகவும் ஈடுபட்டாராம்.

நம்முடைய உபாயவிசேஷங்களால் போக்கிக்கொள்ள முடியாமல் எம்பெருமானை அநுக்ரஹஸங்கல்பத்தினால் போக்கவேண்டிய பழவினை என்பதற்காக இவ்வைதிஹ்யம் இங்குக் காட்டப்பட்டது.

திருவடிக்கீழ்க் குற்றேவல் = இப்போது ஆழ்வார் தாமான தன்மையில் இல்லை, நாயகி ஸமாதியிலே நின்றிருக்கிறார். இந்த நிலைமையில் "கொம்மை முலைகளிடர் தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல்" என்ற ஆண்டாளைப்போலே 'முலையாலணைக்க' என்று சொல்லவேண்டியிருந்தும் 'திருவடிவாரத்திலே அந்தரங்ககைங்கரியம்பண்ண' என்று சொல்லுகிற அழகுகாண்மின். இங்கே நம்பிள்ளையீடு:—"ப்ராஹ்மணர் பிச்சேறினாலும் ஓத்துச் சொல்லுமாபோலே இவர் பிராட்டியானாலும் முலையாலணைக்க நினையார்; திருவடிகளிலே அணையத்தேடுமத்தனை."—வேதமோதின அந்தணனுக்குப் பைத்தியம் பிடித்தாலும் வேதாத்யயனமே சொல்லித் திரிதல்போல ஆழ்வாருக்கு நிலைமைமாறினாலும் பாசுரம் பேசும் முறைமை மாத்திரம் மாறவில்லையென்றபடி. "தேறியும் தேறாதும் மாயோன் திறத்தினளேயித்திருவே" என்பதும் இங்கு அநுஸந்திக்கவுரியது.

குற்றேவல் முன்செய்ய முயலாதேன் அகல்வதுவோ விதியினமே = திருவடிகளின் கீழே திருமுன்பேயிருந்து அடிமை செய்தற்கு உறுப்பாயிருப்பதொரு ஸாதநாநுஷ்டானம் என் தலையால் பண்ணாத நான் திருவடியைவிட்டு விலகியே போமித்தனையோ? என்கிறாள். **இன்னம்** என்பது **இனம்** என்று தொக்கிக்கிடப்பதாகக்கொண்டு, "இன்னம் அகல்வதுவோ விதி?" = என்கையிலே ஒன்றுமின்றியே அவன் கையையே எதிர்பார்த்திருக்குமிந்த நிலைமையிலும் இழப்பதுண்டோ? என்பதாகப் பொருள்காண்க. "விதியினனே" என்றும் ஒரு பாடமுண்டாம்; அப்போது, விதியினன்—பாபத்தை யுடையேனான நான், அகல்வதுவோ? என்றுரைப்பது.

இப்பாட்டில் குயிலென்றதற்கு ஸ்வாபதேசம் வருமாறு:— (1.) "மாம்பொழில் தளிர்கோதிய மடக்குயில் வாயது துவர்ப்பெய்தத், தீம்பலங்கனித்தேனது நுகர்" என்றவிடத்து, மாஞ்சோலையிலே போய்ப்புகுந்து அங்குள்ள தளிர்களைத் தின்ற குயில் வாய் துவர்ப்படைந்துபோக, அத்துவர்ப்பை வேறு ரஸத்தாலேமாற்றவேண்டி இனிய

1. பெரிய திருமொழி 5-3 4.

பலாப்பழத்திலே சென்று வாய்வைக்கிறபடியைச் சொல்லுகிறவிதனால் – துவர்ப்பான விஷயாந்தரங்களில் நின்றும் இனிமையான பகவத்விஷயத்திலே அவகாஹித்து ரஸித்திருக்கின்றமை விவக்ஷிதம். (2.) "புன்னைமேலுறை பூங்குயில்காள்" (3.) "புன்னை குருக்கத்திநாழல் செருந்திபபொதுமபினில் வாழுங்குயிலே" என்ற விடங்களில் புன்னை மரத்தைக் குயில்களுக்கு உறைவிடமாகச் சொல்லுகிறவிதனால்—ஸ்ரீரங்கராசகரநமரித சாகிகாபய: லக்ஷ்மயா ஸ்வஹஸ்தகலித சரவணுவதம்ஸம, புந்நாகதலலஜமஜஸ்ரஸ ஹஸ்ரகீதி ஸேகோத்ததிவ்யநிஜஸௌரபமாமநாம:" [ஸ்ரீரங்கராஜஸ்தவம்] என்று பட்டரருளிச்செய்யும்படி திருவாய்மொழியின் ரஸஹறின கோயிற புன்னைமரத்தின் கீழ மாந்து விசேஷார்த்தங்கள் கேட்டுவளாத்தமை விவக்ஷிதம். குயிலுக்கு வடமொழியில [பரப்ருதம்] என்று பெயர், பிறரால வளாக்கபபடுவது என்று பொருள்; குயில்களின் வழக்கம இதுவேயெனபது பிரஸித்தம், அதுபோலே, ஆசாரியர்களுடையவும பாகவதர்களுடையவும அபிமானத்திலொதுங்கி அவர்களால வளர்க்கபபடுகின்றமை விவக்ஷிதம். இன்னமும், "வஸந்தகாலே ஸமபராபதே காக: காக: பிக: பிக:." என்கிற படியே சிலகால விசேஷங்களில் குயில் தன மிடற்றோசைகாட்டி வீறுபெறும; அதுபோல, ஆசிரியர்களும ஸமயவிசேஷங்களிலே கம்பீரமாக வாயவிட்டு உபந்யஸித்து மற்றையாரிற்காட்டில் தமது வைலக்ஷண்யத்தை விளக்குவர்கள். இங்ஙனே மற்றும பலவகைப் பொருத்தங்களும் காணக. .. . (உ)

விதியினால்பெடைமணக்கும் மென்னடையவன்னங்காள்*
மதியினால்குறள்மாணாய் உலகிரந்தகள்வர்க்கு*
மதியிலேன்வல்வினையே மாளாதோவென்று* ஒருத்தி
மதியெலாமுள்கலங்கி மயங்குமாலென்னீரே.* (3)

விதியினால்	– பாக்யவசத்தினால்
பெடை மணக்கும்	பேடையோடுகூடிக் களித்திருக்கின்ற
மென் நடைய	– மெல்லிய நடையையுடைய
அன்னங்காள்	– அன்னபபறவைகளே!
மதியினால்	– புத்தியினால்
குறள் மாண் ஆய்	– வாமந ப்ரம்மசாரியாய்
உலகு இரந்த	– உலகங்களை யாசித்த
கள்வர்க்கு	– கபடமுடைய பெருமானுக்கு,
மதியிலேன்	– புத்தியில்லாத என்னுடைய
வல் வினையே மாளாதோ	பெரிய பாவந்தானே முடியாதிருப்பது!
என்று	– என்று சொல்லி,
ஒருத்தி	– ஒரு பெண்ணானவள்
மதி எலலாம் உள்கலங்கி	புத்திமுழுதும அடிமண்டியோடே கலங்கப்பெற்று
மயங்கும	– அறிவழிந்து கிடக்கின்றாள்;
ஆல	– அந்தோ!
என்னீர	– என்று சொல்லுங்கோள்.

* * *—கீழ்பபாட்டில் "முன்செய்த முழுவினையால திருவடிக்கீழ்க குற்றேவல், முன செய்ய முயலாதேன அகலவதுவோ விதியினமே" என்றதற்குமேல, 'ஆழ்வீர்! இப்படிச் சொல்வது தகாது, செய்த பாபம அனுபவித்தே தீரவேண்டுங்காணும்' என்று எம்பெருமான திருவுள்ளமாகக்கூடுமென்று கருதி, 'நான பண்ணின பாபமேயோ அனுபவித்தாலும மாளாதது' என்று சொல்லுங்கோள' என்று சில அன்னங்களைக் குறித்துச்சொல்லுகிற பாசுரம இது.

2. திருவாய்மொழி 6-1-6 3. நாச்சியார் திருமொழி 5-1.

விதியினால் பெடைமணக்கும் மென்னடைய அன்னங்காள் = அன்னத்தை விளிக்கும்போதே தனது நிர்வேதமெல்லாம் விளங்க விளிக்கின்றாள்; "தைவம் திஷ்டம் பாகதேயம் பாக்யம் ஸ்த்ரீ நியதிர் விதி:" என்ற அமரகோசத்தின்படியே விதியென்று பாக்கியமாய், 'உங்களுடைய பாக்கியமே பாக்கியம்' என்னைப்போலே பிரிந்து வருந்தாதே கூடிக்களித்திருக்கின்றீர்களே! என்பதாம். அன்றியே, என்னுடைய பாக்கியத்தாலன்றோ நீங்கள் பிரியாதே கூடியிருக்கிறது என்கிறாளாகவுமாம். அவையும் இவளைப்போலே பிரிவாற்றாமை கொண்டிருந்தால் தனக்குக் காரியஞ் செய்யும்படி வேண்டிக்கொள்ள ப்ரஸக்தியேயிராதன்றே.

இனி, **விதி**யென்று சாஸ்த்ரவிதியாய், நீங்கள் சாஸ்த்ரப்படியே மணந்து கொண்டதனாலன்றோ பிரிவுத்துயரம் விளையப்பெறாமலிருக்கின்றீர்கள்; நான் அப்படியன்றியே காந்தர்வ விவாஹம்போலே மனப்பாங்கினாலே கூடினபடியாலன்றோ இப்போது இங்ஙனம் பிரிவாற்றாமையெய்திப் பரிதபிக்கின்றேன் என்பதாகவும் உரைப்பர். இப்பொருள்களெல்லாவற்றினும், 'என்னுடைய பாக்கியத்தினால்' என்னும் பொருளே சிறக்கும். இதற்குச்சேர நம்பிள்ளையீடு காண்மின்,—"பெருமாள் பிராட்டியைப் பிரிந்து கடலும் மலையும் அரித்துக்கொண்டு வாரா நிற்கச் செய்தே ராஜ்யதாரங்களை யிழந்து கிடந்த மஹாராஜரைக்கண்டு அவர் குறையைத் தீர்த்தபின்பிறே தம்மிழவில் நெஞ்சு சென்றது: அங்ஙனன்றிக்கே, இப்போது இவை குறைவற்றிருக்கிற விதுதான் இவள் பாக்யமாயிருக்குமிறே."

மதியினால் குறள்மாணாய் உலகிரந்த கள்வற்கு – தூது செல்லவேண்டுமிடத்தை நிரூபிக்கின்றாள்; தனது தலைவன் மஹாபுத்திமான் என்று கொண்டாடுகின்றாள். "ஸ்ம்ருதிர் வ்யதீத விஷயா மதிராகாமி கோசரா, புத்திஸ் தாத்காலிகீ ப்ரோக்தா ப்ரஜ்ஞா த்ரைகாலிகீ மதா." [கீழே கழிந்துபோன விஷயத்தைப்பற்றின வுணர்வு **ஸ்ம்ருதி** என்றும், மேலே வரப்போகிற விஷயத்தைப்பற்றின வுணர்வு **மதி** யென்றும் அப்போதைக்கப்போது நடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றின உணர்வு **புத்தி** யென்றும், முக்காலத்து விஷயங்களையும் பற்றினவுணர்வு **ப்ரஜ்ஞை** யென்றுஞ் சொல்லப்படும்.] என்கிறபடியே, மேல்வருவதைத் தெரிந்துகொண்டு அதற்கு இணங்கக் காரியஞ் செய்யவல்ல சாதுரியமே **மதி** யெனப்படுதலால், அப்படிப்பட்ட சாதுரியத்தினால் மாண்குறள் கோலவடிவு காட்டி யாசகனாயினான் என்கிறது. மாவலியினிடத்தில் யாசகனாகச் சென்றாலல்லது நமது காரியம் நிறைவேறாதென்று ஆராய்ந்து செய்தவாறென்கை. மாவலியை இராவணனைப் போலே தலையறுத்துவிடவேண்டும்படியான குற்றமொன்றும் செய்திலன்; கேட்பார் கேட்பதெல்லாங் கொடுக்கிறதென்கிற வுதாரவிரதமும் ஏற்றுக்கொண்டிராநின்றான்; இந்திரனோ ராஜ்யங்களை இழந்து மலைகாட்டி நிற்கின்றான், இந்த நிலைமையில் என்ன செய்யலாமென்று பார்த்து, தனது* அலம்புரிந்த நெடுந்தடக்கையைக் கொண்டு யாசகனாய்ச் செய்து காரியம் நிறைவேற்றிக்கொண்ட சதுரன். "தைத்யௌதார்ய மஹேந்த்ர யாச்ஞா விஹதிம் பரிஹ்ருத்ய வாமனோர்த்தீ த்வமாஸீ:" என்ற ஸ்ரீரங்கராஜஸ்தவ - உத்தர சதக ஸ்ரீஸூக்தியிலும் இப்பொருள் பொலியும். அப்படி மஹாபலி பக்கலில் யாசகனாய்ச் செய்ததும் அகக்குணத்தில ஈடுபடுத்தி என்னை இப்பாடு படுத்துவதற்காகவே என்னுங்கருத்தை *மதியினால்* கள்வர்க்கு* என்ற பதங்களிற் காண்க.

கள்வர்க்கு—இவருக் களவமாவது முதலில் சிறிய வடிவைக்காட்டிப் பிறகு பெரிய வடிவான வஞ்சகம் என்று திருமாலையாண்டான் கூறுவராம், எம்பெருமானார் நிர்வஹிப்பதாவது — ஒன்றை நினைத்து ஒன்றைச்செய்த மாயமே இங்குக் களவம் என்றும். மஹாபலியை வஞ்சித்ததும் அந்தச் செயலாலே என்னை வசப்படுத்திக் கொள்வதற்காக வென்றபடி. (1.) "முன்னம் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த, மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்" என்றார் திருமங்கையாழ்வாரும்.

தலைவன் பிரிந்துபோம்போது அங்ஙனம் போகவொண்ணாதபடி வளைத்துத் தடுத்து நிறுத்திக்கொள்ளாமற்போனேனே! மதிகேடியானேனே! என்னும் பரிதாபத்தை **மதியிலேன்** என்ற சொல்லால் விளக்குகின்றாள். [**வல்வினையே மாளாதோ**] வல்வினையேயோ மாளாது என இயைக்க. (2.) யத் ப்ரஹ்மகல்பநியுதாநுபவேபி அநாச்யம தத் கிலபிஷம ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே." [லக்ஷக்கணக்கான ப்ரஹ்ம கல்பங்களில் ஜன்னமெடுத்துப் பலாநுபவம் பண்ணினாலும் தீராத பாபங்களை அரை நொடிப் பொழுதில் சேதநவர்க்கங்கள் செய்கின்றன] என்கிறபடியே அளவில்லாத பாபங்களை அநவரதமும் செய்கின்ற ஜனங்கள் நிறைந்த இவ்வுலகினகண் நானொருத்தி செய்த பாவந்தானா அநுபவித்தும் மாளாதது? என்று கேளுங்கோளென்கிறாள்.

அவரைக் கேட்கவேண்டிய கேள்வி கிடக்கட்டும்; அவரிடத்துச் சொல்லவேண்டிய ஸமாசாரமென்ன? என்று கேட்க, **ஒருத்தி மதியெல்லாமுள்கலங்கி மயங்குமாலென்னீரே** என்கிறாள். ஒருத்தி அறிவழிந்து வருந்திக்கிடக்கின்றாளென்று சொல்லுங்கோளென்கிறாள். **ஒருத்தி** யென்றால் தெரியுமோ? இன்னாளென்று குறிப்பிடவேண்டாவோ வென்னில்; வேண்டா, ஒருத்தி யென்றபோதே அவன் தானே பராங்குசநாயகி யென்று தெரிந்துகொள்ளத்தட்டில்லை. இங்ஙனே மதியெல்லா முள்கலங்கி மயங்கும்படியாகத் தன்னால் செய்துவைக்கப் பட்டவள் இந்நிலத்தில் பராங்குசநாயகி யொருத்தி தவிர வேறு யாருமில்லையாதலால் விசேஷித்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை யென்க. இங்கே நம்பிள்ளையீடு:—"**ஒருத்தி** யென்றால் அறியுமோவென்னில், எய்தவன் கை உணராதோ? இன்ன காட்டிலே மான் பேடை எய்யுடனே கிடந்து உழையாநின்றதென்று ஊரிலே வாராததையானால் எய்தவன் கை உணராதோ? 'நீயன்றோ எய்தாய்' என்று சொல்லவேண்டாவிறே."

ஒருத்தி = அத்விதியை, தன்னோடு ஒரு கோவையாக விரல் மடக்குவதற்கு வேறொரு வ்யக்தியில்லாமே தனித்து நிற்பவளென்கை. [**மதியெல்லாம்** இத்யாதி.] ஒருத்தி அறிவு கலங்கினாளென்னுங்கோள், அது கேட்ட எம்பெருமான் 'தனக்குத் தான் அறிவு கலங்கப்பெற்றாலும் நாம் கொடுத்த அறிவு இருக்குமே, அதுகொண்டு ஆறியிருப்பள்' என்பன், அப்போது 'மதியெல்லாம் கலங்கிற்று' என்னுங்கோள்! அது கேட்ட எம்பெருமான் 'நாம் கொடுத்த அறிவு அப்படி கலங்கிவிடாது, கலங்கினாலும் மேலெழச் சிறிது கலங்குமே யல்லது உள்ளே கம்பீரமாகவே யிருக்கும்' என்பன்; அப்போது மதியெல்லா **முள்**கலங்கிற்று என்னுங்கோள். அதுகேட்ட எம்பெருமான் 'எல்லாம் உள்கலங்கிப் போயிற்றோ? நாம் இருக்கின்றோமே, பின்பு நாம் அணுகும்போது அறிவு கொடுத்துக்கொள்ளுகிறோம்' என்பன்; அப்போது 'மயங்குமால்' என்று

1. பெரிய திருமொழி 9-4 2. 2. வைகுண்டஸ்தவம்.

சொல்லுங்கோள்; அதாவது — முடியுந்தருணமாயிற்று என்று சொல்லுங்கோள் என்கை. மயங்கினாள் என்று முடிந்ததாகவே சொல்லிவிட்டால், 'அப்படியா? முடிந்து போய்விட்டாளா? இனிப்போய் நாம் என் செய்வது?' என்று சொல்லி ஒரு முழுக்குப் போட்டுவிட்டு நிற்பன்; அப்படியன்றியே அரைகுலையத் தலைகுலைய ஆனைக்கு உதவ ஓடிவந்தாற்போலே கடுக ஓடிவரும்படியாகச் சிறிது பசை யிருப்பதாய்ச் சொல்லுங்கோள் என்கிறாளாயிற்று.

என்நீர்மைகண்டிரங்கி இதுதகாதென்னாத *
என்நீலமுகில்வண்ணர்க்கு என்சொல்லியான்சொல்லுகேனோ *
நன்னீர்மையினியவர்கண் தங்காதென்றொருவாய்ச்சொல் *
நன்னீலமகன்றில்காள் நல்குதிரோ நல்கீரோ. (4)

என் நீர்மை கண்டு	என்னது ஸ்வபாவத்தை (நேரில்) பார்த்திருந்தும்	அவர் கண்	(பராங்குசநாயகியாகிய) அவளிடத்தில்
இரங்கி	—(பிரிவுகாலத்தில்) மனமிரங்கி	நல் நீர்மை	— நல்லுயிர்
இது தகாது என்னாத	இப்படி நாம் பிரிந்திருப்பது தகுதியன்று என்றிராத	தங்காது	— தங்கியிருக்கமாட்டாது
என் நீல முகில் வண்ணர்க்கு	நீலமேகத்தின் நிறம்போன்ற நிறமுடையனான எம்பெருமானுக்கு	என்று ஒரு வாய் சொல்	என்றொருவாய்ச் சொல்லை
என் சொல்லி	—என்ன வார்த்தைச் சொல்லி	நல் நீலம் மகன்றில்காள்	நல்ல நீலநிறமான மகன்றிற் பறவைகளே!
யான் சொல்லுகேனோ	நான் சொல்லப்போகிறேன்!;	நல்குதிரோ நல்கீரோ	(எம்பெருமானிடத்துச் சென்று) சொல்லுவீர்களோ மாட்டீர்களோ?
இனி	— இனிமேல்		

* * * — [என்னீர்மைகண்டிரங்கி.] பராங்குசநாயகி பல பறவைகளை விளித்துச் சொல்லிக்கொண்டிருப்பதைக்கண்ட சில மகன்றில் பறவைகள் 'நமக்கும் கைங்கரியம் செய்யச் சிறிது அவகாசம் நேர்ந்தது' என்று மகிழ்ந்து அருகே வந்து 'எங்களுக்கு ஏதேனும் நியமனமுண்டோ?', என்று கேட்பனபோல நிற்க, அவற்றைக்கண்டு, 'அந்தோ' எனது நிலைமையைப் பலகாலும் கண்டுவைத்தும் இரங்காதே போனவர்க்கு நான் என்ன ஸமாசாரம் சொல்லியனுப்புவது?' என்று நசையற்றவளாய், பின்னையும் வெறுமனிருக்கமாட்டாமையினாலே, 'மகன்றில்களே! என்னிலைமையை அவர்க்குச் சொல்லுவீர்களோ? மாட்டீர்களோ? என்கிறாள்.

பிரிவில் தரிக்கமாட்டாத என்னுடைய ஸ்வபாவத்தை நன்றாகக் கண்டுவைத்தும் 'ஐயோ! இப்படிப்பட்டவளையோ விட்டுப்பிரிவது!, ஒருகாலும் பிரியத்தகாது' என்றிராத என்னீலமுகில்வண்ணர்க்கு என்ன ஸமாசாரம் சொல்லுவேனென்கிறாள் முன்னடிகளில். முற்காலத்தில் ஒரு தமிழன் பட்டரிடத்தில் வந்து இப்பாட்டின் முதலடியில் ஒரு ஆக்ஷேபம் செய்தானாம்; அதாவது — இது பிரிந்திருக்கும் நிலைமையில் சொல்லுகிற பாசுரமேயன்றிக் கூடியிருக்கும் நிலைமையிற் சொல்லுகிற பாசுரமன்றே; பிரிந்திருக்குங்காலத்தில் தலைவியின் தன்மைகளைத் தலைமகன் பிறர்சொல்லக் காதால் கேட்கலாகுமே தவிரக் கண்ணாலே நேரிற் காணமுடியாதன்றோ, ஆகவே, "என்னீர்மை **கேட்டிரங்கி** யிது தகாதென்னாத" என்று பாசுரமிருக்கவேண்டியது உசிதமாயிருக்க,

“**என்னீர்மை கண்டிரங்கி**” என்று எப்படிச் சொல்லலாம்? என்று பூர்வபக்ஷம் செய்தானாம். பட்டர் அதைக்கேட்டு, ‘பண்டிதரே! நன்கு கேட்டீர்;* புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேனவ்வளவில், அள்ளிக்கொள்வற்றே பசப்பு.* என்ற திருக்குறளும், *ஊருண்கேணியுண்டுறைத் தொக்க பாசியற்றே பசலை, காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி விடுவுழி விடுவுழிப் பரத்தலானே* என்ற குறுந்தொகைச் செய்யுளும் உமக்குத் தெரியாதுபோலும்’ என்று சொல்லி அவற்றைப் பரக்க உபந்யஸித்து ஸமாதானப்படுத்தியருளினராம். (ஸமாதான விவரணம் வருமாறு:—)

__புல்லிக்கிடந்தேன்__ என்ற குறள் திருக்குறளில் பசப்புறு பருவரல் என்னும் அதிகாரத்தில் ஏழாவதாகும். இது நாயகியின் பேச்சு; முன்பொரு நாள் நான் காதலரை அழுந்தத் தழுவிக்கிடந்தேன்; கை மாறுவதற்காகச் சிறிது புடைபெயர்ந்தேன்; ஒரு நொடிப்பொழுது விலகின மாத்திரத்திலும் பசலைநிறம் வந்து உடம்பெல்லாம் மூடிக்கொண்டது என்பது இதன் கருத்து. *__ஊருண்கேணி__* என்ற செய்யுள் குறுந்தொகையில் முந்நூற்றுத் தொண்ணூற்றொன்பதாவது. இதன் கருத்தாவது — ஊரிலுள்ள ஜனங்களாலே நீருண்ணப்பெறுகிற கேணியினுள்ளே படர்ந்துகிடக்கும் பாசிபோன்றது பசலை நிறம்; தண்ணீரில் நாம் கைவைத்தோமாகில் கைபட்டவிடங்களில் பாசி நீங்கும்; கையை எடுத்துவிட்டோமாகில் அவ்விடமெல்லாம் பாசி மூடிக்கொள்ளும்; அதுபோல, கணவனுடைய கைபடுமிடங்களில் பசலைநிறம் நீங்கும்; அணைத்தகை நெகிழ்த்தவாறே அப்பசலை நிறம் படரும், ஆதலால் பாசிபோன்றது பசலைநிறம் என்றபடி. (**தொடுவுழித்தொடுவுழி**—தொட்டவிடங்கள்தோறும். **விடுவுழிவிடுவுழி**—விட்டவிடங்கள்தோறும். **பரத்தலான்**—வியாபிக்கிறபடியினாலே.) பிரிவாற்றாமையினாலே ஸ்த்ரீகளின் மேனியில் தோன்றும் நிறவேறுபாடு பசலைநிறமெனப்படும். நாயகனை விட்டுப் பிரிந்தகாலத்திலே நாயகியினுடலில் இந்த நிறவேறுபாடு தோன்றுவது ஆச்சரியமல்ல; ஒரு படுக்கையிலேயே படுத்துக் கூடியிருக்கும்போதே க்ஷணகாலம் கைநெகிழ்ந்தவளவில் இந்தப் பசலைநிறம் படர்கின்றதென்றால் பிரிந்த நிலைமையிற் கேட்கவேண்டியதில்லையன்றே.

பட்டரிடத்தில் ஆக்ஷேபம் செய்த தமிழனுக்கு இப்போது என்ன ஸமாதானமாயிற்றென்னில், இப்பாட்டு பிரிவுகாலத்திற் சொல்லுவதன்றிக் கூடியிருந்த காலத்தில் நிகழ்ந்த ஸம்பவத்தையே நினைப்பூட்டுவதாதலால் **கேட்டிரங்கி** என்னவேண்டியதில்லை; **கண்டிரங்கி** என்றே சொல்லத்தகும் என்றதாயிற்று.

என் நீலமுகில்வண்ணர்க்கு=என்னோடு முன்பு கலந்ததனாலே மேனி நிறம் பெற்றவர்க்கு என்றபடி. எம்பெருமான் இயற்கையிலேயே நீலமுகில் வண்ணராயிருந்தாலும் அன்பர்களோடு கலக்கப்பெற்றவளவில் வைவர்ணியமடைந்தேயிருப்பனென்க. ‘என்னைவிட்டுப் பிரிந்தபின்பும் குறியழியாதே நீலமுகில் வண்ணராயேயிருக்கின்றவர்க்கு’ என்று உரைக்கவுமாம். இப்போதும் அவர் நீலமுகில்வண்ணராயேயிருப்பது இவளுக்கு எங்ஙனே தெரியுமென்னில்: வைவர்ண்யமடைந்திருப்பாராகில் பதறி ஓடிவாரமாட்டாரோ? அங்ஙனம் வாராமையினாலே அவர்க்குப் பிரிவாற்றாமையுமில்லை, அதனாலாகக்கூடிய வைவர்ண்யமுமில்லை என்று அறுதியிடத் தட்டில்லையே.

என் சொல்லி யான் சொல்லுகேனோ?= என்ன பாசுரத்தையிட்டு எதை உங்களுக்கு நான் சொல்லிவிடுவது? நான் சொல்லியனுப்பவேண்டும்படியாக இருக்கிறவரோ உங்கள் வார்த்தைகேட்டு வரப்போகிறார்? என்று நசையற்றுக்கையொழிந்தவள் பின்னையும் நப்பாசையினால் ஒன்று சொல்லத் தொடங்குகின்றாள்.

கண்ணபிரான் கோபிமார்களைவிட்டுப் பிரிந்து மதுரைக்குச் சென்று பலநாள் வரையில் மீண்டுவாராதே அவ்விடத்தே தாமதித்திருக்க, 'ஆய்ச்சிகள் மிகவும் ரோஷங்கொண்டிருப்பார்களாதலால் இப்போது முந்துற நாம் நேரில் செல்லலாகாது; நம்பி மூத்தபிரானை [பலராமனை] அனுப்பிச் சிறிது சீற்றமாற்றிப் பிறகு செல்வோம்' என்று கருதின கண்ணபிரான் அப்படியே பலராமனைத் திருவாய்ப்பாடிக்கு அனுப்ப, அவனும் வந்து சேர்ந்தவளவிலே சில ஆய்ச்சிகள் பெரும்பசியன் சோற்றைக்கண்டு பதறுமா போலே பதறி அவனருகிற்சென்று பழைய ரோஷத்தையும் மறந்து கண்ணபிரானைப் பற்றி விசாரித்து உடனே *அதவா கிமதத்தாலாபை: கரியந்தாமபரா: கதா:* என்று அந்த க்ருஷ்ணனைப்பற்றின பேச்சு நமக்கு ஏதுக்கு? அதை விட்டுத்தொலையுங்கள்; வேறு பேச்சு ஏதாகிலும் எடுப்பது நல்லது என்று ஆசைவிட்டமை தோன்றச் சொன்னவர்கள் உடனே *அப்யஸௌ மாதரம் த்ரஷ்டும் ஸக்ருதப்யாகமிஷ்யதி* என்று நப்பாசை தோற்றப் பேசினார்கள். அதாவது—க்ருஷ்ணன் நமக்காக இங்கே வாரானாகிலும் பெற்றதாயைக்காணவேண்டியாகிலும் ஒருகால் வாராமற் போவானோ? என்றார்கள். அவர்களுக்குப் போலவே பராங்குசநாயகிக்கும் நப்பாசை பின்னாடுகிறபடி.

தலைவனுக்குச் சொல்லியனுப்புகிற செய்தி யாதெனில்; **நல்னீர்மை இனி அவர் கண் தங்காது**= நன்னீர்மையாவது நல்லுயிர்; இது இன்றளவும் ஒருவாறு தங்கியிருந்தாலும் இனி ஒரு நொடிப்பொழுதும் தங்காதென்று சொல்லவேணுமென்கிறாள். அசோகவனத்தில் வந்து முகங்காட்டின அனுமானைப் பிராட்டிகண்ட பிறகு ஸ்ரீராமபிரான் பக்கல் பழையரோஷத்தாலே 'அவரனுப்பின ஆளன்றோ இவன்' என்று சிற்சில வார்த்தை அருளிச்செய்ய, அதற்கு அனுமான 'ஸீதே! பெருமாள் தேவரீருடைய போக்கிடமறியாமல் விருந்தாரித்தனையல்லது அன்பு குறையப்பெற்றாரென்பதுண்டோ? நீர் இங்ஙனே இலங்கையிலிருக்கிறீர் என்றறிந்த பின்பு இனித் தாமதித்தாராகிலன்றோ அவர்மேல் குற்றஞ்சொல்லலாம்' என்று பிராட்டியின் ரோஷம் ஆறும்படிச் சில வார்த்தை விண்ணப்பஞ்செய்து, அவ்வளவோடு நில்லாமல் 'நீரும் பெருமாளைப் பிரிந்து பத்துமாஸ காலமாகத் தரித்திருப்பதுண்டே; பெருமாள்மீது நீர் ஏறிட்டுச் சொல்லுங் குற்றம் உம்மிடத்திலும் உள்ளதன்றோ' என்று தான் கருதியிருப்பதாகக்காட்ட, அதற்குப் பிராட்டி சொன்னாள்—'ஓ ராமதூதனே! இப்படியோ நீ நினைத்திருக்கிறாய்? நாட்டார்க்குத் தாய் என்றும் தந்தையென்றும் உற்றாரென்றும் உறவினரென்றும் பரீதிக்குப் போக்கிடம் பலதலைத்திருக்கையாலே அவர்களுடைய ஸ்நேஹம் எங்கும் பாலிபாய்ந்திருக்கும், பெருமாள் அப்படியல்லாமல் எல்லா பக்கலிலும் பண்ணக்கூடிய ஸ்நேஹத்தை என்னொருத்தி பக்கலிலே ஒருமடையாகச் செய்துவைக்கையாலே சிறிது தாமதித்தாகிலும் கடலை அணைசெய்து விரோதிகளையும் தொலைத்து அளவுகடந்த ஆவலோடே வருவது தவிரமாட்டார்; வந்தேதீருவர், வெய்யிலில் அடிப்பட்டவன் பெருவிடாய்ப்பட்டுத் தண்ணீர்ப்பந்தலண்டை வந்து சேர்ந்தவாறே தண்ணீர்ச்சால் உருண்டு கிடந்தால் ஐயோவென்று உயிர் துறக்குமாபோலே அவர் பெருமுயற்சிகள் செய்து இங்குவந்து சேர்ந்தவாறே நான் முடிந்துகிடந்தேனாகில் பின்னை அவர் பிழைக்

கும் வகையுண்டோ? உலகமெல்லாம் அநாதமாயவிடுமன்றோ? அங்ஙனமாகாமற் பொருட்டுஅவர்க்காக என்னுயிரைக் காத்துககொண்டிருக்கிறேன் காண் ‡' என்றுளாம். அப்படியே இப்பராங்குசநாயகியும 'அவரைவிட்டுப் பிரிந்தவன்றே என்னுயிரை நான மாய்த்துக்கொண்டிருக்கவேணும்; அப்படியானால் அவர் முந்திடுவரோ, உலகு அநீச் வரமாகுமோ! என நினைத்தே இதுவரை ஒருவாறு உயிர் தரித்திருந்தேன என்பதான கருத்தை உள்ளடக்கி, இனித் தரிக்கும் விரகு இல்லாமையாலே முடிந்தேபோமித்தனை யென்கிறாள்.

ஒருவாய்ச்சொல் = * "வாசா தர்மமவாப நுஹி" என்று பிராட்டி அநுமனை நோக்கிச்சொன்ன சொல்லின்பொருள் இதில் உறையும். [மகன்றில்—ஓர் பக்ஷி விசேஷம. "அன்றிலிலே ஓர் அவாந்தரபேதம்" என்று ஆசார்யஹ்ருதய வியாக்யானத்திலுள்ளது. கணவனைப் பிரிந்தவாறே கதறியழுது உயிர்துறப்பது அன்றில்; அதுபோலே எம்பெருமானுடைய விச்லேஷத்தில் உயிர்மாயுமளவான நிலைமையைப் பெறும் ஆசிரியர் ஸ்வாபதேசத்தில் விவக்ஷிதர்கள்.]

"ஒருவாய்ச்சொல் நல்கவேணும்" என்றதே "நல்குதிரோ நல்கீரோ" என்றது ஆற்றாமையின்கனம். (4)

**நல்கித்தான்காத்தளிக்கும் பொழிலேழும்வினையேற்கே *
நல்கத்தானாகாதோ நாரணனைக்கண்டக்கால் *
மல்குநீர்ப்புனற்படப்பை இரைதேர்வண்சிறுகுருகே *
மல்குநீர்க்கண்ணேற்கு ஓர்வாசகங்கொண்டருளாயே * (5)**

மல்கு	நிறைந்த		(அப்படிப்பட்ட அவன்)
நீர்	குளிர்ச்சியாகிய ஸ்வபாவத்தையுடைய	வினையேற்கேயோ நல்கத்தான் ஆகாது	பாபியான எனக்குமாத்திரமேயோ தான் கிருபை பண்ணலாகாது;
புனல்	நீர்வாய்ந்த	நாரணனை	(அந்த) நாராயணனை
படப்பை	பூந்தோட்டங்களிலே	கண்டக்கால்	கண்டபொழுதில்,
இரை தேர்கு	இரை தேடுகின்ற	மல்கும் நீர் கண்ணேற்கு	நீர்நிறைந்த கண்களையுடைய [அழுகண்ணியான] எனக்கு
வண் சிறு குருகே	அழகிய சிறிய குருகே!,		
தான் நல்கி	தானே அநுக்ரஹித்து		
காத்து	அநிஷ்டங்களையெல்லாம்போக்கி	ஓர் வாசகம் கொண்டு	(அப் பெருமானிடத்தில் நின்று) ஒரு வார்த்தையைக் கொணர்ந்து
பொழில் ஏழும்	ஏழுலகங்களையும்		
அளிக்கும்	ரக்ஷித்துக்கொண்டிருக்கின்றஎம்பெருமான்;	அருளாய்	கிருபைபண்ணவேணும்.

* * *— நான் எக்கேடாவது கெட்டுப்போகிறேன்; நாராயணனென்றும் ஸகலலோக ஸம்ரக்ஷகனென்றும் விருதுசுமக்கின்ற அவர்க்கு ஒரு கெடுதல் இல்லாமலிருக்க வேண்டுமே; என்னொருத்தியை ரக்ஷியாமையினாலே, அவர் படைத்த பெயரெல்லாம் மழுங்கிப்போகுமன்றோ, அங்ஙனம் போகாமே நோக்கிக்கொள்ளும்படி சொல்லவேணுமென்று ஒரு குருகைநோக்கி இரக்கின்றாள்.

‡ ஸ்ரீராமாயணம் ஸுந்தரகாண்டம் (36—30) "ந சாஸ்ய மாதா ந பிதா ந சாந்ய: ஸ்நேஹாத்விசிஷ்டோஸ்தி மயா ஸமோ வா| தாவத்வஹம் தூத ஜிஜீவிஷேயம யாவத ப்ரவ்ருத்திம் ச்ருணுயாம் ப்ரியஸ்ய ||" என்ற ச்லோகத்திற்கு இன் சுவைமிக்க நம்பிள்ளை வியாக்யானம் காண்க. [5—4—3]

ஒருவருடைய அபேக்ஷையையும் எதிர்பாராமல் உலகங்களுக்கெல்லாம் அபீஷ்டங்களை அளிக்கின்றாரே; அப்படிப்பட்டவர் பாவியான எனக்குத்தாரோ உதவலாகாது. அவர் நாராயணரன்றோ. நாரபதத்தின் அர்த்தத்தில் நான் சேர்ந்தவளல்லேனோ? என்னைவிட்டால் அவர்க்கு நாராயணத்வம் எங்ஙனே நிரம்பும்? என்ற கருத்து உள்ளுறையும்.

பொழிலேழும் = ஏழுதீவுகளையுடைத்தான பூமியென்றபடியாய், இவ்விபூதியைச் சொன்னது நித்யவிபூதிக்கும் உபலக்ஷணமாய், ஆக உபயவிபூதியையும் தன்பேறாக நிர்வஹித்துக்கொண்டு போருகிறவர் என்றதாயிற்று.

வினையேற்கே நல்கத்தானாகாதோ? = கடலில் ஏற்றமிட்டுத் தண்ணீர் ஆய்விட்டது என்னும்படி நேர்ந்தால் மஹாபாபந்தவிர வேறொன்றும் காரணமாகச்சொல்லலாவதில்லை; அதுபோலே, ஸர்வரக்ஷகனுக்கு வாழ்க்கைப்பட்ட நான் பிரிவாற்றாமையுற்றுக் கிடக்கிறேனென்றால் வல்வினையேயன்றோ இதற்குக் காரணம் என்கிறாள்போலும். இங்கே நம்பிள்ளையீடு காண்மின்:—“இல்லாதவன்று உண்டாக்கினாய்; உண்டாக்கினதுக்கு பலம் கர்மத்தையேறிட்டுக் கைவிடுகையோ? ஸர்வஜ்ஞரக்ஷணம் பண்ணுகிறவர் ஸ்வஜ்ஞரக்ஷணம் பண்ணலாகாதோ? நாட்டுக்கிட்ட நிலைப்பு அந்தப்புரத்துக்கு அரிதாக வேணுமோ? கடலிலே ஏற்றமிட்டுத் தண்ணீர் அரிதாம்படியான பாபத்தைப் பண்ணுவேனோ?”

நாரணனைக்கண்டக்கால் = நாராயணன் என்ற சொல் நாரணனென்று சிதைந்து கிடக்கிறது, பொருள் ஒன்றே. நாரபதப்பொருளான ஸகல சேதநங்களுக்கும் தான் இருப்பிடமாய் அவற்றையும் தான் இருப்பிடமாகவுடையனாயிருக்கும் பெருமானன்றோ அவர்; இவற்றிலே ஒன்று குறைந்தாலும் தமக்கு இழவாம்படியிருப்பவரன்றோ அவர். கள்ளிச்செடிக்கு மஹாவ்ருக்ஷமென்று பேர் இருப்பதுபோலே வெறும் ரூடியாகவோ அவர்க்கு இந்தத் திருநாமம் ஏற்பட்டது? திருநாமத்திற்கு அர்த்தபுஷ்டி இல்லையோ வென்று கேளுங்கோள் என்பது உட்கருத்து.

மல்குநீர்ப்புனல் படப்பை இரைதேர்வண் சிறுகுருகே! = நீர்நிறைந்திருக்கும்படியான கொடித்தோட்டங்களிலே இரைதேடுகின்ற குருகே! என்றதனால், தேடுகின்ற இரை தனக்காகவன்றியே தன் குட்டிக்காக என்பது விளங்கும். தனக்காகவாகில் இரைதேடவேவேண்டா; பெரும்பெருத்தகயல்கள் அங்குத் ததும்பிக்கிடக்குமாகையாலே கொள்ளைகொள்ளையாகக் கிடைக்கும்போது ஏதுக்குத்தேடவேண்டும்? குட்டிகளுக்காகத் தேடவேண்டுமோவென்னில், பெருத்த கயல்கள் குட்டிகளின் வாய்க்கு அடங்கமாட்டாவாகையாலே சிறிய பார்த்துத் தேடவேண்டும்.

பெரிய திருமொழியில் (5-2-1) “பள்ளச்செறுவில் கயலுகளப் பழனக் கழனியதனுட்போய், புள்ளுப்பிள்ளைக்கிரைதேடும் புள்ளம்பூதங்குடி தானே” என்றொரு பாசுரமுள்ளது. முற்காலத்தில், ஆலவாயுடையான் என்பானொரு தமிழன் பட்டரிடம் வந்து இப்பாட்டில் ஒரு கேள்வி கேட்டான்,—‘பள்ளச்செறுவில் கயலுகள’ என்றபோதே அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக்கிடக்கின்றமை வெளிவந்துவிட்டது; அப்படியிருக்க, ஈற்றடியில் “புள்ளுப்பிள்ளைக்கு இரைதேடும்” என்று எங்ஙனே சொல்லலாம்? மீன் அருமைப்பட்டிருந்தாலன்றோ இரைதேடவேண்டும்; கொள்வார்

தேட்டமாம்படி குறையறுக்கிடக்கும்போது தேடிப்பிடிப்பதாகச்சொல்வது பொருந்தாதன்றோ? என்று கேட்டான்;—இதற்கு பட்டர் அருளிச்செய்ததாவது, பிள்ளாய்! நீ கற்றவனாயினும் சொற்போக்கு அறிந்திலை; **பிள்ளைக்கு இரை தேடும்** என்றுள்ளது காண்; அங்குள்ள மீன்கள் நிலமிதியாலே தூணும் துலாமும்போலே தடித்திருக்கும்; அவை பறவைக் குட்டிகளின் வாய்க்குப் பிடிக்கமாட்டாவாகையால் உரிய சிறுமீன்கள் தேடிப்பிடிக்கவேண்டுமத்தனையன்றோ? என்றாராம். அஃது இங்கு நினைக்கத்தக்கது. தம் பக்கல் அர்த்தம் கேட்கிற சிஷ்யர்களின் யோக்யதைக்குத்தக்கவாறு அவர்கள் க்ரஹிக்கக்கூடிய அர்த்தங்களை சாஸ்திரங்களிலிருந்து கண்டுபிடித்து உசிதமாக உபதேசிக்கிற ஆசிரியர்கள் ஸ்வாபதேசத்தில் விவக்ஷிதர்கள்.

மல்குநீர்க்கண்ணேற்கு=எப்போதும் நீர் வெள்ளமிட்டுக்கொண்டேயிருக்கின்ற கண்களையுடையளான எனக்கு என்றபடி. ஆழ்வார்க்குக் கண்ணீரே நிரூபகம்போலும்; கூடியிருக்குங்காலத்திலோ ஆனந்தக்கண்ணீர்; பிரிந்திருக்குங்காலத்திலோ சோகக் கண்ணீர்.

ஓர்வாசகங்கொண்டு=உண்டு இல்லையென்பவற்றில் ஏதேனுமொரு ஸமாசாரத்தைக் கொண்டுவந்தாலும் போதுமெனகிறாள்போலும். எம்பெருமான் பக்கலிலிருந்து கிடைக்கும் ஸமாசாரம் எதுவானாலும் போக்யமாமிவர்கட்கு. **அருளாய்** என்று கௌரவந் தோற்றச் சொன்னதனால், பகவத் விஷயத்தை உபகரிப்பவர்கள் எந்தச்சாதியரானாலும் விஷய வைலக்ஷண்யமே காரணமாக மரியாதை செய்யத்தக்கவர் என்பது பெறுவிக்கப்படுகின்றதென்ப. பட்டர் காலத்தில் 'நம்பி ஏறுதிருவுடையான்' என்று ஒரு சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர் இருந்தார்; அவர் பரமபதிக்க அந்தச் செய்தியைப் பட்டர் ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்யவந்தவர் 'ஏறு திருவுடையதாஸர் திருநாட்டுக்கு நடந்தார்' என்றாராம்; பட்டர் அதைக்கேட்டு 'அந்தோ!' அவருடைய பெருமைக்குத் தக்கவாறு 'திருநாட்டுக்கெழுந்தருளினார்' என்ன வேண்டாவோ?' என்றருளிச்செய்தாராம். (5)

அருளாத நீர் அருளி அவராவி துவரா முன் *
அருளாழிப்புள்கடவீர் அவர்வீதியொருநாளென்று *
அருளாழியம்மானைக் கண்டக்கால் இதுசொல்லி
யருள் * ஆழிவரிவண்டே யாமுமென்பிழைத்தோமே. (6)

ஆழி வரி வண்டே	வட்டமான ரேகைகளையுடைய வண்டே!	அருள் ஆழி புள்	கருணைக்கடலான பெரிய திருவடியை
அருள் ஆழி அம்மானை	அருட்கடலான எம்பெருமானை	அவர் வீதி	— அவரிருக்கிற வீதியில்
கண்டக்கால்	— காணும்பொழுது, (அவனைநோக்கி)	ஒரு நாள்	— ஒருநாளாயினும்
		கடவீர் என்று	— நடத்துவீராக என்று
அருளாத நீர்	(இவ்வளவில்) கிருபைபண்ணாத நீர்	இது சொல்லி	—இந்த வார்த்தையைச்சொல்லி
அருளி	— கிருபைபண்ணி	அருள்	— கிருபைபண்ணவேணும்;
அவர் ஆவி துவரா முன்	அவருடைய [ஆழ்வாருடைய] உயிர் நீர்மை கெடுவதற்கு முன்னே	யாமும்	— நாமும்
		என் பிழைத்தோம்	— என்ன குற்றம் செய்தோம்?

* * *—என்னுடைய வருத்தத்தைப் பரிஹரியாதொழிந்தாலும், தம்முடைய நாராயணத்வத்தையாவது காப்பாற்றிக்கொள்ளச் சொல்ல வேணுமென்றாள் கீழ்ப்பாட்டில்; இதற்கு எம்பெருமான் 'நம்முடைய நாராயணத்வம் தொலைந்தாலும் தொலையட்டும்; ஒருவிதத்திலும் நமக்கு ஈடல்லாத இந்தப் பராங்குசநாயகியோடு கலந்து அவத்யம் பெறுவதிற்காட்டிலும் நாராயணத்வம் அழியப் பெறுவதே அமையும்' என்று திருவுள்ள மாகக் கூடுமென்று கருதிய தலைவி, அவர்க்கும் அவத்யம் வாராமல் எனக்கும் ஸத்தை கிடைக்கும்படியாக ஒரு வழியுண்டு; தாம் திருவீதி உலாவப் புறப்படுதல், ஆனைக்கு அருள் செய்யப் புறப்படுதல், என்றிப்படிச் சில யாத்திரைகள் செய்வதுண்டே; அப்படி ஏதேனுமொரு வியாஜங்கொண்டு எங்கள் தெருவே வந்தால் தமக்கும் அவத்யம் வாராது, நானும் சாலக்வாசல்பற்றி நோக்கி ஜீவிப்பேன், இதை அவர்க்குச் சொல்லாய் என்று ஒருவண்டை இரக்கிறாள்.

"அருளாத நீரருளி அவராவி துவராமுன் அருளாழிப் புட்கடவீர் அவர் வீதி யொருநாள்" என்னுமளவும் எம்பெருமானிடத்தில் வண்டு சொல்லவேண்டிய வார்த்தை. பரமதயாளுவென்று பேர்பெற்றிருக்கின்ற எம்பெருமானை **'அருளாத நீர்'** என்பது என்ன ஆற்றாமையின் கனத்திலோ, அறியோம். "அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம." என்று உலகுக்கெல்லாம் அருள்செய்ய தீக்ஷைபண்ணிக் கொண்டிருக்கிறவர் தன் விஷயத்தில் மாத்திரம் அருளாமைக்கு தீக்ஷைபண்ணிக் கொண்டிருப்பதாகப் பராங்குச நாயகியின் கருத்துப்போலும். இங்கே நம்பிள்ளையீடு;— "மயர்வற மதிநலம் **அருளினன்** என்று நெஞ்சுருகிக் கிடக்குமிவர் **அருளாத நீர்** என்கிறது என்ன தசாவிசேஷமென்றறிகிறிலோம்; 'அருளாத நீர்' என்று ஒரு திருநாமம் சாற்றுகிறாள்" என்பதாம்.

"அருளாதநீர் அருளி' என்பதற்கு மற்றொருவகையாகவும் பொருள் கொள்ளலாம், **அருளாத**—அருளுக்கு விஷயம் [இலக்குப்] பெறாத என்றபடி. இந்த விபூதியிலே* உண்டியே உடையே உகந்தோடுமவர்களே மலிந்திருப்பதனால் அவர்கள் உம்முடைய அருளை வேண்டுவாரன்றே; நானொருத்தியேயன்றோ உமது அருளை வேண்டுபவள்; ஆகையாலே, வேறிடத்திலே, அருளுக்கு அவகாசம் பெறாத நீர் அதனை என்திறத்திலே செய்யவேணுமென்றவாறு.

அவராவி துவராமுன்= என்றேனுமொருநாள் நீ அருள் செய்யவேபோகிறீர்; ஆனால், ஆவி போனபின்பு வீணாக அருள் செய்வதிற்காட்டிலும் முந்துற முன்னமே அது செய்வது நலமென்க. "ஜீவந்தீம் மாம் யதா ராம: ஸம்பாவயதி கீர்த்திமாந்| தத் த்வயா ஹநுமந் வாச்ய: வாசா தர்மமவாப்நுஹி." என்ற ஸ்ரீராமாயண ச்லோகத்தின் விசேஷார்த்தம் இங்கு நினைக்கத்தக்கது. இது பிராட்டி அனுமானைக் குறித்துச் சொன்ன ச்லோகம்: இதற்கு மேலெழுந்தவாரியாய்ச் சிலர் பொருள் கூறுவர்— அவரைப் பிரிந்த பின்பு நான் மரணமடைந்துவிட்டதாக அவர் நினைத்து வாளா இருக்கக்கூடும், அப்படி நான் மரணமடையவில்லை, இன்னமும் பிழைத்தே யிருக்கின்றேனென்று அவர் தெரிந்துகொள்ளுமாறு நீ தெரிவிக்கவேணும்—என்று பிராட்டி அனுமனிடம் சொல்லியனுப்புவதாகச் சொல்லுவர்கள். இது உசிதமான பொருளன்று. உத்தம நாயக நாயகிகளின் தன்மை எப்படிப்பட்டதென்றால், இருவரில் ஒருவருடைய உயிர்போயிற்றென்றால் அப்போதே மற்றொருவருடைய உயிரும் ஒழிந்தே

திரும: நாயகன் தான ஜீவித்திருந்தால் நாயகியும ஏதோ வோரிடத்தில் ஜீவித்துத் தானிருக்கிருளென்று நிச்சயித்துக கொள்ளலாம. அபபடியே நாயகி தான ஜீவித் திருந்தால் நாயகனும ஏதோ வோரிடத்தில் ஜீவித்துத்தானிருககிருனென்று நிசச யித்துக் கொள்ளலாம. ஒருவரை யொழிய ஒருவா ஜீவித்திருககமாட்டாரெனபது கொள்கை. இவ்விஷயம இராமபிரானுககும தெரியுமாகையாலே அவன தான் ஜீவித் திருக்குமபோது பிராட்டியும ஜீவிததேயிருக்கின்ருளென்று திடமாகத் தெரிந்து கொள்ள இடமுண்டாதலால் 'நான ஜீவித்திருபபதாகச் சொல்' என்று பிராட்டி தெரிவிக்கத தேவையிலலையனறே ஆதலால் இது பொருளன்று. பின்னை ஏதென் னில்; "ராம: ஜீவந்தீம மாம்யதா ஸமபாவயதி ததா வாச்ய:" இங்கே ஸமபாவனையாவது க்ருபைபண்ணுதல்; அவர் எனககு என்றேனுமொருநாள அருள செயயவே போகிருர்; ஆனால நான் உயிரோடிருககும்போதே அந்த அருளைச செயதாலனறே அது நிறம பெறும; நான் முடிந்த பிறகு யார் திறதது அருள செயவது? அது பழுதாகாமே நான் ஜீவிததிருககுமபோதே அருள செயயச சொல்லாய எனபதே உசிதமான பொருள. அஙஙனமே இஙகும அவராவி துவராமுன் எனபபட்டதெனக.

அங்குபபோய விண்ணபபஞ்செயதால் உடனே அவர் இஙகு வந்து சேருமாறு அவரைக் கொணர்தறகுக் கருடாழவான அருகேயுளன் என்று அவனை நினைபபூட்டு கின்ருள் அருளாழிப்புள் என்று. கீழ முதறபாட்டில வெஞ்சிறைப்புள் என்று வெவ விதாகச்சொன்ன வாயினுல் இஙகு அருளாழிப்புள் என்று கொண்டாடிச் சொல்லு கிருள. அருள்கூர்ந்து அக் கருடனை எழுந்தருளபபணணிச கொணடுவரவேணு மென்று.

அவர்வீதி ஒருநாள் கடவீர்=பராங்குசநாயகி இருககிற வீதிவழியாகக கருடனை ஒருநாள் செலுத்தவேணுமென்று சொல்லவெணுமெனகிருள. அடிககடி ஒரு வீதி வழியாகச் சென்ருல் யாரேனும பார்த்து ஏதேனும சஙகை கொளளமாட்டாரகளோ வென்னும வார்ததைக்கு இடமறுமபடி ஒருநாள் எனபபட்டது. ஒருநாள எழுநதருளி னுல இவளுடைய ஆசை தணிநதுவிடுமோ வெனில, பெருவிடாயபபட்டவா 'துளி நாக்கு நனைக்கத் தணணீர தந்தால போதும' என்னுமாபோலே சொலலுகிறபடி.

அருளாழியம்மானை = ஆழி யென்று கடலுககும சககரத்துககும பெயராதலால அவ்விருபொருளும இஙகு ஏறகும, அருளுககுக கடலபோனறவமமான என்ருவது, அருளமிகுநத திருவாழியாழ்வானைப படையாகவுடைய அமமான என்ருவது பொருள காண்க. கண்டக்கால் என்றதனல் காட்சியின அருமை கூறியவாறு. என்னைப போலே இரஙகுதறகுரியார அவாகக எததனையோபேர்கள உணடே, யாரையேனும கடாக்ஷிக்க எஙகேனும எழுநதருளியிருந்தால காணககிடையாரே, ஒருகால என அத ருஷ்டவசத்தினலே காணபபெறின என்றபடி.

இதுசொல்லியருள் = 'அருளாழிபபுட்கடவீர அவர வீதியொருநாள' என்கிற வார்த்தையைச் சொலலியருளவேணும. 'சொல' என்னுதே 'சொலலியருள' என்று கௌரவந்தோறறக்கூறினது, ஸவாபதேசததில ஆசாரயரே விவக்ஷிதர் எனபதை விளக்குதறகென்ப.

ஆழிவண்ணனே! = கம்பீரத்தன்மையும் அழகும் பொருந்தியவனே! என்றவாறு. ..

யாமும் என்பிழைத்தோமே = எம்பெருமானை இப்படி உபேக்ஷிக்கும்படி என்ன பாவம் பண்ணினோம்!; அவரைப்பிரிந்து ஆறியிருக்கமாட்டாதே துவளுகின்றவிதனைப் பிழையாக நினைத்தாரோ? என்னைப்போலே ஒருத்தியான ஸீதாபிராட்டியைப் பிரிந்த காலத்து உண்ணாது உறங்காது வானரத்தினவாயில் தூது மொழிந்து இப்படியெல்லாம் துவண்டவராமாயிருக்க, அந்தத் துவட்சியையெல்லாம் இப்போது நான் அடைந்துகிடப்பது பிழையாயிற்றுப்போலும். (6)

என்பிழைகோப்பதுபோலப் பனிவாடையீர்கின்ற *
என்பிழையே நினைந்தருளி அருளாததிருமாலார்க்கு *
என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென்றொருவாய்சொல் *
என்பிழைக்குமிளங்கிளியே யான்வளர்த்த நீயலையே. * (7)

என்பு	எலும்பிலே	திருவடியின்	ஸ்வாமியான தேவரீருடைய
இழை	நூலிழையை	தகவினுக்கு	கிருபைக்கு (பாங்காகும்படி)
கோப்பது போல	நுழைத்தாற்போல	என் பிழைத்தாள் என்று	(பராங்குசநாயகி) என்ன பிழைசெய்து விட்டாள் என்று
பனி வாடை	குளிர்ச்சிபொருந்திய வாடைக்காற்று	ஒரு வாய்	ஒரு வார்த்தை
ஈர்கின்ற	வருத்துகின்றது;	சொல்	சொல்லவேணும்;
என்	(இப்படி வருத்தப்படுகின்ற) என்னுடைய	என்பு	எலும்பை
பிழையே	குற்றங்களையே	இழைக்கும்	செதுக்குகிற
நினைந்தருளி	எண்ணி	இள கிளியே	கிளிப்பிள்ளாய்!
அருளாத	கிருபைபண்ணாமலிருக்கிற	யான் வளர்த்த நீ அலையோ	நான் வளர்த்த நீ அல்லையோ? [வேறுப்பட்டாயோ?]
திரு மாலார்க்கு	லக்ஷ்மீநாதனுக்கு [லக்ஷ்மீநாதனிடம் சென்று]		

*** **[என்பிழை கோப்பதுபோல.]** இத்திருவாய்மொழிக்கு இப்பாட்டு உயிர் நிலையாயிருக்கும். பிழைகளைப்பொறுத்தருளுந் தன்மையாகிற அபராத ஸஹத்வமென்னுங் குணம் பற்றாசாகத் தூதுவிடுகிறாளென்று அவதாரிகையிற் கூறினது இப்பாட்டைக் கணிசித்தேயாம். பிழைகளை அளவின்றிச்செய்துவைத்து 'அருளாழிப்புட்கடவீர் அவர் வீதியொருநாள்' என்றால் இது எப்படி ஸாத்யமாகும்? என்று எம்பெருமானுக்குக் கருத்தாகக் கூடுமென்று நினைத்த பராங்குசநாயகி, எங்கள் குற்றத்தைமாத்திரமேயோ பார்ப்பது, குற்றங்களைப் பொறுத்தருளுமவர் என்று அவர்தாம் விருது பெற்றிருக்கின்றாரே, அதனைச் சிறிது பார்க்கவேண்டாவோவென்று சொல்' என்று தன் கிளியை இரக்கின்றாள்.

என்பு இழைகோப்பதுபோலப் பனிவாடை ஈர்கின்ற = எலும்பிலே துளைத்து நூலைக்கோத்தால் எவ்வளவு ஹிம்ஸையாயிருக்குமோ, அவ்வளவு ஹிம்ஸையைச் செய்கின்றது இந்தக் குளிர்காற்று என்றபடி. எலும்பின் ஸ்தானத்திலே தனது சரீரமும் நூலின் ஸ்தானத்திலே காற்றும் ஆகும். இதனால், இப்போது தனது சரீரம் எலும்

பும் நரம்புமேயாம்படி மிகவும் மெலிந்துபோயிற்றென்பதும் ஸூசிப்பிக்கப்பட்டதாகும். 'ஈாகின்றது' என்னும் வினைமுற்று ஈறுகெட்டு 'ஈர்கின்ற' என்றிருக்கின்றது. இனி, வினைமுற்றாகக் கொள்ளாமல் மேலடியின் முதலிலுள்ள **என்** என்பதற்கு அடைமொழியாகக்கொண்டு 'பனிவாடையினாலே ஹிம்ஸிக்கப்படுகின்ற என்னுடைய' என்றுரைத்தலுமொன்று.

என்பிழையே நினைந்தருளி = எனது பிழைகளை மாத்திரம் நினைந்தாரேயல்லது, பிழைபொறுக்கவல்ல தமது க்ஷமாகுணத்தை நினைந்தாரில்லையே, அதனை மறந்தாப் போலே எனது பிழைகளையும் மறந்தாலாகாதோ? "நினைந்தருளி" என்றது உபசார வழக்கு: வெறுத்துரைக்கச்செய்தேயும் கொள்ரவசசொல் தவிரலாகாதே.

அருளாத திருமாலார்க்கு = பிழையுடையார் பக்கலிலே அருள் செய்யாவிடின் இவர் எங்ஙனம் திருமாலாக இருக்கமுடியும்? (1.) "ஸஹதாமசரீம் சௌரே: ஸம்மந்த்ரித ஜகத்திதாம் - அநுக்ரஹ மயீம் வந்தே நித்யம் அஜ்ஞாதநிக்ரஹாம்" என்கிறபடியே அநுக்ரஹமே வடிவெடுத்தவளென்றும் நிக்ரஹமென்பதைக் கனவிலுங் கண்டறியாதவளென்றும் புகழ்பெற்றவளான பிராட்டிக்கு இவர் மணவாளராகில் அவளது உபதேசத்தின்படி நடக்கவேண்டியவரன்றோ இவர்; "ந கச்சிந் நாபராத்யதி." [பிழை செய்யாதவனே உலகில் இல்லை] என்று நிரூபிக்கின்ற பிராட்டியோடே இவர் ஸம்பந்தம் பெற்றுவைத்து இங்ஙனே பிழைகண்டு உபேக்ஷித்தல் தகுதியோ? இப்படி இவர் பிழைகண்டு ஒதுங்குகின்றாரென்பதைப் பிராட்டியறிந்தால் அவள் தானும் பிறகு இவர் முகத்திலே விழிப்பளோ? என்கிற இவ்வளவு கருத்தும் **அருளாத திருமாலார்க்கு** என்ற சொற்செறிவிலே அடங்கும். பெரிய பிராட்டியார் பக்கலிலே அவர் லீலாரஸம் அநுபவித்து அவளுடைய போகமயக்குக்களிலே மூழ்கிக்கிடக்கையாலன்றோ இத்திசை நோக்கவும் மாட்டாது அருளாதிருக்கின்றார் என்பதாகவும் உட்கருத்துரைக்கலாம். இது பிள்ளான் நிர்வாஹம், நஞ்சீயர் நிர்வாஹம்.

இளங்கிளியே!, 'இப்படி அருளாதிருக்கலாமா?' என்று அவரிடத்துச் சென்று கேள்; அதற்கு அவர், "குற்றங்களை அளவில்லாதபடி செய்துவைத்திருந்தால் நாம் எப்படி அருள்செய்யக்கூடும்? தன் குற்றங்களைப் பாராமல் அருள் அருள் என்பதேயோ?" என்று இடித்துச் சொல்லக்கூடும், அங்ஙனஞ் சொன்னால் **திருவடியின் தகவினுக்கு என் பிழைத்தாள்** என்று மடிபிடித்துக் கேள்— என்று கிளிக்குச் சொல்லித் தருகின்றாள் பராங்குசநாயகி. **திருவடி** யென்பது ஸ்வாமி யென்றபடி 'அடிகள்' என்னுமாபோலே. திருவடியின் தகவினுக்கு என் பிழைத்தாள் = தேவரீருடைய கருணைக்குப் போதும்படி என்ன பிழைசெய்தாள்? என்றவாறு. உண்மையில்: தான் பிழைசெய்தது உண்டாகிலும் எம்பெருமானுடைய கருணைத்திறத்தைக் காணுமிடத்து 'அதன் வயிறு நிறையுமாறு நாம் பிழைசெய்யவில்லையே!, நாம் செய்த பிழை அக் கருணையின் வயிற்றுக்கு ஒரு கவளத்திறகும் போதாதே' என்று நினைக்கவேண்டும்படியாக இருத்தலால் இங்ஙனஞ் சொல்லுகின்றாளென்க. இங்கே ஈடு முப்பத்தாறாயிரம்:— "என் குற்றத்தைப் பார்த்து தமக்கு நினைத்தாராகில், ஸ்வாமிகளான தம் பொறை வயிறுநிறைய எங்களால் குற்றஞ்செய்யப்போமோ? என்னுங்கோள்." என்பதாம். எத்தனை பிழைகள் செய்திருந்தாலும் ஒரு நொடிப்பொழுதில் அவற்றைக்

(1.) யதிராஜ ஸப்ததி 1—2.

கபளீகரிக்கவல்ல கருணைக்குணம் தம்மிடத்தில் இருக்கும்போது, பிழை என்று வாய் திறக்கவும் வழியுண்டோ? என்பது கருத்து. இவ்விடத்திற்குப் பொருத்தமாக வேதாந்ததேசிகன் தயாசதகத்தி லருளிச்செய்த "மயி திஷ்டதி துஷ்க்ருதாம் ப்ரதாநே மிததோஷாந் இதராந் விம்ருகயந்தீ த்வம், அபராதசதை: அபூர்ணகுக்ஷி: கமலாகாந்த தயே! கதம் பவித்ரீ." என்ற ச்லோகார்த்தம் இங்கு அநுஸந்திக்கவுரியது.

எம்பெருமானுடைய க்ஷமா குணத்தையும் பார்த்தால் இதுவொரு பிழையாகவே தோன்றமாட்டாது. ஸ்ரீராமபிரான் வாலியை வதைத்து ஸுக்ரீவனுக்கு முடிசூட்டி அவனைக் கிஷ்கிந்தைக்குப் போகவிட்டு வர்ஷா காலம் முடிந்தவாறே இலங்கைக்குப் புறப்படப் படை திரட்டிக்கொண்டு வருமாறு நியமித்துவிட்டுத் தானும் மால்யவானிலே காலங்கழியா நிற்க, நாளடைவிலே வர்ஷா காலமும் முடிந்தும் ஸுக்ரீவன் போகபரவசனாய்க்கிடந்து வாராதேயிருக்க, பெருமாள் சீறிச்சிவந்து இளையபெருமாளை யழைப்பித்து நாணொலியெழுப்பி அச்சுறுத்த அப்போது தாரைவந்து கேட்கிறாள் "கிம் கோபமூலம் மநுஜேந்த்ர புத்ர!" என்கிறாள். இங்ஙனே சீறிவருவதற்குக் காரணமென்? என்று கேட்கிற அவளுக்குக் காரணம் தெரியாமையில்லையிறே; ஆயினும் கேட்கிற தன்கருத்து என்ன? உங்களுடைய க்ஷமாகுணத்தை நம்பியன்றோ நாங்கள் பராக்காயிருந்தது, அப்படியிருந்தும் சீறலாமோ? என்பதன்றோ அங்குக் கேள்வியின் கருத்து. அதுபோலவே இங்கு மெனக.

"திருவடியின் தகவினுக்கு என்பிழைத்தாள்" = இந்தச் சொல்தொடைக்கு மற்றொருவகையாகவுங் கருத்து அமையும். தேவரீருடைய கருணைக்கு இடையூறாக என்ன பிழை செய்தாள்? நான் ஏதாவது ஸ்வப்ரவ்ருத்திபண்ணியிருந்தேனாகில் 'தன் தலையாலே தன்னைக் காத்துக்கொள்ளப் பார்த்தாள், அப்படியேபார்த்துக்கொள்ளட்டும், நமக்கென்ன?' என்று தேவரீர் உதாஸீநராய் இருக்கலாம், அப்படி நான் ஒன்றுஞ் செய்யவில்லையே! தேவரீருடைய கருணை தாராளமாகப் பெருகலாம்படி நானிருக்கிறேனையொழிய, அக்கருணை தடைபடும்படி ஒரு அதிப்ரவ்ருத்தியுஞ் செய்திலேன்' என்கிறாளெனக.

"தேவரீர்க்ருபைக்குத் தண்ணீர்த் துரும்பாக ஏதேனும் ப்ரதக்ஷிண
நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்டோ? என்று நம்பிள்ளை அருளிச்
செய்யும்படி." என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தியின் சுவை இங்கு அறியத்தக்கது.

என்று ஒருவாய்ச் சொல் = இந்த ஒருவார்த்தையை மாத்திரம் நீ அங்குச் சென்று சொல்லவேணுமென்று கிளியை வேண்டுகின்றாள்.

என்பிழைக்கும் இளங்கிளியே = என்பு இழைக்கும், என் பிழைக்கும் என இருவகையாகவும் பிரிப்பர்: **என்பு இழைக்கும்**—(எனது) எலும்பைச் செதுக்குகின்ற (கிளியே!) என்றபடி: வடிவில் பசுமையாலும் வாயில் பழுப்பாலும் மழலைச் சொற்களாலும் எம்பெருமானை அநவரதம் நினைப்பூட்டாநின்றுகொண்டு என்னை வருத்துகின்ற கிளியே! என்றவாறு. **என் பிழைக்கும்?** = (என் நிலைமையை அங்குச்சென்று அறிவித்தால்) என்ன தப்பு உண்டாகும்? என்றபடி.

யான்வளர்த்த நீயலையே=இதற்கு இரண்டுவகையாகக் கருத்துக்கூறுவர்; நீ என்னால் வளர்க்கப்பட்டவனாயிருந்து இவ்வளவு உபகாரமுஞ் செய்யலாகாதோ? என்பது முதற் கருத்து. என்னால் வளர்க்கப்படுகிறவர்களெல்லாரும் எனக்குத் தீங்கிழைப்பதென்றே வழக்கமாய்விட்டது; எம்பெருமான் இப்போது எனக்குத் தீங்கிழைப்பதும் என்னுடைய ஸம்பந்தமே காரணமாகவன்றோ; அதுபோல என்னுடைய ஸம்பந்தமே காரணமாக நீயும் என் சொற்கேளாதே எனக்குத் தீங்கிழைத்துக்கொண்டிருப்பது வியப்பன்று; என்னால் வளர்க்கப்பட்டவனன்றோ நீ; இது என் தலைவிதிகாண் என்பதாக மற்றொரு கருத்து.

நீயலையேசிறுபூவாய் நெடுமாலார்க்கென் தூதாய் *
நோயெனதுநுவலென்ன நுவலாதேயிருந்தொழிந்தாய் *
சாயலொடுமணிமாமை தளர்ந்தேன்நான் * இனியுனது
வாயலகிலின்னடிசில் வைப்பாரைநாடாயே * (8)

சிறு பூவாய் —	சிறிய பூவையே!,
நீ அலையே —	நீ அல்லவோ? (இப்போது வேறுப்பட்டாயோ?)
நெடு மாலார்க்கு —	‘புருஷோத்தமனுக்கு
என் தூது ஆய் —	என் தூதாகிச்சென்று
எனது நோய் —	எனது பிரிவாற்றாமையை
நுவல் என்ன —	சொல்’ என்று வேண்டச் செய்தேயும்
நுவலாதே —	(போய்ச்) சொல்லாதே
இருந்தொழிந்தாய் —	வாளா இருந்திட்டாய்,
நான் —	யான்
சாயலொடு —	ஒளியோடு கூடின
மணி மாமை —	அழகாகிய நிறத்தை
தளர்ந்தேன் —	இழந்தேன்;
இனி —	இப்படியானபின்பு
உனது —	உன்னுடைய
வாய் அலகில் —	வாயலகுகளுள்ளே
இன் —	மதுரமான
அடிசில் —	இரையை
வைப்பாரை —	ஊட்டவல்லவர்களை
நாடாய் —	தேடிக்கொள்.

* * *— தன்னுடைய நிலைமையைப் பூவையென்னும் ஒரு பக்ஷிக்குக்காட்டி ‘ஏற்கனவே உன்னை நான் வேண்டிக்கொண்டிருந்தும் எனக்காகத் தூது செல்லாதே உபேக்ஷித்திருந்தாய்; நானோ இப்போது முடியப்புகா நின்றேன்; இனிமேல் உனக்கு இரையிடுவாரை நீயே தேடிக்கொள்ளாய் என்று சரம ஸமயத்தில் வார்த்தைபோலே சொல்லுகின்றாள்.

சிறு பூவாய்! நீ அலையே -பூவாய் என்பது பூவை யென்பதன் விளி, பூவை—நாகணவாய்ப்புள் எனப்படும். நீயலையே—நீ இதுவரையில் இருந்தமாதிரி யில்லையே என்றபடி. நான் எது சொன்னாலும் விரைந்துசெய்து முடிப்பதே இயல்வாக இருந்த நீ இப்போது சொன்ன சொல் கேளாமையினால் வேறுபட்டாய்போலும் என்று நினைக்க வேண்டும்படி யிருக்கின்றாய் என்றவாறு. எப்போதும் உத்ஸாஹமாகவே யிருக்கு மியல்வுடைய நீ இப்போது என் நிலைமையைக்கண்டு வருந்திக்கிடக்கின்றாயாதலால் வேறுபட்டாய் போலும் என்னவுமாம்.

நெடுமாலார்க்கு என்தூதாய் எனதுநோய்நுவல் என்ன நுவலாதே யிருந்தொழிந்தாய்=நமது தலைவரோ நெடுமாலார் — பக்தர்கள் பக்கலில் பைத்தியம் பிடித்தவர்; நானும் தூதுவிடவேண்டுமளவான பைத்தியம் பிடித்தவள்; ஆகவிப்படி இரண்டு

தலையும் அன்பார்ந்திருக்கும்போது இடையிலே சேர்விடுவார் வேண்டுமத்தனையே. அது உன்னாலாகக்கூடியதாதலால் ‘என் நோயை அங்குச்சென்று தெரிவியாய்’ என்று உன்னைப் பல்காலும் இரந்தேன்; இரந்தும் உபேக்ஷித்திருந்துவிட்டாய் என்கிறாள்.

“நோய் எனது” என்றவிடத்து நம்பிள்ளையீடு:— “ஸ்ரீபரதாழ்வான் நோயென்றால் சாதுர்த்திக மாயிராதே.” என்றுள்ளது. **சாதுர்த்திகமாவது** இரண்டுநாள் விட்டு மூன்றுநாளுக்கொருமுறை யடிக்கிற ஜ்வரம்; இது மிகவும் ஆபத்தாக முடியும் ஜ்வரமென்று சொல்லுவார்கள். ஸ்ரீராமனைப் பிரிந்திருந்தகாலத்தில் பரதாழ்வான் நோயாளியாயிருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்த நோய் சாதுர்த்திகஜ்வரம்போன்ற நோய் அன்று; பிரிவாற்றாமையேயாகும்; அதுபோலவே யிங்கும் என்றபடி. “மணிகெழுநீர்மருங்கலரும் வயலாலி மணவாளன் பணியறியேன் நீசென்று **என்பயலைநோய்** உரையாயே” என்ற பெரிய திருமொழியுங் காண்க.

தற்கால நிலைமையைச் சொல்லுகிறாள் **சாயலொடு** என்று தொடங்கி, **சாயல்** என்பது ஸமுதாயசோபை; இது வடமொழியில் லாவண்யமெனப்படும்; **மணிமாமை** என்பது அழகு, இது ப்ரத்யங்க ஸௌந்தர்யமெனப்படும். இவ்விரண்டும் நீங்கப் பெற்றேனென்கிறாள். இவள் இங்ஙனே சொல்லக்கேட்ட பூவையானது ‘இதோ விரைந்துசென்று எம்பெருமானுக்கு அறிவிக்கிறேன்’ என்று புறப்படப்புகுமளவிலே **இனியுனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே** என்கிறாள். நானோ முடியாநின்றேன், இனி யுனக்கு ரக்ஷகராவாரைத் தேடிக்கொள் என்றவாறு.

இவ்விடத்திலே ஒரு ஐதிஹ்யம்,—பெரிய திருமலை நம்பியென்னுமாசிரியர் ‘வெண்ணெய்க்காடும்பிள்ளை’ என்கிற ஸ்ரீக்ருஷ்ண விக்ரஹத்தை ஆராதித்துவந்தார்; அவர் திருவாராதனம் ஸமர்ப்பிக்க அசக்தராய் அந்திமதசையானவாறே பெருமாள் ஸந்நிதிமுன்பே தண்டன் ஸமர்ப்பித்துத் திருத்திரையை நீக்கச்செய்து “சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனியுனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே” என்று கைகூப்பி விண்ணப்பஞ்செய்தாராம். அடியேனோ ஆசாரியன் திருவடியடையாநின்றேன்; இனித் திருவாராதனம் கண்டருளப்பண்ணுவாரைத் தேடிக்கொள்ளாய் என்றபடி. .. (8)

நாடாதமலர்நாடி நாடோறும் நாரணன்தன் *
வாடாதமலரடிக்கீழ் வைக்கவேவகுக்கின்று *
வீடாடிவீற்றிருத்தல் வினையற்றதென்செய்வதோ *
ஊடாடுபனிவாடாய் உரைத்தீராயெனதுடலே. * (9)

ஊடு ஆடு	— அங்குமிங்கும் நடையாடுகிற	வைக்கவே	— ஸமர்ப்பிப்பதற்காகவே
பனி வாடாய்	— குளிர்காற்றே!,	வகுக்கின்று	(அவயவங்களை) ஏற்படுத்தியிருக்க,
நாடாத மலர் நாடி	தேடவொண்ணாத புஷ்பங்களைத் தேடி	வீடு ஆடி வீற்றிருத்தல்	(இப்படி) பிரிவிலே மூழ்கியிருப்பதாகிற
நாள் தோறும்	— தினந்தோறும்	வினை அற்றது	— தௌர்பாக்கியம்
நாரணன் தன்	— ஸ்ரீமந்நாராயணனுடைய	என் செய்வதோ	— எதற்காக நேர்ந்ததோ!;
வாடாத மலர் அடி கீழ்	வாடாத தாமரை மலர் போன்ற திருவடிகளில்	(வாடாய்)	— காற்றே!;

உரைத்து	(அப்பெருமானுக்குத்) தூது சொல்லி (அனுகூலமான மறுமொழி பெறுவிடின்)	எனது உடல்	— என் சரீரத்தை
		ஈராய்	— இருபிளவாக்கிவிடு

* * *— கீழ்ப்பாட்டில் "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான" என்றாரே. அப்படி மேனிமெலிந்திருக்கிற ஸமயத்திலே ஒரு வாடைக்காற்று வந்து உடம்பிலேபட்டது; (1.) "என்றும் புன்வாடை யிதுகண்டறிதுமிவ்வாறு வெம்மை, ஒன்று முந்நுவும் சுவடுந் தெரியலம்" என்றாப்போலே அதனுடைய அபூர்வமான கொடுமையைக்கண்டு 'அரசர்கள் ராஜத்ரோஹஞ் செய்தவர்களை ஹிம்ஸிக்க வேற்காரரை அனுப்புமாபோலே நம்மைக் கொலைசெய்ய ஸர்வேச்வரன் இவ்வாடையை அனுப்பியிருக்கவேணும்' என்று நினைத்து அந்த வாடையை நோக்கிச்சொல்லுகின்றாள் — 'வாடையே! நான் சொல்லுகிற வார்த்தையை நீ அங்கே சென்று அறிவித்துவிட்டு, பின்னை அவசியம் வந்து என்னை முடித்திடாய்' என்கிறாள்.

இவ்வுலகத்திலுள்ள சிறந்த புஷ்பங்களையெல்லாம் தேடிச் சமர்ப்பித்து எம்பெருமானிணையடிக்கீழ் அடிமை செய்வதற்காகவே இவ்வாத்மவஸ்து அமைந்தது; அப்படிப்பட்டதான இவ்வாத்மவஸ்து இங்ஙனே எம்பெருமானைவிட்டுப் பிரிந்து துரத்ருஷ்டத்தில் தலைநின்றிருப்பது ஏனோ? எதுக்காக இவ்வாத்மவஸ்து இப்படி அநர்த்தப்பட்டுக்கிடக்கவேணும்? என்கிற இவ்விஷயத்தை ஓ வாடைக்காற்றே! எம்பெருமானிடத்து விண்ணப்பஞ்செய்து, அதற்குப்பிறகு நீ இவ்வுடலை எப்படி வேணுமானாலும் அறுத்துத் தொலைத்திடு என்கிறாள்.

நாடாதமலர்நாடி= *அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரியநிக்ரஹ:| ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:|| ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவ ச| ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்.* என்கிறபடியே, அஹிம்ஸை, இந்த்ரியநிக்ரஹம், ஸர்வப்ராணிகளிடத்தும் இரக்கம், பொறுமை, ஞானம், தவம், தியானம், ஸத்தியம் என்று எட்டுவகையான புஷ்பங்களாகச் சொல்லப்பட்டவற்றை ஸமர்ப்பித்து என்றும், மலர்போலே எம்பெருமானுக்குப் பரமபோக்யமான ஆத்மபுஷ்பத்தை ஸமர்ப்பித்து என்றும், "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே தேடவரிய புஷ்பங்களெல்லாம் தேடி என்றும் பலபடியாகப் பொருள் கூறுவர்.

நாடோறும்= இதுதான் ஒருநாளோடே ஸமாப்தியடைகிற காரியமன்றே, வாழ்நாள் உள்ளவரையில் இடைவிடாதே நிரூபித்து ஸ்வரூபம் நிறம்பெறவேணுமே.

நாரணன்றன் வாடாமலரடிக்கீழ் வைக்கவே= நமக்குத் தகாத தேவதாந்தரங்களுக்கன்றே நாம் அடிமை செய்யவேண்டுவது. "மாதா பிதா ப்ராதா நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" என்கிறபடியே நமக்கு எல்லாமுமான ஸ்வாமியினுடைய, செவ்விமாறாத பூப்போலேயிருக்கிற திருவடிகளின்கீழே கைங்கர்யம் செய்யவன்றோ விதிவாய்த்தது.

---

1. திருவிருத்தம்,

வைக்கவே வருக்கின்று—"விசித்ரா தேஹஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந்-ஹஸ்தபாதாதிஸம்யுதா." என்கிறபடியே பகவானை ஆராதிப்பதற்கென்றே நமது கரணகளேபரங்கள் ஏற்பட்டன. இப்படியிருக்க,

விடாடி விற்றிருத்தல் வினையற்றது என்செய்வதோ?—விடாவது விடுதல்; அதாவது விட்டுப்பிரிதல்; பிரிவிலே அவகாஹித்தலாவது பிரிவதேயாம்; ஆகவே, **விடாடி** என்றது பிரிந்து என்றபடியாயிற்று. விற்றிருத்தலாவது சலனமில்லாதிருத்தல், ஆக இவ்வளவாலும் நெடுநாள் பிரிந்திருத்தலைச் சொன்னபடி. **வினையற்றது**—தௌர்ப்பாக்கியநிலைமை, நெடுநாள் பிரிந்திருப்பதாகிற இந்த தௌர்ப்பாக்கிய நிலைமை எதுக்காகவுண்டாயிற்று? என்கிறாள்.

மனருமடியிலுள்ள இவ்விஷயத்தை எம்பெருமானிடத்துச்சென்று சொல்லி, அதற்கும் அவன் காது கொடாதிருந்தால் உடனே வந்து என்னை முடிப்பது நன்று என்றாளாயிற்று.

ஊடாடுபனிவாடாய் = அங்குமிங்கும் திரிகின்ற குளிர்ந்தகாற்றே! என்றபடி. அங்கே அந்தரங்கமாயத் திரியவல்ல காற்றே என்றுமாம்.

நம்பிள்ளையீடு.—"நித்யகைங்கர்யத்துக்கு இட்டுப்பிறந்த வஸ்து இப்படியிருக்கக் கடவதோ" என்று அறிவித்தால் 'அத்தலையால் வரும் கைங்கரியமும் நமக்கு வேண்டா' என்றிருந்தானாகில் அவச்யம் வந்து அவனோடுடைய பிரிவுக்குச் சிளையாத என்னுடலை முடித்துவிடவேணுமென்று § காலைப்பிடித்து வேண்டிக்கொள்ளுகிறாள்."

இப்பாட்டில் காற்று என்றது காற்றுப்போலே உலகத்துக்கு ஜீவனஹேதுவான ஆசாரியனைச் சொன்னபடி. (9)

உடலாழிப்பிறப்புவீடு உயிர்முதலாமுற்றுமாய் *
கடலாழிநீர்தோற்றி அதனுள்ளேகண்வளரும் *
அடலாழியம்மானைக் கண்டக்கால் இதுசொல்லி *
விடலாழிமடநெஞ்சே வினையோமொன்றாமளவே. *

(10)

ஆழி மடநெஞ்சே	ஆழ்ந்த மடநெஞ்சே!;	கடல்	ஸமுத்திரத்திலே
உடல்	சரீரஸம்பந்தம்பெற்று	தோற்றி	ஆவிர்ப்பவித்து
ஆழி	சக்ராகாரமாக	அதன் உள்ளே	அக்கடலினுள்ளே
பிறப்பு	மாறிமாறிப்பிறக்கிற ஸம்ஸாரிநிலமும்	கண் வளரும்	சயனித்தருள்கின்ற
வீடு	மோக்ஷமும்	அடல் ஆழி அம்மானை	தீக்ஷணமான சக்கரப்படையையுடைய பெருமானை
உயிர்	(இவற்றை அடைதற்கு உரிய) ஆத்மாவும்	கண்டக்கால்	கண்டால்
முதல் ஆம் முற்றும் ஆய்	ஆகிய இவை முதலான ஸகல பதார்த்தங்களும் தானிட்ட வழக்காம்படி ஸர்வநிர்வாஹகனாய்	இது	இந்த நிலைமையை
		சொல்லி	அவனுக்குச்சொல்லி
		வினையோம்	பாபிகளான நாம்
		ஒன்று ஆம் அளவு	அவனோடு ஒன்றுபடும் வரையில்
ஆழி நீர்	ஆழ்ந்த நீரையுடைய	விடல்	விடாதே.

§ கால—காற்று என்றும் தொனிக்கும்.

* * *—கீழ்ப்பாட்டில் "நாரணன்றன் வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று" என்று கைங்கர்ய ப்ரஸ்தாவம் வந்ததனால், தாய் முலையை நினைத்த கன்றுபோலே திருவுள்ளமானது பதறி உடலைவிட்டுப் புறப்படத் தொடங்கிற்று; அதனைநோக்கி நெஞ்சே! நம் காரியம் ஒருவிதமாக நிஷ்கர்ஷமாகுமளவும் நீ என்னை விடாதே யிருக்கவேணு' மென்று வேண்டிக்கொள்ளுகிறார். அன்றியே, தூதுவிடுகிற ப்ரகரணமாதலால் நெஞ்சைத் தூதுவிடுகிறார் என்பாருமுளர். அப்போது, விடல் என்றது—அவனை விடவேண்டா என்றபடி.

முதலடிக்குப் பலவகையாகக் கருத்துக்கூறுவர்: "உயிர் உடலாழிப் பிறப்பு வீடு முதலா முற்றுமாய்" என்று அந்வயித்து, உயிரினுடைய உடலாழிப்பிறப்பு வீடு முதலான முற்றும் ஆவதற்காக என்று கொள்க. உடலாழிப் பிறப்பாவது—உடலிலே வட்டவடிவமான பிறப்பு: பிறப்பு வட்டவடிவமாயிருப்பதாவதென்? என்னில், வட்ட வடிவமாக ஒன்று கிடந்தால் அதில் முதலும் முடிவும் கண்டுபிடிக்க வொண்ணாதேயிருக்கு மன்றோ, அதுபோலே பிறவிக்கு முதலும் முடிவுமில்லாமை கூறினவாறு. அப்படிப்பட்ட பிறவிக்கு வீடு உண்டாவதற்காக—ஸம்ஸாரம் தொலைவதற்காக என்றபடி. வீடுமுதலா முற்றுமாய—மோக்ஷம் முதலான எல்லாப் புருஷார்த்தங்களையும் பெறுதற்காக என்க. ஸ்ருஷ்டிக்கு முக்கியமான ப்ரயோஜனம் மோக்ஷமாதலால் அதனைச் சுட்டினபடி. ஆழிப்பிறப்பு என்றவிடத்தில் ஆழியென்று கடலைச் சொல்லிற்றாய், கடல்போலே எல்லைகாண முடியாத பிறப்பு என்னவுமாம்.

உயிர் என்பதை உள்ளவிடத்திலேயே வைத்து அந்வயித்தலுமுண்டு,— உடலாழிப்பிறப்பு - ஜன்மங்கள்தோறு முண்டான வீடு—சரீரத்தினுள்ளே சேருகிற, உயிர் முதலா—ஆத்மா முதலாக, முற்றும் ஆய— எல்லாக்காரியங்களையு முண்டாக்குகைக்காக என்று கொள்க. ஆய் - எச்சத் திரிபு. பிறவியைப் பொருள்கொண்டது "பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி" என்ற உபநிஷத்தின் சாயையாலே என்பர்.

கடலாழி நீர்தோற்றி அதனுள்ளே கண்வளரும்= ஆழ்ந்த நீரையுடைய கடலை முந்துற முன்னம் உண்டாக்கி மேல் ஸ்ருஷ்டி முதலானவற்றுக்காக அங்கே கண்வளர்ந்தருளாநின்ற. அடல் ஆழியம்மானை= (1.) "நமமேல் வினைகடிவான் - எப்போதுங் கைகழலாநேமியான்" என்கிறபடியே ஆச்ரித விரோதிகளைத் தொலைப்பதற்காகத் திருவாழியுங் கையுமாகவே கண்வளர்ந்தருளுகிறான் போலும். கண்டக்கால்=அப்படிப்பட்ட எம்பெருமானைக் காண்பது அரிது, பாக்யவசத்தாலே காணப்பெற்றால். இதுசொல்லி= நாடாத மலர்நாடி நாடோறும் நாரணன்றன், வாடாத மலரடிக்கீழ்வைக்கவே வகுக்கின்று" என்று கீழ்ப்பாட்டிற் சொன்ன விஷயத்தைச் சொல்லி என்றபடி. அன்றியே, இப்பாட்டின் முதலடியிற் சொன்ன விஷயத்தை என்னவுமாம். 'இவ்வாதமா ஸம்ஸாரத்தில் நின்றும் விடுபட்டு நீங்கி வீடுபெறுவதற்கன்றோ தேவரீருடைய ஸ்ருஷ்டி' என்பதாகச் சொல்லி.

ஆழிபடைந்தநெஞ்சே! வினையோம் ஒன்றாமளவும் விடல்=சூழ்ந்து வருகிற பேதை நெஞ்சே!, நாம் பிறந்ததற்குப் பயன் அவரைக்கிட்டி அடிமைசெய்கையாயிருக்க, அது செய்யாதே இங்ஙனம் பிரிந்து பரிதபிக்கும்படியான பாபத்தைப் பண்ணிக்கிடக்கிற நாம்

1 பெரிய திருவந்தாதி—87.

அவரோடே சேருகிறவரையில் அவரை நீ விடவேண்டா—அவரை விடாதே அநுவர்த்தித்து என்னைச் சேர்க்கப்பாராய் என்றபடி. விடல்—எதிர்மறை வினைமுற்று. என்னை விடாதே என்றும் பொருள் கொள்ளலாம்; ஆகையாலே உயிர்தரித்திருக்கப் பார்க்கிறபடி. ... . (10)

அளவியன்றவேழுலகத்தவர் பெருமான்கண்ணனை *
வளவயல்சூழ்வண்குருகூர்ச் சடகோபன்வாய்ந்துரைத்த *
அளவியன்றவந்தாதி ஆயிரத்துள்ளிப்பத்தின் *
வளவுரையால்பெறலாகும் வானோங்குபெருவளமே. * 11

அளவு இயன்ற	—	எல்லையைக்கடந்த
ஏழ் உலகத்தவர் பெருமான்	{	ஏழுலகங்களிலுமுள்ள சேதனர்களுக்கும் தலைவனான
கண்ணனை	—	எம்பெருமானைக்குறித்து,
வளம் வயல் சூழ்	{	வளப்பமுள்ள கழனிகள் சூழ்ந்த
வண் குருகூர்	{	அழகிய திருநகரிக்குத் தலைவராகிய
சடகோபன்	—	ஆழ்வார்
வாய்ந்து உரைத்த	—	அன்பூண்டு அருளிச்செய்த

அளவு இயன்ற	{	கட்டளைப்பட்ட [ஸகல லக்ஷண ஸம்பந்நமான]
அந்தாதி	—	அந்தாதித்தொடையான
ஆயிரத்துள்	—	ஆயிரத்துக்குள்ளே
இப்பத்தின்	—	இந்தப் பதிகத்தினுடைய
வளம் உரையால்	—	வளமாகிய சொல்லளவினாலே
வான் ஓங்கு பெரு வளம்	{	பரமபதத்தில் சிறந்த செல்வமாகிய கைங்கரிய ஸம்பத்து
பெறல் ஆகும்	—	அடையலாகும்.

* * * —இத் திருவாய்மொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டும் பாசுரம் இது. இத் திருவாய்மொழியில் சொல் மாத்திரத்தைக் கற்றாலும் திருநாட்டைப் பெறுதற்குப் போதும் என்கிறார்.

எல்லையைக் கடந்திருக்கின்ற ஏழுவகைப்பட்ட உலகங்களிலுமுள்ள சேதநவர்க்கத்திற்கு ஸ்வாமியாய் அடியவர்க்கு எளியனான கண்ணபிரானைக் குறித்து *நல்லார் நவில் குருகூர் நகரான் மாறன் சடகோபன் மிகவும் அன்புபூண்டு அருளிச்செய்ததும் கட்டளைப்பட்டதுமான இவ்வந்தாதி யாயிரத்துள்ளும் இப்பத்துப் பாசுரங்களிலுள்ள இனிய சொற்களைச் சொன்ன மாத்திரத்திலும் திருநாட்டில் உத்துங்கமான கைங்கரிய ஸாம்ராஜ்யம் பெறப்பட்டதாகு மென்றாராயிற்று.

கீழ்ப் பத்துப் பாசுரங்களிலும் ஆழ்வார் தாமான தன்மையை யிழந்து வாசாமகோசரமாகக் கதறி நின்றபடியைக் கண்ட பரமபுருஷன் ‘இவ்வளவான நிலைமையிலும் நாம் மறைந்துகிடந்தோமாகில் இனி ஆழ்வாரை இந்நிலவுலகத்தவர் இழக்கவேநேரும்’ என்று திருவுள்ளம்பற்றிப் பதறி யெழுந்தருளி ஸேவை ஸாதிக்க, மகிழ்ச்சியோடே தலைக்கட்டப்படுகின்றதென்பது சொல்நயத்தில் விளங்கும். ஆழ்வார் தம்மொரு வாக்கு வந்து முகங்காட்டினவளவையே கொண்டு ‘ஏழுலகத்தவர் பெருமான்’ என்றார். எம்பெருமான் இப்போது முகங்காட்டா தொழியில் ‘எம்பெருமான் லோகநாதனல்லன்’ என்று சொல்லி முடிக்க வேண்டியதாகும்போலும். கண்ணனை என்றதும் ஸாபிப்ராயம்: இங்கே நம் பிள்ளை யீடு:—“இவ்வளவிலே வந்து முகங்காட்டிற்றிலனென்கிற குறை தீர வந்து முகங்காட்டுகையாலே ஆச்ரித ஸுலபனானான். *பத்துடையடியவரில் க்ருஷ்ண

வதாரத்திலே அநுபவிக்கப் பாரித்து, அது கிடையாமையாலே தூது விட்டாராகை யாலே இங்கு முகங்காட்டினன் க்ருஷ்ணனென்னவுமாம். இத்தால், அவனுடைய மேன்மையும் ஸௌலப்யமும் நிலைநின்றது இவர்க்கு முகங்காட்டின பின்பாயிற்றென்றபடி."

ஸம்ஸாரத்திலே சுருங்கியிருத்தலாகிற நிலைகழிந்து பரமபதத்திலேபோய் ஸ்வ ஸ்வரூபத்தைப்பெற்று விரிதலாகிற பேறு இப்பதிகத்திற்கு உரைக்கப்பட்டதாயிற்று.

நான்காந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி முதற்பத்து

ஐந்தாந் திருவாய்மொழி—வளவேழுலகு.

அவதாரிகை. ஆழ்வார் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு குணத்தை வெளியிட்டுக்கொண்டு வருகின்றாரன்றே. முதல் திருவாய் மொழியில் பரத்துவத்தைப் பேசினார். இரண்டாந் திருவாய்மொழியில் பஜநீயத்வத்தை யருளிச்செய்தார். மூன்றாந் திருவாய்மொழியில் ஸௌலப்யத்தை வெளியிட்டார். கீழ்த் திருவாய்மொழியில் அபராதஸஹத்வத்தை ஆவிஷ்கரித்தார். இத் திருவாய்மொழியில் சீலகுணத்தை விளக்கியருளுகிறார்.

எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களெல்லாவற்றினுள்ளும் சீல குண மென்பது மிகச் சிறக்கும். பராத்பரனான தான் நம்போல்வாருடைய அற்பத்தன்மையைச் சிறிதும் கணிசியாது தன்னைத் தாழவிட்டுக்கொண்டு நம்மோடு புரையறக் கலந்து பழகுந்தன்மையே சீலமெனப்படும். இது ஸௌசீல்யமென்றும் வழங்கப்பெறும். "மஹதோ மந்தைஸ்ஸஹ நீரந்த்ரேண ஸம்ச்லேஷ: ஸௌசீல்யம்" * என வடமொழியாளர் இக் குணத்திற்கு லக்ஷணங் கூறுவர். மஹானாயிருப்பவன் மந்தர்களோடு நெருங்கிப் பழகுவதே சீலம் என்றவாறு.

குணம் என்னும் சொல் பொதுப்பெயராகி ஸகல குணங்களையுஞ்சொல்லக்கடவ தேயாயினும் ஸௌசீல்ய மென்னும் குண விசேஷத்திற்கு இது சிறப்புப் பெயராகவும் வழங்குவதுண்டு. ஸ்ரீராமாயணத்தில் வால்மீகி மஹர்ஷி நாரதமா முனிவரை நோக்கிச் சில கேள்விகள் கேட்பதாகக் கூறியிட்டது [முதல் ஸர்க்கத்தில்] * கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கஸ் ச வீர்யவாந்? * என்னும் ச்லோகத்திலுள்ள **குணவாந்** என்பது ஸௌசீல்ய குணத்தைப்பற்றின தென்றே ஆசார்யர்கள் வ்யாக்கியானஞ் செய்தருளினர். ஆளவந்தாரும் தமது ஸ்தோத்ர ரத்நத்தில் "வசீ வதாந்யோ குணவாந் ருஜு: சுசி: ம்ருதுர் தயாலுர் மதுரஸ் ஸ்திரஸ் ஸம: - க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபாவதஸ் ஸமஸ்த கல்யாணகுணாம்ருதோததி." என்னும் ச்லோகத்தில் **குணவாந்** என்ற பதத்தினாலேயே எம்பெருமானுடைய சீலகுணத்தை யருளிச்செய்தாரென்பதும் குறிக்கொள்ளத்தக்கது, இதனாலும் சீலகுணமே மிகச்சிறந்ததென்பது பெறப்படும்.

அவதாரங்களில், குஹப்பெருமாள், வானர முதலிகள், விபீஷணாழ்வான் போல்வார் திறத்திலே விளங்கக் காட்டப்பட்ட குணமாயிற்று. (1.) "ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்றவற்கின்னருள் சுரந்து, மாழைமான் மடநோக்கியுன் தோழி உம்பி எம்பி யென்றொழிந்திலை, உகந்து தோழன் நீயெனக்கிங் கொழியென்ற சொற்கள் வந்து அடியேன் மனத்திருந்திட" என்பது முதலான பாசுரங்களில் இந்த சீலகுணத்தையே வாய்வெருவி நைந்து கரைந்து உருகுவர்கள்.

எம்பெருமானது ஒப்புயர்வற்ற பெருமையையும் தமது மிக்க தாழ்மையையும் அநுஸந்தித்த ஆழ்வார் "அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யானார்" என்றாற்போலே, இப்படிப்பட்ட பரம புருஷனை நாயினும் கடைகெட்ட நாம் தீண்டிக் கெடுத்தல் தகுமோவென்று சிந்தித்து அவனைவிட்டு நீங்க நெகிழப்புக, எம்பெருமான் தனது சீலகுணத்தைக் காட்டி ஆழ்வாரைத் தன்னோடு சேர்த்துக்கொள்ளுகின்றான் என்பது இத் திருவாய்மொழியின் பரமயம்.

கீழ்த் திருவாய்மொழியில் ஆழ்வார் வார்த்தாமாத்ரமான வருத்தத்தைக் காட்டி மிக்க ஹாஹாகாரத்தோடிருந்தவர், பேரருள் பொலிய நின்று அணுக வந்த எம்பெருமானைக் கண்டவாறே பதறிக்கலவி செய்ய பாரிப்பதாயிருக்க, நைச்யாநுஸந்தானத்தாலே நெகிழ நினைப்பதற்கு அடி என்? எனின்; அளவுகடந்த ஆசையோடே அவனைத் தழுவி முழுசிப் பரிமாற அபேக்ஷித்தாரென்பது உண்மையே. அவனும் தன்னுடைய பெருமையெல்லாம் பொலியவந்து நின்றவாறே அப்பெருமையிற் கண்வைத்து ஆச்சரியப்பட்ட ஆழ்வார் உடனே தமது சிறுமையையும் நினைக்கப்பெற்று 'ஐயோ! நாமெங்கே, அவனெங்கே; * பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பு முடையோமான நாம் * அமலன் விமலன் நிமலன் நின்மலனென்னும்படியான அவனோடே கலந்தால் அப்பரஞ்சுடர்ச்சோதிக்கு ஒரு அவத்யம் விளையுமே" என்று திருவுள்ளத்திலே தோன்றி இறாய்க்கப் புக்கார் என்றவிதற்கு நாம் என்ன காரணம் கூறவல்லோம். எம்பெருமானுடைய பெருமை படுத்துகிறபாடு இது என்னலாமத்தனை.

ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்நத்தில் * விராஜமாநோஜ்ஜ்வல பீதவாஸஸம் * என்ற முப்பத்திரண்டாம் ச்லோகம் முதலாக * அசிந்த்ய திவ்யாத்புத * இத்யாதியான நாற்பத்தைந்தாம் ச்லோகமளவும் எம்பெருமானை அற்புதமாக வருணித்து, அதற்குமேல் * பவந்தமேவாநுசரந் நிரந்தரம் ப்ரசாந்த நிச்சேஷமநோரதாந்தர:, கதாஹமைகாந்திக நித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித:. என்ற ச்லோகத்தினால் - 'கீழ் வருணிக்கப்பட்டபடி ஸ்வரூப ரூப குண விபூதிகளால் பரிபூர்ணரும் நித்யவிபூதியிலே குறையின்றி யெழுந்தருளி யிருப்பவருமான உன்னை நித்யாநுபவம் பண்ணி உன் திருவுள்ளத்திலிருந்த வருத்தத்தைத் தீர்த்து மகிழ்விப்பது என்றைக்கோ? இடைவிடாமல் உன்னையே சூழ்ந்துகொண்டும் நீ தவிர மற்ற விஷயங்களில் நசைகளை அடியோடு ஒழித்து விட்டும் சாச்வதமான கைங்கரியத்தைச் செய்துகொண்டும் என்றைக்கு நான் உன்னை உகப்பிக்கப்போகிறேனோ?' என்று தம்முடைய பாரிப்பை அளவின்றிக் காட்டியிட்டும், அதற்கடுத்ததான * திக சுசிமவிநீதம் நிர்த்தயம் மாமலஜ்ஜம் பரமபுருஷ! யோஹம் யோகி வர்யாக்ரகண்யை:, விதிசிவஸநகாத்யை: த்யாதுமத்யந்ததூரம் தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த:. * என்ற ச்லோகத்தினால் "அவன் எங்கே! அத

(1) பெரிய திருமொழி 5—8—1

மாதமனான நான் எங்கே!; தேவர்களுக்கே அர்ஹமான புரோடாசத்தை நாய் விரும்புவதுபோலன்றோ மஹான்களுக்கே அர்ஹமான அவனுடைய கைங்கரியத்தை நாயினேன் விரும்புவது, மதிகெட்டுப்போய் இப்படியும் விரும்புவேனோ? ஸம்ஸார நாற்றமே அறியாத நித்யஸூரிகள் ஆசைப்படவேண்டுமதான நித்ய கைங்கரியத்தை நித்ய ஸம்ஸாரியான நான் ஆசைப்படுவதானது ராஜபோக்யமான அன்னத்திலே விஷத்தைக் கலப்பதுபோலாகுமன்றோ? ஹாஹா!; என்ன ஸாஹஸமான காரியஞ்செய்யத் துணிந்தேன்!—என்று தம்மைத்தாமே வெறுத்துக்கொண்டார். இத்தகையதான ஆளவந்தாருடைய அநுஸந்தானம் இத் திருவாய்மொழியி லாழ்வாருடைய அநுஸந்தானத்தை அடியொற்றினபடியா மென்றுணர்க.

கூரத்தாழ்வானும் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் இப்படியே முந்துற பகவதநுபவத்தில் தமக்குண்டான பெருநசையைப் பல ச்லோகங்களாலே வெளியிட்டருளி, உடனே * அமஹ: ப்ரஸஹ்ய விநிக்ருஹ்ய * இத்யாதி ச்லோகத்தாலே தம்முடைய அயோக்யதையை நோக்கி அகலப் பார்த்தார்.

அவரது திருக்குமாரரான பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர ச லவ வண்ணமே "காபபஜந்மஜராமருதிக்லேசகர்மஷடூர்மிக:, ஸவேவ தேவவஷட்கருதம த்வாம் ச்ரியோர்ஹ்பகாமயே. * என்றருளிச்செய்தார்.

ஆக இந்த ஸ்ரீஸூக்திகளெல்லாவற்றாலும்— 'பகவத்கைங்கரியத்தை ஆசைப்படவும் வேணும், உடனே அயோக்யதையை அநுஸந்தித்து அநுதபிக்கவும் வேணும், என்கிற சாஸ்த்ரார்த்தமே சிக்ஷிக்கப்பட்டதாகும். எம்பெருமானுடைய ஒவ்வொரு குணமும் சேதநர்களிடத்துள்ள துர்க்குணங்களினாலேயே விளக்கமுறத்தக்கது. நாமும் எம்பெருமானைப்போலவே குணசாலிகளாக இருந்திட்டோமாகில் அவனது ஒரு திருக்குணமும் விளங்குதற்கு ஹேதுவேயில்லையாகும். நாம் துக்கிகளா யிருந்தால்தான் அவனுடைய தயாகுணம் ஒளி பெறும். நாம் தோஷபூயிஷ்டர்களா யிருந்தால்தான் அவனுடைய க்ஷமாவாத்ஸல்யாதிகள் ஒளிபெறும். இந்த ரீதியிலே அவனுடைய சில குணம் ஒளிபெறுதற்கு நம்முடைய நைச்சியம் இன்றியமையாததாம். அப்படிப்பட்ட நைச்சியத்தின் அநுஸந்தான முகத்தினாலே இத் திருவாய்மொழியில் எம்பெருமானது சில குணத்தை அநுபவிப்பதும் வெளியிடுவதுமாய்ச் செல்லுகின்றதெனக. (*)

வளவேழுலகின்முதலாய வானோரிறையையருவினையேன் *
களவேழ்வெண்ணெய்தொடுவுண்ட கள்வாவென்பன்பின்னையும் *
தளவேழ்முறுவல்பின்னைக்காய் வல்லானுயிர்தலைவனாய் *
இளவேறேழுந்தழுவிய எந்தாயென்பன்நினைந்துநைந்தே. * (1)

வளம்	— வளப்பம்பொருந்திய	நினைத்து	— மனத்தினால் தியானித்து
ஏழ் உலகின்	— ஏழுலகத்திற்கும்	நைந்து	— உடம்பும் கட்டுக்குலைந்து
முதல் ஆய	— முதலாகிய	களவு ஏழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா என்பன்	'களவுத்தொழில் விளங்கும்படி வெண்ணெயை ஒளித்துண்ட கள்வனே!' என்று சொல்லி யழைக்கின்றேன்;
வானோர் இறையை	நித்யஸூரி நாதனான எம்பெருமானை,	பின்னையும்	— அதற்குமேலும்
அரு வினையேன்	போக்கவொண்ணாத பாபத்தை யுடையேனாகிய நான்		

தளவு எழ் முறுவல்	முல்லை யரும்புபோலத் தோன்றுகிற புன்னகையையுடைய	இளை	— இளமை தங்கிய
பின்னைக்கு ஆய்	— நப்பின்னைப் பிராட்டிக்காக	ஏறு எழும்	— எருதுகளேழையும்
		தழுவிய	— அணைத்து முடித்த
வல் ஆனாயா தலைவன் ஆய்	சிறந்த இடையர் தலைவனாய் வந்து	எந்தாய்	— என் ஸ்வாமியே!
		என்பன்	— என்றும் சொல்லுவேன்.

* * *—* அயர்வறுமமரர்களென்றிருக்கும் நித்யஸூரிகளாலே அநுபவிக்கத்தக்கவனான எம்பெருமானை அந்தோ! நான் மனமொழி மெய்களினால் தூஷித்துவிட்டேனே யென்கிறார். இவர் தாம் தூஷித்தமை என்னென்னில், சில சேஷ்டிதங்களைச் சொல்லி இவற்றைச்செய்த எம்பெருமானே! என்று அழைப்பதெல்லாம் வாயினால் தூஷித்தபடியாம்; அவனையும் அவனது சேஷ்டிதங்களையும் சிந்தித்ததானது நெஞ்சினால் தூஷித்தபடியாம், இங்ஙனம் நெஞ்சினால் நினைந்ததனாலும் வாய்விட்டுச் சொன்னதனாலும் உடல் சிதிலமாகப் பெற்றமை சரீரத்தினால் தூஷித்தபடியாம்.

எம்பெருமானையே சிந்தியுங்கோளென்றும், அவனையே வாயார வாழ்த்துங்கோளென்றும், அவனையே சரீரத்தாலும் அணுகப்பாருங்கோளென்றும் கீழும் மேலும் பன்முறையும் பிறர்க்கு உபதேசிக்கின்ற இவ்வாழ்வார் இப்போது இங்ஙனம் அருளிச்செய்வது ஸ்வாத்மநா தம்முடைய நைச்சியத்தை வெளியிட்டுக்கொள்ளுகிற ஒரு முறையாகும். இந்த நடையை அடியொற்றித் திருவரங்கத்தமுதனாரும் இராமாநுச நூற்றந்தாதியில் "போற்றருஞ் சீலத்தி ராமாநுச! நின்புகழ்தெரிந்து சாற்றுவனேல் அது தாழ்வு, அதுதீரில் உன் சீர்தனக்கு ஓர் ஏற்றம்" என்றருளிச்செய்திருப்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

"வளவேழுலகின முதலாயவானோரிறை" என்பதனால் சாமானியரால் எடுத்துரைக்கத்தகாத பெருமையுடைமை எம்பெருமானுக்கு நிரூபிக்கப்பட்டதாயிற்று. **அருவினையேன்** என்றதனால் பகவத்விஷயத்தில் சிறிதும் வாய்வைக்கத் தகுதியின்மையாகிற தமது தாழ்வு தெரிவிக்கப்பட்டது.

வளம் என்பது ஏழுலகிலாவது, ஏழுலகின் முதல்வனாகிய எம்பெருமானிடத்திலாவது வானோரிடத்திலாவது விசேஷணமாக அந்வயிக்கலாம். "வளவேழுலகின் முதலாய" என்பதனால் லீலாவிபூதி நாயகத்வமும் "வானோரிறை" என்பதனால் நித்யவிபூதி நாயகத்வமும் சொல்லிற்றாகி உபயவிபூதிநாதனென்று பெருமையின் எல்லை சொல்லிற்றாயிற்று.

அருவினையேன் = சாஸ்த்ரஜ்ஞர்கள் ஆத்மஸ்வரூபத்தை ஞானத்தையிட்டும் ஆனந்தத்தையிட்டும் நிரூபிப்பார்கள்; ஆழ்வார் அங்ஙனன்றியே பாபத்தையிட்டே ஸ்வாத்மஸ்வரூபத்தை நிரூபிக்கிறார் காணமின். பாபமே வடிவெடுத்தவன் நான் என்கிறார், மிகவும் தர்மசீலனாயிருப்பானொருவன் அறிவுகலங்கி வீட்டிலே நெருப்பையிட்டுப் பிறகு ஸத்வம் தலையெடுத்தவாறே 'அந்தோ! பாவியேன்! அகருத்யம் செய்துவிட்டேனே!' என்று அநுதபிக்குமாபோலே, ஆழ்வாரும் எம்பெருமானை விரும்பினதற்கு அநுதபிக்கிறபடி என்னே! பாரீர்.

நீசராகக்கொண்ட தாம் எம்பெருமானைச் செய்தது என்? என்ன, அதனை மூன்றடிகளால் அருளிச்செய்கிறார். வெண்ணெய் திருடின கள்வனே! என்றும், நப்பின்னைப் பிராட்டிக்காக எருதுகளேழையும் வலியடக்கினவனே! என்றும் தாம் சொல்லி விட்டாராம்; இதற்கே அநுதபிக்கின்றாராயிற்று. மேற்குறித்த இரண்டு வார்த்தைகளும் வஸ்துஸ்திதியைச் சொல்வனவே யானாலும் எம்பெருமானுக்கு ஸந்தோஷ ஹேதுவான விளிகளே யானாலும், அந்த வார்த்தைகளைச்சொல்லி எம்பெருமானை யழைப்பதற்கு உண்மையான பரிவுடையாரன்றோ அர்ஹதையுள்ளவர்கள், யசோதைப் பிராட்டி, நப்பின்னைப்பிராட்டி போல்வார் உள்கனிந்து உருகிச் சொல்லவேண்டிய வார்த்தைகளை அநுவாதஞ் செய்யவும் எனக்குத் தகுதியில்லையே!, அந்தோ! நாயினேன் சொல்லிவிட்டேனே! என்று அநுதபிக்கின்ற முகத்தாலே தம்முடைய பரம நைச்சியத்தை அநுஸந்தித்தாராயிற்று.

தொடுவுண்ட கள்வா! = களவினால் உண்ட கள்வனே! என்றபடி. † "மாயை தொடு படிமை வஞ்சனையாகும்" என்றது காண்க. திருவாய்ப்பாடியில் கண்ண பிரான் அடிக்கடி வெண்ணெய் களவாடி அமுதுசெய்ததமை பிரஸித்தம்.

கள்வா! என்பன் என்றவிடத்து, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் பிள்ளைப் பெருமாளையங்கார் "பண்டேயுன்தொண்டாம் பழவுயிரையென்ன தென்று, கொண்டேனைக் கள்வனென்று கூறாதே - மண்டலத்தோர், புள்வாய் பிளந்தபுயலே! உனைக் கச்சிக் கள்வாவென்றோதுவதென்கண்டு?" என்றுரைத்த பாசுரமும் அதன் உருக்கமான பொருளும் உணரத்தக்கது. (இதன் கருத்து.) ஒருவர்க்கு உரிய பொருளைத் தன்னதாகக் கொள்வது கள்ள மெனப்படும். ஆகவே அநாதியாக உனக்கே உரிய தாயக்கிடந்த ஆத்மாவை நான் என்னுடைய தென்று கொண்டிருக்கிறேனாதலால் என்னைக் கள்வனென்று சொல்லத்தகும். உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் நின்னுடையனவே யாதலால் வெண்ணெய் கொள்ளுதல் முதலிய தொழில்களைச் செய்யினும் உன்னைக் கள்வனென்று கூறுதல் தகாது; இவ்வாறிருக்க, இத்தன்மையை ஆய்ந்தறியாமலே என்னையாளே திருவடிக்கொண்ட பெருந் திருடனாகிய என்னைக் கள்வனென்னாமல் ஸர்வஸ்வாமியான உன்னைக் கள்வனென்பது என்ன பேதைமை! என்று சமத்காரந்தோன்றக் கூறியவாறு.

பின்னைக்காய் இளவேறேழுந்தழுவிய வரலாறு:— கும்பனென்னும் இடையர் தலைவனது மகளாயும் நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் **நீளா** என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்துகொள்ளுதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யாவருக்கும் அடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளையுங் கண்ணபிரான் ஏழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ் செய்துகொண்டா னென்பதாம்.

வல்லானயர்தலைவனாய் -- 'வல்' என்கிற அடைமொழி பசுக்களுக்கு மாகலாம் ஆயர்க்குமாகலாம், ஆயர் தலைவனுக்கு விசேஷணமாவதிலே ஸ்வாரஸ்யமுண்டு:— இடையர்களில் கொழுத்த இடையன் என்றபடி: இடைச்சாதியன் என்பதை மற்ற இடையர்களைக் காட்டிலும் அதிகமாகக் காட்டிக்கொள்பவன் என்றவாறு. இங்கே நம் பிள்ளையீடு:—"உடம்பிருக்கத் தலைகுளித்தும் தலையிருக்க வுடம்பு குளித்துமிறே திரி

† பிங்கலந்தை—பண்பிற் செயலிற் பகுதிவகை, 135.

வது; (இடையா) கார்த்திகை புதியதுக்குத் துளித்தார்களாகில் இவன் அதுவுஞ் செய்யாதே இடைத்தனத்திலே ஊன்றி நிற்கும்படியைச் சொல்லுதல், இப்படி யிருக்கி லல்லது பெண் கொடார்களிறே இடையர்.”

என்பன், நினைந்து, நைந்து என்ற மூன்றினாலும், எம்பெருமானை மூன்று காரணங்களினாலும் தாம் கெடுத்தமையைக் கூறினாராவர். என்பன்—எருதேழடர்த்த செயலுக்குத் தோற்று நப்பின்னைப் பிராட்டி சொல்லும் பாசுரத்தைச் சொன்னேனே, இது வாயாலே கெடுத்தமை. நினைந்து—ஒரு வார்த்தை சொல்லும்போது முந்துற நெஞ்சினாலே நினைந்தே சொல்லவேண்டுதலால் நினைத்தலுஞ் செய்தேன், இது மனத்தினாலே கெடுத்தமை. நைந்து=அந்தச் சொல்லைச் சொல்லும்போது மெய்யன்புடையாரதுபோல உடலம் நீராயலைந்து கரைந்துருகுந் தன்மையை அபிநயித்தேன்; இது மெய்யினாலே கெடுத்தமை. .. .. (1)

நினைந்துநைந்துள்கரைந்துருகி இமையோர்பலரும்முனிவரும் *
புனைந்தகண்ணிநீர்சாந்தம் புகையோடேந்திவணங்கினால் *
நினைந்தவெல்லாப்பொருள்கட்கும் வித்தாய்முதலில்சிதையாமே *
மனஞ்செய்ஞானத்துன்பெருமை மாசூணாதோ? மாயோனே! * (2)

மாயோனே!	ஆச்சரியனான எம்பெருமானே!	புகையோடு	— தூபத்தையும்
இமையோர்	—(பிரமன் முதலிய) தேவர்களும்	ஏந்தி	— கையிலேந்திக்கொண்டுவந்து
முனிவரும்	(ஸநகன் முதலிய) ரிஷிகளுமான	வணங்கினால்	— தொழுதால்,
பலரும்	— பலபேர்களும்	நினைத்த எல்லாம் பொருள்கட்கும்	நினைக்கப்பட்ட ஸகல பதார்த்தங்களுக்கும்
நினைந்து	(உனது குணங்களைச்) சிந்தித்து	வித்து ஆய்	— மூலமாகி
நைந்து	(அதனாலே) சரீரமும் கட்டுக்குலைந்து	முதலில் சிதையாமே	ஸ்வரூபவிகாரம் பிறவாதபடி
உள்கரைந்து	— மனம் கரைந்து	மனம் செய் ஞானத்து	மனத்தினால் செய்யப்பட்ட ஸங்கல்பரூபமான ஞானத்தையுடைய
உருகி	— நெகிழ்ந்து		
புனைந்த கண்ணி	தொடுக்கப்பட்ட மாலைகளையும்	உன	— உன்னுடைய
நீர்	— திருமஞ்சனத்தீர்த்தத்தையும்	பெருமை	— பெருமையானது
சாந்தம்	— சாந்துப்படியையும்	மாசு உணாதோ	— அழுக்கடையாதோ?

* * * —கீழ்ப்பாட்டைக் காட்டிலும் இப்பாட்டு பரம விலக்ஷணமானது. கீழ்த் திருவாய்மொழிகளில் தாம் சொன்ன சொற்களுக்கு அநுதாபம் காட்டினார் கீழ்ப்பாசுரத்திலே, கீழ்ப்பாசுரத்திற் கூறியதற்கும் அநுதாபம் காட்டுகிறார் இப்பாட்டில். எம்பெருமானைக் கெடுத்துவிட்டேனென்று சொல்வதற்கும் நான் அதிகாரியல்லேனே, என் அதிகாரத்திற்குப்படாத வார்த்தையை நான் சொல்லிவிட்டேனோ வென்று தடுமாறுகிறார். அதாவது என்னே? எனின், 'பகவத்விஷயத்தில் அதிகரிப்பதற்கு நான் அர்ஹனல்லேன்' என்பது தானே கீழ்ப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. இங்ஙனே சொல்லவேண்டுமானால் என்கிற நியாயத்தினாலே பகவத்விஷயத்தில் அதிகரிக்க ப்ரஸக்தி தமக்குண்டென்பது

ஒருவாறு விளங்கிவிடுகின்றது. அப்படி ஆக்ஷேபத:பரஸக்தமாகிற அதிகாரமும், தமக்கு அஸஹயம் போலும்: நான் வாய் மூடிக்கொண்டிருக்கவேணுமேயனழி வாய் திறந்து 'அநர்ஹன்' என்று சொல்லுவதோடு 'அர்ஹன' எனறு சொல்லுவதோடு ஒரு வாசியில்லை யென்று திருவுள்ளம் பறறுகிறார். வேதத்தை அதிகரிக்கத்தகாத யோநியிலே பிறந்தவொருவன "எனககு வேதம் தெரியாது" எனறு உள்ளதையே சொல்வதுங்கூட அவதயமாம, ஏன? வேதம் தெரிந்துகொளவதறகுத் தனக்கு பரஸக்தியுண்டுபோலவும ஆனல் அதைத் தான தெரிந்துகொளள முயலவில்லைபோலவும் அந்த வார்த்தையினல் தொனிககக்கூடு மாதலால்.

பட்டர் ஸ்ரீரஙகராஜஸதவத்திலே ஸ்ரீரங்கநாதனைத் துதிபபதாகத தொடஙகி பகவத் குணஙகளின எல்லையினமையையும தமது ஜஞான சகதிகளின புனமையையும நோக்கி * ஸ்துமஹே வயம கிமிதி தம ந சக்நும: * எனறு அவனைத துதிகக எனனுலாகாது எனறு சொனனர்; உடனே இங்ஙனஞ் சொல்வதறகும தமககு அதிகாரமில்லை யென்பதை * யதி மே ஸஹஸ்ரவதநாதிவைபவம நிஜமாபபயேத ஸ கில ரஙக சந்த்ரமா:, அத சேஷவத் மம ச ததவதேவ வா ஸ்துதிசக்த் யபாவவிபவேபி பாகிதா * என்ற அடுத்த ச்லோகத்திலை அருளிசசெயதார்; அதுவும இஙகு உணரததக்கது.

கீழ்ப்பாசுரததிற் கூறிய விஷயத்திறகும அநுதாபரூபமாக இப்பாசுரம அமைந்திருக்கின்ற தெனனும விஷயம இபபாட்டில் எநத ஸ்ரீஸூகதியினலே தெரிகின்றது? என்னில்; இப்பாசுரத்தின் தாறபரியததிலிருந்து தொனிககினற தாறபரியம இது அதனை விவரிக்கினறேன;—விலக்ஷணர்களான பிரமன முதலிய தேவர்கள நியமஙகளோடு உன்னை ஆசரயித்ததாலுங்கூட, அப்படிப்பட்ட அவர்களின ஆசரயணமும உனது சிறந்த மேன்மைககுக குறையாகுமனறே எனபது இபபாட்டில் ஸ்பஷ்டமாகச சொல்லப்படுகிற அர்த்தம. கீழ்ப்பாட்டில தாம பண்ணின நைசயாநுஸந்தானத்தைப பணணுவதறகு அந்த இமையோர தாம் அதிகாரிகள என்பது இதன் தாறபரியமாக முடிந்தது. அப்படி உயர்ந்தோர பணணவேணடிய நைசசியாநுஸநதானததைப பணணுவதறகும நான அதிகாரியலலேன எனபது அதன பரமதாறபரியமாகுமெனறுணர்க.

ஆழ்வார் இங்ஙனம அருளிச்செயவதிலிருந்து பல சஙகைகள உதிககும; எஙஙனேயெனனில்; பிரமன சிவனிந்திரன முதலான தேவர்களுங்கூட எமபெருமானைத் தொழுவதற்கு யோகயதையுடையாரலலர் எனறு இங்ஙனஞ் சொலலுகினற ஆழ்வார் தாமே பலவிடஙகளில், அத் தேவர்களின தொழுகையை எமபெருமானுககுச சிறபபாக அருளிசசெய்கிறாரே; அனறியும, 'அத்தேவர்கள தாம எமபெருமானைத தொழுவதறகு உரியார்' எனறும அருளிசசெயகிறாரே, அனறியும், ஒருபடியாலும எமபெருமானைத தொழுவதறகு யோகயதையறறவராக இபபோது தமமைச சொல்லிககொணடவிவர் மேலே பலவிடஙகளில அவனையே தொழுவதுமாய அவனையே தொழக் காதலிபபதுமாய பாசுரஙகளருளிசெயகிறாரே; இவையெல்லாம ஒனறோடொனறு முரணபட்டிருககவில்லையா? எவவணணம பொருநதும? எனறு சிலர் சஙகிககககூடும. இவை பரஸ்பர விருததஙகளான விஷயஙகளல்ல, எமபெருமானது ஒப்புயர்வற்ற மேன்மையை விளககுமபோது பேசுகிற பாசுரஙகளும, அவனது சீலகுணததில் கால தாழ்ந்து உருகி உளதழைநது பேசுகிற பாசுரஙகளும ஒன்றோடொன்று முரண்படுமவை

யல்ல; "எனதாவி தந்தொழிந்தேன்" என்று முந்துற ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுவதும், உடனே "எனதாவி யார் யானார் தந்த நீ கொண்டாக்கினையே" என்று அந்த ஆத்ம ஸமர்ப்பணத்தையும் மறுப்பதும், மறுபடியும் "தாளதாமரைகளையெனக்கே தலைத்தலைச் சிறப்பத்தந்த பேருதவிக் கைம்மாறாத், தோள்களை யாரத்தழுவி யென்னுயிரை அறவிலைசெய்தனன் சோதி!" என்பதும் ஆகிய இவையெல்லாம் தனித்தனி சாஸ்த்ரார்த்தங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ந்யாயமே இங்கு கொள்ளத்தக்கதாம்.

நினைந்து நைந்து உள்கரைந்து உருகி = இச் செயல்கள் எம்பெருமானை வணங்குகின்ற இமையோர்களுடையவை. அவர்கள் எம்பெருமானை வணங்குதற்கு உடலாகச் சூட்டு நன்மாலைகளையும் நீர் சுடர் தூபங்களையும் சேகரிக்கும்போது நினைப்பதும் நைவதும் உள்கரைவதும் உருகுவதுமாயிருக்கிறபடியைச் சொல்லுகிறது 'இவ்வுபகரணங்களை ஏந்திக்கொண்டு நாம் பகவத் ஸந்நிதியிலே சென்றால்; பகவான் நம்மைக் குளிரக் கடாக்ஷிப்பானன்றோ?' என்று நினைப்பர்களாம்: பிறகு அந்தக் கடாக்ஷதாரைகளை மாநஸாநுபவமாக அநுபவித்து அவயவங்களில் சில விகாரம் பெறுவர்களாம், அதன்பிறகு நெஞ்சும் கட்டுக்குலைந்து மங்குவர்களாம். இப்படியெல்லாம் ஆகிறவர்கள் ஆரென்னில்;

இமையோர் பலரும் முனிவரும் —பிரமன் முதலிய தேவர்களும் ஸநகஸநந்தநாதி மஹர்ஷிகளுமாம். அத்தேவர்கள் தாம் தங்களையே பரதெய்வமாக அபிமானித்துக் கொண்டு அஹங்காரிகளாயிருப்பதாகச் சொல்லும் புடைகளும் பலவுண்டாதலால் அவற்றோடு விரோதம் சங்கிக்க வொண்ணாதபடி நம்பிள்ளை அருளிச்செய்கிறார்— "இவர்கள், ரஜஸ்தமஸ்ஸுக்களாலே அபிபூதரானபோது பண்ணும் துர்மாநம் கனத்திருக்குமாபோலே யாயிற்று ஸத்வம் தலையெடுத்தபோது பகவத்குணாநுபவம் பண்ணிச் சிதிலராம்படியும்" என்று.

தேவர்கள் முக்குணங்களும் கலசப்பெற்றவர்களாதலால் ரஜஸ்தமோகுணங்கள் மிக்கிருக்கும்போது அஹங்காரம் பாராட்டுவர்கள்; ஸத்வகுணம் தலையெடுத்தபோது 'ஆழ்வார்களும் இவர்கட்குக் கீழ்ப்படிதான்' என்னும்படியாகவே அகாதமாக அவகாஹிப்பர்கள் என்றவாறு. ஆகவே, அவர்கள் ஸத்வகுணம் தலையெடுத்திருக்கப்பெற்ற நிலைமை இங்குச் சொல்லப்படுகின்றதெனக்கொள்க. இங்ஙனம் ஸத்வகுணமடியான ப்ரேமமுடையவர்களாதலால் ஆதரத்தோடு தொடுத்த மாலைகளையும் அர்க்கிய பாத்ய ஆசமநீய தீர்த்தங்களையும் சாத்துப்படி தூபதீபங்களையும் ஏந்திக்கொண்டுவந்து வணங்குகின்றனராம்.

"வணங்கினால் உன் பெருமை மாசூணாதே" என்று அந்வயம். இப்படிப்பட்ட ஸாமாந்யர்கள் வணங்கும்படியாயோ உன் பெருமை யிருப்பது? ஏறக்குறைய உன்னோடு ஒத்திருப்பார் வணங்குவதன்றோ உனக்குத் தகுதி. 'சிங்கத்தைச் சில எறும்புகள் வணங்கின' என்றால் அது எப்படி பரிஹாஸமாகுமோ அப்படியே இவர்கள் உன்னை வணங்கினார்களென்பதும் பரிஹாஸமாய்த் தலைக்கட்டுமதன்றோ என்கை. இதனை மெய்ப்பித்தற்பொருட்டு எம்பெருமானுடைய அஸாதாரணமான வொரு பெருமையை ஒன்றரையடிகளால் அருளிச்செய்கிறார்—**நினைந்த** வென்று தொடங்கி. புருஷார்த்தோபயோகியான கரணகளேபரங்களை ஸம்ஹார ஸமயத்திலே யிழந்து இறகொடிந்த

பறவைபோலே யிருக்கு மிருப்பிலே எம்பெருமானது திருவுள்ளத்தில் ஐயோ' என்று ஓர் இரக்கநினைவு உண்டாகுமன்றோ; அப்படிப்பட்ட நினைவுக்கு இலக்கான எல்லாப் பொருள் கட்கும் என்றபடி.

வித்தாய் முதலில் சிதையாமே—உலகத்தில் ஒவ்வொருகாரியப்பொருளுக்கும் உபாதாநகாரணம், ஸஹகாரிகாரணம், நிமித்தகாரணம் என மூன்று காரணங்கள் இன்றியமையாதவை. அப்படியே ஜகத்துக்கும் மூன்று காரணங்களும் வேண்டும். அம்மூவகைக் காரணங்களும் எம்பெருமானே யென்பது வேதாந்திகளின் கொள்கை. இங்கு **வித்து** என்பதனால் உபாதாந காரணத்வமே முக்கியமாய் விவக்ஷிதம். உலகத்தில் உபாதாந காரணத்தின்படி எங்ஙனே யிராநின்றதென்றால், காரியப் பொருள் உண்டாய்விட்ட பின்பு அந்த உபாதான காரணப்பொருள் முதல் சிதைந்து விட்டதாகவே காணப்படுகிறது! வஸ்த்ரத்திற்குப் பஞ்சு உபாதாந காரணம்; வஸ்த்ரமாகிற காரியப்பொருள் தேறிவிட்டபின்பு பஞ்சாகிற உபாதாந காரணப்பொருள் முதல் சிதையாதே காணக்கூடியதாக இல்லையன்றோ, அப்படியே ஜகத்துக்கு உபாதாந காரணபூதனான பகவானும் ஜகத்ஸ்ருஷ்டி தேறினபின்பு முதல் சிதைந்தானாக வேண்டுமே என்ன, அந்த லௌகிக நியாயம் இங்குக்கொள்ளத்தக்கதன்று; அத்புத சக்தியுக்தனான பகவான் **முதலில் சிதையாமே வித்தாகினான்** என்னப்பட்டது.

மனஞ்செய் ஞானத்து உன்பெருமை— திருவுள்ளத்தினாலே செய்யப்பட்ட ஸங்கல்பரூப ஜ்ஞானத்தையுடையனான உன்னுடைய பெருமை என்றபடி. ஆக, இப்படி விலக்ஷணமான பெருமை படைத்தவுனக்குக் காரியபூதர்கள் செய்கிற வழிபாடுகள் என்ன ஏற்றம்? ஏற்றமில்லையென்பது மாத்திரமன்று; தாழ்வுமாகும் என்றதாயிற்று. (2)

மாயோனிகளாய்நடைகற்ற வானோர்பலரும் முனிவரும் *
நீயோனிகளைப்படையென்று நிறைநான்முகனைப்படைத்தவன் *
சேயோனெல்லாவறிவுக்கும் திசைகளெல்லாந்திருவடியால்
தாயோன் * எல்லாவெவ்வுயிர்க்குந்தாயோன் தானோருருவனே. * (3)

மா யோனிகள் ஆய்	பெருமையுள்ள பிறப்பை யுடையவர்களாய்க்கொண்டு	எல்லா அறிவுக்கும் சேயோன்	எல்லா ஞானத்துக்கும் எட்டாதவன்
நடை	ஸ்ருஷ்டி முதலான வியாபாரங்களை	திசைகள் எல்லாம்-	ஸகல லோகங்களையும்
கற்ற	— அறிந்திருக்கிற	திரு அடியால் —	திருவடியினால்
வானோர்	— தேவர்களும்	தாயோன் —	அளந்தவன்
முனிவரும்	— ரிஷிகளும்	எல்லா எவ்வுயிர்க்கும்	எவ்வகைப்பட்ட ஸகலமான பிராணிகளுக்கும்
பலரும்	— மற்றும் பலருமாகிய	தாயோன் —	தாய்ப்போன்றவன்;
யோனிகளை	காரணபூதர்களான பிராணிகளை	தான்	இப்படிப்பட்ட எம்பெருமான்
நீ படை என்று —	நீ படைக்கக்கடவாயென்று		
நிறை நான்முகனை படைத்தவன்	(ஞான சக்திகள்) நிறைந்த சதுர்முகனை ஸ்ருஷ்டித்தவன்	ஓர் உருவனே	(ஸௌசீல்யமாகிற) ஒரு படியை யுடையவனாயிருக்கின்றானே!

* * *—கீழ் இரண்டு பாட்டாலும் எல்லைகடந்த நைச்சியத்தை அநுஸந்தித்து அகலப் பார்த்த ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! நீர் இங்ஙனம் நம்முடைய மேன்மையைப் பார்த்து நெகிழ நினைத்தல் தகுமோ? நம்முடைய மேன்மையை மாத்திரமோ நீர் பார்ப்பது? நாம் எல்லாரோடும் கலந்தும் தாழ நின்றும் பொருந்தும்படியான சீலகுணத்தையும் பார்க்கவேண்டாவோ?' என்று தனது சீலகுணத்தைக் காட்டும் முகமாக உலகளந்தவரலாற்றை நினைப்பூட்ட, அதனை அநுஸந்தித்து அகலவும் மாட்டாமல் அணுகவும்மாட்டாமல் நடுவே நின்று பேசிப் போதுபோக்குகிறபடியாய்ச் செல்லுகின்றது இப்பாசுரம்.

முந்துற மேன்மைக்குணத்தை விரிவாக அருளிச்செய்து பின்னர் சீலகுணத்தைப் பேசி, 'இப்படியும் ஒரு மஹாநுபாவனிருப்பதே!' என்று ஈடுபடுகிறாராயிற்று.

எம்பெருமான் எப்படிப்பட்டவன்? **நிறை நான்முகனைப் படைத்தவன்.** என்னவென்று சொல்லி நான்முகனைப் படைத்தான்? நீ யோனிகளைப் படையென்று சொல்லி நான்முகனைப் படைத்தான். எந்த யோனிகளைப் படையென்று சொன்னான்? மாயோனிகளாய் நடை கற்ற வானோர் பலரும் முனிவருமான யோனிகளைப் படையென்றான்—அதாவது, ஸப்த ரிஷிகள் தசப்ரஜாபதிகள் ஏகாதச ருத்ரர்கள் த்வாதசாதித்யர்கள் அஷ்டவஸுக்கள் என்றிப்படிச் சொல்லப்பட்டுள்ளவர்களும் விலக்ஷண ஜன்மங்களையுடையவர்களும் தத்தமது அதிகாரங்கட்கு ஏற்ற ஸ்ருஷ்டி முதலியவற்றை நன்கு அறிந்திருப்பவர்களுமான சிறந்த வ்யக்திகளை நீ படை யென்று நியமித்து நான்முகக் கடவுளைப்படைத்தானென்றவாறு.

எல்லாவறிவுக்கும் சேயோன்=பிரமன் முதலானோருடைய அறிவுக்கும் எட்டாதவன் என்றபடி. "தாம் தம்பெருமையறியார்" என்றும் "தனக்குந் தன் தன்மையறிவரியான்" என்றுஞ் சொல்லுகிறபடியே தனது பெருமை தன்னுணர்வுக்கே விஷயமாகாதது என்னும்போது, மற்றையோருடைய அறிவுக்கு விஷயமாகாதது என்பது சொல்லவேணுமோ? **சேயோன்**—தூரத்திலிருப்பவன் என்பது பொருள். இப்படி பேரறிவாளருடைய அறிவுக்கும் எட்டாதவனாயிருந்து வைத்து, தானே தன்னைக் கொண்டுவந்து காட்டத் திருவுள்ளம்பற்றுமாகில் தடையின்றிக் காட்டவல்லவன் என்பதைத் **திசைகளெல்லாந் திருவடியால்தாயோன்** என்றதனால் பெறுவிக்கின்றார். பூமிப்பரப்பை யடங்கலும் திருவடிகளாலே தாவியளந்துகொண்டவன். பிராட்டிமார் தொடும்போதும் பூத தொடுமாபோலே கூசித் தொடவேண்டும்படியான மெல்லிய திருவடிகளைக் கொண்டு கல்லுங் கரடுமான உலகங்களையெல்லாந் தாவியளப்பதே! என்று ஈடுபாடும் இதில் உள்ளது.

இங்ஙனே எல்லார் தலையிலும் திருவடிகளைக்கொண்டுவந்து வைப்பதற்குக் காரணம் கூறுவார்போல் **எல்லா வெவ்வுயிர்க்குந்தாயோன்** என்கிறார்.

தான் ஒருருவனே !=எம்பெருமானுடைய எல்லையற்ற மேன்மையையும் அதற்கு எதிர்த்தட்டான நீர்மையையும் பேசி, "இப்படியும் ஒரு பகவான் இருக்கிறபடி என்னே!" என்று வியந்து தலைக்கட்டுகிறார். ஒருருவனாயிருக்கையாவது மேன்மைபோலே நீர்மையும் அளவிறந்திருக்கையாம். ... ... (3)

தானேருருவே தனிவித்தாய்த் தன்னில்மூவர்முதலாய *
வானோர்பலரும்முனிவரும் மற்றும்மற்றும்முற்றுமாய் *
தானோர்பெருநீர்தன்னுள்ளேதோற்றி அதனுள்கண்வளரும் *
வானோர்பெருமான்மாமாயன் வைகுந்தனெம்பெருமானே * ... (4)

தான்	பிரம ருத்ராதிகளொருவருமின்றி ஒருவனேயாகி நின்ற தான்
ஓர் உருவே	ஓருருவமுடையனாய்க் கொண்டே
தனி	நிமித்தகாரணம் வேறு அல்லாமையால் தனியனான
வித்து ஆய்	உபாதான காரணமாய்க் கொண்டு
தன்னில்	இப்படி மூவகைக் காரணமான தன் ஸங்கல்பரூப ஜ்ஞானத்திலே
மூவர் முதலாய வானோர்	பிரமன் சிவன் இந்திரனாகிய மூவர் முதலான தேவர்களும்
முனிவரும்	— ரிஷிகளும்
பலரும்	— பல சேதனர்களும்
மற்றும்	— மற்ற மானிடசாதியும்
மற்றும்	மற்ற மிருகம் பறவை முதலியவும் ஸ்தாவரமுமான
முற்றும் ஆய்	— எல்லாமுமாகி
தான்	இப்படி ஸங்கல்பத்தோடு கூடியிருக்கிற தான்
தன்னுள்ளே	— தனக்குள்ளே
ஓர்	— ஒப்பற்ற
பெரு நீர்	— மஹத்தான அர்ணவத்தை
தோற்றி	— தோன்றுவித்து
அதனுள்	— அதிலே
கண்வளரும்	— நித்திரைசெய்கிற
வைகுந்தன்	— பரமபதநாதன்
வானோர் பெருமான்	நித்யஸூரிகளுக்குத் தலைவன்
மா மாயன்	மிகவும் ஆச்சரியகுண சேஷ்டிதங்களையுடையவன்
எம்பெருமான்	— எனக்கு ஸ்வாமி.

* * *—ஆழ்வார் நைச்யானுஸந்தானம் பண்ணி அகல நினைத்தது கீழ்ப்பாட்டில் சிறிது தணியத்தொடங்கிற்று; அதைக்கண்ட சிலர் 'ஆழ்வீர்! இனி நீர் என்ன செய்வதாக நினைக்கிறீர்; அணுகப் பார்க்கிறீரோ? அகலப் பார்க்கிறீரோ?' என்று கேட்க, நான் அகல நினைத்தாலும் ஸ்வாமியான அவன் விடுவதாக இல்லையே; அவன் ஒன்றுலொன்று குறைவில்லாதவனாயிருந்து வைத்தும் ஸ்ருஷ்டி முதலான க்ருஷிகளைப் பண்ணி என்னை ஒரு பொருளாகக் கொண்டபின் நான் அகல்வேனென்றாலும் தன் ஸௌசீல்ய குணத்தினால் என்னை விடமாட்டாதவனாயிராநின்றானே யென்கிறார்.

தானேருருவே தனிவித்தாய்—சாந்தோக்ய உபநிஷத்தில் *ஸதேவஸோம்ய இதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம* என்று ஓதிக்கிடக்கிறவிடத்தில் 'ஸதேவ' என்றும் 'ஏகமேவ' என்றும் 'அத்விதீயம்' என்றும் மூன்று வாக்கியங்களிருப்பதனால் அம்மூன்றாலும் மூவகைக் காரணங்களும் எம்பெருமானே யென்கிறது என்று கொள்ள வேணும், வேறொரு உபாதாந காரண வஸ்து இல்லாமல் தானே உபாதாந காரணபூதனாய், வேறொரு ஸஹகாரி காரணமில்லாமல் அதுவும் தானேயாய், வேறொரு நிமித்தகாரணமில்லாமல் அதுவும் தானேயாயிருப்பவன் என்பதையே அந்த உபநிஷத்வாக்கியம் தெரிவிக்கும். அதுபோலவே இங்கும், **வித்தாய், தனிவித்தாய், ஓர் தனிவித்தாய்** என்றுகொண்டு அம்மூவகைக் காரணமும் தானேயாயிருக்குந்தன்மை சொல்லிற

ருகிறதென்பர். தான் என்பதனால் வேறொரு உபாதாநகாரணமில்லையென்றும், ஓர் என்பதனால் வேறொரு ஸஹகாரிகாரணமில்லையென்றும், தனி என்பதனால் வேறொரு நிமித்தகாரணமில்லையென்றுஞ் சொல்லப்பட்டதெனக.

[**தன்னில் மூவர் முதலாய வானோர்பலருமித்யாதி.**] தன்னோடு சேர்ந்து மூவராக நின்றவர்கள் பிரமனும் சிவனுமாவர், அவர்கள் முதலான தேவர்களையும் ஸநகாதி மஹர்ஷிகளையும் ஸ்தாவரங்களையும் ஜங்கமங்களையும் இன்னமுஞ் சொல்லப்படாத மற்றெல்லாவற்றையு முண்டாக்குகைக்காக—என்பது இரண்டாமடிக்குப் பொருள். **தன்னில்** என்பதற்கு, 'தன்னோடு' என்று பொருள் கொள்ளாமல் 'தன்னுடைய ஸங்கல்பமாகிற ஸ்வரூபத்திலே' என்றும் பொருள்கொள்வர்; இப்பொருளில், **மூவர்** என்றது இந்திரனையுங்கூட்டி மூவரென்றபடி. "மூவர் முதலாய வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றும் தன்னில ஆய" என்று இப்பக்ஷத்தில் அந்வயிக்க வேணும். **ஆய்** என்றது ஆகைக்காக என்றபடி. பிரமன் சிவனிந்திரன் முதலான தேவர்கள் முதலான எல்லாமும் தானேயாகி என்று முரைப்பர். உலகத்தில் கப்புங் கிளையுமான மரம் வித்துக்குள் ஸூக்ஷ்மமாக வுள்ளதே யென்கிற கொள்கைப்படி, கார்யாவஸ்தையில் ஸ்தூலரூபமாய்த் தெரிகிற எல்லாப்பொருள்களும் காரணாவஸ்தையில் ஸூக்ஷ்மரூபமாகவுள்ளனவே யாதலால் இங்ஙனஞ் சொல்லக்குறையில்லை. ஆக முன்னடிகளிரண்டாலும் எம்பெருமானுடைய காரணாவஸ்தை கூறப்பட்டதாயிற்று.

தானோர் பெருநீர் தன்னுள்ளேதோற்றி அதனுட் கண்வளரும்=இப்படி ஸ்ருஷ்டிப்பதிலே ஒருப்பட்ட தான் தனக்குக் கண்வளர்ந்தருளுகைக்குப் போதும்படியான பரப்பையுடைய ஏகார்ணவத்தைத் தன் பக்கல் நின்று முண்டாக்கி அதனுட் கண்வளர்ந்தருளுகிறபடி. இவன்றான் ஆரென்னில், [**வானோர்பெருமான்**] நித்யஸூரிகளுக்குத் தலைவன். [**மாமாயன்**] ஆச்சரியமான குணசேஷ்டிதங்களை யுடையவன். [**வைகுந்தன்**] திருநாட்டைத் தனக்கு நிலயமாகவுடையவன். [**எம்பெருமான்**] இந்தப் பதமே இப்பாட்டிற்கு மருமமாகும்: உடைமை தப்பிப்போகத் தொடங்கினால் உடையவன் ஆறியிருப்பனோ? மக்களைப் பெறுவதற்காக ஏற்கவே நோன்பு நோற்றுப் படாதபாடுகள் பட்டுப் பிள்ளைபெற்ற தாயானவள் அந்த மகன் நடக்கவல்லனான ஸமயத்திலே தேசாந்தரஞ் செல்லவேணுமென்றால் விட்டு ஆறியிருக்கமாட்டாளன்றோ; அப்படியே நெடுநாளாகத் தன்வாசியறியாமற்போன எனக்கு அறிவைத் தந்தருளித் தன்னை உள்ளபடி யறிவித்தவன், தான் தந்த அறிவைக்கொண்டு நான் விலகிப்போகத் தொடங்கினால் அவன் எப்படி ஆறியிருக்கக்கூடும்? என்கிற இவ்வளவு கருத்தை உள்ளடக்கி **எம்பெருமானே** என்றார். .. . . .. (4)

மானேய்நோக்கிமடவாளை மார்வில்கொண்டாய்மாதவா *
கூனேசிதையவுண்டைவில் நிறத்தில்தெறித்தாய்! கோவிந்தா! *
வானார்சோதிமணிவண்ணா! மதுசூதா! நீயருளாய் * உன்
தேனேமலருந்திருப்பாதம் சேருமாறுவினையேனே. * ... **(5)**

மான் ஏய் நோக்கி மடவாளை	மானை நிகர்த்த பார்வையையுடையவளாகிய பெரிய பிராட்டியை;	மார்பில் கொண்டாய்	திருமார்பிலே உடையனாய் (அது காரணமாக)

மாதவா	மாதவனென்ற திருநாமம் பெற்றவனாய்
கூனே சிதைய	(கூனியின்) கூன் ஒன்றே நிமிருமபடி [மற்ற ஒரு அவயவத்திற்கும வாட்ட முண்டாகாதபடி]
உண்டை வில் நிறத்தில்	சுண்டுவில்லை நிமிர்க்கிற ரீதியிலே [சிறிதும சிரமமின்றி]
தெறித்தாய	நிமிர்த்தவனே!
கோவிந்தா	கோவிந்தனே!
வான் ஆர் சோதி	வானுலகம இடமடையும படியான ஒளியை யுடைய
மணி வண்ணா	நீல்மணிபோன்ற நிறமுடையவனே!
மதுசூதா	மது வென்னு மசுரனைக் கொன்றவனே!
நீ	நீ
உன்	உன்னுடைய
தேனே மலரும் திருபாதம்	தேனோடுகூடி மலர்கின்ற திருவடித் தாமரைகளை
வினையேன்	பாபியான நான்
சேரும் ஆறு	கிட்டுமபடியாக
அருளாய்	கிருபைபண்ணவேணும்.

* * *—இப்பாட்டுக்கு இரண்டுவகையாக அவதாரிகை கூறுவர்; முதலிற பண்ணின நைச்சியாநுஸந்தானம தலைமடிந்து எம்பெருமான் விஷயத்திலே சிறிது ஆபிமுகக்கியத்தைக் கீழ பாசுரத்திற்காட்டின ஆழவார் என்னை ஏவி அடிமைகொள்ளவேணுமென்று இப்பாட்டில் பிரார்த்திக்கின்ருரென்பது ஒரு அவதாரிகை.— ஆழவார்க்கு இப போதுண்டான ஆபிமுக்கியம நிலைத்திருக்கவேணுமென்றும, இவரைத் துடிக்கவிட்டே சேர்த்துக்கொள்ளவேணுமென்றுங் கருதிய எம்பெருமான முகங்காட்டாதே மறைய நிற்க, அதுதாளாமல் '**அருளாய்**' என்று பிரார்த்திக்கிருரென்பது மற்றோரவதாரிகை.

மான்பேடையினது நோக்குபோன்ற நோக்கை யுடையளான ஸ்ரீ மஹாலக்ஷ்மியைத் திருமார்பிலே கொண்டு அதனால் மாதவனென்னுந் திருநாமமுடையோனே!, கூனி கூன நிமிர்த்த கோவிந்தனே!, பரமபதம நிரமபுமபடியான தேஜஸ்ஸையும நீல மணிபோன்ற நிறத்தையு முடையவனே!, மதுசூதனே!, உன்னுடைய பரம போக்யமான திருவடிகளை நாயினேன பெறும்படி அருளபுரியவேணு மெனகிருர.

சேதநர்கட்குப புருஷகாரஞ் செயவதையே தொழிலாகவுடைய பெரிய பிராட்டியார் திருமார்பிலே நித்ய ஸந்நிதாநம பண்ணியிருக்கும்போது அருளாமைக்குக் காரணமில்லை! எனபார்போன்று முதலடி யருளிச்செய்தார.

முதலடியிலுள்ள இரண்டு விளிகளில ஏதேனும ஒன்று போருமே; அாதத பேதமின்றியே இரண்டு விளிகள ஏதுக்கு?— என்று சிலர நினைக்ககூடும. அந்த சங்கைக்குப பரிஹாரமாக நமபிளளை அருளிச்செயவது:—"மாமபழத்தோடு ஒரு ஸம்பந்தமின்றிக்கே யிருக்கச்செய்தே அபபேரைத தரிக்குமாபோலேயிறே இவனையொழிய ஸ்ரீமானென்னும பேரைத் தரிக்கிறவர்கள. அங்ஙனன்றிக்கே அவள திருமார்பிலே நித்யவாஸம பண்ணுகையாலே மாதவனென்னுந் திருநாமத்தையுடையவனே!" என்று.

உலகத்தில் மற்றுமபல தெயவங்களும 'ஸ்ரீமாந ஸ்ரீமாந' என்று சொல்லப்படுவதுண்டு, மாமபழத்தோடு சிறிதும ஸமபந்தமில்லாத ஒரு ஜந்துவுக்கு மாமபழவுண்ணியென்று பேர வழங்குவதுபோலவேயாகும அது. எமபெருமானொருவனுக்கே ஸ்ரீமானென்பது ஏற்கும என்று விளக்குதற்கே "மானேய நோக்கி மடவாளை மார்பிற்கொண்டாய்" என்று முந்துற யோகார்த்தவிவரணம பண்ணிப பின்பு **மாதவா** என்றது.

இரண்டாமடியிற் குறித்த வரலாறு:—பலராமனுங் கண்ணபிரானும் வில்விழவுக்கென்று கம்ஸனாலழைக்கப்பட்டு மதுரைக்குச் செல்லுங்கால் ராஜவீதியில் சந்தனக் கிண்ணத்தைக் கையிலேந்திவருகிற மங்கைப்பருவமுடைய ஒரு கூனியைக்கண்டு 'நங்காய்! யாருக்கு நீ இந்தப் பூச்சுக்கொண்டு போகிறாய்?' என்று விலாஸத்தோடு கேட்டருள, அந்தக் கூனி இவ்வாறு காதலுடையவன் போலக் கண்ணன் அருளிச்செய்ததைக் கேட்டு, அவனது திருக்கண்களாலே மனமிழுக்கப்பட்டவளாய் 'அழகனே! நான் நைகவக்கிரை யென்பவளென்றும், கம்ஸனுக்கே சந்தனாதி பூச்சுக்கள் இட்டுத்தந்து செய்யும் வேலையில் வைக்கப்பட்டவளென்றும் நீ அறியாயோ?' என்ன; கண்ணன், -'எங்கள் திருமேனிக்கு ஏற்ற வெகு நேர்த்தியான இந்தப் பூச்சை எங்கட்குக் கொடுக்கவேணும்' என்று சொன்னவுடனே, அவள் 'அப்படியே திருவுள்ளம் பற்றுங்கள்' என்று சொல்லி மிக்க அன்போடு ஸமர்ப்பிக்க, அப்பூச்சைத் திருமேனியிலணிந்து ஸ்ரீக்ருஷ்ணன் இவளிடத்து மிகவும் ப்ரஸந்நனாய், நடுவிரலும் அதன் முன்விரலுங் கொண்ட நுனிக் கையினாலே அவளை மோவாய்க்கட்டையைப் பிடித்துத் தன் திருவடிகளினால் அவள் கால்களை யமுக்கி இழுத்துத் தூக்கிக்கோணல் நிமிர்த்து அவளை மகளிரிற் சிறந்த உருவினளாக்கியருளின னென்பது க்ருஷ்ணாவதாரத்திற் கதை.

ஸ்ரீராமாவதாரத்திலும் *கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்த கதை ஒன்றுண்டு:—இராமன் சிறுவனாயிருந்த காலத்தில், ஒருநாள் கையில் சிறுவில்லும் மண்ணுண்டையுங்கொண்டு விளையாடி வருகையில் ஒருகால், விற்கொண்டு எய்த உண்டை கைகேயியின் வேலைக்காரியான மந்தரையென்னுங் கூனியின் முதுகின் புறத்தே தெறிக்க, அவள் தனது கூனுடைமையை இராமன் இங்ஙனம் பரிஹஸித்தனனென்று தவறாகக் கருதி மனம்வருந்தி, அவன்மேற் சினங்கொண்டு, ராஜபுத்திரனாகையாலே அப்பொழுது ஒன்றுஞ் செய்யமாட்டாமற் சென்று, தனக்கு வாய்க்குந்தருணம் நோக்கிக் கறுக்கொண்டிருந்து, பின்பு தசரதன் இராமபிரானுக்கு முடிசூட்ட நிச்சயித்ததை உணர்ந்தவளவில் கோபதாபமிக்கவளாகி, அதற்கு எப்படியாவது தான் தடைசெய்யவேண்டுமென்று நிச்சயித்து, கைகேயிக்குக் கலகஞ்செய்து அவள் மனத்தை மாற்றி, அவளைக்கொண்டு இராம பட்டாபிஷேகத்தைத் தவிர்த்து அப்பெருமானை வனம் புகுவித்தனள்—என்று சொல்லுவதொரு இதிஹாஸமுண்டு. இதனைக் கம்பரும் தமது இராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்து அரசியற்படலத்தில் "சிறியரென்றிகழ்ந்து நோவுசெய்வன செய்யல் மற்றிந், நெறியிகந்து யானோர் தீமையிழைத்தலா லுணர்ச்சி நீண்டு, குறியதா மேனியாய கூனியாற் குவவுத்தோளாய்!, வெறியனவெய்தி நொய்தின் வெந்துயர்க்கடலின் வீழ்ந்தேன்" என்ற செய்யுளிற் குறிப்பித்துள்ளார். [இச்செய்யுள் இராமபிரான் வாலிவதமான பின்பு ஸுக்ரீவனுக்கு முடிசூட்டி அவனுக்குச் சில ஹிதோபதேசங்கள் செய்யுமிடையிலே உள்ளது. 'எவர் விஷயத்திலும் வலிமை நிலைகளில் எளியவரென்பதுபற்றி அலக்ஷியஞ்செய்து வருத்தந்தருஞ் செயல்களைச் செய்யாதே; நான் இந்தச் சன்மார்க்கத்தின் வரம்பைக்கடந்து ஒரு தீங்கு செய்ததனாலே கூனியினிடம் கஷ்டங்களையடைந்து துன்பக்கடலில் விழுந்தேன்' என்பது மேற்குறித்த செய்யுளின் கருத்து.

"கூனே சிதைய" என்கிற இவ்விடத்திற்கு மேற்குறித்த ஸ்ரீராமக்ருஷ்ண வருத்தாந்தங்களிரண்டையும் வியாக்கியானங்களில் முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

கண்ணபிரானுடைய சரித்திரபரமாகக் கொள்ளும்போது **"உண்டைவில் நிறத்தில்"** என்பதை ஒரு சொல்வடிவமாகக் கொண்டு, சுண்டுவில்லை நிமிர்ப்பதுபோலே இலேசாகக் கூனி கூன நிமிர்த்தபடியைச் சொல்லிற்றுகிறது. [**நிறத்தில்** என்றது - அவ்விதமாக என்றபடி.] "சுண்டுவில்லைத் தெறித்தாப்போலே அநாயாஸேந நிமிர்த்தாய்" என்பது இருபத்திநாலாயிரத்தில் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி.

இனி, ஸ்ரீராமபிரானுடைய சரித்திரபரமாகக் கொள்ளும்பக்ஷத்தில், **கூனே சிதைய**—(மந்தரையின்) கூன் முன்னும் பின்னும் தள்ளுண்ணும்படியாக [நோவு அடையும்படியாக], **உண்டைவில்**—சுண்டுவில்லைக்கொண்டு, **நிறத்தில்**—மருமத்திலே, தெறித்தாய்—எய்தாய் என்று பொருள் காண்க. இங்ஙனே இராமபிரானுடைய சரிதையைக் கூறுவதாகில், **கோவிந்தா!** என்கிற விளி பொருந்தாதே; **காகுத்தா!** என்றன்றோ விளிக்கவேண்டும்— என்று சிலர் சங்கிக்கக்கூடும். இதற்கு இருவகையாக ஸமாதானமுரைத்தனர் பூருவர்கள். கோவிந்தா! என்றது பசுக்களை மேய்ப்பவன் என்னும் பொருளில் இங்கு வந்ததன்று, வடமொழியில் பூமிக்கும் **கோ**வென்று வாசகமுண்டாதலால, பூமிக்கு ரக்ஷகனானவனே! என்கிறது. இஃது இராமபிரானுக்கும் விளியாகலாம் என்பது முதல் ஸமாதானம்.

"அன்றிக்கே, தீம்பு சேருவது க்ருஷ்ணனுக்கே யாகையாலே
* போம்பழியெல்லாம் அமணன் தலையோடே என்றாப்போலே
அவன் தலையிலே ஏறிட்டுச் சொல்லுதல்." (நம்பிள்ளையீடு.)

என்பது இரண்டாவது ஸமாதானம். அதாவது—"கூனேசிதைய வுண்டைவில் நிறத்தில் தெறித்தாய்" என்று இராமபிரானுடைய சரிதையைச் சொல்லிவிட்டு, குணக்கடலாகிய இராமபிரான் இப்படிப்பட்டவொரு தீம்பு செய்ததாகச் சொல்லுவதற்குத் திருவுள்ளமில்லாமல், § "பல்லாயிரவரிவ்வூரிற் பிள்ளைகள் தீமைகள் செய்வார், எல்லாமுன்மேலன்றிப்போகாது" என்கிறபடியே ஊரிலுள்ள தீம்புகளையெல்லாம் தனக்கே கொள்ளப்பிறந்த கண்ணபிரான்மேலே இந்தத் தீம்பையும் ஏறிட்டுவிடலாமென்று ஆழ்வார் திருவுள்ளம்பற்றிப்போலும் **கோவிந்தா!** என்று க்ருஷ்ண ஸம்போதனம் பண்ணிற்று என்றபடி.

மேலே உதாஹரித்த நம்பிள்ளையீட்டில் * **போம்பழியெல்லாம் அமணன் தலையோடே** என்ற ஸ்ரீஸூக்தியில் அடங்கிய வரலாறு வருமாறு:—ஒரு கள்ளன் ஒரு பிராமணனுடைய (அன்றைக்குத்தான் சுவர் வைக்கப்பெற்ற) புழைக்கடையிலே கன்னம் வைக்க, அது ஈரச்சுவராகையாலே இறுத்தியதனால அந்தக்கள்ளன் மாண்டுபோக, அவ்வளவில் அவனது உறவினர் வந்து பிராமணனைப்பழிதரவேணுமென்று நிர்ப்பந்திக்க, இரண்டு திறத்தாரும் நியாயாதிபதி பக்கல் செல்ல, அவ்வரசன் அவிவேகியும் மூர்க்கனுமாகையாலே 'பிராமணா! நீ ஈரச்சுவர் வைக்கவேயன்றோ அவன் மடிந்தான், ஆகையாலே நீ பரிதரவேண்டியதே' என்ன, அவன் 'எனக்கொன்றும் தெரியாது, சுவர்வைத்த கூலியாளைக் கேட்கவேணும்' என்ன, அவனை யழைத்து அரசன் விசாரிக்க, அவனும் 'தண்ணீர் விடுகிறவன் அதிகமாக விட்டிட்டான், நான் என் செய்வேன்?' என்ன; அவனை யழைத்துக் கேட்க, 'குயவன் பெரிய பானையைத் தந்தான், அதனால் நீர் அதிக

§ பெரியாழ்வார் திருமொழி 2—8—5

மாயிற்று, நான் என் செய்வேன்?' என்று அவன் கூற, அரசன் குயவனை யழைத்துக் கேட்க, அவனும் 'என்னால் வந்ததன்று; நான் பானையைச் சிறிதாகவே செய்ய நினைத்தேன்; அது செய்துகொண்டிருக்கும்போது ஒரு தாஸி போக்குவரத்தாயிருந்தாள்; அவளைப் பார்க்கிற பராக்கிலே பானை பருத்துவிட்டது. நானென்ன செய்வேன?' என்ன; பிறகு தாஸியை அழைத்து விசாரிக்க, 'வண்ணான் என் சேலையை விரைவில் கொணர்ந்து தாராமையினாலே போகவரத் திரிந்தேன்' என்று அவள் கூற, வண்ணானை யழைத்துக் கேட்க, அவன் 'துறையில கல்லிலே ஓர் அமணன் [திகம்பரசாமி] உட்கார்ந்திருந்தான்; எவ்வளவு உரப்பியும் அவன் எழுந்து செல்லவில்லை; பிறகு அவனாகவே எழுந்து சென்ற பின்பு சேலையைத் தோய்த்துத் தரவேண்டியதாயிற்று; நான் என் செய்வேன்; அந்த அமணனே தாமதத்திற்குக் காரணம்' என்று கூற, அந்த அமணனைத் தேடிப்பிடித்துக் கொண்டு வந்து 'நீயன்றோ இத்தனையுஞ் செய்தாய்; நீயே பழி தரவேணும்' என்று அரசன் கட்டளையிட, அவ்வமணன் மௌனசாமியாகையாலே ஒன்றும் விடை கூறாதிருக்க, 'உண்மையில் பழி தன்னிடத்திலுள்ளதனால்தான் இவன் வாய்திறந்திலன், இவனே குற்றவாளன்' என்று அரசன் அவன் தலையை அரியக் கட்டளையிட்டான்—என்பது அந்யாயதந்த்ர சரித்ரத்திலுள்ள ஒரு கதை. [அமணன் குற்றஞ் செய்யாதிருக்கவும் அவன் தலையில் ஏறினாற்போலே கண்ணபிரான் தீம்பு செய்யாதிருந்தாலும் பிறருடைய தீம்பும் அவன் தலையில் ஏறுமென்று விநோதமாகக் காட்டினபடி.]

மதுசூதா! = மதுவென்னும் அசுரனை யொழித்தாற்போலே, நைச்யாநுஸந்தானம் பண்ணி அகலுகையாகிற என் விரோதியைப் போக்கினாய் என்ற குறிப்பு.

வினையேன் உன் திருப்பாதம் சேருமாறு அருளாய் = கலத்திலிட்ட சோற்றை விலக்குவாரைப்போலே முதலில் நீ வந்து கிட்டும்போது அகன்றொழியும்படியான பாபத்தைப் பண்ணின நான் திருவடிசேர்ந்து வாழுமாறு அருள்புரியவேணும். (5)

வினையேன்வினை தீர்மருந்தானாய்! விண்ணோர்தலைவா கேசவா! *
மனைசேராயர்குலமுதலே மாமாயனே மாதவா! *
சினையேய்தழையமராமரங்கள் ஏழுமெய்தாய்சிரீதரா *
இனையாயினையபெயரினாய் என்றுநைவனடியேனே. * ... **(6)**

வினையேன்	— பாபியான என்னுடைய	சினை எய் தழைய மரா மரங்கள் ஏழும்	கிளைகளோடு சேர்ந்து தழைகள் பொருந்திய ஆச்சா மரங்களேழையும் (ஸ்ரீராமாவதாரத்தில்)
வினை தீர்	— பாபத்தை ஒழிப்பதற்குரிய	எய்தாய்	(ஓர் அம்பினால்) துளைபடுத்தினவனே!
மருந்து ஆனாய்	— ஔஷதமாயிருப்பவனே!	சிரீதரா	— ஸ்ரீதரனே!
விண்ணோர் தலைவா	நித்யஸூரிநாதனே!	இனையாய்	இப்படிப்பட்ட ஸ்வரூபத்தை யுடையவனே!
கேசவா	— கேசவனே!	இனைய பெயரினாய்	இப்படிப்பட்ட திருநாமங்களையுடையவனே!
மனை சேர் ஆயர் குலம் முதலே	குடிசைகளில் பொருந்திய இடையருடைய குலத்திற்கு முதல்வனானவனே!	என்று	— என்று சொல்லி
மாமாயனே	மிகுந்த ஆச்சரிய குண சேஷ்டிதங்களை யுடையவனே!	அடியேன் நைவன்	— நான் அழியாநின்றேன்.
மாதவா	— மாதவனே!		

* * *—இப் பாசுரமும் கீழ்ப்பாசுரத்தோடு ஒக்கும். கீழ்ப்பாட்டிலுள்ள 'நீயருளாய், உன்தேனமலருந் திருப்பாதஞ் சேருமாறு வினையேனே' என்பதை இப்பாட்டோடும் கூட்டி யுரைத்தருளினார் திருக்குருகைப் பிரான்பிள்ளான். ஆதலால் கீழ்ப்பாட்டின் அவதாரிகையே இதற்குமாகும். நைச்யாநுஸந்தானம்பண்ணி அகன்றது தவிர்ந்து அணுகி அபேக்ஷித்தபோதே எம்பெருமான் முகங்காட்டாமையாலே அவனுடைய குண சேஷ்டிதங்கள் நினைவுக்குவந்து நலிய, திருவுள்ளமுடைந்து பேசுகிறார் என்னவுமாம்.

என்னிடத்துள்ள நீசத்தன்மையைநோக்கி அகன்றுபோக நினைத்த என் வினையை ஸௌசீல்யகுண ப்ரகாசநத்தாலே போக்கி என்னை அபிமுகனாக்கிக்கொண்டவனே! என்ற கருத்துப்பட **வினையேன் வினைதீர்மருந்தானாய்** என்கிறார். நைச்யம் பாவித்து அகலாதே நித்யாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கிற நித்ய முக்தர்களின் திரளிலிருந்து, என்னை சீலகுணத்தாலே அகப்படுத்திக்கொள்ள இங்கு வந்தவனே! என்கிறார் **விண்ணோர்தலைவா!** என்பதனால்.

கேசவா=இத் திருநாமத்திற்கு மூவகைப் பொருள்களுண்டு. *க இதி ப்ரஹ்மணோ நாம ஈசோஹம் ஸர்வ தேஹிநாம், ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவ நாமவாந். * என்று ஹரிவம்சத்திலுள்ள நிருக்தியின்படியே பிரமனுக்கும் சிவனுக்கும் நிர்வாஹகன் என்பது ஒரு பொருள். (க்ருஷ்ணாவதாரத்தில்) குதிரைவடிவு கொண்டு கம்ஸ ப்ரேரணையால் நலியவந்த கேசி யென்னும் அஸுரனை வதஞ்செய்தவன் என்பது மற்றொரு பொருள். சிறந்த மயிர்முடியை யுடையவன் என்பது மற்றொரு பொருள்.

மனைசேராயர்குலமுதலே! மா மாயனே= இடைக்குலத்திலே வந்து பிறந்து, அவர்கள் தங்களுடையதாக அபிமானித்த பொருளையே [வெண்ணெய் முதலியவற்றையே] தாரகமாகக்கொண்டு, அதுதன்னைத் திருடி அமுதுசெய்யவேண்டும்படியாய், அந்தக் களவையும் ஜரிப்பித்துக்கொள்ளமாட்டாதே வாயது கையதாக அகப்பட்டுக் கட்டுண்டு அடியுண்டு நிற்கும் நிலையை விவக்ஷித்து இந்த இரண்டு விளிகள் இடப்பட்டன. '**மனைசேர்**' என்ற அடைமொழி ஆயர் குலத்துக்குமாகலாம், ஆயர்குல முதல்வனுக்குமாகலாம்; முதற் பக்ஷத்தில், மனையோடு மனைசேர்ந்து எண்ணிறந்துள்ள ஆயர் குலத்திலே முதற் கிழங்காக வந்தவனே! என்றபடி. இரண்டாவது பக்ஷத்திலே, விண்ணோர் மனையைவிட்டு ஆயர்மனையிலே வந்து சேர்ந்தவனான ஆயர்குலமுதலே! என்றவாறு.

சினையேய்தழைய மராமரங்களேழுமெய்த வரலாறு:— ஸுக்ரீவன் இராமனால் அபயப்ரதானஞ் செய்யப்பெற்ற பின்பும் மனந் தெளியாமல் வாலியின் பேராற்றலைப் பற்றிப் பலவாறு சொல்லி வாலி மராமரங்களைத் துளைத்ததையும், துந்துபியின் உடலெலும்பை ஒரு யோஜனைதூரந் தூக்கியெறிந்ததையுங் குறித்துப்பாராட்டிக்கூறி, இவ்வாறு பேராற்றலமைந்தவனை வெல்வது கூடுமோ? என்று சொல்ல, அது கேட்ட லக்ஷ்மணன் 'உனக்கு நம்பிக்கை இல்லையாயின் இப்போது என்ன செய்யவேண்டுவது?' என்ன; ஸுக்ரீவன், 'இராமபிரான் நீறுபூத்த நெருப்புப்போலத் தோன்றினும் வாலியின் வல்லமையை நினைக்கும்போது சங்கையுண்டாகின்றது; ஏழு மராமரங்களைத் துளைத்து இந்தத் துந்துபியின் எலும்பையும் இருநூறு விற்கடைதூரம் தூக்கியெறிந்தால் எனக்கு நம்புதலுண்டாகும்' என்று சொல்ல, ஸுக்ரீவனுக்கு நம்புத

லுண்டாகுமாறு அவனது வார்த்தைக்கு இயைந்து இராமபிரான் துந்துபியின் உடலெலும்புக் குவியலைத் தனது காற்கட்டை விரலினால் இலேசாய்த் தூக்கிப் பத்து யோஜனை தூரத்துக்கு அப்பால் எறிய, அதனைக்கண்ட ஸுக்ரீவன் 'முன்பு உலரா திருக்கையில் வாலி இதனைத் தூக்கியெறிந்தான்; இப்போது உலர்ந்துவிட்ட இதனைத் தூக்கியெறிதல் ஒரு சிறப்பன்று' என்றுகூற, பின்பு இராமபிரான் ஒரு பாணத்தை ஏழு மரங்களின்மேல் ஏவ, அது அம்மரங்களைத் துளைத்ததோடு ஏழுலகங்களையும் துளைத்துச் சென்று மீண்டு அம்பறாத்தூணியை அடைந்தது என்பதாம்.

இங்கு, மராமரங்களுக்குச் **சினையேய்ந்தழைய** என்று அடைமொழி கொடுத்தது இராமபிரானுடைய வல்லமையின் கனத்தைக்காட்டும். கிளைகளோடு கிளைகள் நெருங்கித் தழைத்து நினைத்தபடி இலக்குக் குறிக்க வொண்ணாதபடி நின்ற மராமரங்களையும் அவலீலையாகத் துளைபடுத்தினன் னென்க. 'நம்மை ரக்ஷிப்பனோ மாட்டானோ' என்று அடியார்க்குச் சங்கை பிறந்தால், அந்த சங்கையைப்போக்கி அரியன செய்தும் அடியாரைக் காத்தருள்பவன் என்ற மஹாகுணம் இந்தச் சரிதையினால் விளங்கும்.

சிரீதரா! என்றது அந்த மராமரங்களேழையும் எய்து நின்றபோது உண்டான வீரஸ்ரீயின் ஸமச்லேஷத்தைச் சொன்னபடி.

இனையாய்=இன்னமும் இப்படிப்பட்ட பலவகையான சேஷ்டிதங்களை யுடையவனே! என்றபடி. **இனைய பெயரினாய்**=அந்த சேஷ்டிதங்களைத் தெரிவிக்கின்ற திருநாமங்கள் இங்ஙனே மற்றும் பலவும் வாய்ந்தவனே என்றபடி. **[என்று நைவன் அடியேனே.]** அருளாய், இரங்காய் என்றுபோலே சில வினைமுற்றுக்களைக் கூட்டிப் பேசவும் மாட்டாதே திருநாமங்களைச் சொன்னமாத்திரத்திலேயே நைந்துபோகின்றேனடியேன்; இப்படிப்பட்ட என்னை இன்னமும் சிக்ஷியாதே கடுக உன் தேனமலருந் திருப்பாதஞ் சேருமாறு அருளாய். .. .. (6)

அடியேன்சிறியஞானத்தன் அறிதலார்க்குமரியானை *
கடிசேர்தண்ணந்துழாய்க் கண்ணிபுனைந்தான்தன்னைக் கண்ணனை *
செடியாராக்கையடியாரைச் சேர்தல்தீர்க்குந்திருமாலை *
அடியேன்காண்பானலற்றுவன் இதனில்மிக்கோரயர்வுண்டே? * **(7)**

சிறிய ஞானத்தன்	{	அற்ப ஞானத்தையுடையவனாகிய
அடியேன்	—	நான்
ஆர்க்கும் அறிதல் அரியானை	{	எப்படிப்பட்டஞானிகளுக்கும் அறியக்கூடாதவனாய்
கடி சேர் தண் அம் துழாய் கண்ணி புனைந்தான் தன்னை	{	பரிமளம் பொருந்திய குளிர்ந்த அழகிய திருத்துழாய் மாலையைத் தரித்தவனும்
கண்ணனை	{	க்ருஷ்ணனென்ற திருநாமமுடையவனும்
அடியாரை	—	அடியார்களுக்கு

செடி ஆர் ஆக்கை சேர்தல் தீர்க்கும்	{	ஸம்ஸாரமாகிற பெருங்காடு நிறைந்த சரீரஸம்பந்தத்தைத் தவிர்த்துத் தருகின்றவனுமான
திருமாலை	—	லக்ஷ்மீநாதனை
அடியேன்	—	நான்
காண்பான்	—	காணும் பொருட்டு
அலற்றுவன்	—	கூவுகின்றேனே!
இதனில் மிக்கு	—	இதனிலும் மேற்பட்டு
ஓர் அயர்வு உண்டே	{	ஒரு அவிவேகமுண்டோ?

* * * —கீழ்ப்பாட்டில் '**நைவன்**' என்ற ஆழ்வாரை நோக்கின எம்பெருமான் 'இனி நாம் இவர்க்கு முகங்காட்டாதிருந்தால் இவர் முடிந்துவிடக்கூடும்' என்றெண்ணி இவர்க்கு முகங் காட்டுவதாகத் திருவுள்ளம்பற்ற, அஃதறிந்த ஆழ்வார் பின்னையும் அவனது பெருமையையும் தமது சிறுமையையும் சிந்தித்துப் பின்வாங்குதலைத் தெரிவிக்கும் இந்தப் பாசுரம்.

நானே மிகவும் அற்பமான ஞானம் படைத்தவன்; எம்பெருமானே எப்படிப்பட்ட ஸர்வஜ்ஞர்களுடைய அறிவுக்கும் எட்டாதவன்; போக்யதையைப் பார்த்தாலோ * தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையான்; அறிதலாக்கு மரியானாயிருந்து வைத்து இடையர்க்கும் இடைச்சிகட்கும் தன்னை எளியனாக்கி வைத்தவன்; தன்னையே உபாயமாகப்பற்றி "**ஜராமரணமோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே**" என்கிறபடியே சரீரஸம்பந்தத்தை அறுத்துக்கொள்ள நினைக்கும் கைவல்ய காமுகர்களுக்கு அதனைத் தவிர்த்துக்கொடுக்கும் **ஸ்ரீமான்**. அப்படிப்பட்ட விலக்ஷணனை அவனைக் காணவேணுமென்று நீசிற கடை கெட்ட நாயேன் அலற்றுகின்றேனே; இதைக்காட்டிலும் மூடத்தனம் வேறுண்டோ? என்கிறார்.

இப்பாட்டில் ஆழ்வார் எம்பெருமானுக்கு அடிமைசெய்யத் தாம் தகுதியற்றவர் என்பதை வெளியிட்டுக்கொண்டே தொடக்கத்தில் **அடியேன்** என்கிறாரே, இது பொருந்துமோ? என்றொரு சங்கை. இதற்கு சமாதானம்:— அடியேனென்கிற வார்த்தை மநஸ்கரித்துச் சொன்னதன்று; தமக்கு அடிமையுள்ளதாக வொரு அநாதி வாஸனையிருக்கையாலே அது சொல்லுவிக்கிற வார்த்தை; உலகத்திலும் ஆசார்ய சிஷ்யர்களுக்கும் ஒரு விவாத முண்டாகிச் சிஷ்யன் ஆசார்யனைக்கடிந்து சொல்லச் செய்தேயும் அவன் வாக்கில் அடியேனென்கிற சொல் பரவசமாக அடிக்கடி வருவதைப் பார்க்கலாம்; 'தேவரீர் இப்படிச்செய்தால் அடியேனுக்கு பரமாதமான கோபம்வரும்' என்கிறான், 'கோபம்வரும்' என்கிற வார்த்தைக்கும் 'அடியேன்' என்கிற வார்த்தைக்கும் எவ்வளவு தூரமுண்டு? சிறிதேனும் பொருத்தமுண்டோ? இல்லையாயிருக்கவும் சொற்பழக்கத்தினாலன்றோ அடியேன் என்று அந்த விவாத ஸமயங்களிலும் வாக்கில் வந்துவிடுகிறது, அது போலவே இங்கும் ஆழ்வார் அடிமைக்கு இராயக்கச்செய்தேயும் வாஸநா பலத்தாலே அடியேனென்று மெய்மறந்து சொல்லிவிட்டார் என்பது ஒரு ஸமாதானம். அன்றியே, இப்போது அடியேனென்றது அடிமைத் தொழில் செய்யத் தமக்கு அர்ஹதையுண்டென்று இசைந்து சொல்லுகிற வார்த்தையன்று; ஜீவாத்மாவுக்கு ஞானம் ஆனந்தம் என்கிற குணங்கள் இருப்பதுபோல சேஷத்வமென்கிற ஒரு குணமுமிருப்பதாக ஸ்வரூபத்தை ஆழ்வார் அறிந்தவராதலால் **அறம்** என்று சொல்லுகிற ஸ்தானத்திலே அடியேனென்கிறாரத்தனை என்பது மற்றொரு ஸமாதானம்.

செடியாராக்கையடியாரைச் சேர்தல் தீர்க்குந் திருமாலை என்கிற மூன்றாமடி மிகவும் ஆழ்ந்த கருத்தை யுட்கொண்டது, [செடியாராக்கை சேர்தல் தீர்க்கும்] பிறப்பதும் இறப்பதுமாகிற ஸம்ஸார பந்தத்திற்கு மூலமான சரீர ஸம்பந்தத்தைப்போக்கித் தருமவன் என்று பதப்பொருள். இங்ஙனே, சரீர ஸம்பந்தம் மறுபடியும் என்றைக்கு முண்டாகாதபடி பகவான் அருள்புரிவது கைவல்ய மோக்ஷத்தை விரும்புகின்றவர்களுக்கு

*முண்டு, பரமபதத்தை விரும்புகின்றவர்களுக்குமுண்டு. வாசி என்னவென்னில்; சரீர ஸம்பந்தத்தைப் போக்கிக்கொடுப்பதுடன் தன்னடிக்கீழ்ச் சேர்த்துக்கொள்வதாகிற சிறந்த புருஷார்த்தத்தையுங் கொடுப்பதுண்டு மோக்ஷார்த்திகளுக்கு. கைவல்யார்த்திகளுக்கோ வென்னில் அது கிடையாது. இவ்விடத்தில் * செடியாராக்கை யடியாரைச் சேர்தல் தீர்க்கு மென்றது மேற்சொன்ன இருவகைப்பட்ட அதிகாரிகட்கும் ஒக்கு மாயினும் இங்குக் கைவல்யார்த்திகளையே விவக்ஷித்துச் சொல்வதாகக் கொள்வதே பிரகரணத்திற்கு நன்கு பொருந்தும். ஆறாயிரப்படியில்— "இவனைக் காணவேணு மென்று ஆசைப்படாதே இவன் பக்கலிலே கைவல்யாதி ப்ரயோஜநங்களைக் கொண்டு அகன்றுபோமவர்கள் என்ன பாக்யம் பண்ணினரோ? நானும் அங்ஙனேயாகப் பெற்றிலேனே! என்று நோகிறார்" என்று பிள்ளான் பணித்தது பரமபோக்யம். கைவல்ய மோக்ஷத்தையும் அதனை விரும்புகின்ற அதிகாரிகளையும் ஆழ்வார் பல விடங்களிலும் நிந்திப்பவரே யானாலும் இங்கு ஒருவாறு புகழ்ந்து கூறுகின்றாரென்பது உட்கருத்து. எம்பெருமானைக் கிட்டி அவனுக்கு ஒரு அவத்யத்தை விளைக்கப்புகாமல் தங்கள்ளவிலே தாங்கள் நிற்கிறார்களன்றோ அந்தக் கைவல்யார்த்திகள், இது மிகவும் பாங்கு என்பது இங்கு ஆழ்வார் திருவுள்ளம். இங்கு பரம போக்யமான நம்பிள்ளையீடு காண்மின்:—*

> **"ஜராமரணமோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே** *என்று அவனையே உபாயமாகப் பற்றி, தூறுமண்டின சரீரத்தை யறுத்துக்கொள்ளுமடியாருண்டு— கேவலர், அவர்களுக்கு அத்தைத் தவிர்த்துக்கொடுக்கும் ஸ்ரீமானை. அவர்கள் பின்னை அடியாரோவென்னில்; 'அடியாராவார் அவர்களே' என்றிருக்கிறார். † என்றியவென்னில், சேஷிக்கு அதிசயத்தை விளைக்குமவர்களிறே சேஷபூதராகிறார். என்னைப் போலே கிட்டி அவனுக்கு அவத்யத்தை விளைக்கப்பாராதே ஸம்ஸார ஸம்பந்தத்தை அறுத்துக்கொண்டு கடக்கநிற்கிறவர்களிறே."*

அடிமைத்தொழிலை விரும்பாதவர்களான கைவல்யார்த்திகளை இங்கு அடியாரென்னலாமோ? என்கிற சங்கைக்கும் பரிஹாரம் மேலே காட்டிய நம்பிள்ளை ஸ்ரீஸூக்தியிலுள்ளது காண்க. உண்மையாக அவர்கள் தாம் அடியவர் என்பது இப்போது ஆழ்வார் திருவுள்ளம். தம்மைப்போலே அவர்கள் எம்பெருமானைக் கிட்டி அவத்யத்தை விளைக்கப்புகாமையாலென்க.

மூன்றாமடியில் கைவல்யார்த்திகளைப் புகழ்ந்து கூறுதல் சொல் தொடையில் சிறிது மில்லையாயினும், சொற்செறிவில் அது நன்கு தொனிக்கும். இது **பரிகராலங்கார** *மரியாதை.*

கைவல்யார்த்திகளே சிறந்தவர்களென்று அவர்களைக் கொண்டாடவேண்டும்படியாக உமக்கு இப்போது என்ன இழிவு வந்துவிட்டதென்ன; **அடியேன் காண்பானலற்றுவன்** *என்கிறார். எம்பெருமானை ஸேவிக்கத் தகாத நீசனாகிய நான் அவனை ஸேவிக்கவேணும் ஸேவிக்கவேணுமென்று அலற்றுகின்றேனல்லவா; இது அவனுக்கு அவத்யமன்றோ? இப்படி அந்தக் கைவல்யார்த்திகள் அலற்றுகின்றார்களில்லை யன்றோ என்றபடி.*

---

† — என்றியவென்னில் = ஏனென்னில் என்றபடி.

இதனின்மிக்கு ஓரயர்வுண்டே? = கீழுள்ள காலங்களில் * மாறிமாறிப பல பிறப்பும் பிறந்து நித்ய ஸம்ஸாரியாய்த் தொலைந்தேனே, அந்த நிலைமையிலிருந்த அவிவேகமே நன்றுபோலும்; அப்போது நான் எம்பெருமானைக்கிட்டி அவனுக்கு நிறக்கேடு உண்டாக்கப் பார்த்திலேனே. * மயர்வறமதிநலமருளப்பெற்ற இப்போதன்றோ அவனுக்கு நான் அவத்யம் விளைப்பது; இதிற்காட்டில் அவிவேகமுண்டோ? என்கிருர். நைச்யாநுஸந்தானத்திற்கு இப்பாசுரந்தான் எல்லை நிலம். இதற்கு மேற்பட நைச்சியம் அநுஸந்திக்க வழியில்லையெனக. ... . (7)

**உண்டாயுலகேழ்முன்னமே உமிழ்ந்துமாயையால்புக்கு *
உண்டாய்வெண்ணெய்சிறுமனிசர் உவலையாக்கைநிலையெய்தி *
மண்தான்சோர்ந்ததுண்டேலும் மனிசர்க்காகும்பீர் * சிறிதும்
அண்டாவண்ணம்மண்கரைய நெய்யூண்மருந்தோ ! மாயோனே! * (8)**

மாயோனே	ஆச்சரிய குணசேஷ்டிதங்களை யுடையவனே!	உண்டாய்	— அமுதுசெய்தாய்;
உலகு ஏழ்	— ஏழுலகங்களையும்	மண் தான் சோர்ந்தது உண்டேனும்	(திருவயிற்றிலே) மண்கட்டிகள் மிச்சப்பட்டிருந்தாலும்
முன்னமே உண்டாய்	முற்காலத்திலே திருவயிற்றிலே வைத்தாய்;	மனிசர்க்கு	— மனிதர்கட்கு
உமிழ்ந்து	— அவற்றை வெளிப்படுத்தி	ஆகும்	— உண்டாகக்கூடியதான
சிறு மனிசர்	— அற்ப மனிதருடைய	பீர்	— வெளுப்புமாந்தம்
உவலை	— அருவருப்பான	சிறிதும்	— அற்பமும்
யாக்கை நிலை	— உடம்பினது நிலைமையை	அண்டாவண்ணம்	— சேராதிருக்கும்படி
எய்தி	— அடைந்து	மண் கரைய	அந்த மண்கட்டிகள் கரைவதற்கு
மாயையால் புக்கு	மாயையினால் இவ்வுலகில் வந்து சேர்ந்து	நெய் ஊண் மருந்தோ	நெய் அமுதுசெய்தது மருந்தோ? (அல்ல.)
வெண்ணெய்	— வெண்ணெயை		

* * *— இப பாட்டின் ஸந்நிவேசத்தை ஊன்றி நோக்குமிடத்து எம்பெருமானுக்கும் ஆழ்வார்க்கும் விநோதமான வொரு ஸம்வாதம் நிகழ்ந்தமை நன்கு புலப்படும்

கீழ்ப்பாட்டில் எல்லைகடந்த நைச்சியாநுஸந்தானம் பண்ணிப பின்வாங்கின ஆழ்வாரை எம்பெருமான் நல்லதோருபாயத்தினால் தன்னோடு பொருந்தவிட்டுக் கொள்ளவேணுமென்று பார்த்து அவரோடே பேசத் தொடங்கினான், 'வாரீர் ஆழ்வீர்! என்னுடைய செயல்களெல்லாம் உமக்கு நன்ருய்த் தெரியுமன்றோ?' என்ருன். அவற்றை எம்பெருமான் வாயகொண்டே கேட்கவேணு மென்னும் விருப்பமுடைய ஆழ்வார் 'உன்னுடைய செயல் எனக்கு ஒன்றும் தெரியாது' என்ருர்.

எம்பெருமான்:—இப்படி நீர் சொல்வது மெய்தானோ? இப்படியும் பொய் சொல்லலாமா? இப்போது கேட்கிறேன் சொல்லும், நான் ஒரு காலத்திலே உலகங்களெல்லாவற்றையு மெடுத்து வயிற்றினுள்ளே அடங்கவைத்துப் பிறகு வெளிப்படுத்தினேனென்பதும் திருவாய்ப்பாடியிலேபுக்கு வெண்ணெய் விழுங்கினேனென்பதும் உமது காதில் விழுந்ததில்லையா? உண்மையாகச் சொல்லும்.

ஆழ்வார்:—ஆம்; கேட்டிருப்பதுண்டு; "களிர்மதிசடையனும் நான்முகக் கடவுளும், தளிரொளி யிமையவர்தலைவனுமுதலா, யாவகையுலகமும் யாவரு மகப்பட, நில நீர் தீ கால் சுடரிருவிசும்பும், மலர் சுடர் பிறவுஞ் சிறிதுடன் மயங்க, ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதுமகப்படக் கரந்து, ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமாமாயனையல்லது, ஒரு மா தெய்வம் மற்றுடையமோ யாமே" என்றும், "மத்துறுகடை வெண்ணெய் களவினில் உரவிடையாப்புண்டு" என்றும் அடியேன் சொல்லியுமிருக்கிறேன்.

எம்பெருமான்:— ஆழ்வீர்! இவ்விரண்டு காரியமும் நான் எதற்காகச் செய்தேன்? தெரியுமா? உலகங்களை உண்டுமிழ்ந்து வெண்ணெயுண்டது எதற்காக? ஆராய்ந்து சொல்லும் பார்ப்போம்.

ஆழ்வார்:—உன்னுடைய காரியங்களுக்கெல்லாம் காரண மறிவாரார்? ஏதோ உன் திருவுள்ளத்தில் தோன்றின காரியங்களையெல்லாம் நீ செய்து கொண்டிருக்கிறாய்; எனக்கொன்றும் காரணந் தெரியாது.

எம்பெருமான்:—உமக்குத் தெரியாதாகில் நான் சொல்லக் கேட்கலாமன்றோ? சொல்லுகிறேன், கேளும். பிரளயங் கொள்ளாதபடி உலகங்களை வயிற்றிலடக்கி நோக்கினேன்; பிரளயம் நீங்கினவாறே அவ்வுலகங்களை வெளிப்படுத்தினேன்; உள்ளடக்கியிருந்த வுலகங்களில், வெளிப்படாமல் உள்ளேயே மிச்சமாய் நின்றுவிட்டது ஏதேனு மிருந்தாலு மிருக்கக்கூடும், அந்த மண்ணும் கரைந்து வெளிவந்துவிட்டு மென்றே திருவாய்ப்பாடியில் வெண்ணெயும் நெய்யு முண்டேன் காணும்.

ஆழ்வார்:—இது யாரை மயக்குகிற வார்த்தை? உலகமுண்டுமிழ்ந்தது எப்போதோ போயிற்று, வெண்ணெயுண்டது மற்றெப்போதோ ஆயிற்று? அதற்கு மிதற்கும் என்ன ஸம்பந்தம்?' திண்ணைக்குத் தேள்கொட்டத் தீர்த்த மிடாவுக்கு நெறி கட்டிற்று' என்னுமாபோலே நல்ல கார்ய காரண பாவஞ்சொல்லுகிறாய் பிரானே!.

எம்பெருமான்:— 'நான் வெண்ணெயுண்டதற்கு என்ன காரணமிருக்கும், நீர் சொல்லும்' என்றால் எனக்குத் தெரியாதென்கிறீர், உள்ள காரணத்தை நானே சொன்னாலும் இது அஸம்பாவிதமென்கிறீர். நான் சொல்லுகிற காரணம் தவறாக இருந்தால் நீர்தாம் ஆலோசித்து ஒரு காரணம் சொல்லும்.

ஆழ்வார்:—ஆச்ரிதர்களின் ஸம்பந்தம்பெற்ற வஸ்துவே உனக்குத் தாரகமாதலால் வெண்ணெயுண்டாயத்தனை, இதுதான் காரணம்; வேறு காரணம் பரிஹாஸ்யம்.

எம்பெருமான்:—ஆழ்வீர்! ஆச்ரிதர்களின் வஸ்துவே நமக்குத் தாரக மென்பதை நீர் நன்கு அறிந்திருக்கிறீரன்றோ? உம்முடைய உடலும் எனக்கு அந்த வெண்ணெய் போன்றதே காணும்; இதுவே எனக்குத் தாரகங்காணும்; ஆனபின்பு நீர் உம்மைக் கொண்டு அகலவீராகில், திருவாய்ப்பாடியில் வெண்ணெயை விலக்கினார் புக்க லோகம் புகுவீரத்தனை, இனி நம்மை அணுகப்பாரும்.

இங்ஙனம் எம்பெருமான் சோதிவாய் திறந்து சொல்லிவிட்ட பின்பு, மேலே ஒன்றும் வாய்திறக்க வழியில்லாத ஆழ்வார் எம்பெருமானது கருத்தைத் தாம் அறிந்தமை தோற்றவும் மேலே காட்டின ஸம்வாதம் வெளிப்படவும் பாங்காக இப் பாசுர மருளிச்

செய்கிற அழகு பாரீர். இவ்வளவு ஆழ்ந்த கருத்தை அழகாகக் கண்டுபிடித்து வியாக்கியானங்கள் அமைத்தருளின பூருவாசாரியர்களின் மதிக்கு மண் விண்ணெல்லாங்கூடியும் விலைபோகுமோ?

உண்டாயுலகேழ்முன்னமே=முடிவில் மஹா ப்ரளயப் பெருங்கடல் வெள்ளத்தில் உலகங்களெல்லாம் அழியப்புக, திருமால் அவற்றையெல்லாம் தனது விசித்திர சக்தி விசேஷத்தாலே சிறிய திருவயிற்றிலே விசாலமாக இருத்தி ஆதிசேஷாம்சமான சிறியதோர் ஆலந்தளிரிலே யோகநித்திரை புரிவதாகவும், அவ்வுலகங்களைப் பிரளயம் நீங்கினபின் வெளிப்படுத்துவதாகவும் நூற்கொள்கை. இங்கு '**முன்னமே**' என்றதனால் வெண்ணெ யுண்டதற்கு எம்பெருமான் இயம்பின காரணம் அஸம்பாவிதமென்று ஆழ்வார் மறுத்தமை காட்டப்பட்டது. '**நெய்யூண் மருந்தோ?**' என்றதனால், 'வெண்ணெய் நெய் முதலானவற்றை யுண்டது மண் கரைவதற்கு மருந்தாக' என்று எம்பெருமான் கூறினனென்பது விளங்கும்.

வெண்ணெய் திருடி அமுதுசெய்ய விரும்பி அதற்காக இக்ஷ்வாகு வம்சத்திலே க்ஷத்ரிய குமாரனாய்ப் பிறந்தால் அது கிட்டாதேயென்று க்ஷுத்ரரான மனிசருடைய ஹேயமான சரீரத்தின் நிலையை அபராக்ருததிவ்யஸம்ஸ்தானத்துக்கு உண்டாக்கிக் கொண்டுவந்தாய் என்பது இரண்டாமடியின் கருத்து.

மண்தான் சோர்ந்ததுண்டேலும்=பிரளயத்தில் உள்ளடக்கிவைத்த உலகங்களைப் பிறகு வெளிப்படுத்தியபோது உள்ளே சில மண்கள் நின்றிருக்கலாம்; ஆனால் அந்த மண் கரைவதற்காக நெய்யும் வெண்ணெயு முண்டேனென்று நீ சொல்வது பொருந்தாது என்கிறார்.

"மனிசர்க்கு ஆகும் பீர் சிறிது மண்டாவண்ணம்" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறுவர். இந்த வாக்கியத்தை 'மண்கரைய' என்பதனோடு அந்வயித்துப் பொருள் கொள்வது ஒரு பக்ஷம்; 'நெய்யூண்' என்பதனோடு அந்வயித்துப் பொருள் கொள்வது மற்றொரு பக்ஷம். முந்தின பக்ஷத்தில், **பீர்** என்று நிறவேறுபாட்டுக்குப் பெயர். (வைவர்ணிய மெனப்படும்.) வயிற்றினுள்ளே மண் தங்கினால் மனிசர்கட்கு நிறவேறுபாடு உண்டாவது இயல்புதானே, இப்படிப்பட்ட நிறவேறுபாடு உண்டாகாமல் மண் கரைவதற்காக என்றபடி.

மற்றொரு பக்ஷத்தில், **சிறிதும்** என்பதற்கும் **பீர்** என்பதற்கும் அர்த்தம் ஒன்றே; மனிசர்க்கு ஆகும்படியாக மிகச் சிறிதளவுகூட நெய் மிச்சப்படாதபடி அமுது செய்வதோ மருந்து? என்றவாறு.

'மருந்தோ' என்ற ஓகாரம்—அன்று என்ற பொருளைத்தரும். **மாயோனே**! என்றது—ஆச்ரிதரின் ஸம்பந்தம்பெற்ற பொருளாலன்றி வேறொன்றால் தரிப்புறாதபடியான வ்யாமோஹத்தாலே வெண்ணெயும் நெய்யு முண்டாய் என்ற குறிப்பு, அப்படிப்பட்ட வ்யாமோஹத்தினால் தான் உம்மையும் விரும்புகின்றேனென்று எம்பெருமானுரைத்தது உள்ளுறை. .. .. (8)

மாயோம்தீயவலவலைப் பெருமாவஞ்சப்பேய்வீய *
தூயகுழவியாய்விடப்பாலமுதா அமுதுசெய்திட்ட

மாயன் * வானோர்தனித்தலைவன் மலராள்மைந்தன் எவ்வுயிர்க்கும்
தாயோன் * தம்மானென்னம்மான் அம்மாமூர்த்தியைச்சார்ந்தே. * (9)

தீய	கொடிய நினைவை யுடையவளாய்	வானோர் தனி தலைவன்	நித்ய ஸூரிகளுக்கு அத்விதீயநாதனும்
அலவலை	பஹுஜல்பிதங்களையுடையவளாய்	மலராள் மைந்தன்	திருமகள் கொழுநனும்
பெரு மா வஞ்சம்	மிகப் பெரிய வஞ்சகையான	எவ் உயிர்க்கும் தாயோன்	எல்லாவுயிர்களுக்கும் தாய் போன்றவனும்
பேய்	பூதனையானவள்	தம்மான	தனக்குத்தானே ஸ்வாமியும்
வீய	முடியும்படி	என் அம்மான்	எனக்கு ஸ்வாமியும்
தூய குழவி ஆய்	பசுங்குழந்தையாகி	அம்மா மூர்த்தியை	அப்படிப்பட்ட மேலான திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையனுமான பெருமானை
விடம் பால அமுது ஆ	(அந்தப் பூதனையின்) விஷங்கலந்த பால் அமிருதமாம்படி		
அமுது செய்திட்ட	அமுதுசெய்த	சார்ந்து	கிட்டி
மாயன்	ஆச்சரியஸ்வபாவனும்	மாயோம்	இருவரும் மாயாது வாழக்கடவோம்:

* * *—கீழ்ப்பாட்டில் எம்பெருமான் வெண்ணெயின் ப்ரஸ்தாவமெடுத்து ஆழ்வார் வாயை மூடுவித்தானே; அதற்குமேல் ஆழ்வார்—'எம்பெருமானே! திருவாய்ப்பாடியில் வெண்ணெய் உனக்குப் பரமபோக்யமென்பது மெய்யே; ஒப்பற்ற பிரிவுடைய யசோதைப்பிராட்டி முதலானோருடைய வெண்ணெ யாகையாலே அஃது உனக்கு அமுதமாயிருக்கும்; பாபியான என்னுடைய ஸம்பந்தம் உனக்கு விஷமாயிருக்குமே, என்றார்; அது கேட்ட எம்பெருமான் 'ஆழ்வீர்! அப்படி விஷமானாலும் நமக்குக் குறையில்லை காணும்; பூதனையின் கதை உமக்குத் தெரியாமை யில்லையே; அவளுடைய விஷமும் நமக்கு அமுதமாயிற்றன்றோ; அதுபோலவே உம்மால் விஷமென்று நினைக்கப்படுவதும் எனக்கு அமுதமேயாகத் தடையில்லை' என்று சொல்லிக்கொண்டு ஆழ்வாரது திருமேனியை மேல்விழுந்து கைக்கொள்ள, இனி அகல்வேனல்லேனென்று பொருந்துகிறாரிதில். "விடப்பாலமுதா அமுது செய்திட்ட மாயன்" என்று இப்பாட்டிலுள்ள சொற்போக்குக்கு இந்த அவதாரிகை இணங்கியதே.

பாட்டின் தலையிலுள்ள **மாயோம்** என்பது வினைமுற்று; "அம்மாமூர்த்தியைச் சார்ந்துமாயோம்" என்று அந்வயம். பிரிகையென்றும் மாய்கையென்றும் பர்யாயம். இனிமேல் ஒருகாலும் பிரிந்து தொலையக்கடவோமல்லோம் என்கிறார். 'மாயேன்' என்று ஒருமையாகச் சொல்லாமல் பன்மையாகச் சொன்னதனால் எம்பெருமானையுங் கூட்டிக்கொண்டு சொல்லுகிறாரென்பது பெறப்படும். சேதநனைவிட்டுப் பிரிவது எம்பெருமானுக்கு மாய்வு, எம்பெருமானை விட்டுப் பிரிவது சேதநனுக்கு மாய்வு, இருவரும் கூடியே யிருந்திட்டால் ஒருவர்க்கும் மாய்வில்லை யாதலால் 'அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு' என்றாராயிற்று.

'தீயவலவலைப் பெருமாவஞ்சம்' என்னுமளவும் பேய்ச்சிக்கு விசேஷணம்:—
* ஒருத்தி மகனாய்ப்பிறந்து ஓரிரவிலொருத்திமகனாயொளித்து வளர்கின்ற ஸ்ரீக்ருஷ்ண

சிசுவை நாடி யுணர்ந்து கொல்லும்பொருட்டுக் கஞ்சன் பல அசுரர்களை ஏவ, அவர்களில் ஒருத்தியான பூதனை யென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து அங்குத் தூங்கிக்கொண்டிருந்த கிருஷ்ண சிசுவை யெடுத்துத் தனது நஞ்சுதீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்லமுயல, பகவானாகிய குழந்தை அவ் வரக்கியின் ஸ்தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்கிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தருளினன் என்பது **பேய்வியத் தாயகுழவியாய்விடப் பாலமுதாவமுது செய்திட்ட** வரலாறு.

அலவலை — அளவுகடந்து வார்த்தை சொல்லுகிறவனுக்கு 'அலவலை' என்று பெயர்; பூதனை யசோதையின் உருக்கொண்டுவந்து யசோதைபோலவே பரிவு தோற்றப் பல வார்த்தைகளுஞ் சொன்னதுபற்றி அவளை இங்கு அலவலை யென்றது. **[தாய குழவியாய்]** ஈச்வரத்தன்மை கலசாத வெறுங் குழந்தையாய் என்றபடி. ஈச்வரத்தன்மையில்லையாகில் விஷத்தால் முடிந்திருக்கவேண்டுமே; அதனை அமுதமாக அமுது செய்தமை எங்ஙனே? என்னில்; "விஷம் அம்ருதமாம் முஹூர்த்தத்திலேயாயிற்றுப் பிறந்தது" என்கிறார் நம்பிள்ளை. பூதனை முதலானோர் இவனுடைய ஈச்வரத்தன்மையினால் முடிந்தார்களல்லர்; இவன் பிறந்த முஹூர்த்தத்தின் வன்மையால் முடிந்தார்களத்தனை என்றபடி. இது ரசோக்தி.

[விடப்பால் அமுதாவமுது செய்திட்ட.] "ஸ்தந்யம் தத் விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீத் ஜகத்குரோ" என்ற [ஹரிவம்ச] ப்ரமாணத்தை அடியொற்றி அருளிச்செய்தபடி. இப்படி அமுதுசெய்த மாயனும், நித்யஸூரிகளுக்கு அத்விதீய நிர்வாஹகனும், தாமரையைப் பிறப்பிடமாகவுடைய பிராட்டிக்கு போக்யமான யௌவனத்தை யுடையவனும், ஸகலாத்மாக்களுக்கும் தாய்போல பரிவனும், தனக்குத் தானே கடவனும், என்னை அகலவொட்டாமல் இழுத்துப்பிடித்துக்கொண்ட ஸ்வாமியும், அதுக்கடியான விலக்ஷண விக்ரஹத்தை யுடையனுமான பெருமானை அணுகி இனி ஒருகாலும் பிரியக்கடவேனல்லேன் என்கிறாராயிற்று. . ... (9)

சார்ந்தவிருவல்வினைகளும்சரித்து மாயப்பற்றறுத்து *
தீர்ந்துதன்பால்மனம்வைக்கத்திருத்தி வீடுதிருத்துவான் *
ஆர்ந்தஞானச்சுடராகி அகலம்கீழ்மேலளவிறந்து *
நேர்ந்தவுருவாயருவாகும் இவற்கிறுமிராம்நெடுமாலே 10

சார்ந்த	— சேர்ந்திருக்கிற	தன்பால் தீர்ந்து மனம் வைக்க திருத்தி	தன்னிடத்திலே உறுதிகொண்டு நெஞ்சைப் பொருந்த வைக்கும்படி என்னைத் திருத்தி
இரு வல் வினைகளும்	(புண்யபாப ரூபங்களான) இருவகைப்பட்ட வல் வினைகளையும்	வீடு திருத்துவான்	(எனக்குத் தருவதான) மோக்ஷ ஸ்தானத்திலும் சில திருத்தங்களைச்செய்து ஒழுங்குபடுத்துவதாக ஆரம்பித்துவிட்டான்;
சரித்து	— தொலைத்து		
மாயம் பற்று அறுத்து	அஜ்ஞான காரியமான விஷயஸங்கத்தையும் தவிர்த்து		

	(அவனை யாவனென்னில்;	நேர்ந்த	— மிகவும் நுட்பமான
ஆர்ந்த	— பரிபூர்ணமான	உரு ஆய் அரு ஆகும் இவற்றின்	அசித்தும் சித்துமாகிற இந்தப் பொருள்களுக்கு
ஞானச் சுடர் ஆகி	(ஸ்வயம்ப்ரகாச) ஞான வொளியையுடையனாய்	உயிர் ஆம்	— அந்தர்யாமியாகிநிற்கிற
அகலம் கீழ் மேல் அளவு இறந்து	சுற்றும் கீழும் மேலும் எல்லையற்று எங்கும் வியாபித்தவனாய்	நெடு மால்	வ்யாமோஹமே வடிவான எம்பெருமான்.

* * * —கீழ்ப்பாட்டைத் திருச்செவி சாற்றின எம்பெருமான் "அம் மாமூர்த்தியைச் சார்ந்து மாயோம்" என்ற வுறுதியையறிந்து திருவுள்ளம் பூரித்து, எப்போதும் விட்டுப் பிரியில்லாத திருநாட்டிலே இவ்வாழ்வாரைக் கொண்டுபோய் நித்யாநுபவம் பண்ணக் கருதி, ஒரு புதுமையுஞ் செய்யவேண்டாதபடியான பரமபதத்தையும் தமக்காக அவன் கோடிக்கப்புக்கதைக் கண்டு "என்னே வ்யாமோஹமோ!" என்று ஈடுபடுகிறாரிதில்.

பின்னடிகளை முந்துற அந்வயித்துக்கொண்டு முன்னடிகளைப் பின்னே அந்வயித்துக்கொள்வது. ஆர்ந்த ஞானச் சுடராகி அகலங்கீழ்மேலளவிறந்து நேர்ந்த வுருவாயருவாகு மிவற்றினுயிராம் நெடுமால், சார்ந்த விருவல்வினைகளுஞ் சரித்து மாயப் பற்றறுத்துத் தீர்ந்து தன்பால் மனம்வைக்கத் திருத்திவீடுதிருத்துவான் என்க. எள்ளில் எண்ணெய் போலவும் கட்டையில் தீப்போலவும் பிரிக்க முடியாதபடி பொருந்திக் கிடக்கிற புண்ய பாப ரூபமான இருவகைக் கருமங்களையும் போக்கி ருசி வாஸனைகளையுங் கழித்துத் தன்பக்கலிலேயே நான் முழுநோக்காக மனம் வைக்கும்படி என்னைத் திருத்தி [அதாவது, நான் அயோக்யன் என்று அகன்று போவது தவிர்ந்து அபிமுகனாம்படிசெய்து] *கலங்காப் பெருநகரமாகிய பரமபதத்திற்கும் ஒரு புதுமைசெய்து அதனைக்கோடிக்கப் புகுகின்றான—(யாவனென்னில்,) பரிபூர்ணமான ஞான வொளியையுடையனாய், கீழும் மேலும் சுற்றிலுமுள்ள எல்லாத் திசைகளிலும் வியாபித்து அதிஸூக்ஷ்மமான சேதநாசேதநங்களுக்கும் ஆத்மாவாயிருக்கிற பரமபுருஷன்.

இருவல்வினைகளும்='இரு' என்று பெருமையைச் சொன்னபடியாய் மிகப்பெரிய கொடிய பாபங்களையெல்லாம் என்றும் பொருள்கொள்ளலாம். இருப்புவிலங்கான பாபத்தோடொக்கப் பொன் விலங்கான புண்யமும் கழியுண்ண வேண்டுமாதலால், இருவகைப்பட்ட வல்வினைகளையுஞ் சரித்து என்றலும் ஏற்கும்.

பின்னடிகளில் எம்பெருமானுடைய ஸர்வஜ்ஞத்வத்தையும் வ்யாப்தியையுஞ் சொன்னது—இப்போதுதான் அவன் தனது திருக்குணங்களையெல்லாம் ஸபலமாக நினைத்தானபோலுமென்று காட்டுகிறபடி. .. .. . (10)

மாலேமாயப்பெருமானே மாமாயனேயென்றென்று *
மாலேயேறிமாலருளால் மன்னுகுருகூர்ச்சடகோபன் *
பாலேய்தமிழரிசைகாரர் பத்தர்பரவுமாயிரத்தின் *
பாலேபட்ட இவைபத்தும்வல்லார்க்கு இல்லைபரிவதே. * ... (11)

மாலே	— பெரியோனே!	மா மாயனே	மஹத்தான ஆச்சரிய சேஷ்டிதங்களை யுடையவனே!
மாயம் பெருமானே	— ஆச்சரிய குணநிதியே!		

என்று என்று	என்று இங்ஙனம் பலவிதங்களான திருநாமங்களைச் சொல்லி
மாலே ஏறி	— பித்தம் பிடித்து
மால் அருளால் மன்னு	ஸர்வேச்வரனது க்ருபையினால் பொருந்தப்பெற்ற
குருகூர் சடகோபன்	திருநகரிக்குத் தலைவரான ஆழ்வார் (அருளிச்செய்ததான)
பால் ஏய் தமிழர்	பாலுக்குச் சமானமான இனிமையுள்ள தமிழில் வல்லவர்களென்ன
இசைகாரர்	இசையறிந்து பாடவல்லவர்களென்ன
பத்தர்	பக்திமான்களென்ன ஆகிய இவர்களெல்லாரும்
பரவும்	— கொண்டாடும்படியமைந்த
ஆயிரத்தின் பால்	— ஆயிரம் பாட்டினுள்
பட்ட	— தோன்றின
இவை பத்தும்	— இந்தப்பத்துப்பாட்டையும்
வல்லார்க்கு	— ஓதவல்லவர்களுக்கு
பரிவது இல்லை	யாதொரு துக்கமும் உண்டாகமாட்டாது.

* * *—இத் திருவாய்மொழியைக் கற்பார்க்கு ஒருவகைத் துன்பமும் நேறிடாதென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். எம்பெருமான் ஸேவைஸாதிக்கவர, 'நான அயோக்யன்' என்று அகன்று தாம பட்ட வருத்தங்கள இத் திருவாயமொழி கறபார்க்கு உண்டாகமாட்டாவென்றவாறு.

தாம் எபபடிப்பட்டவரென்றால், மாலே! மாயபபெருமானே! மாமாயனே! என்றிப்படி அநேகந் திருநாமங்களை வாயாரச்சொல்லிப் பித்தம பிடித்து ஸர்வேச்வரனுடைய க்ருபையினாலேயே பொருந்தப் பெற்றவர் எனகிறார். ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரஹ்ம சபதத்தை வியாக்கியானித்தருளாநின்ற ஸ்ரீபாஷ்யகாரர் எம்பெருமானுக்கு இரணடு வகைகளாலே பெருமையை உபபாதித்தார்; ஸ்வரூபத்தாலே ஒரு பெருமையும் குணங்களாலே ஒரு பெருமையுமாக. அபபடியே இங்கும் **மாலே!** எனறது ஸ்வரூபத்தால் வந்த பெருமையைச் சொன்னபடி. **மாயப்பெருமானே!** எனறது குணங்களால் வந்த பெருமையைச் சொன்னபடி. இனி, மூன்றுவதான ஒரு பெருமையையும் ஆழ்வாரருளிச்செயகிறார் **மாமாயனே!** என்று; இது சேஷ்டிதஙகளால் வநத பெருமையைச் சொன்னபடி. **என்றென்று** என்றது— தாம் அநுஸந்தித்த திருநாமஙகளுக்கு எல்லையில்லாமை காட்டினபடி. **மாலே ஏறி**='நான் அயோக்யன' எனறு அகலுமபடியான ஒரு பித்தம் தலையெடுத்ததே, அதைச் சொன்னபடி. "எனனததனச்சனரங்கனுக்கடியார்களாகி அவனுககே பித்தராமவர்" என்று சொல்லப்பட்ட பித்தமாகவுமாம்.

அருளால் மன்னு குருகூர்ச்சடகோபன்= ஆழ்வாா எமபெருமானது திருவருளாலே ஸத்தைபெற்றவர் எனகிற பரமார்த்தத்தைச் சொல்லுகிறபடியாகவுமாம்; தாம் அகன்று போகபபுக. சிலகுணத்தைக் காட்டிப பொருநதவிட்டுக்கொண்ட சிறபபைச சொல்லுகிறபடியாகவுமாம. "தன்னை முடித்துக்கொளவதாகத் கழுத்திலே கயிற்றை யிட்டுக்கொணடவனை அறுத்து விழ விடுவாரைப்போலே, அகன்று முடியப்புக்க விவரைப பொருநவிட்டுக்கொளள அவனருளாலே பொருந்தின வாழவார்" என்பது நம்பிள்ளையிடு.

[**பாலேய் தமிழர்** இத்யாதி.] சிறந்த தமிழக்கவிகளைக்கொண்டு போதுபோக்க வேணுமென்றிருபபார்க்கு இத் திருவாயமொழியே தஞசம்; நல்ல இசைகளைபபாடிப்

போதுபோக்கவேணுமென்றிருப்பார்க்கும் இத் திருவாய்மொழியே தஞ்சம்; * குருகையர் கோன் யாழினிசை வேதத்தியலாதலால் பகவத்குணாநுபவத்திலிழிந்து பக்திரஸமே போதுபோக்காக இருக்கவேணுமென்பார்க்கும் திருவாய்மொழியே தஞ்சம் என்றவாறு. "பாலேதமிழரென்று முதலாழ்வார்களை விவக்ஷித்தபடி; இசைகாரரென்று திருப்பாணாழ்வாரை விவக்ஷித்தபடி; பத்தர் என்று பெரியாழ்வாரை விவக்ஷித்தபடி" என்று ஆளவந்தார் அருளிச்செய்வராம். ஸ்ரீபராங்குச நம்பியைப் பாலேய்தமிழரெனகிறது; ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரை இசைகாரரென்கிறது; பிள்ளையுறங்காவில்லிதாஸரைப பத்தரென்கிறது" என்று ஒருருவிலே கூரத்தாழ்வானருளிச்செய்தாராம்.

ஆயிரத்தின்பாலேபட்ட இவைபத்தும்=திருவாய்மொழி யாயிரமும் மிகச் சிறந்ததாகவே யிருக்கச்செய்தேயும் இந்தத் திருவாய்மொழியையும் மற்றவற்றையும் பார்க்குமிடத்து, மற்றவை கடல்போலவும் இது முத்துப்போலவு மிருக்கும் என்ற கருத்து இதில் தொனிக்கும். 'கடலில் முத்துப்பட்டது' என்னுமாபோலேயன்றோ இங்குப் பிரயோகமிருப்பது.

பரிவது இல்லை=பரிவு துயரம். 'அது' என்பது முதல் வேற்றுமைச் சொல்லுருபு. இத் திருவாய்மொழியை ஓத வல்லார்க்கு ஒரு துக்கமுமில்லை யென்றாராயிற்று, ... (11)

ஐந்தாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.
ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி முதற்பத்து ஆறாந் திருவாய்மொழி—பரிவதில்லீசனை.

அவதாரிகை. ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு திருக்குணத்தை அநுபவித்து வெளியிட்டுவருகிற முறைமையில், இத் திருவாய்மொழியில் '**ஆராதனைக்கெளியன்**' என்கிற ஒரு திருக்குணத்தை வெளியிட்டருள்கிறார். இக்குணம் வடமொழியில் '**ஸ்வாராதத்வம்**' எனப்படும். சிரமமின்றி எளிதாகவே ஆராதிக்க உரியனாயிருக்குந்தன்மை என்றவாறு.

இதர தெய்வங்களிற் காட்டில் எம்பெருமான் எத்தனையோவிதங்களால் நெடுவாசிபெற்றிருப்பதுபோலே இவ்வகையாலும் நெடுவாசிபெற்றிருப்பன். 'ஆடு பலி கொடு, கோழி பலிகொடு' என்று அருந்தேவைகளை யிட்டு மஹா பரிச்ரம ஸாத்யங்களான ஆராதனைகளை அபேக்ஷித்திருக்கும் தேவதாந்தரங்கள். எம்பெருமான்படியோ அப்படியன்று; நாம் இட்டதுகொண்டு த்ருப்தியடைவதே அவனது ஸ்வரூபம், என்பது சாஸ்த்ரங்களில் தேர்ந்த விஷயம். அதுவே இத் திருவாய்மொழிக்கு ப்ரமேயம்.

கீழைத் திருவாய்மொழியிலே நைச்சியத்தைச் சிந்தித்து அகன்ற ஆழ்வாரை எம்பெருமான் பொருந்தவிட்டுக்கொண்டது சீலகுணத்தாலெனப்பட்டது; அவன சீல

வானுயிருந்தாலும் அவனை ஆராதிக்கப் புகுமிடத்தில் குறைவில்லாமல் ஆராதித்துத் தீரவேண்டுமே; நாமோ க்ஷுத்ரர்களும் க்ஷுத்ரமான உபகரணங்களையுடையவர்களுமா யிராநின்றோம்; ஆனபின்பு எங்ஙனே அவனை ஆச்ரயித்து ஆராதித்துத் தலைக்கட்டுவது? என்கிற சங்கை அடுத்தபடியாக விளையக் கூடியதாதலால் அதனை பரிஹரித்துக் கொண்டு இந்தத் திருவாய்மொழி அவதரிக்கின்றதென்க.

எம்பெருமானுக்கு நாம் சில வஸ்துக்களை இடுவதானது அவனுக்கு ஏற்கனவே யில்லாதவொரு பூர்த்தியை உண்டாக்குவதற்காகவா? நாம் ஸத்தை பெறுவதற்காகவா? என்று ஆராயவேண்டும்; அவனோ அவாப்தஸமஸ்தகாமன், அன்னவன் நாமிட்டதுகொண்டு பூர்த்தியடைகிறானென்பது அஸம்பாவிதம். கடலிலே மேகம் வர்ஷிப்பது கடல் நிரம்புவதற்காகவன்றே, 'வர்ஷைநிதேரிவாப்தெள ஸம்பந்தாத ஸ்வாத்மலாப:' என்று (ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்) பட்டர் அருளிச்செய்தபடியே, தான் ஸத்தை பெறுதற்காகவே மேகம் கடலிலும் வர்ஷிக்கின்றதென்பது பரமார்த்தம் அதுபோலவே ஸ்வத: பரிபூர்ணனான பரமபுருஷன் திறத்திலே நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பது நமது ஸ்வரூபம் நிறம்பெறுதற்கேயன்றி, அவனை நிரப்புவதற்கன்று என்பது வெளிப்படை. ஆகவே, நாம் சிறந்த பெரும் பொருள்களைத் தேடி ஆராதிக்க வேணுமென்பதில்லை, இடுகிறபொருள் எதுவாயினும், இடுவது ப்ரேமபூர்வகமாக வேணுமென்பதொன்றிலேயே நியதியுள்ளது.

* மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்த திருமங்கையாழ்வாரும் "கள்ளார்துழாயும் கணவலரும் கூவிளையும், முள்ளார்முளரியும் ஆம்பலும் முன் கண்டக்கால், புள்ளாயோரேனமாய்ப்புக்கிடந்தான் பொன்னடிக்கென்று, உள்ளாதாருள்ளத்தை உள்ளமாக்கொள்ளோமே" என்றருளிச்செய்கிறார். திருத்துழாய் முதலிய எந்த வஸ்துவைக்கண்டாலும் 'இது எம்பெருமானுக்குச் சாத்தத்தக்கது' என்று அத்யவஸாயங்கொள்ளாதாருடைய நெஞ்சை நெஞ்சாகக் கொள்ளமாட்டோமென்றுரைக்கின்ற இப்பாட்டில், எம்பெருமானுக்கே உரித்தான திருத்துழாயோடு விஜாதீய வஸ்துக்களுங்கூட்டி யெடுக்கப்பட்டிருத்தலால், எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கவேணுமென்கிற சுத்த பாவத்துடனே கொள்ளுகிற புஷ்பம் எதுவாயிருந்தாலும் குற்றமில்லை, செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற புஷ்பங்களாகவேயிருக்கவேணுமென்கிற நியதியில்லை, ஏதேனுமொரு பூவாயிருக்கலாமென்பதும் பக்திப்பெருங்காதலே முக்கியமானது என்பதும் தோற்றுவிக்கப்படும்.

ஸ்ரீஜகந்நாதத்தி லெம்பெருமான் செண்பகப்பூவை உகந்து சாத்திக்கொள்வது வழக்கமாதலால் முற்காலத்தில் சில ராஜகுமாரர்கள் அப்பெருமானுக்குச் செண்பகப் பூ ஸம்பாதித்து ஸமர்ப்பிக்கவேணுமென்று கடைவீதியேறச் சென்றனர், அங்குப் பூ வெல்லாம் விற்றுப்போய், ஒரேஒரு பூ மாத்திரம் மிகுந்திருந்தது. விலைக்கு வாங்க வந்த ராஜகுமாரர்கள் செல்வச்செருக்குடையவராதலால் ஒவ்வொருவரும் இப்பூவை நாமே பெற்றுப்போய் ஸமர்ப்பிக்கவேணுமென்கிற ஆவல்கொண்டவராகி மேன்மேலும் விலையை ஏற்றிக்கொண்டேவந்தார்கள். கடைசியாக அளவற்ற விலைகொடுத்து ஒரு ராஜபுத்திரன் அதை வாங்கிப் பெருமானுக்குச்சாத்த, அன்றிரா அவனுடைய கனவிலே எம்பெருமான் காட்சி தந்து 'நீ இட்ட பூ எனக்குக் கனத்துச் சுமக்கவொண்ணாத

தாயிருக்கிறது' என்றருளிச்செய்தான்—என்ற இதிஹாஸமும் அப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளையாலருளிச்செய்யப்பட்டுளது. இதனால், ஸ்நேஹ பூர்வகமாகப் பூவிட்டால் அதுவே எம்பெருமானுக்கு அலப்யலாபமாயிருக்கு மென்றதாகும். இது புஷ்பவிஷயமொன்றில் மாத்திரமன்று, நாம் பகவானுக்கு இடுவது எதுவானாலும் அஃதெல்லாவற்றிற்குமே இந்த நியாயம் ஒக்கும்.

கீதாசார்யனும், "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந:." என்றருளிச்செய்கிறான். இடுகிற பொருளில் வாசி பார்ப்பதில்லை, இடுகிறவன் நெஞ்சில் ஈரமுள்ளதா என்பதைத்தான் நான் பார்ப்பேன் என்றனரே இதிற் சொல்லுவது. "அந்யத் பூர்ணதபாம் கும்பாத் அந்யத் பாதாவநேஜநாத், அந்யத் குசலஸம்ப்ரச்நாத் ந சேச்சதி ஜநார்த்தந:." என்றும் "யா: க்ரியாஸ் ஸம்ப்ரயுக்தாஸ் ஸ்யு: ஏகாந்தகதபுத்திபி:, தாஸ் ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம்." என்றுமுள்ள ப்ரமாண சந்தங்களாலும் எம்பெருமான் ஆராதனைக் கெளியனென்பது விசதீகரிக்கப்பட்டுள்ளது. அந்தத் திருக்குணத்தையே இத் திருவாய்மொழியில் ஆழ்வார் அநுபவித்து வெளியிட்டருளுகிறார். (*)

பரிவதில்ஈசனைப்பாடி * விரிவதுமேவலுறுவீர் *
பிரிவகையின்றிநன்னீர்தூய் * புரிவதுவும்புகைபூவே. * (1)

பரிவது இல்	— துன்பமற்ற	நல்	— நல்ல
ஈசனை	— ஸர்வேச்வரனை	தூய்	— ஸமர்ப்பித்து
பாடி	— துதிசெய்து	புரிவதுவும்	—(அதன்பிறகு) ஸமர்ப்பிப்பதும்
விரிவது மேவல் உறுவீர்	— ஸ்வரூபவிகாஸத்தைப் பெறவேணுமென்கிற உறுதியுடையவர்களே!,	புகை பூவே	ஏதேனுமொரு தூபமும் ஏதேனுமொரு புஷ்பமுமேயாகும்.
பிரிவகை இன்றி	பிரயோஜனாந்தரத்தைக் கொண்டு விலகிப்போதலின்றியே		

* * *—எம்பெருமானை ஆராதிக்கு முபகரணங்களின் ஸௌகர்யம் இப் பாசுரத்தில் அருளிச்செய்யப்படுகிறது. எம்பெருமானைப்பற்றிச் சொல்லுகின்ற சாஸ்த்ரங்கள் அவனை 'அகிலஹேய ப்ரத்யநீகன்' என்கின்றன; ஹேயகுணங்களெல்லாவற்றிற்கும் அவன் எதிர்த்தட்டானவன் என்றபடி. அவனிடத்திலுள்ளவையெல்லாம் கல்யாண குணங்களேயன்றி ஒரு வகையான ஹேயகுணமும் இல்லாமையால் அங்ஙனே சொல்லுகிறது. அந்த ஹேய ப்ரதிபடத்வமே இங்குப் 'பரிவதில்' என்ற விசேஷணத்தினால் கூறப்படுகின்றது. துக்கமில்லாதவன் என்றது, மற்றுமுள்ள ஹேயகுணங்களொன்றுமில்லாமையைச் சொன்னபடிக்கு உபலக்ஷணம்.

எம்பெருமானுக்கு துக்கமில்லையென்று சொல்லிவிடமுடியுமோ? விபவாவதாரங்களிலே ஸீதாவியோகம் முதலான நிமித்தங்களினால் வாசாமகோசரமாகத் துயருற்றமை இதிஹாஸ புராணங்களில் ஸித்தமாயிருக்கின்றதே, துக்கமில்லாதவனென்று எங்ஙனே சொல்லலாம்? என்று சிலர் சங்கிக்கக்கூடும், அவதாரங்களில் உண்மையான துக்கமில்லை; அது அபிநய மாத்திரமே யென்பது சருதப்ரகாசிகை முதலியவற்றில் நிர்ணயிக்கப்பட்டிருத்தலால் இந்த சங்கைக்கு இடமில்லை. ஸீதா வியோகாதி

நிமித்தங்களினுலுண்டாகின்ற துக்கம் அபிநயரூபமென்று சொல்லிவிட்டாலும், எம்
பெருமானை 'தயாளு' என்றிசையும்போது, "தயையாவது — பிறர்படும் துக்கத்தைக்
கண்டு தானும் துக்கப்படுகை" என்று ஆசிரியர்களால் நிர்வஹிக்கப்படுவதால், இந்த
துக்கத்தையும் அபிநயரூபமென்று அங்கீகரிக்கவொண்ணுதே; இதற்கு எங்ஙனே ஸமா
தானமென்று சிலர் சங்கிப்பதுண்டு; 'இது ஹேயப்ரத்யநீகத்வத்திற்கு விரோதியன்று
என்பதே சுருக்கமான ஸமாதானம். துக்க ஸாமாந்யமும் ஹேயமன்று; ஸ்வார்த்த
மாகப்படும் துக்கமே ஹேயமாகும்; பிறர்படும் இழவைக்கண்டு தரித்திருக்கமுடியாமல்
பரவசமாகப் படுகின்ற துக்கம் ஹேயமன்று, மிகவும் உபாதேயமாகவேயாகும். இத
னைச் சிறிது விவரிப்போம்;– பிறர்படுகின்ற துக்கத்தைக்கண்டு துக்கப்படுவதென்பது
குணமா? தோஷமா? என்று விமர்சிக்கவேணும். ஸ்ரீ ராமாயண, அயோத்யா
காண்டத்தில் ஸ்ரீராமபிரானுடைய திருக்கல்யாண குணங்களைச் சொல்லிக்கொண்டு
வரும் பிரகரணத்தில் "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:கித:" (பிரஜைகள்
துக்கப்படுங் காலங்களில் ஸ்ரீராமன் மிகவும் துக்கப்படுகிறுன்) என்று சொல்லப்பட்
டிருப்பது ஒருபுறம் நிற்க. உலகத்தில் ஒருவன் துக்கப்படும்போது அந்த துக்கத்தைக்
கண்டுகொண்டிராநின்ற மற்றொருவன் தானும் துக்கப்படாமல் வாளாகிடந்தால்
அவனைக் கல் நெஞ்சனென்றும் ஈரநெஞ்சு இளநெஞ்சு இல்லாதவனென்றும் வசை
கூறுவதும், பிறர் துக்கிப்பதைக்கண்டு பரவசமாக ஒருவன் துக்கிப்பானுகில் அவனை
ஈரநெஞ்சனென்றும் இரக்கமுள்ளவனென்றும் பரம தயாளுவென்றும் சொல்லிப் புகழ
வதும் இன்றாக ஒருவராலும் அபலபிக்கவொண்ணுதவை. ஆகவே பரது:க்க
து:க்கித்வமென்பது சிறந்த குணங்களில் முதன்மையாகக் கணக்கிடக்கூடியதேயன்றி
துர்க்குணமாக ஒருவராலுங் கூறவொண்ணுதது. இப்படிப்பட்ட வொரு சிறந்த
குணம் எம்பெருமானுக்கு இல்லையென்று எங்ஙனே சொல்லலாகும்?

ஆனால் இங்கு ஒன்று சொல்லலாம்; பிறர்படும் துயரத்தைப் பரிஹரிக்கக்
கூடிய சக்தி நமக்கில்லாமையாலே நாம் அத்துயரத்தைக்கண்டு துயரப்படலாம்; பரி
பூர்ண சக்தியுக்தனுன எம்பெருமான் எளியெலுமபரான நம்மைப்போலன்றியே பிற
ருடைய துயரத்தைக்கண்டு தானும் துயரப்படக் காரணமேயில்லை யென்னலாம், இங்
குக் குறிக்கொள்ளவேண்டியதாவது — பிறர்படும் துயரத்தைக்கண்டு துயருறுகை
என்கிற ஒரு தன்மையும், பிறர்படுந் துயரத்தை நீக்கவல்ல சக்தியுடைமை யென்கிற
வொரு தன்மையும் பரஸ்பர விருத்தமென்று நினைக்கலாகாது; உண்மையில் இவை
ஒன்றோடொன்று விரோதமுடையனவல்ல; தன் குழந்தைக்கு ஒரு துன்பம் நேர்ந்து
விட்டால் அதனை உடனே பரிஹரிக்கவல்ல சக்தி மாதாவுக்கு இருக்கச்செய்தேயும்
அப்படியே அத் துன்பத்தை அவள் பரிஹரித்துவிடச் செய்தேயும் 'குழந்தைக்குத்
துன்பம் நேராமல் காக்கவேண்டியது நமது கடமையாயிருந்தும் ஏமாந்துபோனேமே!',
அந்தோ! அநியாயமாயக் குழந்தையைத் துடிக்கவிட்டோமே!' என்று பலவாறாகக்
கதறி வருந்தும்படியைக் காணுதாருண்டோ?

துச்சாஸநன் கையிலே த்ரௌபதி பரிபவப்பட்டுக் கூவினபோது கண்ணபிரான்
ஒருவாறு அவளது துயரைத் தீர்த்திருக்கச் செய்தேயும் 'ஐயோ! அவள் கூவின
போது நான் நேரில் சென்றிருந்து உதவாதொழிந்தேனே!', ஐயோ! அவளுக்குப் பரி
பவம் நேர்ந்து அவள் கதறினபின்பு நான் அதைப் போக்கினேனேயன்றி, முதல் தன்

னிலே பரிபவமே உண்டாகாதபடி ஜாகரூகனாயிருக்கை தவிர்ந்தேனே! அவனுக்கு நான் பெரிய கடனாளியாய்விட்டேனே! என் பிறப்பு என்னாயிற்று!' என்று தன் காவற் சோர்வை நினைத்துத் திருவுள்ளம் வெவ்வண்டு பலவாறு கதறினபடியுண்டே.

மடுவின்கரையிலே முதலைதன்னாலடர்ப்புண்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய இடரை எம்பெருமான் தீர்த்தருளினானேலும் அவனாான் பட்ட பரிதாபம் பேச்சுக்கு நிலமன்றே. "ஸரக்ஷாமபரமயதாயதம ததாநோ திங்மாமிதயநுகஜகர்ஜமாஜகந்த,' என்று ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே பட்டர் அருளிச் செய்ததமை கண்டதே. கெட்டேன்! கெட்டேன்!! என்று நொந்துகொண்டே எம்பெருமான் அரைகுலையத் தலைகுலைய ஓடி வந்தானென்றால் இது என்கொல்!

ஆதலால், இப்பாட்டில் **பரிவதில்ஈசன்** என்றது ஹேயமான துக்கமில்லாதவன் என்றபடியாமத்தனையென்று தலைக்கட்டிற்றாயிற்று.

ஈசனை = நமக்கென்று ஏற்பட்ட ஸ்வாமியை என்றபடி, உலகத்தில் ஒருவனுக்கு ஒருவன் விருந்திடும்போது நெடுநாளாக ஒரு நல்லபொருளைச் சேகரித்து விருந்திட்டால் 'இதை இவன் ஸ்வீகரித்து என்ன குறை சொல்லப்போகிறானோ' என்று நெஞ்சு தளும்பியிருக்கவேண்டிவரும். புத்திரன் பிதாவுக்கு விருந்திட்டால் விருந்தில் ஏதேனுங் குறையிருந்தாலும் அது தம்பபனுடையதாய் நெஞ்சாறல்படவேண்டாதிருக்குமன்றோ, அப்படிப்பட்ட ஸம்பந்தம் எம்பெருமானுக்கும் நமக்குமுண்டென்று காட்டினபடி.

பாடி = பெரியவர்களின் ஸந்நிதானத்திலே வாயைத் திறவாமல் மௌனமாயிருக்கப் ப்ராப்தமாயினும், ஆனந்தம் உள்ளடங்கியிருக்கமாட்டாமல் வாய்விட்டுப் பாட நேர்ந்துவிடுமென்க. பரமபதத்திலே *"ஏதத் ஸாமகாயந் நாஸ்தே"* என்று சொல்லப்பட்ட பாடுதல் இங்கே விவக்ஷிதம். [**பாடி விரிவது மேவலுறுவீர்.**] இந்த ஸம்ஸார நிலத்திலிருக்குமவரையில் சேற்றிலழுந்தின மாணிக்கம் ஒளி சுருங்கியிருக்குமாபோலே ஆத்மாவுக்கும் ஞானாநந்தாதிகள் விரிவின்றிச் சுருங்கியிருக்க நேருமே, அந்தச் சுருங்குதல் தொலைந்து ஸ்வரூப விகாஸத்தைப் பெறவேண்டியிருப்பவர்களே! என்று முமுக்ஷுக்களை விளித்தபடி.

அப்படிப்பட்ட கனத்த பேறு பெறுதற்குச் செய்யவேண்டுவதென்னென்ன; க்ஷுத்ர பலன்களைப் பெற்று அவனை விட்டுப்பிரிந்துபோவதல்லாமல், ஏதேனும் தீர்த்தத்தை ஸமர்ப்பித்து ஏதேனுமொரு பூவையிட்டு ஏதேனுமொரு புகையைக் காட்டினாலும் போதுமெனகிறார் பின்னடிகளில்.

இப்பாசுரத்தை பட்டர் உபந்யஸிக்கும்போது "புரிவதுவும் **புகை பூவே**" என்ற சப்தஸ்வாரஸ்யத்தைத் திருவுள்ளம்பற்றி 'இவ்விடத்தில் அகில் புகை யென்றாவது கருமுகைப்பூ என்றாவது சிறப்பித்துச் சொல்லாமையாலே ஏதேனும் ஒரு புகையும் ஏதேனும் ஒரு பூவும் எம்பெருமானுக்கு அமையும்; § செத்து கையிட்டுப் புகைக்கலாம், கண்டகாலிப்பூவை சூட்டலாம்' என்று உபந்யஸித்தாராம். அதை நஞ்சீயர் கேட்டு **"ந கண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத்"** [கண்டகாலிப்பூவை எம்பெருமானுக்குச் சாத்தலாகாது] என்று சாஸ்த்ரம் மறுத்திருக்க, இப்படி அருளிச்செய்யலாமோ?

§ தச்சன் செதுக்குகிற சாய் முதலியவற்றையிட்டு என்றபடி.

என்று கேட்டார்; அதற்கு பட்டர் அருளிச்செய்த ரஸோக்தி:—"சாஸ்த்ரம் மறுத்தது மெய்தான்; கண்டகாலிப்பூ எம்பெருமானுக்கு ஆகாதென்று மறுத்தபடியன்று; அடியார்கள் அப்பூவைப் பறித்தால் கையில் முள் பாயுமே என்று பக்தர்கள் பக்கலில் தயையினால் சாஸ்த்ரம் நிஷேதித்ததேயன்றி எம்பெருமானுக்கு ஆகாத பூ எதுவுமில்லை" என்றாரும், இதர ஸம்பிரதாயத்திலுள்ள வியாக்யாதாக்கள் சிலர் இந்த ஸமவாதத்தைக்கண்டு ரஸியாமல் திரஸ்கரித்துரைத்திருப்பதில் விவேகிகட்குக் கண் செல்லாது. அருளிச்செயல்தொடை யழகை நோக்கி ரஸப்பொருளுரைத்தவிதில் குதர்க்கவாதஞ் செய்கை மனக்குற்ற மாந்தர்க்குரியதே.

பிரிவகையின்றி = இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்; ஐச்வர்யம் ஸந்தானம் கைவல்யம் முதலான அற்ப பலன்களைக்கேட்டுப் பெற்றுக்கொண்டு அவனைவிட்டுப் பிரிந்து போய்விடாமல் என்பது ஒருவகை. (கீழ்த் திருவாய்மொழியிற் போலே) நைச்யாநுஸந்தானம் பண்ணி அகன்று போய்விடப் பாராமல் என்பது மற்றொருவகை.

நன்னீர் = நல்லநீர் என்றது சுத்த ஜலம் என்றபடியாய், 'சுத்த கங்கை' என்றால் யமுனை ஸரஸ்வதி முதலிய இதர நதிகள் கலசாத வெறும் கங்கை என்று பொருளாவதுபோலே, ஏலம் லவங்கம் முதலிய இதரவஸ்துக்கள் சேராத வெறும் தீர்த்தம் என்றவாறும்; இதனால் ஆராதனை எளிமை தோற்றும்.

"புரிவதுமாவது பூவே" என்று பாடாந்தர மிருப்பதாகப் பன்னீராயிரப்படியுரைகாரர் கூறியுள்ளார். ... ... (1)

மதுவார்தண்ணந்துழாயான் * முதுவேதமுதல்வனுக்கு *
எதுவேதென்பணி யென்னாததுவே ஆட்செய்யுமீடே. ... (2)

அம்	— அழகிய	எது பணி	(தகுதியாகச் செய்யக் கூடிய) கைங்கரியம் எது?
மது வார்	— தேன் ஒழுகுகின்ற	என் பணி எது	(அதிலும்) நான் செய்யக் கூடியகைங்கரியம்எது?
தண்	- குளிர்ந்த	என்னாததுவே	— என்று சிந்தியாமலிருப்பதே
துழாயான்	திருத்துழாய்மாலையை அணிந்துள்ளவனும்	ஆள் செய்யும் ஈடு	— அடிமைசெய்தற்கொப்பாகும்.
முது வேதம் முதல்வனுக்கு	பழமையான வேதங்களால் முழுமுதற் கடவுளாகச் சொல்லப்பட்டவனுமான பெருமானுக்கு		

* * * — எம்பெருமானுக்கு இடுவதற்கு இன்ன பொருள்தானென்கிற நியதியில்லையென்றார் கீழ்ப்பாட்டில், பொருள்நியதியில்லாததுபோலவே அதிகாரி நியதியுமில்லையென்பது இப்பாசுரம்.

அந்தாதித்தொடையான இப்பிரபந்தத்தில், பூவே என்று கீழ்ப்பாட்டில் முடித்துவிட்டு அங்குள்ள சொல்லையோ எழுத்தையோ இங்குக்கொள்ளாமல் **மதுவார்** என்று தொடங்கியிருப்பது அந்தாதித்தொடைக்கு எங்ஙனே பொருந்துமென்னில்; இங்குச் சொற்றொடையந்தாதியாகக் கொள்ளாமல் பொருட்டொடையந்தாதியாகக் கொள்ளலாம், அதாவது—கீழ்ப்பாட்டில் முடித்த பூவுக்கும் இப்பாட்டில் தொடங்குகிற

மதுவுக்கும் சேர்த்தியுண்டாதலால் [அதாவது—பூவும் தேனும் விட்டுப்பிரியாதிருத்தலால்] இப்படிப்பட்ட பொருட் சேர்த்தியையிட்டு அந்தாதித்தொடை பொருந்தலாம் என்பது ஒருவகை நிர்வாஹம். "**மதுவார்**" என்று பாடமின்றியே "**வதுவார்**" என்று பாடமாகக் கொள்வது முண்டாதலால் கீழ்ப்பாட்டில் வகரவீற்றதாக முடித்ததற்குச் சேர இப்பாட்டு வகரமுதலதாகத் தொடங்கப்படுதல் மிகப்பொருந்தும் என்பது மற்றொரு நிர்வாஹம்.

"மதுவார் தண்ணந்துழாயான" என்ற பாடத்தில் தேன் வெள்ளமிடுகின்ற தண்ணந்துழாய்மாலை யணிந்தவன் என்று பொருள்; வதுவார் என்றபாடத்தில் பரிமளம் மிகுந்த தண்ணந்துழாய் மாலையையுடையவன் என்றபடி. "வதுவை என்று மணம்; இங்கே வது என்றது கடைக்குறை" என்பது ஆன்றோர்களின் வியாக்கியானம். மது என்பதுபோலவே வது என்பதும் தேனுக்குப் பேராக வுண்டென்பர் நவீனர்.

"ஒரு வாடல் மாலையைக்கொண்டுவந்து திருக்குழலிலே வளையமாக வைத்தால், திருக்குழலோட்டை ஸ்பர்சத்தாலே செவ்விபெற்று மது நிரம்பிச் சிணையாறுபட்டு வார்ந்து வெள்ளமிடாநிற்கும்" என்ற நம்பிள்ளையிட்டு ஸ்ரீஸூக்திகளின் இனிமை நோக்கத்தக்கது.

முதுவேதமுதல்வனுக்கு = எம்பெருமானை அநுமானம் முதலிய ப்ரமாணங்களாலே ஸாதிக்கிற இதர தர்சநஸ்தர்களைப்போலல்லாமல், ப்ரஹ்மஸூத்ரகாரரான வியாஸர் "சாஸ்த்ரயோநித்வாத்" என்று சாஸ்திரங்களைக்கொண்டே எம்பெருமானை ஸாதிக்கத் தகுந்தவன் என்று நிஷ்கர்ஷித்ததை அடியொற்றி ஆழ்வார் இங்ஙனம் அருளிச்செய்தபடி. "உளன்சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே" என்றார் முதல் திருவாய்மொழியிலும். புராதனங்களான வேதங்களாலே முதல்வனென்று ப்ரதிபாதிக்கப்பட்ட ஸர்வேச்வரனுக்கு என்றபடி.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமானுக்கு **எந் பணி? என் பணி ஏது? என்னாததுவே ஆட்செய்யுமீடு** = நித்ய ஸூரிகளன்றோ அவனுக்குத் தகுதியாக அடிமை செய்யவல்லவர்கள்; அற்பனான நான் செய்யக்கூடிய பணிவிடை உண்டோ என்று நெகிழாததுவே ஆட்செய்கைக்கு அதிகாரமாவது என்றபடி. இத்தால், அடிமைசெய்வது ஸர்வாதிகாரமென்றதாயிற்று.

என்னாத + அதுவே, என்னாததுவே; தொகுத்தல் விகாரம். இயல்பில், **என்னாது** என்று நிறுத்துவது தகுதியற்றதென்க. ... ... (2)

ஈடுமெடுப்புமிலீசன் * மாடுவிடாதென்மனனே *
பாடுமென்னாவவன்பாடல் * ஆடுமெனங்கமணங்கே.* **(3)**

என் மனன்	—	எனது மனமானது	என் நா	—	எனது நாவானது
ஈடும் எடுப்பும் இல்		குற்றம்பார்த்துத் தள்ளிவிடுதலும் குணம்பார்த்துக் கைக்கொள்ளுதலுமில்லாத	அவன்		அந்த ஸர்வேச்வரன் விஷயமான
			பாடல்	—	துதிகளை
			பாடும்	—	பாடுகின்றது;
ஈசன்	—	ஸர்வேச்வரனுடைய	என் அங்கம்	—	எனது உடம்பு
மாடு	—	ஸமீபத்தை	அணங்கு ஆடும்		தைவாவேசங் கொண்டது போல் ஆடுகின்றது.
விடாது	—	விடுகிறதில்லை			

* * * —எமபெருமான் விஷயத்தில் அடிமைசெய்கைக்கு அதிகாரி நியதியில்லையென்று காட்டப்பட்டது கீழ்ப்பாட்டில்; அஃது எதனாலென்ன; அடிமைசெயகையில் விருபப முடையாவாகளை ஜாதி குணம தொழில் முதலியவறறால் நிஹீநரென்று கைவிடும் ஸவபாவம எம்பெருமானுக்கில்லாமையாலே என்கிறது இபபாட்டில்.

ஈடும் எடுப்பும் இல் ஈசன்=இவர்கள நிஹீநஜாதியாகள, இவர்கள் அறிவில்லாத வர்கள, இவர்கள ஒழுக்கமறறவர்கள என்று சிலரை யுபேக்ஷித்தலும், இவர்கள நறகுலத்தவாகள, இவாகள நல்லறிவினர், இவர்கள சிறந்த அநுஷடாந ஸமபந்நர்கள என்று சிலரை அங்கீகரித்தலுமாகிற ஈடு எடுபபுகளில்லாதவன ஸர்வேச்வரன. 'தேவா நாம தாநவாநாஞ்ச ஸாமாநயமதிதைவதம." எனகிறபடியே தேவாகளோடு அசுரர் களோடு வாசியற எல்லார்க்கும பொதுவாகவுளளவன் எனறபடி. இபபடியாகில் "அமராகட்கிடர்கெட அசுரர்கட்கு இடாசெய" என்று அமரரை வாழவிபபதாகவும அசுரரை மாயபபதாகவும சொல்லபபடுகிறதே, இதுவென? எனனில, தேவஜாதி யிலே அநுக்ரஹமும அஸுர ராக்ஷஸ ஜாதியிலே நிக்ரஹமும இயறகையாக எமபெரு மானுக்குக் கிடையாது. அஸுரஜாதியிலே பரஹலாதன போல்வாரும், ராக்ஷஸ ஜாதியிலே விபீஷணன போல்வாரும வாழ்ந்து போகவில்லையா? ஆதலால், எல்லா ருடைய உபயோகத்திறகுமாக அமைத்த தடாகததிலே சிலா தாமாக விழுந்து மடிகிருப போலே அஸுர ராக்ஷஸாதிகளும எமபெருமானாகிற தடாகத்திலே வாழகில்லாது மடிந்துபோவது எமபெருமானுடைய குறறமாகாதெனக. இபபடிபபட்ட ஈசன்மாடு என்மனன் விடாது "மாடு பொன பக்கஞ் செல்வம" எனற நிகணடினபடி, ஈசன்மாடு எனறது ஈசனிடத்திலே எனறபடி. எனமனமானது எபபோதும அவனைவிடடு நீங காது.

இபபோது இது எதறகாகச் சொல்லுகிறாரெனறால், எம்பெருமான் ஆரா தனைக்கு எளியன்' எனபதை ஸம்ஸாரிகளுக்கு விரிவாக உபதேசிக்க ஆரமபித்த தமககு மனமொழி மெயகள ஸவாதீநமாயிருககவேண்டுமே; அபபடியில்லையாகில உபதேசிகக முடியாதே அப்படி உபதேசிகக முடியாதபடி நெஞ்சு ஈசனமாடு குடிகொணடது; நாவும அவனுடைய பாடலிலேயே ஆழ்ந்தது; சரீரமும அவவிஷயத்திலேயே ஆவேசங கொணடது; இனிஎன்ன வுபகரணங்கொண்டு உஙகளுககு உபதேசிபபே னெனறவாறு

"சூருமணங்குந் தெய்வப பெணணே" எனபது நிகண்டு. 'அணங்காடும்' என்றது அணங்குபோல் ஆடும எனறவாறு. . ... (3)

அணங்கெனவாடுமெனங்கம் * வணங்கிவழிபடுமீசன் *
பிணங்கியமரர்பிதற்றும் * குணங்கெழுகொள்கையினனே. * ... (4)

அணங்கு என ஆடும்	தைவாவேசங் கொண்டாற் போல ஆடுகின்ற	அமரர்	நித்தியஸூரிகள்
என் அங்கம்	எனது சரீரம	பிணங்கி	பரஸ்பரவிவாதம் செய்து
வணங்கி வழி படும்	சேவித்து ஆராதிக்கும்படி நின்ற	பிதற்றும்	பிதற்றுமபடியாயுள்ள
ஈசன்	எம்பெருமான் (எப்படிப்பட்டவனென்றால்)	குணம் கெழு	பல திருக்குணங்கள் பொருந்திய
		கொள்கையினன்	கோட்பாட்டை யுடையவன்.

* * *—இப்பாட்டுக்கு இரண்டுவகையாக அந்வயக்ரமமுண்டு; [பதவுரையின்படியே] பாசுரத்தை உள்ளபடியே அந்வயித்துப பொருள்கொள்வது ஒன்று; பிணங்கி யமரர் பிதற்றுங் குணங்கெழு கொள்கையினனை ஈசனை, அணஙகென ஆடும் என் அங்கம், வணங்கி வழிபடும் எனறு கொளவதுமன்றொனறு. இப்பொருளில், ஈசன் என்றது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

தம்முடைய மனமொழி மெய்களுக்கு எமபெருமான் பக்கலிலுண்டான ஊற்றம் சிறிதுபோது உண்டாய்விடுகையன்றியே நித்யஸூரிகளுக்குப்போலே நிரந்தரயாத்ரை யானபடி சொல்லுகிறது இபபாட்டு.

[பிணங்கியித்யாதி] எமபெருமானது குணஙகளிலே புகுந்துவிட்டால் ஒவ்வொரு குணத்தினுடைய அதிசயமும எலலைகாண வொண்ணாததாயிருக்கும்; பரத்வத்திறகு ஈடான குணஙகளும, ஸௌலபயத்திறகு ஈடான குணஙகளுமாக வகுக்கபபட்டுளள குணஙகளிலே ஒருவர் ஒரு குணத்தை அநுபவிதது அதன அருமைபெருமைகளைச் சொல்லிக்கொண்டாட, மறறொருவா மற்றுமொரு குணத்தையனுபவித்து அதன அருமைபெருமைகளையெடுத்துரைததுக் கொண்டாட, இஙஙனே வாதவிவாத கலஹங்கள ஏற்படடுவிடும.

ஆறுயிரபபடியில் பிளளானருளிச்செயலை நோக்குமிடத்து "கொள கலனே" என்பதாகப் பாடம் புலபபடும் கலம எனினும கலன் எனினும ஒக்கும்; மகரனகரப் போலி. பாத்திரம என்றபடி. ... . (4)

கொள்கைகொளாமை யிலாதான் * என்கலிராகமிலாதான் *
விள்கைவிள்ளாமைவிரும்பி * உள்கலந்தார்க்கோரமுதே. * ... (5)

கொள்கை	குணம்பார்த்துக கொள்ளுதலும்	விள்கை	வேறு பிரயோஜனங்களைக் கொண்டு விலகிப் போவதையும்
கொளாமை	குணமில்லாமை பார்த்துத் தள்ளுதலும்	விள்ளாமை	(தன்னையே விரும்பி) விடாதிருப்பதையும
இலாதான்	– இலலாதவனாய்	விரும்பி	– எதிர்பார்த்து
எள்கல்	கைவிடுகைககு அடியான மனநெகிழ்ச்சியும்	உள் கலந்தார்ககு	(விண்டுபோகாமல்) தன்னில் கலந்தவர்கட்கு
இராகம்	கைக்கொள்ளுதற்கு அடியான ஆசையும்	ஓா அமுது	– ஒப்பற்ற அமுதமாயிருப்பன்.
இலாதான்	– இல்லாதவனாய்,		

* * * — நமக்கு 'அநந்ய போக்யதவம்' எனபதாக ஒரு ஸ்வரூபமுண்டு; அதாவது, எம்பெருமானைத தவிர்த்து மறற அறப பலனகளை விரும்பாமல் அவனையே பரம போக்ய வஸ்துவாககொணடு அவனையே ஆசைபபடுவதாம. இப்படிபபட்ட அதிகாரிகள விஷயத்திலே அவன அமுதமாகவேயிருபபன எனகிறது தன்னைவந்து பணிகின்ற அதிகாரிகளைத் தான பரீக்ஷித்துப்பாாபபன்; இவாகள ஏதேனும் க்ஷுத்ரபலனகளைப் பெறறுககொணடு நெகிழ்ந்து போய்விடுகிறவர்களா? அல்லது அவறறில் நசையற்று நமமையே பரமபரயோஜநமாகப பறறுகிறவர்களா? என்று பார்ப்பன; அகனறு போகிறவர்களாயிருந்தால், க்ஷுத்ரபலனகளைத்தந்து அவர்களை அகறறிவிடுவன்; அஙஙனல்லாதவர்களுககுத்தானே முறறூட்டாக இருபபன்.

கீழே "ஈடுமெடுப்புமிலீசன்" என்றதற்கும், இங்கு கொள்கை கொளாமை யிலாதான்" என்பதற்கும் என்ன வாசியெனனில்; அடியவர்களில் ஏற்றத்தாழ்வுபாராதே ஆசையுடையாரெல்லாரையும் அடிமைப்படுத்திக்கொள்ளு மியல்வினன் என்பது அந்தப் பாசுரத்திற்கு விவக்ஷிதம்; அப்படி அடிமைப்படுத்திக்கொள்ளுமளவில் சிலரிடத்தே உயர்த்தி கண்டு அவர்களை அந்தரங்க கைங்கரியத்திலே ஏவிக்கொள்ளுதல் சிலரிடத்தே தாழ்வுகண்டு அவர்களை பஹிரங்க கைங்கரியத்திலே ஏவிக்கொள்ளுதல் என்னும்படியான வாசிவையாதவன் என்பது இவ்விடத்திற்கு விவக்ஷிதம் — என்று பிள்ளான் ஆறாயிரத்திலே பணித்தபடி.

எள்கல் இராகமிலாதான் = எள்கலாவது உபேக்ஷை, இராகமாவது அபேக்ஷை; இவை யிரண்டுமில்லாதவன், கைங்கரியங்கொள்ளுகிறவிஷயத்தில் வாசிவையாமை மாத்திரமன்று; திருவுள்ளத்திலேயே உபேக்ஷையும் அபேக்ஷையுமில்லாதவன் என்றவாறு. இங்கே நம்பிள்ளையீடு:—"திருவுள்ளத்தாலே சிலரை இகழ்ந்திருத்தல் சிலரை ஆதரித்தல் செய்யான்; * ஈடுமெடுப்புமிலீசன் * என்றவிடம் ஸ்வீகார ஸமயத்தில் குணதோஷங்களை பாரானென்றது, இங்கு பரிமாற்றத்தில் தரமிட்டுக்கொள்ளா னென்கை."

வீள்கைவிள்ளாமைவிரும்பி உள்கலந்தார்க்கு ஓரமுது = எம்பெருமான் பார்ப்பது இவ்வளவே; 'இவர்கள் பிரயோஜனாந்தரங்களை விரும்பிப் பெற்றுக் கொண்டு நம்மை விட்டு ஓடிப்போகிறவர்களா? அன்றி, நம்மையே விரும்பி விடாதிருப்பவர்களா? என்கிற இவ்வளவையே ஆராய்ந்துபார்த்து, தன்னையே பிரயோஜனமாகப்பற்றித் தன்னுடனே ஒரு நீராகக் கலக்க விரும்பியிருப்பவர்களுக்கு * அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே * என்னும்படியாயிருப்பன்.

பகவத்கீதையில், "தோஷாம ஸததயுக்தாநாம" என்றவிடத்தில், "எப்போதும் தன்னோடு கூடியிருப்பவர்களுக்கு' என்பது பொருளாயிருக்கச்செய்தேயும் [**ஆசம்ஸாயாம் க்தப்ரத்யயமாகக்கொண்டு**] 'எப்போதும் தன்னோடு கூடியிருக்க விரும்பியிருக்குமவர்களுக்கு' என்று ஸ்ரீபாஷ்யகாரர்கள் பொருள் பணித்தபடியே இங்கும் **உள்கலந்தார்க்கு** என்பதற்கு 'உள்கலக்க விரும்பியிருக்குமவர்கட்கு' என்ப பொருள்கொள்ளுதல் பொருந்தும். ... . (5)

அமுதமமரர்கட்கீந்த * நிமிர்சுடராழிநெடுமால் *
அமுதிலுமாற்றவினியன் * நிமிர்திரைநீள்கடலானே. * (6)

அமரர்கட்கு	— தேவர்கட்கு	நிமிர் திரை நீள் கடலான்	அலை யெறிகின்ற விசாலமான திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளின
அமுதம் ஈந்த	அமிர்தத்தைக் கொடுத்தவனாய்	அமுதிலும்	(அக்கடலிலுண்டான) அமிர்தத்தைவிட
நிமிர் சுடர் ஆழி	வளர்கின்ற ஒளியையுடைய திருச்சக்கரத்தையுடையனாய்	ஆற்ற இனியன்	— மிகவும் போக்யன்.
நெடு மால்	எல்லைகடந்த பெருமையை யுடையனுமாய்க் கொண்டு		

* * * — கீழ்ப்பாட்டில் * விள்கைவிள்ளாமை விரும்பி * என்று சொன்ன சொற்போக்கிலே பிரயோஜநாந்தரபரர்கள் ப்ரஸ்தாவிக்கப் பட்டமையால், ஐயோ! உளகலந்தார்க்கு ஓரமுதாயிருக்கும் எம்பெருமானை விட்டுப் பிரயோஜநாந்தரபரர்களாய் ஆபாஸமான அமுதத்தைப் பெற்றுக்கொண்டு விலகிப்போவாரும் சிலரே! என்று தேவர்களை நிந்திப்பதிலே நோக்காகச் சொல்லுகிறது இப்பாட்டு. ஆறாயிரப்படி யருளிச்செயல் காண்மின்;— "அமருதத்திற்காட்டிலும் பரமபோக்யனாயிருந்தவனுடைய திருவாழியுங் கையுங்கண்டுவைத்தும் சிலர் அதி க்ஷுத்ரமான ப்ரயோஜநாந்தரங்களைக்கொண்டு போவதே! என்ன பாக்யஹீநரோ! என்று கொண்டு கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதமான ப்ரயோஜநாந்தராத்திகளிழவை அநுஸந்தித்து இன்னாதாகிறார்." என்று.

தேவர்களின் நிந்தை இதில் ஸ்பஷ்டமாக இல்லையாயினும் "அமுதமமரர்கட்கீந்த" என்று எம்பெருமானைக் கொண்டாடுவதில் அவர்களது நிந்தையே உள்ளுறைவதென்க. எம்பெருமான் என்ன பரமோதாரனோ!, 'எங்களுக்கு நீ வேண்டா; சாவா மருந்து தந்தாற்போதும்' என்றவர்களுக்கு அவர்கள் விரும்பிய பொருளையே கொடுத்துவிடுவதே! என்று கொண்டாடிச் சொல்லுகிற பாசுரம் முதலடி. அவர்கள் கொண்ட பிரயோஜநத்தை அருவருத்து, தாம் உகந்த பரமப்ரயோஜநமான எம்பெருமானுடைய பரம போக்யதையை அநுபவிக்கிறார் மற்றையடிகளால். ... (6)

நீள்கடல்சூழிலங்கைக்கோன் * தோள்கள்தலை துணிசெய்தான் *
தாள்கள்தலையில்வணங்கி * நாள்கடலைக்கழிமினே. * ... ... **(7)**

நீள் கடல் சூழ்	—நீண்ட கடலினால் சூழப்பட்ட	**துணிசெய்தான்**	அறுத்தொழித்த ஸ்ரீராமபிரானுடைய
இலங்கை	— லங்காபுரிக்கு	**தாள்கள்**	— திருவடிகளை
கோன்	தலைவனாயிருந்த இராவணனுடைய	**தலையில் வணங்கி**	— தலையாலே வணங்கி
தோள்கள்	— இருபது தோள்களையும்	**நாள் கடலை**	— காலமாகிய கடலை
தலை	— பத்துத் தலைகளையும்	**கழிமின்**	— தாண்டுங்கள்.

* * * — இங்ஙனம் பரமபோக்யனான எம்பெருமானுடைய குணங்களை அநுபவித்துக் கொண்டு போதுபோக்குவதே ப்ராப்தமென்கிறதிதில்.

"பரந்தகடலை அகழாகவுடைத்தாய், அந்தக் கடல்தானும் மிகையாம்படியான அரணையுடைத்தாயிருந்துள்ள இலங்கைக்கு அதிபதியன்றோ நான்!" என்று கொண்ட செருக்கினால் சக்ரவர்த்தி திருமகனென்று மதியாதே எதிரிட்ட பயலுடைய தோள்களையும் தலையையும் துணித்த மஹாத்துக்கிரிய இராமபிரானுடைய திருவடிகளை வணங்கி, [அதாவது, அநுமானைப்போலே அவனுடைய வீர சரிதங்களைக்கொண்டு போதுபோக்கி] ஸம்ஸார நிலத்திலிருக்கும் வரையில் கடல்போலே பெருகிச் செல்லுகின்ற நாள்களைத் தொலையுங்கோள் என்றாராயிற்று.

ஈற்றடியில், "நாட்கடலை" என்ற ஸ்தானத்தில் 'நாழக்கடலை' என்றும் பாடமுண்டாதலால், **நாழ்** என்று பாபமாய், பாபமாகிற கடலைக் கழியுங்கோள் என்றபடியாகவுமாம். ... ... (7)

கழிமின்தொண்டீர்கள்! கழித்து * தொழுமினவனைத்தொழுதால் *
வழிநின்றவல்வினைமாள்வித்து * அழிவின்றியாக்கந்தருமே. * ... (8)

தொண்டீர்கள்	— தொண்டர்களே!	வழி நின்ற	ஜன்ம பரம்பரையாய்த் தொடர்ந்துநின்ற
கழிமின்	விஷயாந்தர ஸங்கத்தைக் கழித்துவிடுங்கள்	வல் வினை	— வலிய பாவங்களை
கழித்து	— அதனை கழித்துவிட்டு	மாள்வித்து	— ஒழித்து
அவனை	— அப்பெருமானை	அழிவு இன்றி	— சாசவதமான
தொழுமின்	— தொழுங்கள்;	ஆக்கம்	— முக்திஸம்பத்தை
தொழுதால்	— தொழுதமாத்திரத்திலே (அவன்)	தரும்	— தந்தருள்வன்.

* * * — ஸ்ரீராமபிரானுடைய வீரசரிதத்தை யநுஸந்தித்து இதர விஷயப்பற்றுகளைத் தவிரவே, அவன்றானே இடையூறுகளைப் போக்கி நித்ய கைங்கரியத்தைத் தந்தருளவல்லனென்கிறார். தொண்டீர்கள்! கழிமின் = தொண்டு பூண்டு அமுதமுண்ண விரும்பியிருப்பவர்களே! புறம்புண்டான பற்றுக்களில் நசையைத் தவிருங்கோள்; அங்ஙனம் தவிர்ந்து அப்பெருமானைத் தொழுங்கோள், அங்ஙனம் தொழுதால் இவ்வாத்மாவோடே பொருந்தியிருக்கின்ற பிரபல கருமங்களை வாஸனையோடே போக்கி மீட்சியற்ற செல்வமாகிய மோக்ஷ புருஷார்த்தத்தை அவன்றானே கொடுத்தருளக் குறையில்லை யென்றாராயிற்று. ஆக்கம்—ஸம்பத்து. .. .. (8)

தருமவரும்பயனாய * திருமகளார்தனிக்கேள்வன் *
பெருமையுடையபிரானார் * இருமைவினைகடிவாரே. * ... ... (9)

அ அரு பயன் ஆய	அப்படிப்பட்ட அருமைப்பயனான புருஷார்த்தத்தை	பெருமை உடைய பிரானார்	(லக்ஷ்மீ ஸம்பந்தத்தாலே) மேன்மையையுடைய (அந்த) ஸர்வேச்வரன்
திருமகளார் தனி கேள்வன்	பெரிய பிராட்டியார்க்கு ஒப்பற்ற நாயகனாய்க்கொண்டு [பிராட்டியோடுகூடி நின்று]	இருமை வினை	இருவகைப்பட்ட (புண்யபாபரூபமான) கருமத்தை
தரும்	— தந்தருள்வன்;	கடிவார்	— போக்குவான்.

* * * — எம்பெருமான் தன்னைப்பற்றின மாத்திரத்திலே இப்படி இடையூறுகளையெல்லாம் போக்கிப் பரம புருஷார்த்தத்தையும் தந்தருளக்கூடுமோவென்னில், பிராட்டி அருகேயிருக்கும்போது எதுதான் செய்யக்குறை? என்கிறார்.

முதலடியை, தரும் அவ்வரும்பயனாய என்றும், தரும அரும்பயனாய என்றும் இருவகையாகப் பிரித்துப் பொருள் கூறுவர். ஆசார்யஹ்ருதயத்தில் (4-1) * பரபரனாய்நின்ற * என்ற சூர்ணிகையில் "தொழுதால் அரும்பயனாய தரும்" என்றருளிச்செய்திருப்பதும் இங்கு நினைக்கத்தக்கது. அ + அரும்பயனாய, அவ்வரும்பயனாய என்று சந்தியாகவேண்டுமிடத்து "அவரும்பயனாய" என்று ஆனது தொகுத்தல் விகாரமெனக. பெறமுடியாததாக சாஸ்திரங்களிலே ப்ரஸித்தமாகவுள்ள புருஷார்த்தங்களைத் தந்தருள்வன் என்றபடி.

இனி, மறறைபபடியான பதவிபாகத்தில் * தருமவருமபயனாய * என்பது திருமகளார்க்கு அடைமொழியாகும். தருமத்தினுடைய பரமபரயோஜனமே ஒரு வடிவு கொண்டாபபோலே யிருக்கிற பெரியபிராட்டியார்க்குத் தனிக்கேள்வன் என்றபடி. "லக்ஷ்மயா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா, ரக்ஷகஸ் ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே." என்கிற ஸ்ரீபாஞ்சராத்ர வசனம இங்கு அநுஸந்திக்கத்தகும். "தேவ்யா காருண்யரூபயா லக்ஷ்ம்யா" என்றதன கருததே * தருமவரும பயனாய திருமகளார * என்பதில் உறையுமெனக.

இருமைவினைகடிவார் = பாபத்திற்காட்டிலும புண்ணியம நன்றாயிருந்ததேயாகிலும் மோக்ஷமார்க்கத்திறகு இடையூறாகும் திறத்தில் இரண்டும ஒக்குமாதலால் புண்ய பாபஙகளிரணடுமே தொலையககடவனவாம. புண்ணியஙகளுக்குப பலனாக ஸ்வர்க்கா நுபவம முதலிய ஆபாஸ புருஷார்த்தஙகள கிடைக்கும், பாவஙகளுககுப பலனாக நரக வேதனைகள கிடைககும; பரம புருஷார்த்தத்தை விரும்பி நிற்பார்க்கு ஸ்வாகக நரகங் களிரண்டும பரியாயமாதலால் புணய பாபஙகளிரண்டும தொலையவேணுமென்று சாஸ்திரம சொல்லி நின்றது என்றுணர்க. இந்த சாஸ்த்ரார்த்ததனத ஸ்ரீமங்கிமாந்த மஹா தேசிகனும வரதராஜ பஞசாசத்தில "ஸத்யஸ த்யஜந்தி வரத! த்வயி பத்தபாவா: பைதாமஹாதிஷு பதேஷ்வபி பாவபந்தம், கஸ்மை ஸ்வதேத ஸுகஸஞ்சரணோத்ஸுகாய காராகருஹே கனகசருஙகலயாபி பந்த:?" என்ற சலோகத்தினால் உரைத் தருளினர். புண்ணியம பொனவிலஙகுபோன்றது, பாவம இருமபு விலஙகுபோனறது எனபது இந்த சலோகத்தின தோந்த கருத்து. யதேஷ்டமாக ஸஞசரிகக விருமபு கின்றவர்களை இருமபு விலஙகினால் கட்டிவைத்தாலென்ன? பொன விலஙகினால கட்டி வைத்தாலென்ன? இரண்டும துககஹேதுவேயாகு மென்றவாறு.

இஙகே நமபிள்ளை யீடு காண்மின,—

"[இருமைவினைகடிவாரே] போவாசியேயாமபடி நாம் பணணிவைத்த இருவகைப் பட்ட கர்மஙகளையும போககுவார், புணய பாவங்களுக்குத தனனில்தான வைஷம்ய முண்டேயாகிலும மோக்ஷ விரோதிதவாத் தயாஜ்யமாகச் சொன்னவிதே." ... (9)

கடிவார்தீயவினைகள் * நொடியாருமளவைக்கண் *
கொடியாவடுபுள்ளுயர்த்த * வடிவார்மாதவனாரே. * ... **(10)**

அடு	— பகைவரை அழிக்கின்ற	மாதவனார்	— லக்ஷ்மீபதியானவர்
புள்	— கருடப்பறவையை	தீய வினைகள்	— கொடிய பாவங்களை
கொடி ஆ உயர்த்த	— த்வஜமாக எடுத்தவரும	நொடி ஆரும் அளவை கண்	— ஒரு கொடிப் பொழுதிற் குள்ளே
வடிவு ஆர்	விலக்ஷணமான திவ்யமங்கள விக்ரஹத்தையுடைய வருமான	கடிவார்	— போக்கியருள்வார்.

* * * — எமபெருமான பிராட்டியோடுகூடி அடியார்க்குக் காரியஞ் செயதருளவது தாமதமாக நடைபெறுமோ என்ன; இல்லை, ஒரு நொடிபபொழுதிலே நடைபெறு மென்கிறது இபபாட்டு. இத் திருவாயமொழியில * வழிநின்றவல்வினைமாளவித்து * இருமை வினை கடிவார * கடிவார் தீயவினைகள * என்ற மூன்று இடஙகளில் எமபெருமான நமது பாவங்களைத் தொலைத்தருளவனெனபது சொல்லபபட்டிருக்கின்றது; இவை புநருக்தியாகாது; ஒவவோரிடததிறகும ஒவ்வொரு அம்சத்திலே நோக்கு;

எங்ஙனேயென்னில்; ஆச்ரயித்தவர்கள் விஷயத்திலே இக்காரியஞ் செய்தருள்வது என்பது * **வழிநின்ற வல்வினைமாள்வித்து** * என்ற விடத்திற்கு விவக்ஷிதம்; பிராட்டியின் புருஷகாரமடியாக அக்காரியஞ் செய்தருளவனென்பது * **இருமை வினை கடிவாரே** * என்ற விடத்திற்கு விவக்ஷிதம்; அது செய்வது ஒரு நொடிப்பொழுதிலே என்பது இப்பாட்டிற்கு விவக்ஷிதம் என்று வாசிகாண்க.

இங்ஙனே மூன்று விஷயங்கள் விவக்ஷிதமானல், இம்மூன்றையுஞ் சேர்த்து ஒரு பாசுரமாகவே அமைத்துவிடலாகாதோ? என்று சிலர் சங்கிக்கக்கூடும்; அநுபவப்ரகாரங்களிலே போகிற போக்குக்கள் ஆழ்வாருடைய திருவுள்ளத்திற்குந் தெரியாதவையன்றோ? 'இப்படி அமைக்கவேணும்' என்று ஒரு எண்ணத்தோடே ஆழ்வார் பாசுரமமைக்கின்றாரல்லரே; ஆதலால் இந்த சங்கைக்கு உதயமேயில்லை.

"கொடியா அடு புள்ளுயர்த்தவடிவார் மாதவனார் நொடியாருமளவைக்கண் தீய வினைகள் கடிவார்" என்று அந்வயிப்பது. பின்னடிகளில் பெரிய திருவடியின் ப்ரஸ்தாவம் வந்திருப்பது 'பெரிய திருவடியை அடிமைகொள்ளுமாபோலே நித்ய ஸம்ஸாரிகளான நம்மையும் அடிமை கொள்வன்' என்கிற கருத்தைக் காட்டுவதற்காகவென்று திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவுள்ளம் பற்றுகிறார். "பிராட்டியோடே கூடநின்று, பெரிய திருவடிக்குக் கொடுத்தருளுமாபோலே தந்தருளும்" என்பது ஆறாயிரப்படியருளிச்செயல். இக்கருத்துப் பொலியவே ஆழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்திலே—"ய: சச்சிதேவ யதி கிஞ்சந ஹந்த ஜந்து: பவயோ பஜேத பகவந்தம் அநந்யசேதா:, தம ஸோயமீத்ருச இயாநிதி வாபயஜாநந் ஹைஹ வைந தேயஸமமபி உரீகரோஷி." என்று ஒரு ச்லோகமருளிச்செய்தார். அன்று வந்து பணிந்த ஒரு அடியானைக் கைக்கொள்ளுமிடத்து, நித்யஸூரிகளில் தலைவனான பெரிய திருவடியோடு ஒக்கக் கைக்கொள்ளுகிறானென்பது இந்த ச்லோகத்தின் கருத்து.

மாதவனாரே என்ற விடத்திற்கு நம்பிள்ளையீடு காண்மின்;—"பிராட்டி அருகேயிருந்து போக்குவிக்கவாயிற்று போக்குவது; ஒருதலை ஜந்மம்; ஒருதலை மரணம்; நடுவே ஆதிவ்யாதிகள், இவை செய்த குற்றங்களைப் பார்க்கக்கடவதோ? குற்றங்கண்டுவிடில் விபூதியாக விடவேண்டிவாராதோ? பொறுத்தருளீர்' என்றால், அவளுக்காகப் பொறுத்தோமென்னுமித்தனை." ... . (10)

மாதவன்பால் சடகோபன் * தீதவமின்றியுரைத்த *
ஏதமிலாயிரத்திப்பத்து * ஓதவல்லார்பிறவாரே. * .. **(11)**

சடகோபன்	— ஆழ்வார்	ஏதம் இல் ஆயிரத்து	வழுவற்ற இத்திருவாய்மொழியாயிரத்தில்
மாதவன் பால்	லக்ஷ்மீநாதனான எம்பெருமான் பக்கலில் (பக்தியுக்தராய்)	இ பத்து	— இப் பத்துப்பாசுரங்களையும்
தீது அவம் இன்றி உரைத்த	தனது மேன்மையைப் பார்த்து உதாஸீநனாயிருத்தல், அடியாருடைய குற்றங்களைப் பார்த்துக் கைவிட்டொழிதல் ஆகிற இருவகைக்குற்றமும் எம்பெருமானுக்கு இல்லையென்பதை யெடுத்துரைத்த	ஓத வல்லார்	(குருமுகமாக) அதிகரிக்க வல்லவர்கள்
		பிறவார்	மீண்டும் பிறந்து வருந்த மாட்டார்கள்.

* * *—இத் திருவாய்மொழியை ஓதவல்லவர்கள் மீண்டும் இந்த ஸம்ஸாரநிலத்தில் வந்து பிறக்கப் பெறார்களென்று பயன்சொல்லித் தலைக்கட்டுகிற பாசுரமிது.

இப் பாட்டில், **தீது அவம் ஏதம்** என மூன்று சொற்கள் உள்ளன; குற்றம் என்பதே மூன்றுக்கும் பொருள். மூன்று விஷயங்களுக்குக் குற்றமில்லாமை சொல்லப்படுகின்றது, அதாவது—கவிபாடுகிற தமக்கும் பாட்டுண்கிற எம்பெருமானுக்கும் இக் கவிகளுக்கும் ஒரு தீங்குமில்லாதபடி மாதவன்பால் சடகோபனுரைத்த ஆயிரம் என்பதாக. ப்ரமாணமாகிய இத் திருவாய்மொழியும் ப்ரமேயனான எம்பெருமானும் ப்ரமாதாவான ஆழ்வார் தாமும் குற்றமற்றிருக்கின்றமையைச் சொன்னவாறு. இது ஆறாயிரப்படியில் பிள்ளான் அருளிய நிர்வாஹம்.

இங்கே பட்டர் விலக்ஷணமாக அருளிச்செய்வராம்; எங்ஙனேயென்னில்; **ஏதமிலாயிரம்** என்று இப் ப்ரபந்தத்தைக் குற்றமற்றதாகச் சொன்னபோதே ப்ரபந்த ப்ரதிபாத்யனுக்கும் ப்ரபந்தவக்தாவுக்கும் குற்றமில்லாமை சொன்னதாகவே தேறிவிடும்; அவை தனிப்படச் சொல்லவேண்டா; ஆகவே "**தீதுஅவம் இன்றி**" என்பதற்கு வேறு தாற்பரிய மிருக்கத்தகும்; அதாவது— "மாதவன் பால் தீதவமின்றியுரைத்த" = எம்பெருமானுக்கு இரண்டுவகையான குற்றம் ஸம்பாவிதமாகலாம்; தன்னுடைய மேன்மையைப் பார்த்து ஆச்ரிதர்களைக்கைவிடுதல், ஆச்ரிதர்களின் நீசத்தன்மைகளைப் பார்த்துத் தான் ஒதுங்கிநிற்றல் என்கிற இவ்விரண்டு குற்றங்களும் எம்பெருமானுக்கு இல்லையென்பதைச் சொன்னவிப்பத்து என்க. 'எம்பெருமான் ஆராதனைக்கு எளியன்' என்று சொன்னதுதான் இது. ... ... (11)

ஆறாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி முதற்பத்து ஏழாந் திருவாய்மொழி—பிறவித்துயர.

அவதாரிகை. கீழ்த் திருவாய்மொழியில் எம்பெருமான் ஆராதனைக்கு அரியனல்லன், மிகவும் எளியன் என்பதை அருளிச்செய்தார். ஆராதனம் எளிதாயிருந்தாலும் ஆச்ரயணம் இனிதாயிருந்தாலன்றோ நெஞ்சு பொருந்தும்; உலகில் பலபேர்கள் நாம் இட்டதுகொண்டு பரம் தருப்தியடையுமவர்களாய ஆராதனைக்கு எளியராயிருக்கக்கூடும்; இருந்தாலும் அவர்களுடைய ஆச்ரயணம் நமக்கு இனிமைமிக்கதாயிருந்தாலன்றிப் பயனில்லையன்றோ: அப்படியே எம்பெருமானும் ஆராதிக்க எளியனானாலும் ஆச்ரயணத்தில் ஸாரஸ்யமுடையனா யிருக்கவேண்டுமென்றெரன்று உண்டாதலால் அஃது அப்படியே உண்டென்பதை இத் திருவாய்மொழியிலருளிச்செய்கிறார்.

"பகவத் ஸமாச்ரயணமாகிறதுதான் இதுக்கு இட்டுப் பிறவாத ஸர்வேச்வரனும் ஆசைப்படும்படி போகரூபமாயிருப்பதொன்றிறே" என்பது நம்பிள்ளையருளிச்செயல்.

தன்னுடைய வைலக்ஷண்யத்தை எம்பெருமான் தானும் பார்த்துத் தனக்குத்தானே அடிமைசெய்துகொள்ள விரும்பும்படியாயிருக்குமென்று ஒரு அதிசயோக்தியாக இது அருளிச்செய்தபடி. 'இப்படியும் இருக்குமா? எம்பெருமான் அவ்வளவு உன்மத்தனோ?' என்று சிலர் நினைத்துவிடக்கூடும்; 'எம்பெருமானுடைய இனிமை ஒப்புயர்வற்றது' என்று காட்டுவதில் மாத்திரம் இந்த ஸ்ரீஸூக்தி நோக்குடையதென்று கொள்க.

அதற்கு ஸம்வாதமாக பட்டருடையவும் வேதாந்ததேசிகனுடையவும் இரண்டொரு ஸ்ரீஸூக்திகளைக் காட்டுகிறோம், காண்மின்;— பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ பூர்வசதகத்தில், "அக்ரே தார்க்ஷ்யேண பச்சாத் அஹிபதி சயநே நாத்மநா பார்ச்வயோச்ச ஸ்ரீபூமிப்யாமத்ருப்த்யா நயந சுளகநைஸ் ஸேவ்யமாநாமருத்தௌகம்." என்றருளிச்செய்தார்; உத்ஸவமூர்த்தியாகிய நம்பெருமாளை மூலமூர்த்தியாகிய பெரியபெருமாள் பின்புறத்திலும் பெரிய திருவடி முன்புறத்திலும் திருமடந்தை மண்மடந்தைகள் இரண்டருகுமிருந்துகொண்டு எவ்வளவு அநுபவித்தாலும் த்ருப்தி பிறப்பதேயில்லையென்பது இதன் கருத்து. எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹாநுபவம் பிறர்க்கு எப்படி ஸ்ப்ருஹணீயமோ அப்படி ஸ்வாத்மாவுக்கும் ஸ்ப்ருஹணீயமாயிருக்குமென்பது விளங்க இதில் * **அஹிபதிசயநே நாத்மநா** * என்னப்பட்டது.

வேதாந்ததேசிகன் பாதுகாஸஹஸ்ரத்தில்— "மநுஜத்வ திரோஹிதேந சக்யே வபுஷைகேந விரோதிநாம் நிராஸே, அபஜத் பரதாதி பேதமீச: ஸ்வயமாராதயிதும் ஹி பாதுகே! த்வாம்." என்றருளிச்செய்கிறார். எம்பெருமான் மானிடவுருக்கொண்டு சக்ரவர்த்தி திருமகனாய்த் திருவவதரித்தது விரோதிநிரஸநத்திற்காகவாகில் நரஸிம்ஹாவதாரம் முதலான அவதாரங்களிற்போலே தான் ஒருவனாகவே அவதரித்துக் காரியம் நிறைவேற்றியிருக்கலாம், அப்படி ஒருவனாக அவதரியாமல் பரதாழ்வான் முதலானோராகவும் தன்னை வகுத்துக்கொண்டு திருவவதரித்தது எதற்காகவென்னில்; தனக்கும் பரமபோக்யமான தன்னுடைய பாதுகையைத் தானே ஆராதிக்கவேணுமென்று தனக்கு ஆசையுண்டாயிற்று; தானே ஸாக்ஷாத்தாக ஆராதித்தால் உலகம் ஏசுமே என்றெண்ணித் தம்பியாக வேறுருக்கொண்டு ஆராதித்தானத்தனை என்பது இந்த ச்லோகத்தின் தாற்பரியம்.

ஆக இவற்றால் எம்பெருமானுடைய படிகள் எம்பெருமான்றனக்கும் பரமபோக்யமாயிருக்குமென்பது விளங்கும். இத்தகைய தாஸ போக்யதையே இத் திருவாய்மொழியில் பிரதிபாதிக்கப்படுகின்றதெனக. * தூயவமுதைப் பருகிப்பருகி இத்யாதிகள் இத்திருவாய்மொழிக்கு உயிர்நிலையாயிருக்கும். (*)

> பிறவித்துயரற ஞானத்துள்நின்று *
> துறவிச்சுடர்விளக்கம் தலைப்பெய்வார் *
> அறவனை ஆழிப்படை யந்தணனை *
> மறவியையின்றி மனத்து வைப்பாரே. * ... ... (1)

பிறவி துயர் அற { ஜநநமரணங்களினால் வரும் துன்பம் மாத்திரம் நீங்குகைக்காக | ஞானத்துள் நின்று { ஆத்மாவலோகநமாகிற கைவல்யோபாஸநத்தில் ஊன்றி

துறவி சுடர் விளக்கம் தலைப்பெய்வார்	ஸகல உபாதிகளையும் விட்டவனான ஸ்வயம் ப்ரகாசனான ஆத்மாவினுடைய ஸாக்ஷாத்காரத்தைப் பெறவிரும்புகின்ற கைவல்யார்த்திகள்,	அந்தணனை	பரம பரிசுத்தனாயுமிருக்கின்ற எம்பெருமானை
அறவனை	— பரமதார்மிஷ்டனாயும்	மறவியை இன்றி	(தாம் விரும்பிய பலனில்) மறப்பில்லாமல்
ஆழி படை	திருவாழியாழ்வானை ஆயுதமாகவுடையனாயும்	மனத்து வைப்பார்	உபாஸிக்கின்றார்களே[1].

* * * —எம்பெருமானுடைய போக்யதையை ஆழ்வார் தாம் தமது திருவுள்ளத்தினால் முற்றும் அநுபவித்து அதனை வாய்விட்டுப் பாசுரமிட்டுப் பேசுவதற்கு முன்னே, இங்ஙனம் பரம போக்யமானவனை ஆச்ரயித்து வைத்து அந்தோ! அற்ப பலனாகிய கைவல்யத்தை அபேக்ஷிப்பதே! என்று கேவலர்களை நிந்தித்து, ‘அவர்களுடைய புன்மையைப் பாராதே அவர்கள் அபேக்ஷித்ததைக் கொடுப்பதே!’ என்று எம்பெருமானது நீர்மையைக்கண்டு வியந்து கூறுவது இப்பாட்டு.

கீழே * வளவேழுலகில் “செடியாராக்கையடியாரைச் சேர்தல் தீர்க்குந் திருமாலை” என்றவிடத்து விரிவுரையை நோக்கி இவ்விடத்தையும் நோக்கினால் அந்தோ! ஈதென்ன பரஸ்பரவிருத்தமான வார்த்தை! என்று நாம் நினைக்க நேரும்; அங்கே கைவல்யார்த்திகளை உயரத்தூக்கிவைத்துப் பேசியுள்ளார்; இங்கு அவர்களைக் கீழேதள்ளி நிந்தித்துப் பேசுகிறார்; இவை எங்ஙனே பொருந்தும்? என்று சங்கிக்கலாம்;, அந்த ப்ரகரணத்திற்கு அது பொருந்தும்; இந்த ப்ரகரணத்திற்கு இது பொருந்தும் என்பதே இங்குச் சொல்லக்கூடிய ஸமாதானம். ஆழ்வார் எம்பெருமானது பெருமேன்மையையும் தமது நைச்சியத்தையும் நோக்கிப் பின்வாங்கப்பார்த்த அவ்விடத்திலே, ‘எம்பெருமானை அணுகாமலிருக்கின்ற கேவலர்கள் மிக நல்லவர்கள்’ என்று கொண்டாடவேண்டியது அவசியமாயிற்று. எம்பெருமான் சீலகுணத்தைக் காட்டினபின்பு அந்த * வளவேழுலகில் நிலைமை ¶ நீங்கிவிட்டதாதலாலும் அவனுடைய பரமபோக்யதையிலே இப்போது நெஞ்சு சென்றிருத்தலாலும், இப்படிப்பட்ட போக்யதையிலே எல்லாரும் ஈடுபட்டு அந்வயிக்கப் ப்ராப்தமாயிருக்கச் சிலர் இழந்தொழிகின்றார்களே! என்று வருந்தவேண்டி நேர்ந்தபடியாலும் அந்த வருத்தத்தினால் கேவலர்களை நிந்திக்கிறவிது இங்குப் பொருந்துமென்றுணர்க.

பிறவித்துயரற = ஸம்ஸார நிலத்தைப்பற்றிவரும் ஸகலமான துயரங்களும் தொலைய என்றபடி. இது கைவல்யார்த்திகளுக்குப் போலவே பகவத்ப்ராப்தி காமர்கட்கும் உண்டாயினும் இங்குக் கைவல்யார்த்திகளே விவக்ஷிதர்கள்; “அஸதி பாதகே ஸாவகாசம் வாக்யம் ஸாவதாரணம்” என்கிற நியாயப்படிக்கு “பிறவித்துயர் அறுவதற்காக மாத்திரம்” என்று இங்குப் பொருளாகும். பகவத்ப்ராப்திகாமர்கள் மஹாநந்தம் பெறுவதையும் விரும்புகின்றவர்களாதலால் அவர்கள் தள்ளுண்டார்கள். பிறவித்துயரறுவதை மாத்திரமே விரும்புகின்றவர்கள் கைவல்யார்த்திகளேயென்க.

ஞானத்துள் நின்று = ஆத்மாவலோகனமாகிற ஞானத்திலே நிற்பார்களாம் கேவலர்கள் கைவல்யமோக்ஷ ஸாதனமானவொரு உபாஸநத்திலே ஊன்றி என்றபடி.

¶ அதாவது—நைச்சியாநுஸந்தானம் பண்ணிப் பின்வாங்கும் நிலைமை

துறவிச் சுடர்விளக்கம் தலைப்பெய்வார் = முதலடியிற் சொல்லப்பட்ட உபாயாநுஷ்டானத்திற்குப் பலன் சொல்லுகிறது இவ்வடி. பிரக்ருதி ஸம்பந்தம் வேரற நீங்குவதுதான் இங்குத் **துறவி** யெனப்படுகிறது; ஞானஸ்வரூபியான ஆத்மாவை அநுபவிப்பதுதான் **சுடர்விளக்கம் தலைப்பெய்தல்.** எல்லாவுபாதிகளும் விட்டு நீங்கப்பெற்ற சுடரொளிமயமான ஆத்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கவேண்டி யிருப்பவர்கள் என்றபடி.

ஆக, முன்னடிகளின் தேர்ந்த பொருளை நம்பிள்ளை யெடுத்துக்காட்டுகிறார்.— "ஸாம்ஸாரிக ஸகல துக்கங்களும் போகவேணுமென்று ஆத்மஜ்ஞானத்திலே ஊன்றி நின்று ப்ரக்ருதிவிநிர்முக்தமான ஆத்மஸ்வரூபத்தை ப்ராபிக்க வேண்டியிருப்பார்" என்று.

அறவனை ஆழிப்படை அந்தணனை = துறவிச் சுடர்விளக்கந் தலைப்பெய்வாரான கேவலர்கள் மறவியையின்றி மனத்துவைப்பார்; எவனை? என்னில்; எம்பெருமானை என்று சொல்லவேண்டுமிடத்து அந்த எம்பெருமானுக்கு வாசகமாக "அறவனை ஆழிப்படையந்தணனை" என்கிறவிது ஆழ்ந்த கருத்தோடு கூடியது. **அறவன்** என்பது தர்மிஷ்டன் என்றபடி; கைவல்யார்த்திகளது விருப்பத்தின்படியையும், அப்படிப்பட்டவர்களுக்கும் பலன் கொடுக்கிற எம்பெருமான் படியையும் பார்த்து இப்படியும் ஒரு உதாரனுண்டோ! என்று ஆழ்வார் உருகியருளிச் செய்கிறபடி. இங்கே நம்பிள்ளை யீடு:—"ஏதேனுமொரு ப்ரயோஜநத்துக்கும் தன்னையே அபேக்ஷிக்குமத்தனையாகாதே வேண்டுவது; எங்களுக்கு நீ வேண்டா, க்ஷுத்ரப்ரயோஜநம் அமையும் என்றிருக்குமவர்களுக்கும் அத்தைக்கொடுத்துவிடுவதே! என்ன தார்மிகனோ வென்கிறார்" என்பதாம்.

ஆழிப்படை = கையுந்திருவாழியுமான அழகைக்கண்டால் "வடிவார் சோதி வலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு" என்று மங்களாசாஸநம்பண்ணுகிறவர்களல்லரே கேவலர்கள்; தங்களுடைய விரோதிகளைத் தொலைப்பதற்கு நல்ல ஸாதனமுண்டு என்று நினைப்பவர்களேயத்தனை. அந்த நினைவையே காட்டுதற்காம் இங்கு இந்தப் பிரயோகம்.

அந்தணனை = உலகில் ஒரு வகுப்பினரை அந்தணரென்று வழங்குவதுண்டு; அந்தத்தை [வேதாந்தத்தை] ‡ அணவுபவர்—சார்பவர் என விரித்துக் காரணப் பொருளுரைத்தார் நச்சினார்க்கினியார். அங்ஙனன்றியே, அம் தண் அர் எனப்பிரித்துப் பல்வாறாகப் பொருள் கொள்வாருமுளர். "அந்தணரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற திருவள்ளுவர் திருக்குறளும் அவ்விடத்துப் பரிமேலழகருரையும் நோக்கத்தக்கது. "நூலேகரகம் முக்கோல்மணையே, ஆயுங்காலை அந்தணர்க்குரிய" என்ற தொல்காப்பிய மரபியற் சூத்திரத்தின் கருத்தை நோக்குமிடத்து அந்தணரென்ற சொல் யதிகளைக்குறிக்குமென்பது விளங்கும். இப்பாசுரத்தில் அந்தணனென்று எம்பெருமானைச் சொல்லியிருக்கின்றது; "கொந்தணைந்த பொழிற் கோவலுலகளப்பானடி நிமிர்த்த $ அந்தணனை" என்றும் ¶ "இந்தளூரந்த

‡ அணவுபவர் என்பது அணர் என விகாரப்பட்டது. "ஆராணத்தின் சிரமீதுறை" என்ற சடகோபரந்தாதிச் சிறப்புப்பாயிரச் செய்யுளின் ஈற்றடியில் "கார் அணனைக் கம்பனை நினைவாம்" என்றவிடம் காணத்தக்கது. அந்தம் அணர், அந்தணர்; தொகுத்தல்.

$ பெரிய திருமொழி 5, 6, 7 ¶ பெரிய திருமடல்

ணனை" என்றும் திருமங்கையாழ்வாரும் அருளிச்செய்கிறார். அந்தணனென்பதற்குப் பரிசுத்தனென்று பொருள் என்று பூருவாசாரியர்கள் திருவுள்ளம்பற்றுகிறார்கள். கைவல்யார்த்திகள் எம்பெருமானைச் சரணஞ்சாற்றுபோலே பரிசுத்தனென்று கொண்டார்களத்தனையொழிய போக்யதையிலே கண்வைத்து ஈடுபடப் பெற்றிலர்கள்! என்கிற வருத்தம் இங்குத் தொனிக்குமென்ப.

மறவியையின்றி மனத்துவைப்பாரே! = பரம போக்யனான எம்பெருமானைச் சிந்தித்தவாறே தாங்கள் விரும்பிய கைவல்ய புருஷார்த்தம் மறந்துபோக வேண்டியிருக்கவும் அதனை மறவாதே அவனை உபாஸிக்கின்றார்களே! அந்தோ! என்று பரிதபிக்கிறாராயிற்று.

இப்பாசுரத்தை அநுஸந்திக்குங்கால், "அறவாழியந்தணன் தாள்சேர்ந்தார்க்கல்லால், பிறவாழி நீந்தலரிது" என்ற திருக்குறள் நினைவுக்கு வருமென்று பெரியார் பணிப்பர். .. .. (1)

வைப்பாம்மருந்தாம் அடியரை * வல்வினைத்
துப்பாம்புலனைந்தும் துஞ்சக்கொடானவன் *
எப்பால்யவர்க்கும் நலத்தாலுயர்ந்துயர்ந்து *
அப்பாலவன் எங்களாயர்கொழுந்தே. * (2)

அடியரை	தன்னடியாரை	அவன்	அந்த எம்பெருமான்
வல் வினை	வலிய கருமங்களினுடைய	எப்பால	எவ்விடத்திலுமுள்ள
துப்பு ஆம்	மிடுக்கின் வழியிலே ஸஞ்சரிக்கிற	யவர்க்கும்	யாவர்க்கும்
புலன் ஐந்தும்	பஞ்சேந்திரியங்களிலும் அகப்பட்டு	நலத்தால் உயர்ந்து உயர்ந்து	ஆனந்தகுணத்தினால் மிகவும் உயர்ந்து
துஞ்சக் கொடான்	நசித்துப்போம்படி விட்டுக்கொடாதவன்	அப்பாலவன்	வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதபடி அப்புறப்பட்டவனாய்
வைப்பு ஆம்	(அவர்களுக்குப் புருஷார்த்தமான) நிதியுமாய்	எங்கள்	எங்களுக்கே உரியவனான
மருந்து ஆம்	(விரோதி நிரஸநமுகத்தால்) மருந்துமானவன்,	ஆயர் கொழுந்து	ஆயர் தலைவன்.

* * *—கீழ்ப்பாட்டில் 'ஐயோ! கைவல்யார்த்திகள் எம்பெருமானைப் பணிந்து க்ஷுத்ரமான பலனைப் பெற்றுப்போவதே!' என்று அவர்களை நிந்தித்தார்; அவன்றன்னையே ஆசைப்பட்டிருக்குமவர்கள் திறத்தில் அவன் இருக்கும்படியை அருளிச்செய்கிறாரிப்பாட்டில். "**வைப்பாம் மருந்தாம்**" என்ற இரண்டாலும் எம்பெருமானுடைய உபேயத்வமும் உபாயத்வமும் சொல்லப்பட்டதாகும். "வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" என்றும் "வைத்த மாநிதியாம் மதுசூதனன்" என்றும் சொல்லுகிறபடியே கொள்ளக் கொள்ளக்குறையாத மஹாநிதி போலே * கொள்ளமாளாவின்ப வெள்ளமாய் எப்போதும் அநுபவிக்க உரியனாயிருக்குந்தன்மை '**வைப்பாம்**' என்பதனால் சொல்லப்படுகிறது. அப்படி அநுபவிக்கச் சக்தியற்றவர்களுக்கு சக்தியைக் கொடுத்தருளுந் தன்மை '**மருந்தாம்**' என்பதனால் சொல்லப்படுகிறது; இதுதான் உபாயத்வம்.

[அடியரை இத்யாதி.] வணங்காமுடிமன்னனுயிருக்கு மிருப்புத்தவிர்ந்து அவனையே பரம ப்ரயோஜனமாகப் பற்றி நிற்குமடியார் விஷயத்திலே மஹோபகாரஞ் செய்தருள்பவனை; அப்படிப்பட்ட அடியார்களை வலிய வினைகளிலே கொண்டுபோய் மூட்டவல்ல ஸாமர்த்தியத்தையுடைய இந்திரியங்களைந்தினாலும் நசித்துப்போகாமை செய்தருள்பவனென்றபடி.

[எப்பால் யவர்க்கும் இத்யாதி.] மண்ணுலகம் விண்ணுலகம் முதலான எல்லா விடங்களிலும் எல்லாவற்றாலும் உயர்த்தி பெற்றிருப்பார் பலர் உண்டே; அவர்களெல்லாரையும் ஆனந்த குணத்தாலே வென்று அவர்களுக்கு எவ்வளவோ மேற்பட்டவனென்னவேண்டும்படியான நிலைமையிலே நிற்பவன், இப்படிப்பட்ட ஒப்புயர்வற்ற மேன்மை இருக்கச்செய்தேயும் அதனை யெல்லாம் மறைத்துக்கொண்டு கோபால க்ருஷ்ணனாயத் திருவவதரித்தவன். .. .. (2)

ஆயர்கொழுந்தாய் அவரால்புடையுண்ணும் *
மாயப்பிரானை என்மாணிக்கச்சோதியை *
தூயவமுதைப் பருகிப்பருகி * என்
மாயப்பிறவி மயர்வறுத்தேனே. * .. ... . **(3)**

ஆயர் கொழுந்து ஆய்	இடையர் தலைவனான கோபாலக்ருஷ்ணனாகிய	தூய அமுதை	பரிசுத்தமான அம்ருதம் போன்றவனுமான பெருமானை
அவரால்	— அவ்விடையர்களாலே	பருகி பருகி	— இடையறாமல் அநுபவித்து
புடை உண்ணும்	(வெண்ணெய்க் களவு முதலியவற்றிற்காக அடியுண்கிற)	என்	— என்னுடைய
மாயம் பிரானை	— மாயச்செயல் வல்லவனும்	மாயம்	பிரகிருதியின் காரியமாய் வருகின்ற
என்	— எனக்கு விதேயனும்	பிறவி	— பிறவியினாலுண்டான தாகிய
மாணிக்கம் சோதியை	மாணிக்கம்போல் ஒளிபெற்ற வடிவையுடையவனும்	மயர்வு	— அஜ்ஞானத்தை
		அறுத்தேன்	— போக்கிக்கொண்டேன்

* * *— முதற்பாட்டில் ப்ரயோஜநாந்தரபரர்களான கேவலர்களை நிந்தித்தார்; இரண்டாம் பாட்டில், அநந்யப்ரயோஜநாதிகாரிகள் விஷயத்தில் எம்பெருமான் இருக்கும்படியை யருளிச்செய்தார்; 'ஆக இவ்விரண்டு வகுப்பிலே நீர் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்?' என்று ஆழ்வாரைச் சிலர் கேட்க; 'நான் அநந்யப்ரயோஜநனாய் அவனைப் பற்றினேன்' என்று நேரே சொல்லமாட்டாமல் 'அவனை அநுபவித்துக்கொண்டே யிருக்கச்செய்தே விரோதிகள் தன்னடையே கழிந்துபோகப் பெற்றவன் நான்' என்கிறார் இதில்.

கீழ்ப்பாட்டில், ஆயர்கொழுந்தென்று கண்ணபிரானை நினைத்தாரே: அப்போதே அவனுடைய மாயச்செயல்களும் நினைவுக்குவர, திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷங்குடியிலுள்ளாரெல்லாராலும் மத்தாலே புடைக்கப்பெற்று அழுதேங்கிநிற்கும் மாயத்தைப் பேசுகிறார்.

"புடையுண்ணும் மாயப்பிரானை என் மாணிக்கச்சோதியை" என்ற சேர்த்தியழகால், அடியார்கள் மத்தாலும் கயிற்றாலும் கட்டியடிக்கவடிக்க, களங்கமறக்கடையுண்ட

மாணிக்கமபோலே திருமேனி புகர்பெற்று வருகின்றமையை அருளிச்செய்கிறவாறு தோன்றும்.

தூயவமுதைப் பருகிப்பருகி = தேவர்களுண்ணும் அமுதமானது பல நியமங்களை அபேக்ஷித்திருக்குமாதலால் அப்படிப்பட்டதல்லாத பகவத்விஷயமாகிற அமுதமே தூயதாகுமெனக. இதனை ஆரப்பருகி என் மாயப் பிறவி மயர்வறுத்தேனென்றுயிற்று. ... . (3)

மயர்வறவென்மனத்தே மன்னினுன்தன்னை *
உயர்வினையேதரும் ஒண்சுடர்க்கற்றையை *
அயர்விலமரர்கள் ஆதிக்கொழுந்தை * என்
இசைவினை என்சொல்லியான் விடுவேனே. * ... ... (4)

மயர்வு அற	–	அஜ்ஞானம தொலையும்படி	ஆதி கொழுந்தை	–	முதல் தலைவனாய்
என் மனத்தை	–	எனது நெஞ்சிலே			
மன்னினுன் தன்னை		நித்யவாஸஞ் செய்பவனாய	என் இசை வினை		(தன்னைக் கிட்டுமாறு) எனக்கு இசைவை விளைவித்தவனை எம்பெருமானை
உயர்வினையே தரும		(எனக்கு) ஞானபக்தி வளர்த்தியையே தந்தருள்கின்றவனாய்	யான	–	அடியேன்
ஒண் சுடர் கற்றையை		அழகிய தேஜோராசியாய்	என் சொல்லி	–	என்ன குறையைச்சொல்லி
அயர்வு இல அமரர்கள்		மறப்பில்லாத நித்யஸூரிகளுக்கு	விடுவேனே	–	விடக்கடவேனோ? [விடமாட்டேன்.]

* * *—கீழ்ப்பாட்டில் "என மாயப்பிறவி மயர்வறுத்தேன" என்று அருளிச்செய்த ஆழ்வாரை நோக்கி 'ஆழ்வீர்! மாயப்பிறவி மயர்வு அறவேணு மென்பதுதானே உமது உத்தேசயம்; அது நிறைவேறிவிட்டதாக நீரே சொல்லி விட்டீரே; இனி நீர் ஓய்ந்திருக்கலாமன்றோ' என்று சிலர் சொல்ல: எம்பெருமானை எங்ஙனம் நான விடுவேனென்கிறார்.

அஜ்ஞானராசியை வாஸனையோடே போகச்செய்ததுமன்றியே 'இனி ஒருநாளும அது குடிபுகவொண்ணாது' என்று என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து ஸ்திரமாக இருப்பவனும், அப்படி யிருந்துகொண்டு "நாவலிட்டுழிதருகின்றோம நமன்றமர் தலைகள மீதே" என்று சொல்லி யமபடர்கள தலையிலும் அடியிட்டுத் துகைக்கும்படியான உயர்த்தியையுந் தந்தருளபவனும், இப்படி யென்னை வசப்படுத்திக்கொள்வதற்குப் பாங்கான வடிவழகுடையவனும், அப்படிப்பட்ட வடிவழகை யநுபவிக்கும் அயர்வறும மரர்களை ஒரு நாடாகவுடையவனும், என்னை இசைவித்துத் தன தாளிணைக் கீழ்ப் புகுவித்துக்கொண்டவனுமான ஸர்வேச்வரனை என்ன ஹேதுவைக்கொண்டு விடுவேன்? (4)

விடுவேனேவென் விளக்கை என்னுவியை *
நடுவேவந்து உய்யக்கொள்கின்றநாதனை *
தொடுவேசெய்து இளவாய்ச்சியர்கண்ணினுள் *
விடவேசெய்து விழிக்கும்பிரானையே. * ... .. (5)

என் விளக்கை	எனக்கு எல்லாப் பொருள்களையும் விளக்கிக் காட்டுகிற விளக்குப்போன்றவனும்	தொடுவே செய்து	கபடச்செயல்களையே செய்து
என் ஆவியை	என் உயிராயிருப்பவனும்	இள ஆய்ச்சியர் கண்ணினுள்	இளமைதங்கிய இடைப்பெண்களின் கண்களிலே
நடுவே வந்து	திடீரென்று ஒருநாளிலே	விடவே செய்து	விடத்தனமே செய்து
உய்யக்கொள்கின்ற நாதனை	உஜ்ஜீவிப்பிக்கின்ற ஸ்வாமியும்	விழிக்கும் பிரானை	கண்கலப்புச் செய்கிற பிரபுவுமாகிய எம்பெருமானை
		விடுவேனோ	விடவல்லேனோ? [விடமாட்டேன்]

* * *— இதுவும் கீழ்ப்பாட்டுக்கு சேஷபூதம். திருவாய்ப்பாடியிலிடைப் பெண்கள் கண்ணபிரானைவிட்டுப் பரமபதத்தை விரும்பினால் நானும் எம்பெருமானைவிட்டுப் புறம்புபோவேனென்கிறார்.

தன விஷயமாக விளையக்கூடிய அஜ்ஞாநாந்தகாரம் தொலையும்படி என்னை நிர்ஹேதுகமாக விஷயீகரித்துத் தன்னுடைய ஸ்வரூபரூப குண விபூதிகளை எனக்கு நன்கு விளங்கக் காட்டியருளினவனும், * மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து * ஆவாரார் துணையென்று அலைநீர்க்கடலுளழுந்தும் நாவாயபோல் பிறவிக்கடலுள் நின்று துளங்கிக்கிடந்த என்னைத் தானாகவேயெடுத்துக் கரைசேர்த்தவனும், இங்ஙனம் என்னைக் கரைசேர்ப்பதற்குறுப்பான அவர்ஜநீய ஸம்பந்த முடையவனும், திருவாய்ப்பாடியில் வெண்ணெய் முதலியவற்றைக் களவுகண்டு 'இவன் திருடினான்' என்று முறையிட வந்த இளவாய்ச்சியார்க்கு மறுநாக்கெடுக்க வொண்ணாதபடி வேறொருவர்க்குந் தெரியாமே அவர்கள் கண்ணுள்ளே படும்படியாக 'ஜாரசோர சிகாமணி' என்று ப்ரஸித்தமாம்படியான சேஷ்டிதங்களையும் கண்ணேறுட்டங்களையுஞ் செய்து அப்பெண்களை அடிமைகொண்டாப்போலே என்னை அடிமைகொண்டவனுமான பெருமானை விடுவேனோ? என்றாராயிற்று.

விடவு = விடனுடைய தன்மை: விடனென்பது வட சொல்; பெண்டிர்பால் தூர்த்தத்தனஞ் செய்பவன் விடன்; அவனது செயல், அல்லது தன்மை—விடவு. (5)

பிரான் பெருநிலங்கீண்டவன் * பின்னும்
விராய்மலர்த்துழாய் வேய்ந்தமுடியன் *
மராமரமெய்த மாயவன் * என்னுள்
இரானெனில் பின்னையானொட்டுவேனோ. * (6)

பிரான்	உபகாரகனும்	மராமரம் எய்த	ஏழுமராமரங்களை (ஸுக்ரீவனுடைய நம்பிக்கைக்காக ஓர் அம்பினால்) எய்தவனுமான
பெரு நிலம் கீண்டவன்	(வராஹாவதாரத்தில்) பெரிய பூமியைப்பிளந்தெடுத்தவனும்	மாயவன்	ஆச்சரியபூதன்
பின்னும்	பின்னப்பட்ட [தொடுக்கப்பட்ட]	என் உள்	எனது நெஞ்சினுள்ளே
விராய்	பரிமளம் பொருந்திய	இரான் எனில்	எழுந்தருளியிரானாயின்
துழாய் மலர்	திருத்துழாய் மாலையாலே	பின்னை	பின்பு
வேய்ந்த	சூழப்பட்ட	யான்	நான்
முடியன்	திருமுடியையுடையவனும்	ஒட்டுவேனோ	தரித்திருப்பேனோ?

* * *— ஆழ்வீர்! நீர் அவனைவிடமாட்டாதொழியினும் அவன்றான் உம்மைவிடில் என் செய்வீரென்ன; அவன் விடும்படியாக நான ஸம்மதிப்பேனோ வென்கிறார்.

பிரான்=பிறர்க்கேயாயிருக்குமவன் என்பது கருத்து, நிலா, தென்றல், புஷ்பம், சந்தனம் முதலான பொருள்கள் தமக்கென்று ஒன்றின்றியே பிறர்க்காகவே அமைந்ததுபோல எம்பெருமானும நம்போலியர்க்காகவே அமைந்தவனென்க. "ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம், ததாபி புருஷாகாரோ பக்தாநாம த்வம் ப்ரகாசஸே." என்ற ஜிதந்தாஸ்தோத்ரமும, பரிஜநபரிபர்ஹா பூஷணந்யாயு தாநி பரவரகுணகளுச் ச ஜ்ஞாநசக்த்யாதயஸ் தே, பரமபதமதாணடாநி ஆத்மதேஹஸ் ததாத்மா வரத! ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த!" [வரதராஜஸ்தவம்] என்கிற ஆழ்வான ஸ்ரீ ஸூக்தியும காணக.

பெருநிலங்கீண்டவன்=ஹிரண்யகசிபுவின் உடன பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னுங் கொடிய அசுரன் தன வலிமையாற் பூமியைப பாயாகச் சுருட்டியெடுத்துக் கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது தேவர் முனிவர் முதலியோரது வேண்டு கோளினால் திருமால் மஹா வராஹரூபியாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ் வசுரனை நாடிக் கண்டு பொருது கோட்டினால் குத்திக்கொன்று பாதாளலோகத்திற சார்ந்திருந்த பூமியைக் கோட்டினாற்குத்தி அங்கு நின்று மெடுத்துக்கொண்டுவந்து பழையபடி விரித்தருளினன் என்பது பெருநிலங்கீண்ட வரலாறு. இப்பொழுது நடக்கிற ச்வேத வராஹகல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப்பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன ஏகார்ணவமான பிரளயஜலத்தில் மூழ்கியிருந்த பூமியை மேலெயெடுக்க நினைத்து மஹாவராஹரூபியாகிக் கோட்டு நுனியாற பூமியை எடுத்து வந்தனனென்ற வரலாறும உண்டு; "பாராருலகம் முதுமுந்நீர் பரந்தகாலம் வளைமருப்பில், ஏராருருவத்தேனமாயெடுத்தவாற்றலம்மான்" என்ற திருமங்கையாழ்வாரருளிச் செயலை நோக்குக.

பின்னும் விராய்மலர்த்துழாய்வேய்ந்தமுடியன் = நெருங்கத் தொடுக்கப்பட்டு நறுமணம்மிக்குச் செவ்வி பெற்றிருந்துள்ள திருத்துழாய் மாலையாலே சூழப்பட்ட திருவபிஷேகத்தை யுடையவன். இத்தால் திவ்யமங்கள விக்ரஹ போக்யதையை அநுபவிக்கிறபடி.

மாமாயனென்ற வரலாறு "வினையேன வினைதீர்மருந்தானாய" என்ற பாட்டினுரையில் விரித்துரைக்கப்பட்டது காணக. ஆக இப்படிப்பட்ட எம்பெருமான் என்னிசைவின்றியே எங்ஙனே விட்டுப்போகவல்லான?

"பின்னை யான ஒட்டுவேனோ?" என்பதற்கு—அப்பெருமான என்னை விட்டகன்றால் நான் தரித்திருப்பேனோ? என்றும பொருள பணிப்பர். ஆசார்ய ஹ்ருதயத்திலும் இப்பொருள ஆதரிக்கப்பட்டது; "இராவொளில் நவவாகக் குழைத்தவன" என்ற சூர்ணிகை காண்க . ... (6)

யானொட்டியென்னுள் இருத்துவமென்றிலன் *
தானொட்டிவந்து என்தனிநெஞ்சைவஞ்சித்து *
ஊனொட்டிநின்றுஎன்னுயிரில்கலந்து * இயல்
வானொட்டுமோ இனியென்னைநெகிழ்க்கவே. ... ... (7)

யான்	நான்
ஒட்டி	இசைந்து
என்னுள்	என்னுள்ளே
இருத்துவம் என்றிலன்	(எம்பெருமானை) இருத்துவதாக நினைத்திலேன்;
தான்	தானே
ஒட்டி வந்து	பிரதிஜ்ஞை பண்ணிவந்து
என் தனி நெஞ்சை	என்னுடைய ஸ்வதந்திரமான மனதை
வஞ்சித்து	நானறியாதபடி வசீகரித்து
ஊனை ஒட்டி	சரீரத்திலே பொருந்தி
நின்று	புகுந்துநின்று
என் உயிரில் கலந்து	எனது ஆத்மாவில் கூடி
இயல்வான்	இப்படி நடக்கிற ஸர்வேச்வரன்
இனி என்னை நெகிழ்க்க	இனி என்னைவிட்டு நீங்க
ஒட்டுமோ	ஸம்மதிப்பனோ?

* * *— எம்பெருமான் தம்மை ஒருநாளும் விடமாட்டானென்பதை வெளிப்படுத்தியருளிச் செய்கிறாரிதில். அவன் தானாகவே வந்து கைக்கொண்டவனாயிருந்து வைத்து எங்ஙனே விட்டு நீங்கவல்லானென்கிறார். [யானொட்டியென்னுள் இருத்துவமென்றிலன்] எம்பெருமானை என்னெஞ்சினுள்ளே யிருத்திக்கொண்டது நானாகவோ? அவன் தானே வந்து 'ஆழ்வீர்! உம்முடைய நெஞ்சிலே உறையக்கடவேன்' என்றாலும் வேண்டா வேண்டாவென்று விலக்குவதன்றோ என் பணியாயிருந்தது; 'இப்படி நீர் விலக்குவதனால் நான் இங்கு இருந்தே தீரக்கடவேன்' என்று சபதம் பண்ணிக்கொண்டு அவனாகவே வந்து இருக்கின்ற இருப்பன்றோவிது.

யானொட்டி யென்னுள் என்கிற இந்தப்பாசுரத்தின் ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானத்தில் * அத்யமே மரணம் வா * என்கிற ஸ்ரீராமாயண ச்லோகம் உதாஹரிக்கப்பட்டு ஸங்க்ரஹமாக விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ்லிபியிலும் தெலுங்குலிபியிலும் பதிப்பிக்கப்பட்டுள்ள பகவத்விஷய ஸ்ரீகோசங்களில் அவ்விடத்துள்ள பங்க்தி—

> "[தான் ஒட்டிவந்து] 'அத்யமே மரணம் வாபி தரணம் ஸாகரஸ்ய வா' என்று இத்தை முடித்தல் கடத்தல் செய்யுமதுக்கு மேற்படவில்லை என்றாற்போலே பிரதிஜ்ஞை பண்ணியாயிற்றுப் புகுந்தது" என்றும்.

இங்கு "இத்தை முடித்தல் கடத்தல்" என்றிருக்கிறது. [இந்த வாக்யத்தின் நிஜஸ்வரூபமென்னவென்பதை மேலே விளக்குவேன்.] இவ்விடத்திற்கு அரும்பதவுரை யெழுதியவர்கள்—

> "அத்யமே தரணம் வா ஸாகரஸ்ய மரணம் வா என்று அந்வயமாகத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் இத்தை முடித்தல் இத்யாதி * சாபமாநய * இத்யாதியைக் கடாக்ஷித்து இப்படி யோஜித்தது.

என்றெழுதிவைத்திருக்கிறார்கள், இது ஸங்கதமன்று.

முற்காலத்தில் ஓலை ஸ்ரீகோசங்கள் எழுதிவந்தவர்கள், ஒருவர் ஏடுபார்த்துச் சொல்லவும் மற்றொருவர் எழுதவும் ஆக இப்படியே பெரும்பாலும் எழுதிவந்தவர்கள். முன் உதாஹரித்த ஈட்டுப்பங்க்தி "இற்றை முடிதல் கடத்தல்" என்றிருந்தது. எழுதுமவர்க்கு ஏடுபார்த்துச் சொல்லிவந்தவர் இற்றை என்பதைத் தற்கால உச்சாரண

முறைப்படி இத்தை என்று சொன்னார். எழுதுகிறவரும் "இத்தை முடிதல் கடத்தல்" என்றெழுதிவைத்தார். அதைப்பார்த்து மற்றொருவர் எழுதிக்கொள்ளும்போது 'இத்தை முடிதல்' என்றால் அந்வயிக்கவில்லையென்று "இத்தை முடித்தல்" என்று எழுதிவிட்டார். இங்ஙனம் பல ஸ்ரீகோசங்கள் பரவிவிட்டன. அரும்பதவுரைகாரர்க்கு இத்தகைய பாடங்கொண்ட ஸ்ரீகோசம் கிடைத்தமையால் அதற்குத்தக்கபடி அவர் விவரணஞ் செய்துவிட்டார். வெகுநாளைக்கு முற்பட்ட ஓலை ஸ்ரீகோசங்களை ஸம்பாதித்துப் பார்த்ததில் இந்த நுட்பம் புலனாயிற்று.

இப்போது யாம் எடுத்தெழுதிய பாடத்தில் அர்த்தம் நன்கு பொருந்துவதும் தவிர, ஈடு முப்பத்தாறாயிரப்படியில் இந்த ச்லோகம் எந்த அம்சத்திற்கு உதாஹரணமாக எடுத்தாளப்பட்டதோ அதற்கும் மிக்க பொருத்தமாக அமைகின்றது. **'அத்யமே மரணம் வா''** என்ற மூலத்திற்குத் தகுதியான அர்த்தம் 'இற்றை முடிதல்' என்பது. இற்றை=இன்றைத்தினம் என்றபடி, இது **அத்ய** என்பதன் பொருள். முடிதல்—மரணமடைதல். இது **'மே மரணம் வா'** என்றதன் பொருள். "யாமொட்டியென்னுள்" என்கிற இந்தப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் இந்த ச்லோகத்தை எடுத்து விவரிக்க வேண்டிய காரணமென்ன? என்று ஆராய்வோம். மூலத்தில் 'எம்பெருமானை நான் **விட்டாலும் அவன் என்னை** விடான்' என்றருளிச்செய்யப்புகுந்த ஆழ்வார், "நான் இசைந்து என்னுடைய ஹ்ருதயத்திலே இருக்கவேணும் என்றிலேன்; அவ்வெம்பெருமான் தானாகவே ப்ரதிஜ்ஞைபண்ணிக்கொண்டு என்னுள்ளே புகுந்தருளினதாலே இப்படி நிர்ஹேதுகமாக அடியேனை விஷயீகரித்த அவனை நான் அகன்றுபோவதை இசைந்திடுவேனோ?" என்றருளிச்செய்திருக்கிறார். ஆழ்வார் விஷயத்திலே எம்பெருமான் ப்ரதிஜ்ஞைபண்ணினதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே, இது எப்படிப்பட்ட ப்ரதிஜ்ஞை' என்று கேள்வியாக, இதற்கு இராமபிரானுடைய ஓர் ப்ரதிஜ்ஞையை எடுத்துக்காட்டினார் நம்பிள்ளை. கடலரசனுடைய ஸ்தானத்திலே ஆழ்வாரும், இராமபிரானுடைய ஸ்தானத்தில் எம்பெருமானுமாகக் கொள்ளவேணும். கொண்டு, **"அத்யமே மரணம் வா"** என்கிற ச்லோகத்திற்கு 'ஸமுத்ரத்தை முடிக்கவாவது அதை நான் கடக்கவாவதுவேணும்' என்பதாகப் பொருளுரைத்தால் தார்ஷ்டாந்திகத்தில் 'ஆழ்வாரைக் கொல்லவாவது ' என்பதாக ப்ரதிஜ்ஞையின் ஆகாரம் கூற வேண்டும். இது எங்ஙனே பொருந்தும்?

ஸ்ரீராமாயண ப்ரகரணத்திற்கும் ஈட்டில் உதாஹரித்த ப்ரகரணத்திற்கும் கவி ஹ்ருதயத்திற்கும் ச்லோகசைலிக்கும் சிறிதேனும் ஸம்பந்தமின்றியே அரும்பதவுரைகாரர் எழுதியுள்ள பொருள் பாமரார்த்திகமென்பதையும் பரமார்த்தத்தின் நிரித்தத்தையும் ஈட்டு ஸ்ரீஸூக்தியின் உண்மையான நிலைமையையும் ஈண்டு நன்கு நிரூபித்ததாயிற்று.

[என்நனி நெஞ்சை வஞ்சித்து இத்யாதி.] ஸர்வசக்தனான தன்னாலும் திருத்த வொண்ணாதபடி ஸ்வாதந்திரியத்தில் தலைநின்று அவிதேயமாய்க்கிடந்த எனது நெஞ்சைத் தன்னுடைய சீலாதி குணங்களாலும் வடிவழகாலும் தனக்கு விதேயமாம்படி பண்ணி, அபிமதவிஷயத்திலே அழுக்கு உகப்பாரைப்போலே என்னுடைய ஹேயமான உடலைப்பற்றி நின்று என் பக்கலிலே விலக்காமை பெற்றவாறே என்னாத்மாவோடும் வந்துகலந்து இதுவே போதுபோக்காகவிருந்து இப்படி நிர்ஹேதுகமாக என்னை விஷயீகரித்தவனை, நான் தன்பக்கலில் நின்றும் நெகிழ்ந்துபோவேனென்றால் அவனை

இசைய ப்ரஸக்தியுண்டோ? எனக்கு ஞானம் பிறக்கைக்கு க்ருஷிபண்ணி, பிறந்த ஞானம் பலிக்குமளவான காலத்திலே நான் அகன்றுபோவேனென்றால் அவனே அகல வொட்டுவது? . .. . (7)

என்னைநெகிழ்க்கிலும் என்னுடைநன்னெஞ்சந்
தன்னை * அகல்விக்கத்தானுங்கில்லானினி *
பின்னைநெடும்பணைத்தோள் மகிழ்பீடுடை *
முன்னையமரர் முழுமுதலானே. *

பின்னை	நப்பின்னைப்பிராட்டியினுடைய	என்னை நெகிழ்க்கிலும்	(ஒருகால்) என்னைப்பிரிய விட்டாலும்
நெடு	— பெரிய	என்னுடை	— என்னுடைய
பணை	— சுற்றுடைத்தான	நல் நெஞ்சம் தன்னை	நல்ல நெஞ்சை
தோள்	தோள்களோடே அணையப் பெற்றதனாலுண்டான	அகல்விக்க	(தன்னிடத் தினின்றும்) பிரிக்க
மகிழ் பீடு உடை	ஆனந்தப் பெருமையை உடையவனும்	தானும்	— ஸர்வசக்தியுக்தனான தானும்
முன்னை அமரர்	பூருவர்களான நித்யஸூரிகளுக்கு	இனி	— இனிமேல்
முழுமுதலான்	ஸகலமும் தானேயாயிருக்கப்பெற்றவனுமான எம்பெருமான்	கில்லான்	— ஸமர்த்தனாகமாட்டான்.

* * * —அகடிதகடநாஸமர்த்தனான எம்பெருமான் றன்னாலும் இனியொருநாளும் வேறுபடுத்தவொண்ணாதபடி எனது நெஞ்சு அங்கே ஆழங்காற்பட்டுவிட்டதென்கிறார். இதற்குமுன்புள்ள காலமெல்லாம் நான் அவனைவிட்டு நெகிழ்ந்தவனேயாகிலும் இனி அங்ஙனம் ஒருநாளும் நெகிழமாட்டேன்; எம்பெருமான் தனது ஸ்வாதந்திரியத்தினாலே ஒருகால் என்னை நெகிழவிட்டாலும் விடக்கூடும்; தன் பக்கலிலேயே ஊன்றிக்கிடக்கின்ற எனது நெஞ்சை ஒருவகையாலும் அப்புறப்படுத்த அவன் றன்னாலுமாகாது.

அவனே ஸர்வசக்தன்; நினைத்தபடி எதையும்செய்து நிறைவேற்றவல்லவன்; அவனுக்கு ஆகாததும் ஒன்றுண்டோ என்னில்; **[தானும் கில்லான்.]** அப்படிப்பட்ட அபாரசக்திவாய்ந்த பகவானும் இவ்விஷயத்தில் அஸமர்த்தனேயாவன்.

அங்ஙனம் சொல்லலாமோ? இதுவரையில் உம்மை மாறிமாறிப் பலபிறப்பும் பிறக்கச்செய்யவில்லையா? உமது நெஞ்சை இதர விஷயங்களிலே அகன்று போகச் செய்யவில்லையா என்னில்; இதுவரையில் செய்தது உண்மையே, இனி அங்ஙனஞ்செய்ய அவனாலுமாகாது. இவ்வளவு உறுதியாகச் சொல்லுவதற்கு நிதானம் ஏதென்னில்; **[பின்னை நெடும்பணைத்தோள் இத்யாதி.]** நப்பின்னைப் பிராட்டியைப் புருஷகாரமாகக் கொண்டு பற்றினேனாதலால் இனி ஒருநாளும் அகல்விக்க ப்ரஸக்தியில்லை என்பது பரம தாற்பரியம். நித்யஸூரிகளைவிட்டாலன்றோ என்னைவிடுவது என்பதும் உட்கருத்தாம். .. .. (8)

அமரர்முழுமுதல் ஆகியவாதியை *
அமரர்க்கமுதீந்த ஆயர்கொழுந்தை *

அமரவழும்பத் துழாவி யென்னாவி *
அமரத்தழுவிற்று இனியகலுமோ. * ... ... (9)

அமரர்	— நித்யஸூரிகளுடைய	ஆயர் கொழுந்தை	இடையர்களுக்குத் தலைவனுமான எம்பெருமானை
முழு	ஸ்வரூபம் ஸ்திதி ப்ரவ்ருத்தி ஆகிய எல்லாவற்றிற்கும்	என் ஆவி	— எனது ஆத்மாவானது
முதல் ஆகிய	— ஹேதுவாய்க்கொண்டு	அமர அழும்ப துழாவி	மிகவும் நெருக்கமாகக் கலசி
ஆதியை	— பிரதானனானவனும்,		
அமரர்க்கு	— (இந்திராதி) தேவர்களுக்கு	அமர	இனிமேல் ஒருவராலும் பிரிக்கவொண்ணாதபடி
அமுது	(அவர்கள் விரும்பிய) அம்ருதத்தை		
ஈந்த	(கடல்கடைந்து எடுத்துக்) கொடுத்தவனும்,	தழுவிற்று	— உகந்து கலந்தது;

இனி அகலுமோ—இனிமேல் பிரிய வழியுண்டோ?

* * * —"என்னுடை நன்னெஞ்சந்தன்னை யகல்விக்கத் தானுங்கில்லான்" என்று சொல்லவேண்டிய ப்ரஸக்திதானுமில்லையே; 'எனது நெஞ்சும் அவனுஞ்சேர்ந்து ஒரு திரவியம்' என்னலாம்படி ஒற்றுமைபெற்றுள்ள விதனைப் பிரிக்கும்வகைதான் உண்டோவென்கிறார்.

நித்யஸூரிகளினுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகளெல்லாம் தன்னுடைய அதீனமாம்படியிருப்பவனும், நம்போலியரைக் கரணகளேபரங்களை கொடுத்துப் படைத்தவனும், 'எங்களுக்கு நீ வேண்டா; உப்புச்சாறு போதும்' என்ற தேவர்கட்கும் கடல்கடைந்து அமுதமளித்தவனும், 'அந்த அம்ருதம் வேண்டா, நீயே வேணும்' என்ற ஆயர்களுக்காக வந்து அவதரித்துத் தன்னைக்கொடுத்தவனுமான எம்பெருமானை என்னுடைய ஆத்மாவானது கிட்டிச்சேர்ந்து அனுபவித்து ஏகத்ரவ்யமென்னலாம்படி கலந்துவிட்டது, இரண்டு வஸ்துவாக இருந்தாலன்றோ பிரிக்கலாவது; இனி பிரிக்க விரகில்லை யென்கிறாயிற்று. ... . (9)

அகலிலகலும் அணுகிலணுகும் *
புகலுமரியன் பொருவல்லனெம்மான் *
நிகரிலவன்புகழ் பாடியிளைப்பிலம் *
பகலுமிரவும் படிந்துகுடைந்தே ... . (10)

அகலில்	(தன்பக்கலில் அற்பபலன்களைப் பெற்றுக்கொண்டு சிலர்) பிரிந்துபோனால்	அணுகும்	(அவர்களோடு) ஒரு நீராகக்கலக்குமவனும்,
		புகலும் அரியன்	(பிரதிகூலர்க்கு) அணுகவுமொண்ணாதவனும்
அகலும்	(அவர்கள் விஷயத்தில்) வருத்தத்தோடே பிரிந்திருப்பவனும்,	பொருவு அல்லன்	(அநுகூலர்க்குத்) தடையற்றவனும்
		எம்மான்	— எனக்கு ஸ்வாமியானவனும்
அணுகில்	(சிலர் அநந்யப்ரயோஜநராய்) விடமாட்டாதேயிருந்தால்	நிகரிலவன்	(ஆக இப்படிகளாலே) ஒப்பில்லாதவனுமான ஸர்வேச்வரனுடைய

புகழ்	–	திருப்புகழ்களை	குடைந்து	–	எங்கும் கலந்து
பகலும் இரவும்	–	எப்போதும்	பாடி	–	பாடி
படிந்து	–	உட்புகுந்து	இளைப்பிலம்	–	ஓய்தல் உண்டாகிறிலோம்

* * *—என்னோடுகலந்த எம்பெருமானுடைய திருக்குணங்களை எத்தனைகாலமனுபவித்தாலும் த்ருப்தி பிறப்பதில்லையென்கிறார். [அகலில் அகலும்] எம்பெருமான் எவ்விதத்திலாவது நம்மைத் தன் வலையில் அகப்படுத்திக்கொள்ளுமவழியையே பார்ப்பன; அவனுடைய உபாயங்களையெல்லாம் பழுதாக்கி நாம் அவனது வலைக்கு அகப்படாமல் அகன்றுபோவதையே விரதமாகக்கொண்டிருப்போமாகில், ஐயோ! நம்முடைய க்ருஷி பலிக்கவில்லையே! என்று கண்ணீர்விட்டழுதுகொண்டே கைவாங்கிநிற்பன் என்றபடி. [அணுகில் அணுகும்] நாம் அவன்பால் நாலடி கிட்டச்சென்றால் நம்முடைய அபிநிவேசத்துக்கும் மேலாகவே அபிநிவேசங்கொண்டு அவன் நம்மைச் சூழ்ந்துகொள்வன் என்க. விபீஷணாழ்வான் போல்வார்திறத்திலே இக்குணம் காணத்தக்கது.

[புகலும் அரியன்] நல்ல எண்ணமில்லாதார்க்கு எட்டாதவன் என்றபடி. துரியோதனனும் அர்ஜுனனும் படைத்துணைவேண்டி வந்தபோது அஸாரங்களைப்பெற்று ஒழிந்துபோம்படியன்றோ துரியோதனனுக்கு ஆயிற்று. [பொருவல்லன்] இதற்கு ஆறுயிரப்படி:—''ஸமாச்ரயணோந்முகரா யிருப்பார்க்கு ஒரு தடையின்றியே புக்கு ஆச்ரயிக்கலாம்படி யெளியனாயு'' என்பதாம். ''ஆச்ரிதர் தன்னைக்கிட்டுமிடத்தில் தடையுடையனல்லன்'' என்பர் மற்ற வியாக்கியாதாக்களும், பொரு என்பதற்கு 'தடை' என்னும்பொருள் நேரே கிடைக்காதாயினும் 'லக்ஷிதலக்ஷணை' என்னும் முறைமையால் கிடைக்குமென்று திருவுள்ளம். [எம்மான்] ஆக இப்படிப்பட்ட தன்மைகளைக்காட்டி என்னை யீடுபடுத்திக்கொண்டவன் என்றவாறு.

நிகரிலவன் புகழ்பாடி=கீழ்ச்சொன்ன தன்மைகளினால் தனக்கு ஒருவரையும் ஒப்பாகக்கொள்ளப்பெறாத அந்தப் பெருமானுடைய திருக்குணங்களை இரவும் பகலும் பூர்ணாநுபவம்பண்ணினும் ஓய்வுபெறுகின்றிலேன் என்றதாயிற்று.

''எம்பெருமானுடைய ஒப்பில்லாத கல்யாணகுணங்களிலே'' என்ற ஆறாயிரப்படிக்குச் சேர ''நிகரில வண் புகழ்'' என்பபாடமிருக்கலாமென்பர் சிலர். 'நிகரில் அவன்புகழ்'' என்று விபாகமாகலாம். . .. . (10)

குடைந்துவண்டுண்ணும் துழாய் முடியானை *
அடைந்ததென்குருகூர்ச் சடகோபன் *
மிடைந்தசொல்தொடை ஆயிரத்திப்பத்து *
உடைந்துநோய்களை ஓடுவிக்குமே. * ... ... (11)

வண்டு	–	வண்டுகள்	முடியானை		திருமுடியிலணிந்த பெருமானை
குடைந்து	–	உட்புகுந்து			
உண்ணும்	–	மதுவுண்ணப்பெற்ற			
துழாய்	–	திருத்துழாய் மாலையை	அடைந்த	–	பணிந்த

தென் குருகூர் சடகோபன்	திருநகரியிலவதரித்த ஆழ்வாருடைய
மிடைந்த	— நெருங்கின
சொல் தொடை	— சொல்மாலையாகிய
ஆயிரத்து	— ஆயிரத்தினுள்ளே
இ பத்து	— இந்தத் திருவாய்மொழி
நோய்களை	— ப்ராப்தி ப்ரதிபந்தகங்களை
உடைந்து ஓடுவிக்கும்	உருக்குலைந்து ஓடும்படி செய்திடும்.

* * * — இத்திருவாய்மொழிதானே இது கற்றவர்களினுடைய ப்ராப்தி ப்ரதிபந்தகங்களை வேரறுக்குமென்று பலன்சொல்லித் தலைக்கட்டுகிறது. மதுவைப் பருக வேணுமென்று இழிந்தவண்டுகளானவை பெருங்கடலிலே யிழிந்தாற்போலே உள்ளே யுள்ளே இடங்கொண்டு புஜிக்கும்படியாக மதுவெள்ளம் நிறைந்த திருத்துழாய்மாலையையணிந்த திருவபிஷேகத்தையுடையனான எம்பெருமானை யடிபணிந்த நம்மாழ்வார் அருளிச்செய்த சொற்செறிவு வாய்ந்த இத்திருவாய்மொழிதானே நோய்களை உடைந்தோடும்படி பண்ணும் என்றதாயிற்று ... . (11)

ஏழாந்திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி முதற்பத்து எட்டாந் திருவாய்மொழி — ஓடும்புள்ளேறி.

அவதாரிகை—ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு குணத்தை அநுபவித்துப் பேசிவருகின்ற ஆழ்வார், கீழ்த் திருவாய்மொழியில் அவனது இனிமைக்குணமென்கிற பரம போக்யதையை அநுபவித்துப்பேசினார்; இத்திருவாய்மொழியில் அவனது ஆர்ஜவ குணத்தை அநுபவித்துப்பேசுகிறார். ஆர்ஜவமாவது—ருஜுவாயிருக்குந்தன்மை, மனத்திலுள்ளது ஒன்றும், வாயாற்சொல்லுவது வேறொன்றும், காரியத்தில் நடத்துவது பிறிதொன்றுமாயிருக்கை யன்றியே மனமொழி மெய்கள் மூன்றும் ஒருபடிப்பட்டிருத்தல் ஆர்ஜவமெனப்படும். இதற்குத் தமிழில் **செம்மை** என்று பெயர். இக்குணம் இத்திருவாய்மொழியில் அநுபவிக்கப்படுகிறது.

ஸம்ஸாரிகள், நினைவும் சொலலும் செயலும் ஒருபடிப்பட்டிராமல் பலவகைப்பட்டிருத்தலால் அன்னவர்களோடு எம்பெருமான் தான் பரிமாறுமிடத்தில் அவர்கள் போனவழியே தனக்கு வழியாம்படித் தான் அவர்கட்குச் செவ்வியனாய்ப் பரிமாறுகை இங்குச் **செம்மை** எனப்படுகின்றது. ஒருவன் ஒருவனை நோக்கி 'அப்பா! நீ எவ்வூர்?' என்றால் 'நான் தற்காலமிருப்பது இவ்வூர்' என்று விடையளிப்பதும், 'உன் பெயர் என்ன?' என்றால் 'என் பெயர் உண்டுவளர்ந்தான்' என்று விடையளிப்பதும், இவ்விடத்திற்கு எப்போது வந்தாய்?' என்றால் 'நீ பார்த்தபோது வந்தேன்' என்று விடையளிப்பதும் இவ்வாறாகக் கேட்பதற்கெல்லாம் கோணலாகவே விடையளிப்பது கௌ

டில்ய குணத்தின் காரியமாகும். உள்ளதை உள்ளபடியே சொல்லுகையும் செய்கையும் செம்மைக்குணத்தின் காரியமாகும். சக்ரவர்த்தி திருமகனார் பஞ்சவடியில் எழுந்தருளியிருந்தபோது சூர்ப்பணகை வந்து, ஆகதஸ்த்வமிமம் தேசம் கதம் ராக்ஷஸஸேவிதம், கிமாகமநக்ருத்யம்தே தத்வமாக்க்யாதுமர்ஹஸி.''] ராக்ஷஸர்கள் மிடைந்திருக்கின்ற இவ்விடத்திற்கு நீர் எவ்வாறு வந்தீர்? வந்த காரியமென்ன? என்று கேட்க, அதற்குப் பெருமாள் கோணலான உத்தரம் கூறலாமாயினும் அங்ஙனங் கூறாது ஆஸீந் தசரதோ நாம ராஜா' என்று தொடங்கி நேரான மறுமொழி கூறினர்; அவ்விடத்திலே வால்மீகி முனிவன் "ருஜுபுத்திதயா ஸர்வமாக்க்யாதுமுபசக்ரமே." (இராமபிரான் ருஜுவான புத்தியையுடையனாதலால் அனைத்தையும் உள்ளபடியே உரைக்கத் தொடங்கினன்) என்கிறான். இதுவாய்த்து ஆர்ஜவகுணம். ஆளவந்தாரும் ஸ்தோத்ரரத்நத்தில் "வசீவதாந்ய" என்கிற ச்லோகத்தில் ருஜு: என்ற பதத்தினால் இக்குணத்தைப் பேசியருளினார்.

இத்திருவாய்மொழியில் எம்பெருமானுடைய திவ்யைச்வர்யஞ் சொல்லுகிறதாக ஆறாயிரப்படியில் திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்திருக்கிறார். பெரிய வாச்சான் பிள்ளையும் வடக்குத்திருவீதிப்பிள்ளையும் அதனைப் பக்ஷாந்தரமாக்கி 'இத்திருவாய்மொழியில் எம்பெருமானுடைய ஆர்ஜவகுணஞ் சொல்லுகிறது' என்று அருளிச்செய்துள்ளார்கள். ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் நம்பிள்ளை திருவடிகள் நிஷ்கர்ஷித்தபடியையே ஆதரித்து நிருபதிம ருஜுதாம் நிரவாணே ஜகாத" என்றும் "பரக்ருதி ருஜுதயா" என்றும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலும், "ஸுசீலம் ஸ்வாராதம் ஸரஸபஜநம் ஸ்வார்ஜவ குணம்" என்று த்ரமிடோபநிஷத் ஸாரத்திலும் ச்லோகமிட்டு இத் திருவாய்மொழிக்கு ஆர்ஜவகுணப்ரதிபாதநமே ப்ரமேயமென்னுமிடத்தை வெளியிட்டருளினர் என்பதும் இங்குக் குறிக்கொள்ளத்தக்கது. இங்கே ஸ்ரீபரகால ஸ்வாமியின் பதினெண்ணாயிரப்படியிலுள்ள சில திவ்ய ஸ்ரீஸூக்திகள் விவேகிகளுக்குவிவேசநீயங்களாம்.

இங்கே ஈடு முப்பத்தாறாயிரப்படி ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"இத் திருவாய்மொழிதான் ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யத்தைச் சொல்லுகிறது என்பாருமுண்டு: அன்றிக்கே 'ஈச்வரத்வலக்ஷணஞ் சொல்லுகிறது' என்பாருமுண்டு. அன்றிக்கே; கீழே * பாடியிளைப்பிலம் * என்றார்; அப்படியே பாடி அநுபவிக்கிறார் என்பாருமுண்டு. 'ஆர்ஜவகுணஞ் சொல்லுகிறது' என்று பட்டருளிச் செய்யும்படி. பத்தர், முக்தர், நித்யர் என்று சேதநர்க்கு ஒரு த்ரைவித்யமுண்டிறே; த்ரிவித சேதநரோடும் பரிமாறுமிடத்தில் அவர்கள் தன்னினைவிலே வரும்படி பண்ணுகையன்றிக்கே, நீரேறுமேடுகளிலே விரகாலே நீரேற்றுமாபோலே தன்னை அவர்களுக்கீடாக அமைத்துப் பரிமாறும் என்னுமவ்வழியாலே இவனுடைய ஆர்ஜவகுணம் சொல்லுகிறார்." என்பன.

ஓடும்புள்ளேறி * சூடுந்தண்டுழாய் *
நீடுநின்றவை * ஆடுமம்மானே. * .. .. (1)

நீடு நின்ற அவை	நித்யஸூரிகளாயிருக்கின்ற பெரிய திருவடி முதலானோரோடு	புள் ஏறி	—பெரிய திருவடிமேற்கொண்டு
ஆடும்	— கூடிப்பரிமாறுகிற	ஓடும்	— (விரைந்து) ஓடுவன்;
அம்மான்	— ஸ்வாமி,	தண் துழாய்	குளிர்ந்த திருத்துழாய் மாலையை
		சூடும்	— சாத்திக்கொள்வன்.

* * * — நித்ய விபூதியிலுள்ளாரோடு செவ்வைக்குணமுடையனாய்ப் பரிமாறும்வகை இப்பாட்டில் சொல்லப்படுகிறது. பரமபதத்திலே செவ்வைக்கேடு சிறிதுமில்லாமையாலே அவர்களோடு எம்பெருமான் செவ்வியனாய்ப் பரிமாறுகிறான் என்றால் இதற்கு ஒரு பொருளில்லையே, ஸம்ஸாரிகளான நம்மைக்கன்றோ செவ்வைக்கேடு உள்ளது, நம்மோடு பரிமாறுந்திறத்தில் செவ்வியனாய்ப் பரிமாறுகிறானென்றால் இது பொருந்தும்; செவ்வையே உள்ளதானவிடத்தில் செவ்வியனாய்ப் பரிமாறுகிறானென்கைக்கு ப்ரஸக்தியில்லையே! என்று சிலர் சங்கிக்கக்கூடும்; கேண்மின்; பரமபதத்திலுள்ளார்க்குச் செவ்வைக்கேடு இல்லையென்பது உண்மையே; அங்குள்ளாரெல்லார்க்கும் விஷயம் பகவத்விஷயமொன்றேயாகிலும் ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமான பணிவிடையைப் பரிக்ரஹிக்கின்றமையால் அந்த வ்ருத்தி பேதத்தாலே ருசிபேதமுண்டாகுமே; அவரவர்களது ருசிக்கிடாகவே பரிமாறுகிறானென்கிறது. பெரிய திருவடிக்குத் தன்னைச் சுமந்து திரிகை அபேக்ஷிதமானால் அவன்மேலேறி ஸஞ்சரிப்பன்; திருத்துழாய் செவ்வியழியாமல் சூடவேண்டும் நிலையறிந்து அதனைச் சூடிக்கொள்வன்; ஆகவிப்படி சாச்வதமாக அந்த நித்யஸூரிகளோடே ஒரு நீராகக்கலந்து பரிமாறுவனெம்பெருமான் என்றதாயிற்று.

மூன்றாமடியில் **அவை** என்றது முன்னடிகளிற்சொன்ன புள்ளையும் துழாயையுமாம். நித்யஸூரிகளாய்ப் பரம சேதநர்களாயிருக்கின்ற அவர்களை **அவை** என்று அஃறிணைப் பெயர்ச்சுட்டாற்சொன்னது வழக்குப்பற்றிய வழுவமைதி யென்னலாம்.

'அவற்றோடே பரிமாறும்' என்னாதே **அவையாடும்** என்றது எம்பெருமானுக்கு அவர்களோடே அணையுமது விடாயர் மடுவிலே புகுந்து குடைந்து ஆடுமாபோலேயிருக்குந்தன்மையைக்காட்டுதற்கென்ப. ... ... (1)

அம்மானாய்ப்பின்னும் * எம்மாண்புமானான் *
வெம்மாவாய்கீண்ட * செம்மாகண்ணனே * . ... (2)

அம்மான் ஆய்	— ஸ்வாமியாயிருந்து	செம் மா கண்ணன்	சிவந்துபெரிய திருக்கண்களை யுடையவனுமான ஸ்ரீ க்ருஷ்ணன்
வெம்	— உக்ரமான	பின்னும்	— பின்னையும்
மா	குதிரையின் வடிவாகவந்த கேசி யென்னுமசுரனை	எம்மாண்பும் ஆனான்	எல்லா அவதாரங்களைச் சரியமுமுடையனாயினான்.
வாய் கீண்ட	— வாய் கிழித்தவனும்		

* * * — கீழ்ப்பாட்டிற்கூறியபடி ஸ்ரீவைகுண்டத்திலுள்ளாரோடு செவ்வியனாய்ப் பரிமாறுகை மாத்திரமேயல்லாமல் அங்குநின்றும் இந்நிலத்திலே வந்து அவதரித்து விரோதிகளைத் தொலைத்து ஸம்ஸாரிகளுடன் பரிமாறும்படியும் எம்பெருமானுக்குள்ளதென்று இப்பாட்டிற் சொல்லுகிறது.

"அம்மானாய் வெம்மாவாய்கீண்ட செம்மா கண்ணன் பின்னும் எம்மாண்புமானான்" என்று அந்வயிப்பது. ஒருநாள் கண்ணபிரானைக் கொல்லுமாறு கம்ஸனால் ஏவப்பட்ட கேசி யென்பானொரு அஸுரன் குதிரையினுருவத்தோடு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படி கனைத்துத் துரத்திக்கொண்டு கண்ணனமீது பாய்ந்துவர, அப்பெருமான் தன் திருக்கையை நன்றாகப் பெருக்கி நீட்டி அதன் வாயிற்கொடுத்துத் தாக்கிப் பற்களையுதிர்த்து

உதட்டைபிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளினன் என்ற * வெம்மாவாய்கீண்ட வரலாறு இங்கு உணரத்தக்கது.

பின்னும் எம்மான்புமானுவ் = இப்படி க்ருஷ்ணாவதாரஞ்செய்தருளினது மாத்திரமன்றியே இன்னமும் எத்தனையோ அவதாரங்கள் செய்து தனது ருஜுத்வத்தை வெளியிட்டுக்கொண்டானென்பது பரமதாற்பரியம். ... . (2)

**கண்ணாவானென்றும் * மண்ணோர்விண்ணோர்க்கு *
தண்ணார்வேங்கட * விண்ணோர்வெற்பனே. *** ... ... **(3)**

மண்ணோர்	— மண்ணுலகத்தார்க்கும்		தண் ஆர்	— குளிர்ச்சி நிறைந்த
விண்ணோர்க்கு	— விண்ணுலகத்தார்க்கும்		வேங்கடம்	திருவேங்கடமென்கிற பெயரையுடைய
என்றும்	— எப்போதும் (யாவனென்னில்)		விண்ணோர் வெற்பன்	நித்யஸூரிகட்கிடமான திருமலையை யுடையவன்.
கண் ஆவான்	— கண்ணாயிருப்பன்,			

* * * — இரட்டைபிள்ளைபெற்ற தாயானவள் இருகுழந்தைகட்கும் முலைகொடுக்கப் பாங்காக நடுவே கிடக்குமாபோலே நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் முகந்தருதற்காகத் திருவேங்கடமலையிலே நின்றருளும் நீர்மையை அருளிச்செய்கிறார்.

'கண்ணாவான்' என்பதைப் பெயர்ச்சொல்லாகவுங்கொள்ளலாம், வான்விகுதி பெற்ற வினையெச்சமாகவுங் கொள்ளலாம். பெயர்ச்சொல்லாகக்கொண்டால் 'கண்ணாயிருப்பவன்' என்றபடி. வினையெச்சமாகக்கொண்டால் 'கண்ணாயிருப்பதற்காக' என்றபடி. * चक्षुर्देवानामुत मर्त्यानाम् * என்கிற வேதவாக்கியத்தை மொழிபெயர்ப்பனபோலுள்ளன முதலிரண்டடிகள்.

மேலுள்ளவர்கள் சிறிதுதூரம் பயணமெடுத்துவந்து சேரும்படியாய், கீழுள்ளவர்களும் சிறிதுதூரம் சென்று சேரும்படியாய் 1. "தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே, வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" என்கிறபடியே இருதலையார்க்கும் நிதியாகவுள்ள திருவேங்கடமலையில ஸந்நிதிபண்ணியிராநின்றான்.

திருமலையானது மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் பொதுவான தலமாயிருக்கச்செய்தே இங்கு 'விண்ணோர்வெற்பு' என்றது ஏனென்னில்; ஸம்ஸாரிகளைக் காட்டிலும் நித்யஸூரிகளே பெரும்பான்மையாக அநுபவிப்பவர்களாதல் பற்றியென்க "மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்திசெய்யநின்றான்" என்பர் திருப்பாணாழ்வாரும். திருமலையிலுள்ள பசு பக்ஷி திர்யக் ஸ்தாவரங்களையுமெல்லாம் நித்யஸூரிகளின் பராதுர்ப்பாவங்களாகவே கருதுவர் பெரியோர். . .. (3)

**வெற்பையொன்றெடுத்து * ஒற்கமின்றியே
நிற்குமம்மான்சீர் * கற்பன்வைகலே.** **(4)**

1. நான்முகன் திருவந்தாதி.

ஒன்று வெற்பை	(கோவர்த்தன மென்னும்) ஒரு மலையை	அம்மான்	எம்பெருமானுடைய
எடுத்து	(குடையாகத்) தூக்கி	சீர்	திருக்குணத்தை
ஒற்கம் இன்றியே	இளைப்பில்லாமல்	வைகல்	நாள்தோறும்
நிற்கும்	நின்றருளின	கற்பன்	பேசக்கடவேன்.

* * *—அவனுடைய ருஜுத்வகுணத்தை இடைவிடாது பேசி யநுபவிக்கப்பெற்றமை தமக்கு நேர்ந்தபடியை யருளிச்செய்கிறார்.

ஒற்கமின்றியே நிற்கு மென்ற விடத்து, "கொடியேறு செந்தாமரைக் கை விரல்கள் கோலமு மழிந்திலவாடிற்றில, வடிவேறு திருவுகிர்நொந்துமில மணி வண்ணன மலையுமோர்சம்பிரதம" என்ற பெரியாழ்வார் திருமொழியும் "க்ஷாணீத்ரம புநரபிச் ச ஸபதராத்ரம,— அமலாநா வரத' ததாபி பாணயஸ்தே" என்ற வரத ராஜஸ்தவமும் ஸ்மரிக்கவுரியன. இந்திரன் மேகங்களை ஏவி மழைபெய்வித்துத் திருவாய்ப்பாடியிலுள்ள சராசரங்களனைத்துக்கும் பெருகத தீங்கை உண்டுபண்ணப் புகுந்ததற்குக் கண்ணபிரான சிற்றமுற்று அவ்விந்திரன் தலையை அறுத்தெறிய வல்லமைபெற்றிருந்தபோதிலும், அப்பிரான அவன திறத்து இறையேனுஞ் சீறுங் கொள்ளாமல் 'நம்மிடத்தில் ஆநுகூல்யமுடைய இந்திரனுக்கு இக்குற்றம் திடீரென்று நேர்ந்துவிட்டதத்தனை; பெருமபசியாற பிறந்த கோபத்தினால இப்போது இவன தீங்கிழைக்க ஒருப்பட்டானாயினும சிறிதுபோது கழிந்தவாறே தானே ஓய்வன; இவனது உணவைக் கொள்ளைகொண்ட நாம உயிரையுங் கொள்ளைகொள்ளக்கடவோ மல்லோம" என்ப பேரருள பாராட்டி அடியாரை மலையெடுத்துக்காத்த ருஜுத்வ குணம இங்கு "அம்மான் சீர்" என்றதனால காட்டப்பட்டதாகும். ... (4)

வைகலும் வெண்ணெய் * கைகலந்துண்டான் *
பொய்கலவாது * என் மெய்கலந்தானே. (5)

வைகலும்	எப்போதும்	பொய் கலவாது	மெய்யாகவே
வெண்ணெய்	வெண்ணெயை		
கை கலந்து	கை உள்ளளவும் நீட்டி	என் மெய்	எனது மேனியிலே
உண்டான்	(வாரியெடுத்து) அமுது செய்தவன்	கலந்தான்	ஒன்றுபடக்கூடினன்

* * * — நான் எம்பெருமானது திருக்குணத்தையே விரும்புவதுபோல அவனும் எனனுடைய சரீரத்தையே விரும்பாநின்றானென்கிறார், இப்பாட்டில பின்னடிகளே முக்கியமானவை; அதிற்சொல்லும விஷயத்திற்கு த்ருஷ்டாந்தம காட்டுவன முன்னடிகள். திருவாய்ப்பாடியில வெண்ணெய அவனுக்கு எவ்வளவு போக்யமாயிருந்ததோ அவ்வளவு போக்யமாயிருந்தது எனனுடைய சரீரமவனுக்கு என்றவாறு.

பொய்கலவாது = அவாப்தஸமஸ்தகாமனும அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதானனுமான ஸர்வேச்வரன் உம்முடைய அழுக்குடம்பிலே கலந்தானென்றால இது நம்பத்தகுந்ததோவென்று சிலர் ஸந்தேஹிக்கக்கூடுமென்று கருதி ஸத்யமிட்டுச் சொல்லுகிறாபோலும். ... . (5)

**கலந்தென்னாவி * நலங்கொள்நாதன் *
புலன்கொள்மாணாய் * நிலங்கொண்டானே. * … … (6)**

கலந்து	— ஒருநீராகக்கலந்து	புலன் கொள் மாண் ஆய	(கண் முதலிய) இந்திரியங்களைக் கவர்ந்துகொள்கின்ற [மநோஹரமான] வாமந ப்ரம்மசாரி வேஷத்தையுடையவனாய்
என் ஆவி	— எனது ஆத்மாவினுடைய		
நலம்	அடிமைத்தனமாகிற நன்மையை		
கொள்	— தனக்காக்கிக்கொண்ட	நிலம்	— (மூவடி) நிலத்தை
நாதன்	— ஸ்வாமியானவன்	கொண்டான்	— பிக்ஷையேற்றுக்கொண்டான்

* * * — என்னைத் தனக்கே அடிமைப்படுத்திக்கொண்டானென்கிறார். மஹாபலியைத் தன் வசப்படுத்தி, அவன் தன்னதாக அபிமானித்திருந்த பொருளைத் தன்னதாக்கிக் கொண்டது போலவே என்னோடே ஒரு நீராகக் கலந்து என்னாத்மாவைக் கொண்டான் — நான் எனக்குரியேனாயிருக்கிற விருப்பைத் தவிர்த்தான். … … (6)

**கொண்டானேழ்விடை * உண்டானேழ்வையம் *
தண்டாமஞ்செய்து * என்னெண்தானானே. * .. . (7)**

ஏழ் விடை	— ஏழு எருதுகளையும்	தண் தாமம் செய்து	குளிர்ந்த பரமபதத்திற்கொப்பாக என்னைத் திருவுள்ளம்பற்றி
கொண்டான்	(நப்பின்னைக்காக) வலியடக்கினவனும்,		
ஏழ் வையம்	— ஏழுலகங்களையும்	என் எண் தான் ஆனான்	நான் எண்ணின எண்ணத்திற்குப் பிரதியாகத் தான் சில எண்ணங்கள் கொண்டான்.
உண்டான்	(பிரளயங்கொள்ளாதபடி) திருவயிற்றிலே வைத்தவனுமான எம்பெருமான்		

* * * — நப்பின்னைப் பிராட்டியோடு ஸம்ச்லேஷிப்பதற்காக அதற்கிடையூறாயிருந்த ஏழெருதுகளை வலியடக்கினாற்போலே என்னோடு கலவிசெய்ய விரும்பி என்னுடைய பாபம் முதலிய பிரதிபந்தகங்களைப் போக்கியருளினானென்பது முதலடியின் கருத்து. பிரளயங்கொள்ளப்புகுந்த பூமண்டலத்தைத் தனது திருவயிற்றிலே வைத்து ரக்ஷியாவிடில் தனக்குத் தரிக்கவொண்ணாமையிருந்ததுபோலே என்னைத் தன்னுள்ளே ஒருநீராக்கிக் கொள்ளாவிடில் தனக்குத்தரிப்பில்லை யென்னலாம்படியிருந்தானென்பது இரண்டாமடியின் கருத்து. பரமபதத்திற் பண்ணும் விருப்பத்தை என்பக்கலிலே பண்ணினானென்பது மூன்றாமடியின் கருத்து.

என் எண் தான் ஆனான் = அவன் விஷயத்திலே நான் எண்ணின எண்ணத்தை அவன் என் விஷயத்தில் எண்ணினான் என்றபடி. அதாவது—‘பரமபதத்திற்குச் செல்லவேணும், விரஜையாற்றிலே முழுகவேணும்’ அங்கே ஸாமகானம்பண்ணி அவனை யநுபவிக்கவேணும், என்றிப்படியெல்லாம் நான் பாரித்துக்கொண்டிருக்க ‘திருக்குருகூர்க்குச் செல்லவேணும், தாமரபரணியிலே நீராடவேணும், கண்ணிநுண் சிறுத்தாம்பு பாடி ஆழ்வாரை அநுபவிக்கவேணும், என்று அவன்றான் பாரித்துக் கொண்டு இங்கே ஓடிவந்தான் என்றவாறு.

'நான் எண்ணினபடியே எனக்குக் கைபுகுந்துவிட்டான்' என்கிற பொருளும் ஏற்றடிக்குக் கொள்ளத்தகும், ஆனாலும் மேலே விவரித்தபொருளே சீரியது. (7)

ஆனாயன் * மீனோடேனமும் *
தானானானென்னில் * தானாய சங்கே. * ... (8)

ஆன் ஆயன் ஆனான்	பசுமேய்க்கும் இடையனானான்,	என்னில்	— என்னுமிடத்து
மீனோடு ஏனமும் தான் ஆனான்	மத்ஸ்யாவதாரமும் வராஹாவதாரமும் முதலான அவதாரங்களைத் தானே செய்தான்,	தான் ஆய	— தானெடுத்த அவதாரங்கள்
		சங்கே	சங்கமென்னுங் கணக்கையுடையனவே. (அபாரமென்றபடி.)

* * * — என்னை வசப்படுத்திக்கொள்வதற்காகவே எம்பெருமான் பல திருவவதாரங்கள் செய்தான்; அங்ஙனஞ் செய்த அவதாரங்களுக்கு ஓர் எல்லையில்லை யென்கிறார். **"என்னில் தானாய சங்கே"** என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்வர்; பதவுரையில் காட்டின பொருள் ஒன்று; மற்றொன்று —; **என்னில்** — என்னிடத்தில், **தான் ஆய** — தனக்குண்டான, **சங்கு** — ஸங்கத்தினாலே, (அதாவது) ஆசையினாலே; ஆனாயனான், மீனோடு ஏனமும் தானானான் என்பதாக. இங்கு ஆறாயிரப்படி காண்மின்— "தன்னுடைய திவ்ய சேஷ்டிதமாத்ரமேயோ எனக்கு போக்யமாகச் செய்தருளிற்று, தன்னுடைய திவ்யாவதாரங்களுமெல்லாம் என்பக்கலுள்ள ஸங்கத்தாலே எனக்கு போக்யமாகச் செய்தருளினானென்கிறார்." என்று.

सङ्ग: என்னும் வடசொல்லும் சங்கு எனத்திரியும்; **शङ्ख:** என்னும் வடசொல்லும் சங்கு எனத்திரியும். பதவுரையிற்படி பொருள்கொண்டால், சங்கு என்பது லக்ஷம் கோடி போலே ஒரு மிகப்பெரிய எண்ணுக்குப் பெயர். ... ... (8)

சங்குசக்கரம் * அங்கையில்கொண்டான் *
எங்குந்தானாய * நங்கள்நாதனே. * .. . .. (9)

எங்கும்	— எவ்விடத்தும்	அம் கையில்	— அழகிய திருக்கைகளில்
தான் ஆய	(அவதாரமுகத்தாலே) தானே வியாபித்த	சங்கு சக்கரம்	— திருவாழி திருச்சங்குகளை
நங்கள் நாதன்	— எம்பெருமான்	கொண்டான்	— தரித்துள்ளான்

* * * — இப்படி எனக்காக ஸகல யோனிகளிலும் வந்து பிறந்தருளுகிறவன் தனது திருக்கைகளில் அழகிய திருவாழியும் திருச்சங்குமேந்தி அவ்வழகோடு கூட வந்து பிறப்பவனென்கிறார். சிலரை வசப்படுத்திக்கொள்ள நினைத்தவர்கள் கையிலே மருந்தை வைத்துக்கொண்டு திரியுமாபோலே அவதாரங்கள்தோறும் திவ்யாயுதங்களோடே வந்து அவதரிப்பனும். எல்லா அவதாரங்களிலும் திவ்யாயுதங்கள் உண்டோவென்னில், எங்குமுண்டு; உகவாதார் கண்ணுக்குத் தோற்றாது, உகந்தார் கண்ணுக்குத் தோற்றும்.

இங்கே நம்பிள்ளையீடு;— "ராஜாக்கள் கறுப்புடுத்துப் புறப்பட்டால் அந்தரங்கர் அபேக்ஷித்த தசையிலே முகங்காட்டுகைக்காகப் பிரியத்திரிவர்கள்; அதுபோலே

தோற்றுதேயும நிற்பர்கள." என்று. (அதாவது) ராஜாக்கள நகரசோதனைக்காக ஒருவர்க்குந் தெரியாதபடி நிலவஸ்திர முடுத்துக்கொண்டு இருளோடே யிருளாகத் திரிவர்கள; அப்போது அந்தரங்காகளாகவுள்ளவர்களும கூடவேவந்து திரிவர்கள; ஆனால் அவாகள கூடவே யிருககமாட்டார்கள்; கூபபிட்ட குரலுக்கு ஏனென்று வந்து அணுகி நிற்கும்படியாக எங்கேனும மறைந்து திரிவர்கள; அதுபோலே திருவாழி திருச்சஙகு முதலான அந்தரங்கர்களும் எமபெருமானுடைய எந்த அவதாரத்திலும மறைந்து உடனிருபபர்களென்றவாறு.

"எங்குந் தானாய" என்பதற்கு இரணடுவகையாகப பொருள கூறுவர் (1) தேவயோநி மனுஷயயோநி முதலிய எங்கின்ற யோனிகளிலும வந்து திருவவதரிக்கின்ற. (2) ஒருவனைப பிடிக்கவேண்டி ஊரை வளைவாரைபபோலே தமமை விஷயீகரிபபதற்காக எங்கும் வியாபித்து ஸர்வாந்தர்யாமியாயிருபபவன. . .. . (9)

நாதன்ஞாலங்கொள் * பாதனென்னம்மான் *
ஓதம்போல்கிளர் * வேதநீரனே. * . .. . **(10)**

நாதன்	— ஸகலலோகநாதனும்	என் அமமான்	—	எமபெருமான்
ஞாலம் கொள் பாதன்	உலகத்தையெல்லா மளந்து கொண்ட திருவடிகளை யுடையனுமான	ஓதம் போல்கிளர்	—	கடல்போல முழங்குகின்ற
		வேதம்	—	வேதங்களால் அறியத்தக்க
		நீரன்	—	நீர்மையையுடையான்.

* * * — இபபடி எனக்காக எண்ணிறந்த திருவவதாரஙகளைப பண்ணியருளின இவனுடைய ஆசரித வாத்ஸல்யத்தைப பேசவேணடில, நானோ பேசுவது? கடலோதங் கிளர்ந்தாபபோலே கிளர்நதுள்ள வேதங்களே யன்றோ பேசவேண்டுமென்கிறார். எல்லார்க்கும சேஷியாய, வஸிஷ்ட சணடாள விபாகமின்றியே எல்லாா தலைகளிலும திருவடிகளைப பரப்பினவனான ஸர்வேச்வரன், கடல்போலே கிளர்ந்து ஸ்தோத்திரம பண்ணுகின்ற வேதஙகளாலே பேசப்பட்ட நீாமையையுடையவன்.

நீர்மையையுடையவன் — நீரன். . . . . (10)

நீர்புரைவண்ணன் * சீர்சடகோபன் *
நேர்தலாயிரத்து * ஓர்தலிவையே. * .. .. . **(11)**

நீர் புரை வண்ணன்	நீரையொத்த நிறததை யுடையவனான ஸர்வேச்வரனுடைய	சடகோபன்	—	நம்மாழ்வார்
		நேர்தல் இவை		நேர்ந்து அருளிச்செய்த இப்பத்துப் பாட்டும்
சீர்	ருஜுதவமெனனுங் குணத்தைக் குறித்து	ஆயிரதது	—	ஆயிரததினுள்
		ஓர்தல்	—	ஆராய்ந்து அறியத்தக்கன.

* * *—இந்தத் திருவாய்மொழி மற்ற திருவாயமொழிகளினும ஆராயந்து சொல்லப் பட்டதென்கிறார். 'நீா புரைவண்ணனசீர்' என்றதனால் இததிருவாயமொழிக்கு பரமேயம ருஜுத்வகுணம் என்பது பெறபபடும. நீரின் ஸவபாவமபோன்ற ஸ்வபாவத்தை

யுடைய எம்பெருமானுடைய குணம் என்னவே ஆர்ஜவகுணம் என்பது எங்ஙனே தெரியலாகும் என்னில்; நீர்வெள்ளத்தை நாம் எப்படியிழுத்தாலும் அப்படியெல்லாம் அது ஓடிவரும்; அதுபோலே எம்பெருமான் யார்க்கும் உடன்பட்டுவருவன் என்க.

“நீர்புரைவண்ணன்சீர்” என்ற இவ்விடத்து ஒன்பதினாயிரப்படியில்— “உபாயஜ்ஞர்க்கு நினைத்தவிடத்திலே கொடு போகலான நீரின் தன்மையை யுடையவனுடைய குணத்தை” என்றருளிச்செய்தது காண்க.

இத்திருவாய்மொழியை ஓதுதற்குப் பலன் யாதொன்றுங் கூறப்படாமையினால் இதனை ஓதுதல் தானே ஸ்வயம் ப்ரயோஜனம் என்பது விளங்கும். (11)

எட்டாந்திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி முதற்பத்து. ஒன்பதாந் திருவாய்மொழி — இவையுமவையும்.

அவதாரிகை. எம்பெருமானிடத்தில் [ஸாத்ம்யபோக ப்ரதத்வம்] என்றொரு குணமுண்டு; அதாவது, அடியார்களுக்குத் தன்னை அநுபவிப்பிக்குமிடத்தில் ஏககாலத்திலேயே பூர்ணாநுபவங் கொடுத்துவிடுகை யன்றியே பொறுக்கப் பொறுக்கச் சிறிது சிறிதாகக் கொடுத்தலாம். அங்ஙனங் கொடாமல் ஒரடியிலேயே பூர்ணாநுபவத்தைத் தந்தருளினால் அது தாங்கமுடியாதே போகும். சிறு குழந்தைகட்கு முதல்தன்னிலேயே சோறும் சாறும் கறியுமிடுவாரில்லையே, பால், கஞ்சி, சோறு என்று வரிசைக் கிரமமாக ஊட்டுகையன்றோவுள்ளது; அதுபோலவே மாணாக்கர்களுக்கும் சிறு சிறு பாடங்களாகக் கற்பித்துக்கொண்டுபோய்ப் பெரும் பாடங்களைக் கற்பிக்கும் முறை காணாநின்றோம். இங்ஙனமே எம்பெருமானும் பொறுக்கப் பொறுக்கப் பரிமாறும்வகை யொன்றுண்டு; அஃது இத்திருவாய்மொழியில் விளங்கும்.

ஆசார்யஹ்ருதயத்தில் — “புணர்தொறுமென்னைக் கலந்து பிரிந்து ஜ்ஞானபக்திகளை வளர்த்தது கனங்குழையிடக் காது பெருக்குதலும் மாஸோபவாஸி போஜனப் புறப்பூச்சும் போலே ஆற்ற நல்ல மாபோகச் சிரமமாக” என்றருளிச் செய்த சூர்ணிகை இங்கே அநுஸந்திக்கத்தகும்; (இதன் கருத்தாவது:—) ஆழ்வார் “பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இனியாமுறாமை” என்ற போதே இவர்க்குப் பரிபூர்ணாநுபவம் கொடுத்துவிடலாமாயிருக்க, இவரை இந்நிலத்திலே வைத்துத் தன்னுடைய ஸம்ச்லேஷ விச்லேஷங்களாலே ஜ்ஞான பக்திகளை வளர்த்தது எதுக்காகவென்னில், கனமான காதணியிடுகைக்கு இடமாம்படி நூலிட்டுத் திரியிட்டுக் குதம்பையிட்டுக் காது பெருக்குமாபோலவும், மாஸோபவாஸிகளுக்கு முதலிலே போஜனமிட்டால் பொறாதென்று சோற்றை யரைத்து உடம்பிலே பூசிப் பொரிக்கஞ்சி கொடுத்துப் பொரிக்கூழ்கொடுத்து நாளடைவிலே போஜனம் பொறுப்பிக்குமாபோலவும் 1. “ஆற்றநல்ல வகைகாட்டு மம்மான்” என்று எனக்

1. திருவாய்மொழி 4—5—5

குப் பொறுக்கப் பொறுக்கத் தன் குணசேஷ்டிதாதிகளைக் காட்டி அவ்வழியாலே என்னை அடிமைகொண்டவனென்னும்படி பகவதநுபவம் கைக்கண்டறியாத விவர்க்கு மிகவுஞ் சிறந்ததாய நித்யஸூரிகள் அநுபவிக்குமதான போகத்தை முதல் முதலிலே கொடுத்தால் ஸாத்மிக்கமாட்டாரென்று கருதி அது ஸாத்மிக்கைக்காக க்ரமம் செய்வித்தபடி — என்பதாம்.

ஆக இப்படிப்பட்ட ஸாத்மயபோக ப்ரதத்வமென்னும் குணம் திருவிருத்தந் தொடங்கி, சூழ்விசும்பணிமுகிலளவும் தொடர்ந்துகொண்டே வருவதாயிருக்க, இந்தத் திருவாய்மொழிக்கு விசேஷமென்னென்னில்; மற்ற திருவாய்மொழிகளில் நுட்பமாகக் கண்டறியவேண்டியதான இக் குணம் இத் திருவாய்மொழியிலே பாசுர வரிசையில் ஸ்பஷ்டமாகவே காணக்கிடைத்தல் விசேஷமென்றுணர்க.

ஆழ்வாருடைய திருமுடியிலே வந்து நிற்றிருக்கவேணுமென நினைத்த எம்பெருமான் முதலடியிலே அது செய்தால், நிதிகண்ட ஜன்ம தரித்ரனைப்போலே ஸந்தோஷாதிசயம் தாங்கமாட்டாமே தளர்ந்திடுவர்; ஆதலால், சுற்றுப்பக்கத்திலே நின்று, அருகே நின்று, கூட நின்று, ஒக்கலையிலே வந்திருந்து, ஹ்ருதயப்ரதேசத்திலே வந்திருந்து, தோளிலே வந்திருந்து, நாவிலே வந்து புகுந்து, கண்ணுள்ளே நின்று, நெற்றியிலே நின்று பிறகு உச்சியிலே நின்றான்; ஆக இங்ஙனே பொறுக்கப் பொறுக்கச் செய்த செயலையநுபவித்து ஈடுபடுகிறாராழ்வார் இத்திருவாய்மொழியில். . . (*)

இவையுமவையுமுவையும் இவருமவருமுவரும் *
எவையுமெவரும் தன்னுள்ளே ஆகியுமாக்கியுங்காக்கும் *
அவையுள்தனிமுதலெம்மான் கண்ணபிரானென்னமுதம் *
சுவையன்திருவின்மணாளன் என்னுடைச்சூழலுளானே. ... ... (1)

இவையும்	ஸமீபத்திலுள்ள பொருள்களும்	காக்கும்	ரக்ஷித்தும் போருகிறவனும்
அவையும்	தூரத்திலுள்ள பொருள்களும்	அவையுள்	அந்த சேதநாசேதநங்களுக்கு அந்தர்யாமியானவனும்
உவையும்	நடுத்தரமாகவுள்ள பொருள்களும்	தனி முதல்	— ஒப்பற்ற காரணபூதனும்
இவரும்	ஸமீபத்திலுள்ள சேதனர்களும்	எம்மான்	— அஸ்மத் ஸ்வாமியும்
அவரும்	தூரத்திலுள்ள சேதனர்களும்	கண்ணபிரான்	கண்ணனாக அவதரித்து ஸௌலப்யத்தைக் காட்டினவனும்
உவரும்	நடுத்தரமாகவுள்ள சேதனர்களும்	என் அமுதம்	எனக்கு அம்ருதம்போல் பரம போக்யனும்
யவையும்	— ஸகல அசேதனங்களும்	சுவையன்	— ரஸிகனும்
யவரும்	— ஸகல சேதனர்களும் (ப்ரளயகாலத்தில்)	திருவின் மணாளன்	பெரியபிராட்டியார்க்கு மணவாளனுமான பெருமாள்
தன்னுள்ளே	— தனக்குள்ளே	என்னுடை சூழல்	என்னுடைய சுற்றுப்பக்கத்தில்
ஆகியும்	— ஆகும்படி வைத்தும்	உளான்	— தங்கியிராநின்றான்.
ஆக்கியும்	— (பிறகு) படைத்தும்		

* * * — ஜகத்காரணபூதனும் ஸர்வாந்தர்யாமியும் திருமகள் கொழுநனுமான கண்ண பிரான் என்னுடைய சூழலைவிட்டுப் போகமாட்டாதபடியானு னென்கிருர். * உயர் வறவுயர் நலமென்கிற முதல் திருவாய்மொழியில் "நாமவன்" என்கிற நாலாம்பாட்டிற் சொன்ன சேதநாசேதநங்கள் இப்பாட்டில் திரளத் தொகுக்கப்பட்டுள்ளன: அப்பாட்டி னுரையில் விரியக்கண்டு கொள்வது. ஆக இப்படிப்பட்ட சேதநாசேதந வர்க்கங்க ளெல்லாம் ஸம்ஹார ஸமயத்திலே தன்னுள்ளே யாம்படியாயும் ஸ்ருஷ்டி ஸமயத்திலே உண்டாக்கியும், ஸ்ருஷ்டிக்கப்பட்ட வற்றுக்கு நேரும் ஆபத்துக்களைப் போக்கி அபி மதங்களைக்கொடுத்து ரக்ஷிக்குமவனும் அவற்றினுள்ளே அந்தராத்மாவாய் வேறொரு ஸஹாயத்தையு மபேக்ஷியாத காரணமுமாய ஸ்வாமியுமாய, கண்ணபிரானை எளி மையைக் காட்டி எனக்குப் பரம போக்யபூதனாய் ரஸிகனான எம்பெருமான் பிராட்டி யோடுகூட என்னுடைய சூழலிலே ஆனான்.

சுவையன் திருவின்மணாளன் = சுவையனாகையாலே திருவின் மணாளனானான்; திருவின் மணாளனாகையாலே சுவையனானான் என்று யோஜித்து உபந்யஸித்தருளுவர் அழகியமணவாளச்சீயர். ரஸிகனாகையாலே பிராட்டி * அகலகில்லேனிறையு மென்று இணைபிரியாதிருக்கப் ப்ராப்தமாயிற்று; பிராட்டி அணையப்பெற்றதனாலதான் ரஸிகனா னென்று பரஸ்பர ஸாபேக்ஷத்வம் கூறி யோஜிப்பது மிக அழகியதே. .. (1)

சூழல்பலபலவல்லான் தொல்லையங்காலத்துலகை *
கேழலொன்றாகியிடந்த கேசவனென்னுடையம்மான் *
வேழமருப்பையொசித்தான் விண்ணவர்க்கெண்ணலரியான் *
ஆழநெடுங்கடல்சேர்ந்தான் அவனென்னருகலிலானே. * ... .. (2)

பலபல சூழல் வல்லான்	மிகப்பல அவதாரங்கள் செய்ய வல்லவனும்	ஒசித்தான்	ஒடித்து அவ்யானையை முடித்தவனும்
தொல்லையம் காலத்து	முன்பொரு காலத்திலே	விண்ணவர்க்கு	—தேவர்களுக்கு
உலகை	பூமியை	எண்ணல் அரியான்	நினைத்தற்கும் அருமையானவனும்
கேழல் ஒன்று ஆகி	ஒப்பற்ற வராஹரூபியாகி	ஆழம்	—ஆழமாகிய
இடந்த	குத்தியெடுத்துவந்தவனும்	நெடு கடல்	—நீண்ட ஸமுத்ரத்திலே
கேசவன்	கேசவனென்னும் திருநாம முடையவனும்	சேர்ந்தான்	திருக்கண்வளர்ந்தருள்பவனு மான
வேழம்	(குவலயாபீட மென்னும்) யானையினுடைய	என்னுடை அம்மான் அவன்	அவ்வெம்பெருமான்
மருப்பை	—கொம்புகளை	என் அருகலிலான்	என்னருகிலுள்ளான்.

* * * — கீழ்பாட்டிற் கூறியபடி பரிஸரத்திலே வந்து இருந்த நிலை ஸாதமித்தவாறே என்னருகே வந்து நின்றானென்கிருர். சூழல் என்னுஞ் சொல் கீழ்பாட்டில் சுற்றுப் பிரதேசம் என்ற பொருளில் வந்தது. இப்பாட்டில் அதுவே சொல் அவதாரமென்ற பொருளில் வந்தது. சூழ்த்துக்கொள்வதற்காகச் செய்த காரியம் [அதாவது] ஸம்ஸாரி களை அகப்படுத்திக் கொள்வதற்காகச் செய்தது என்ற காரணத்தினால் இச் சொல் அவதாரத்தைக் குறிக்குமென்க. "எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்றபடி எம் பெருமான் எண்ணிறந்த யோனிகளில் திருவவதாரங்கள் செய்தமையால் **"சூழல் பல பல வல்லான்"** என்றார். நாமும் பல பிறவிகள் பிறக்கிறோமானாலும் கருமங்காரணமா

கப் பிறக்கின்றோம்; எம்பெருமான் கருணை காரணமாகப் பிறக்கின்றானதலாலும், நரஸிம்ஹம்போலே சேராச் சேர்த்தியான அவதாரங்களையும் எடுக்கின்றானதலாலும் **வல்லான்** என்றது.

அப்படி அவன் செய்தருளின அவதாரங்களில் ஓரவதாரத்தை யநுபவிக்கிறார் **கேழலொன்றாகி** யென்று. ஹிரண்யகசிபுவின் உடன்பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னும் கொடிய அசுரன் தன் வலிமையாற் பூமியைப் பாயாகச்சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் முழுகிச் சென்றபோது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மஹா வராஹரூபியாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை நாடிக் கண்டு பொருது கோட்டினாற் குத்திக்கொன்று, பாதாளலோகத்திற் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினாற் குத்தி அங்கு நின்று எடுத்துக்கொண்டுவந்து பழையபடி விரித்தருளினனென்ற வராஹாவதார வரலாறு அறியத்தக்கது. இப்பொழுது நடக்கிற ச்வேத வராஹகல்பத்துக்கு முந்தின பாத்ம கல்பத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளய ஜலத்தில் முழுகியிருந்த பூமியை மேலே யெடுக்க நினைத்து மஹா வராஹரூபியாகிக் கோட்டு நுனியால் பூமியை எடுத்துவந்தனனென்ற வரலாறும் உண்டு: 1. "பாரார்உலகம் முதுமுந்நீர் பரந்த காலம் வளைமருப்பில், ஏராருருவத் தேனமாய் எடுத்த ஆற்றலம்மான" என்ற திருமங்கையாழ்வாரருளிச்செயல் காணத்தக்கது. ... ... (2)

அருகலிலாயபெருஞ்சீர் அமரர்களாதிமுதல்வன் *
கருகியநீலநன்மேனிவண்ணன் செந்தாமரைக்கண்ணன் *
பொருசிறைப்புள்ளுவந்தேறும் பூமகளார்தனிக்கேள்வன் *
ஒருகதியின்சுவைதந்திட்டு ஒழிவிலனென்னோடுடனே. * ... ... **(3)**

அருகல் இல் ஆய	ஒருநாளும் குறைபடுதலை உடையதல்லாத
பெரு சீர்	சிறந்த திருக்குணங்களை யுடையவனும்
அமரர்கள்	—நித்யஸூரிகளுக்கு
ஆதி முதல்வன்	—தலைவனும்
கருகிய நீலம் நல் மேனி வண்ணன்	கறுத்த நீலமணிபோல் விலக்ஷணமான திருமேனி நிறத்தையுடையவனும்
செம் தாமரை கண்ணன்	செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடையவனும்
பொரு சிறை புள்	செறிந்த சிறகையுடைய பெரிய திருவடியை
உவந்து ஏறும்	விரும்பி வாஹனமாகக்கொள்பவனும்
பூமகளார் தனி கேள்வன்	பெரியபிராட்டியார்க்கு ஒப்பற்ற நாதனுமான எம்பெருமான்
என்னோடு உடனே	—என்னோடே கூடிநின்று
ஒரு கதியின் சுவை தந்திட்டு ஒழிவிலன்	ஒருவழியாலுள்ள இனிமையைத்தந்து தவிருகிறானில்லை [ஸகலவித அநுபவங்களையும் தருகின்றானென்றபடி.]

* * * — பெரிய திருவடி திருவனந்தாழ்வான் பிராட்டிமார் முதலானோர் ஓரொரு வகைகளாலே தன்னோடு ஸம்ச்லேஷரஸம் பெறுமாபோலல்லாமல், எல்லாவகைகளாலுமுள்ள ஸம்ச்லேஷரஸங்களையும் நான் பெறும்படி எனக்குத் தந்து என்னை ஒருகாலும் விடாதபடி யானான் எம்பெருமானென்கிறார்.

அருகல் — குறைதல், அது இல்லாத எனவே, நித்யமான என்றபடி. அன்றி, சேடில்லாமையைச் சொல்லிற்றாய் குணங்கள்தன்னையும் கல்யாணமாயிருக்கின்றன வென்றபடியுமாம். ஹேய ப்ரத்யநீக கல்யாண மஹாகுணங்களையுடையனாய், அந்தக்

1. பெரிய திருமொழி 8—8—3

குணங்களின் அநுபவமே யாத்திரையான நித்யஸூரிகளுக்குத் தலைவனாய், கறுத்து செய்தது விலக்ஷணமான திருமேனி நிறத்தையுடையனாய, திருவுள்ளத்தினுள்ளே யுள்ள தண்ணளிக்கு ஸூசகமாயிருக்கும் திருக்கண்களையுடையனாய், ஸந்தோஷ மிகுதியினால் பதறாநின்றுள்ள சிறகையுடைய பெரிய திருவடியின்மீது உவந்து ஏறுமவனாய, கமலைகேள்வனான எம்பெருமான எனக்கு ஏதோ வொருவகையான ரஸாநுபவத்தை மாத்திரம் தந்துவிடாமல் நித்யஸூரிகளெல்லார்க்கும் தனித்தனியே தந்தருளும் அநுபவங்களையெல்லாம் என்னொருவனுக்குத் தந்தருளி வேறு எங்கும் போக்கற்றவனாய் "நித்யவிபூதியை நிர்வஹிப்பதும் இங்கே யிருந்துகொண்டே போலும்" என்னும்படி என்னை ஒரு நொடிப்பொழுதும் விடுகிறானில்லை யென்றாராயிற்று.

அருகலிலாய பெருஞ்சீர் என்பதனால் சொல்லப்பட்ட அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநமான ஸ்வரூப வைலக்ஷண்யமென்ன, **அமரர்களாதிமுதல்வன்** என்பதனால் சொல்லப்பட்ட நித்யஸூரி நிர்வாஹகத்வமென்ன, **கருகிய நீலநன் மேனிவண்ணன்** என்பதனால் சொல்லப்பட்ட விலக்ஷண திவ்யமங்கள விக்ரஹயுக்தத்வமென்ன, **செந்தாமரைக்கண்ணன்** என்பதனால் சொல்லப்பட்ட புண்டரீகாக்ஷத்வமென்ன, **பொருசிறைப்புள்ளுவந்தேறும்** என்பதனால் சொல்லப்பட்ட கருடவாஹநத்வமென்ன, **பூமகளார்தனிக்கேள்வன்** என்பதனால் சொல்லப்பட்ட ச்ரிய:பதித்வமென்ன ஆகிய இந்த அறுசுவையுந் தாராநின்றானென்று உட்கருத்துணர்க. ... ... (3)

உடனமர்காதல்மகளிர் திருமகள் மண்மகளாயர்
மடமகள் என்றிவர்மூவராளும் உலகமும்மூன்றே *
உடனவையொக்கவிழுங்கி ஆலிலைச்சேர்ந்தவனெம்மான் *
கடல்மலிமாயப்பெருமான் கண்ணனென்னொக்கலையானே. * ... **(4)**

உடன் அமர் காதல்	கூடவே அமர்ந்திருக்கைக்கு விருப்பமுள்ள	அவை	— அவ்வுலகங்களை
மகளிர்	— பிராட்டிமார (யாவரென்னில்)	உடன்	— விடாமலே
திருமகள்	— ஸ்ரீ மஹாலக்ஷ்மி	ஒக்க விழுங்கி	— ஏககாலத்திலே உண்டு
மண் மகள்	— பூமிப்பிராட்டி	ஆல் இலை	— ஆலிலையில்
ஆயர் மட மகள்	இடைக்குலத்துப்பெண்ணாகிய நப்பின்னைப்பிராட்டி	சேர்ந்தவன்	— கண்வளர்ந்தவனும்
என்ற இவர் மூவர்	என்று சொல்லப்பட்ட இம்மூவராவர்;	எம்மான்	— எனக்கு ஸ்வாமியும்
ஆளும் உலகமும் மூன்றே	தன்னாலாளப்படுகின்ற உலகங்களும் மூன்றேயாயிருக்கும், (ஆக இங்ஙனம் வாய்ந்தவனும்)	கடல் மலி மாயம் பெருமான்	கடலிற்காட்டிலும் மிகப் பெரிய மாயச்செயல்களால் பெருமைபெற்றவனுமான
		கண்ணன்	— கண்ணபிரான்
		என் ஒக்கலையான்	என் இடுப்பிலே வந்தமர்ந்தான்.

* * * — ஒன்றுமொன்று குறைவில்லாதவனாய ஸர்வரக்ஷகனான எம்பெருமான் யசோதைப்பிராட்டியின் இடுப்பிலிருக்குமாபோலே என்னிடுப்பிலே வந்திருத்தல் தனக்குப் பெரும் பேறு என நினைத்திராநின்றானென்கிறார். எப்போதும் கூடியேயிருந்தாலொழியத் தரிக்கமாட்டாத பெரிய பிராட்டியாரையும் பூமிப்பிராட்டியாரையும் நப்பின்னைப்பிராட்டியையும் தனக்கு திவ்ய மஹிஷிகளாகவுடையனாய், பூமிமுதலிய ஸகல லோகங்களையும் தனக்கு லீலோபகரணமாகவுடையனாய், ஆபத்து நேருங்காலங்களிலே அவ்வுலகங்களைத் திருவயிற்றிலே வைத்து நோக்கி ஒரு சிறிய ஆலந்தளிரிலே கண்

துயின்றருள்பவனும், கடலிற்காட்டிலும் மிகப் பெரியன என்னலாம்படியான ஆச்சரிய சேஷ்டிதங்களையுடையவனுமான எம்பெருமான் என்னிடுப்பிலே வந்து சேர்ந்தருளினான்.

உலகமும் மூன்றே என்றதில் அழியாவுலகமாகிய பரமபதத்தையுஞ் சேர்த்துப் பொருள்கொள்ளும் பக்ஷத்தில், மேலே "உடனவையொக்கவிழுங்கி" என்றதில் அர்த்தஸ்வபாவத்தாலே பரமபதம் மாத்திரம் கழியுணணக்கடவது. பரமபதத்தைச் சேரா முலே பாதாளவுலகம் நிலவுலகம் சுவர்க்கவுலகம் என மூவுலகங்களென்னவுமாம்.

கடல் மலி = திருப்பாற்கடலில் சயனித்தருளுகிற என்றுமாம். ... (4)

ஒக்கலைவைத்துமுலைப்பாலுண்ணென்று தந்திடவாங்கி *
செக்கஞ்செகவன்றவள்பால் உயிர்செகவுண்டபெருமான் *
நக்கபிரானோடு அயனுமிந்திரனும்முதலாக *
ஒக்கவும்தோற்றிய வீசன் மாயனென்னெஞ்சினுளானே. * ... (5)

ஒக்கலை வைத்து	இடுப்பிலெடுத்துக்கொண்டு	பெருமான்	ஸ்வாமியானவனும்,
முலைப்பால் உண் என்று	'முலைப்பாலையுண்பாய்' என்று சொல்லி	நக்கபிரானோடு	திகம்பரச்சாமியான ருத்ரனும்
தந்திட	முலைகொடுக்க	அயனும்	பிரமனும்
வாங்கி	(அம்முலையைக்) கையாற் பிடித்து	இந்திரனும்	இந்திரனும்
செக்கம்	(அந்தப் பூதனையின்) நினைவு	முதலாக	முதலாகவுள்ள
செக	அவளோடே முடியும்படியாக	ஒக்கவும்	எல்லாரையும்
அன்று	அந்நாளில்	தோற்றிய	படைத்த
அவள் பால்	அவளது பாலையும்	ஈசன்	ஈசனானவனும்
உயிர்	பிராணனையும்	மாயன்	ஆச்சரிய குணசேஷ்டிதங்களையுடையவனுமான எம்பெருமான்
செக	அழிய	என் நெஞ்சின் உளான்	எனது இதயத்திலுள்ளானானான்.
உண்ட	அமுதுசெய்த		

* * * — பிரமன் சிவனிந்திரன் முதலானோர்க்கும் ஜநகனான எம்பெருமான் எனது நெஞ்சிலேவந்து புகுந்தானென்கிறார். ஸ்ரீக்ருஷ்ணனைப் பெற்ற தாயான தேவகியினது உடன் பிறந்தவனாகிய அக்கண்ணபிரானுக்கு மாமனாகிய கம்ஸன், தன்னைக் கொல்லப் பிறந்த தேவகீ புத்திரன் ஒளித்துவளர்தலையறிந்து, அக் குழந்தையை நாடியுணர்ந்து கொல்லும்பொருட்டுப் பல அசுரர்களை ஏவ, அவர்களில் ஒருத்தியான பூதனையென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து அங்குத் தூங்கிக்கொண்டிருந்த கிருஷ்ண சிசுவை யெடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலையைக்கொடுத்துக் கொல்ல முயல, பகவானான குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தனன் என்ற வரலாறு அறிக. [ஒக்கலைவைத்து இத்யாதி.] "மகனைக்கொண்டெடுத்தாள் மாண்பாய கொங்கை, அகனாரவுண்பனென்றுண்டு, மகனைத் தாய் தேறுதவண்ணந் திருத்தினாய்" என்னும்படியே பூதனையென்னுமரக்கி கண்ணனை யிடுப்பிலே தூக்கிவைத்துக்கொண்டு முலையுண்ணக் கொடுத்தாளென்க.

செக்கஞ் செக என்பதற்குப் பலபடியாகப் பொருள்கூறுவர், செக்கம் என்று மரணத்திற்குப் பேராய், கண்ணனுக்காக அவள் எண்ணின மரணம் அவனுக்கேயாம்படி என்னுதல்: செக்கஞ் செக = மிகவுஞ் சிவப்பாக என்றபடியாய், "கறுப்புஞ்சிவப்பும் † வெகுளிப்பெயரே" என்ற தமிழர்களின் ஸித்தாந்தத்தின்படி சீற்றத்தைச்சொல்லிற்றாய், மிகவுங்கோபங்கொண்டு என்றபடியுமாம். திருப்பவளம் மிகச் சிவக்கும்படி [அதரத்தின் பழுப்பு நன்கு தெரியும்படி] சிரித்துக்கொண்டே என்றபடியுமாம்

அவள்பால் = பால் என்பதை ஏழனுருபாகவுங் கொள்ளலாம். அவளிடத்துள்ள என்றபடி.

[**நக்ந:**] என்ற வடசொல் **நக்கன்** எனத் திரியும்; அரையில் ஆடையில்லாதவன் என்றபடி. இது சிவபிரானுக்கு வழங்கும் நாமம். அயன் — அஜன: அகாரவாச்யனான எம்பெருமானிடத்துத் தோன்றினவன் என்ற காரணத்தினால் பிரமனுக்குப் பெயர். ... ... (5)

இப்பாட்டில் **நெஞ்சு** என்று மார்வைச் சொன்னபடி.

மாயனென்னெஞ்சிலுள்ளான் மற்றும்யவர்க்குமஃதே *
காயமும்சீவனும்தானே காலுமெரியுமவனே *
சேயனணியன்யவர்க்கும் சிந்தைக்கும்கோசரமல்லன் *
தூயன்துயக்கன்மயக்கன் என்னுடைத்தோளிணையானே. * ... ... **(6)**

மாயன்	— ஆச்சரியனான எம்பெருமான்
என் நெஞ்சில் உள்ளான்	எனது நெஞ்சில் இருக்கின்றான்;
மற்றும் யவர்க்கும்	— வேறு யாருக்கேனும்
அஃதே	— அப்படியிருப்பதுண்டோ? (இல்லை,)
காயமும்	— உடம்பும்
சீவனும்	— உயிரும்
தானே	— தானேயாய்,
காலும்	— காற்றும்
எரியும்	— நெருப்பும்
அவனே	— அவன் தானேயாய்,
சேயன்	— (சிலர்க்கு) தூரஸ்தனாய்,
அணியன்	— (சிலர்க்கு) ஸமீபஸ்தனாய்
யவர்க்கும்	எப்படிப்பட்ட ஞானிகளுக்கும்
சிந்தைக்கும் கோசரமல்லன்	மனத்திற்கும் எட்டாதவனாய்
தூயன்	— பரிசுத்தனாய்
துயக்கன் மயக்கன்	(அநுகாஹபாத்திரமாகாதவர்களுக்கு) ஸந்தேஹரூபமாயும் விபரீத ரூபமாயுமிருக்கும் ஞானங்களைப் பிறப்பிப்பவனான எம்பெருமான்
என்னுடைத் தோள் இணையான்	எனது இரண்டு தோள்களிலுமுள்ளானேன்.

* * * — அநுகூலர்க்கு எளியனாய, பிரதிகூலர்க்கு அரியவனான எம்பெருமான் எனது மார்பிலிருந்து தோளிணைக்கு ஏறிவிட்டானென்கிறார். கீழ்ப்பாட்டிற் சொன்னதையே மறுபடியும் "மாயனென்னெஞ்சிலுள்ளான்" என்று அநுபாஷணஞ் செய்தது இப்பாட்டின் மிகுதியைக் காட்டும். 'இது என்ன பெரும்பேறு' என்று தலைசீய்த்துச் சொல்லுகிறபடி. [**மற்றும் யவர்க்குமஃதே**] என்னைத்தவிர வேறு யாருக்காவது இப்படிப்பட்ட பேறு கிடைத்ததுண்டோ? எனக்கே இப்பேறு அஸாதாரணம் என்றவாறு

காயமும் என்று தொடங்கி **மயக்கன்** என்னுமளவும் எம்பெருமானுடையபடிகளைப் பேசி யநுபவிக்கிறார். தேவ மநுஷ்யாதி சரீரங்களும் அந்தந்த சரீரங்களிலுள்ள ஆத்மாக்களும் தானிட்டவழக்காம்படியிருக்கப் பெற்றவனாய், வாயு தேஜஸ்ஸு-

† வெகுளி = கோபம்.

முதலிய பஞ்சபூதங்களும் அப்படியே தானிட்ட வழக்காம் படியிருக்கப் பெற்றவனும், தம் முயற்சியாலே காண நினைப்பார்க்கு எட்டாதவனும், நிர்ஹேதுக விஷயீகார பாத்திர பூதர்களுக்குக் கைச்சரக்காக எளியனாயிருப்பவன்.

சேயன் என்றதற்கு விவரணம் "யவர்க்குஞ் சிந்தைக்குங் கோசரமல்லன்" என்பது; **அணியன்** என்றதற்கு விவரணம் "தூயன்" என்பது. தம் முயற்சியாலே காண விருப்பார் எத்தனையேனும் மஹான்களாயினும் அவர்களது கண்ணுக்கு மாத்திரமேயன்றியே மநோரதத்திற்கும் விஷயமாகான். **[தூயன்]** இங்குத் தூயனாயாவது யசோதைப்பிராட்டிபோல்வார்க்குக் கட்டுண்ணும் எளியனாந்தன்மை.

துயக்கன் மயக்கன் = துயக்கு என்று ஸந்தேஹத்திற்குப் பெயர், மயக்கு என்று விபரீதஜ்ஞானத்திற்குப் பெயர்; ஸந்தேஹரூப ஜ்ஞானத்திற்கும் விபரீத ஜ்ஞானத்திற்கும் விஷயமாயிருப்பவன் என்றபடி. எம்பெருமானார் தரிசனத்திலுள்ளவர்கள் எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளது உள்ளபடியாகவும் ஸந்தேஹமில்லாமலும் நன்கு அறிந்துகொண்டிருக்க, இதர பாஹ்ய குத்ருஷ்டி தர்சனங்களிலுள்ளார் பலர் ஸந்தேஹமேபட்டுக்கொண்டும் விபரீதமாகவே யுணர்ந்துகொண்டும் இருக்கின்றார்களன்றோ, இங்ஙனம் சிலரை வாழ்வித்துச் சிலரை ஸம்சய விபர்யய ஜ்ஞானங்களாலே மாய்ப்பவன் எம்பெருமான் என்றபடி. இங்ஙனஞ்செய்வதும் அவரவர்களது கருமாதீனமாதலால் எம்பெருமானுக்கு குறையொன்றுமில்லை யென்க.

இவ்விடத்து அரும்பதவுரையில் ஓர் ஐதிஹ்யம் எழுதப்பட்டுள்ளது; அது வருமாறு;— முற்காலத்தில், பட்டருடைய காலக்ஷேப கோஷ்டியில் சாஸ்த்ரஜ்ஞனான ஒரு பிராமணன் பலகாலும் வந்து போவதுண்டு; அவனைக் கண்டால் பட்டர் ஆதரவுகாட்டாமல் 'வந்தாயோ, போனாயோ' என்று ஸாமாந்யமாக வியவஹரித்தருளிச்செய்வர். சாஸ்த்ரஜ்ஞானம் முதலியன இல்லாத ஒரு ஸ்ரீவைஷ்ணவரும் வந்து போவதுண்டு; அவரைக் கண்டால் மிகவும் அருள்காட்டி ஆதரித்துக்கொண்டெழுந்தருளியிருப்பர். இவ்விரண்டையும் பலகாலுங் கண்டிருப்பாரொருவர் ஒருநாள் பட்டரைவந்து ஸேவித்து, ஸ்வாமிந்! தேவரீருடைய கோஷ்டிக்குப் பலகாலும் வந்து போகிற சாஸ்திரி மஹாவித்வான், மிகவும் ப்ரஸித்தர்; அவர்வந்தால் ஸாமாந்யமாக வ்யவஹரித்தருளுகிறது; மற்றொரு ஸாது ஸ்ரீவைஷ்ணவர் வரக்கண்டால் மிகவும் ப்ரதிபத்திபண்ணியருளுகிறது; பஹுமானிக்கவேண்டுமிடத்தில் ஸாமாந்ய வ்யவஹாரமும், உதாஸித்திருக்கவேண்டுமிடத்தில் பஹுமாநாதிசயமும் செய்தருள்வதற்குக் காரணமருளிச்செய்யவேணும்' என்று கைகூப்பி நின்று கேட்க; அதற்கு பட்டர், 'அவர்களிருவரும் எப்போதும்போலே நாளையும் வருவார்களே; அப்போது நீரும் பார்த்திரும்; வாசியை நீரே அறிந்துகொள்வீர்' என்ன, அவரும் அப்படியே பார்த்திருக்க, மறுநாள் காலை அந்த அந்தணன் முதலில் வந்து ஸேவிக்க, பட்டர் அவனை எப்போதும்போலே வினவியருளி 'நீர் ஆரைத்தான் பரதத்வமாக அறுதியிட்டிருப்பது?' என்று கேட்க, அவன் சில ப்ரமாணங்கள் ப்ரஹ்மாவைப் பரதத்வமாகப் பேசுகின்றன; சில ப்ரமாணங்கள் ருத்ரனைப் பேசுகின்றன; சில ப்ரமாணங்கள் விஷ்ணுவைப் பேசுகின்றன; ஆகவே ப்ரமாணங்களெல்லாம் இப்படி வியாகுலங்களாயிருக்க, நம்மால் தத்வநிர்ணயம்பண்ணப் போமோ? அவரவர்களுடைய அபிமானத்தின்படியே சொல்லிக்கொள்ள வேண்டியதுதான்' என்று விடையளிக்க, அவனைப் போகவிட்டு, பிறகு அந்த ஸாது ஸ்ரீவைஷ

ணவர் வந்தவாறே அவரை நோக்கி, 'தேவரீர் ஆரைத்தான் பரதத்வமென்றிருப்பது?' என்று பட்டர் கேட்க, 'தேவரீர் ச்ரிய:பதி நாராயணனே பரதத்வமென்றும் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றும் பலகாலும் அருளிச்செய்யுமே, அது தவிர அடியேன் வேறொன்றறியேன்' என்ன, அவரையும் அனுப்பிவிட்டு, கேள்விகேட்ட ஸ்வாமியை நோக்கி 'இருவருடைய வாசியையுங் கண்டீரா? ஆரை பஹுமானிக்க ப்ராப்தம்'? என்ன, அவரும் விஸ்மயப்பட்டுப்போனார் — என்பதாம். "தூயன் துயக்கன் மயக்கன்" என்ற விடத்திறகு இது ஏற்ற ஸம்வாதம். ... ... (6)

தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் *
தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான் *
கேளிணையொன்றுமிலாதான் கிளரும்சுடரொளிமூர்த்தி *
நாளணைந்தொன்றுமகலான் என்னுடை நாவினுளானே. * ... ... (7)

தோள் இணை மேலும்	இரண்டு திருத்தோள்களிலும்	கேள் இணை ஒன்றும் இலாதான்	பொருத்தமான உபமானமொன்றுமில்லாதவனாய்
நல் மார்பின் மேலும்	விலக்ஷணமான திருமார்பிலும்	கிளரும் சுடர் ஒளி மூர்த்தி	மேன்மேலும் கிளர்கின்ற சிறந்த வொளியே வடிவெடுத்தவனான எம்பெருமான்
சுடர் முடி மேலும்	ஒளிபொருந்திய திருமுடியிலும்	நாள்	— நாடோறும்
தாள் இணை மேலும்	இரண்டு திருவடிகளிலும்	அணைந்து	— கிட்டி
புனைந்த	— அணியப்பட்ட	ஒன்றும் அகலான்	சிறிதும் விலகாதவனாய்க் கொண்டு
தண் அம் துழாய் உடை அம்மான்	குளிர்ந்தழகிய திருத்துழாயையுடைய ஸ்வாமியாய்	என்னுடை	— என்னுடைய
		நாவின் உளான்	— நாவிலுள்ளவனாக ஆனான்.

* * * — உலகில் நாயகியோடு கலவி செய்யவரும் நாயகன் அவள் உகக்குமாறு தன்னை அலங்கரித்துக்கொண்டு வருமாபோலே எம்பெருமானும் என்னோடு கலக்க விரும்பித் திருத்துழாய் மாலையாலே மிகவும் அழகு பெறுவித்துக்கொண்டுவந்து எனது நாவிலே கலந்தானென்கிறதிப்பாட்டில். முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில ஆழ்வார் பலகாலும் தண்ணந்துழாய் தண்ணந்துழாயென்றே வாய்வெருவினாராதலால் இவரானைநீரத் தண்ணந்துழாய் மாலைகளோடே அழகியனாக வந்து சேர்ந்தானாயிற்று.

அடியார்களைக் கண்டவாறே முந்துற முன்னம் தோள்களாலே அழுந்தக்கட்டியணைப்பானாதலால் முன்னே தோளிணைமேல் திருத்துழாய் சாத்தினான்; தோள்களாலே தழுவி மார்பிலே அணைத்துக்கொள்ள வேணுமாதலால் பிறகு திருமார்புக்குத் திருத்துழாய் சாத்தினான், இப்படி நம்மை அணைத்துக்கொள்பவன் *கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீள்முடியனன்றே?* என்று ஸாம்ராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தினமீது கண் ஓடுமாதலால், அதன் பிறகு சுடர் முடிமீது சாத்தினான்; அவன் வாரியணைத்துக்கொண்டாலும் திருவடிகளில் விழுந்திறைஞ்சுவதே நமது ஸ்வரூபமென்று முடிவாகத் திருவடிவாரத்திலே விழவேண்டியிருத்தலால் அதன் பிறகு தாளிணைமேற் புனைந்தான் என்று கொள்க.

அடியார்களைச் சேர்விக்கும் புருஷகாரபூதையான பிராட்டி யிருக்குமிடமாதல் பற்றி 'நன்மார்பு' எனப்பட்டது. முடியென்று சிரஸ்ஸுக்கும் கிரீடத்திற்கும் பெயர்.

இங்கே பட்டருடைய ஒரு ரஸோக்தி காண்மின்;— உலகில் வீரராயிருப்பவர்கள் முன்னே ஆயுதத்திற்கு அலங்காரம் செய்யுங் கணக்கிலே திவ்யாயுதங்களுக்கு உறைவிடமான தோளிணைமேல் முன்னம் புணைந்தான்; பரண்யிகளாயிருப்பவர்கள் அபிமத விஷயத்திற்கு அலங்காரஞ் செய்யுங்கணக்கிலே பின்னை மங்கையுறைமார்புக்குப் புனைந்தான்; ஆயுதத்திற்கும் அபிமத விஷயத்திற்கும் இட்டுப் பிறகு தாங்கள் விநியோகங் கொள்ளுமித்தனையாகையாலே தன்முடிமீது சூடிக்கொண்டான்; சேஷம் அடியார் கைக்கொள்வாராகையாலே திருவடிகளுக்குச் சாத்தினான் — என்று.

கேள் இணை ஒன்றுமிலாதான் =கேள் என்பதைக் கேழ் எனக்கொண்டு, உவமை யென்று பொருள் கொள்ளலாம், இணை யென்றாலும் உவமை, ஆக, இரண்டுவகையான உவமையுமில்லாதவனென்றவாறு. தனித்தனியே ஒவ்வொரு அம்சத்திற்கும் ஒப்பில்லை, ஸமுதாயத்திற்கும் ஒப்பில்லை என்றபடி. சந்திரன், மேகம், தாமரை, மலை முதலியவற்றை ஒப்பாகச் சொல்லுகின்றோமேயென்னில், ஏதேனுமொரு உபமானம் சொல்லித்தீரவேணு மென்பதற்காகச் சொல்லுகிறதத்தனையொழிய, உண்மையில் ஒப்பாவதொன்றில்லை யென்க. “கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதங் கை யொவ்வா, சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனி யொளி யொவ்வாது, ஒட்டுரைத்திவ்வுலகு உன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப்புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ!” என்று ஆழ்வார்தாமே அருளிச்செய்வா ரொன்றும் பத்தில். [கேள் என்றே கொண்டு, பொருத்தமான உவமையில்லாதவன் என்று முரைக்கலாம்; **கேள்**—உறவு; அதாவது பொருத்தம்.] (7)

நாவினுள்நின்றுமலரும் ஞானக்கலைகளுக்கெல்லாம் *
ஆவியுமாக்கையுந்தானே அழிப்போடளிப்பவன்தானே *
பூவியல்நால்தடந்தோளன் பொருபடையாழிசங்கேந்தும் *
காவிநன்மேனிக்கமலக்கண்ணன் என்கண்ணினுளானே. * (8)

நாவினுள் நின்று	— நாவினிடத்தில் நின்றும்
மலரும்	— பரவுகின்ற
ஞானம் கலைகளுக்கு எல்லாம்	ஜ்ஞானஸாதனமான எல்லாக் கலைகளினுடையவும்
ஆவியும் ஆக்கையும் தானே	உயிரான அர்த்தமும் உடம்பான சப்தமும் தானிட்ட வழக்காம்படி யிருப்பவனும்
அழிப்போடு அளிப்பவன் தானே	(அவற்றினுடைய) உத்பத்தி விநாசங்களும் தானிட்ட வழக்காம்படி யிருப்பவனும்
பூ இயல் நால் தட தோளன்	பூமாறாத நான்கு பெரிய திருத்தோள்களையுடையவனும்
	(அத்திருத்தோள்களில்)
பொரு படை ஆழி சங்கு ஏந்தும்	போர்செய்கின்ற ஆயுதங்களாகிய திருவாழிதிருச்சங்குகளைத் தரித்திருப்பவனும்
காவி நல் மேனி	கருநெய்தல்போன்று அழகிய திருமேனியையுடையவனும்
கமலம் கண்ணன்	செந்தாமரைபோன்ற திருக்கண்களை யுடையனுமாகிய எம்பெருமான்
என் கண்ணின் உளான்	(இவ்வழகோடே) என்து கண்ணுக்குள்ளேயானன்.

* * *—கலைகளெல்லாவற்றாலும் காணவேண்டியவனான எம்பெருமான் பிரமாணங்களாலே காணக்கடவதான தன் வடிவை என் கட்புலனுக்கு இலக்காக்கினனென்கிறார். சாஸ்திரங்கள் யாவும் ஞானத்திற்கு ஸாதனமாக அவதரித்தவை யாதலால் **ஞானக் கலைகள்** எனப்பட்டது. அப்படிப்பட்ட சாஸ்திரங்களெல்லாம் நாவின் நுனியில் மலர்வனவாதலால் “நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைகள்” எனப்பட்டது.

ஆவியும் ஆக்கையுந்தானே = ஆவியாவது உயிர்; ஆக்கையாவது உடல் உலகில் ப்ரத்யக்ஷமாகக் காணக்கூடியது உடல்; அதனுள்ளே உறைந்திருப்பது உயிர், அதுபோலே இங்கு, சப்தம் ஆக்கையாகவும் அர்த்தம் ஆவியாகவும் கொள்ளுதற்குரியது. 'இன்ன சப்தத்திற்கு இன்னது அர்த்தம்' என்று ஸங்கேதம் செய்துவைத்தவன் எம்பெருமானே யாதலால் சப்தார்த்த ஸம்பந்தம் தானிட்ட வழக்காயிருக்கப் பெற்றவனென்றவாறு.

அழிப்போடு அளிப்பவன்தானே = உலகங்களினுடைய உத்பத்தி விநாசங்கள் எம்பெருமானிட்ட வழக்கு என்கிற அர்த்தமன்று இங்கு விவக்ஷிதம்; கீழ்ச்சொன்ன ஞானக்கலைகளைப் பிரவர்த்திப்பிக்கின்றவனும் அவனே, உபஸம்ஹரிக்கின்றவனும் அவனே என்றபடி. இங்கே நம்பிள்ளையீடு:—"மந்தமதிகளான சேதநருடைய ப்ரதிபத்தி தோஷங்களாலும் லேகக தோஷங்களாலும் பாடபேதங்களாலும் இவை உருமாயுமளவிலே ஸம்ஹரித்தும், அபேக்ஷித ஸமயத்திலே ஸ்ருஷ்டித்தும் போருகிறுன்தானே. அல்லாத ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் சொல்லுகிறதென்பாருமுண்டு."

[பூவியல் இத்யாதி.] புஷ்பஹாஸ ஸௌகுமாரனாய், சதுர்ப்புஜனாய், சங்க சக்ர கதாதரனாய், இந்தீவரதளச்யாமனாய்ப் புண்டரீகாக்ஷனாயிருந்தவன் என் கண்ணுக்குள்ளே புகுந்தருளினானாயிற்று. .. . . (8)

கமலகண்ணனென்கண்ணினுள்ளான் காண்பனவன்கண்களாலே *
அமலங்களாகவிழிக்கும் ஐம்புலனுமவன்மூர்த்தி *
கமலத்தயன்நம்பிதன்னைக் கண்ணுதலானொடுந்தோற்றி *
அமலத்தெய்வத்தோடுலகமாக்கி என்நெற்றியுளானே. * . **(9)**

கமலம் கண்ணன் — புண்டரீகாக்ஷன்
என் கண்ணினுள்ளான் — எனது கண்களுக்கு இலக்கானான்;
காண்பன் — (நானும் அவனைக்) காணுகின்றேன்;
(இதுவரையில் அவனைக் காணப்பெறாத நான் இப்போது எங்ஙனே காணப்பெறறேனென்னில்;)
அவன் — அப்பெருமான்
கண்களாலே — (தனது) திருக்கண்களாலே
அமலங்கள் ஆக விழிக்கும் — அஜ்ஞானம் முதலியமலங்கள் தொலையும்படி கடாக்ஷித்தருளினான்; (அதனாலே காணப்பெற்றேனெனக்:)
ஐம்புலனும் — மற்றுமுள்ள எல்லா இந்திரியங்களும்
அவன் மூர்த்தி — அப்பெருமானுக்கே விதேயங்களாயின;
(அவன் யாவனென்னில்;)
கமலத்து அயன் நம்பி தன்னை — தாமரையானும் ஜ்ஞாநாதி பரிபூர்ணனுமிருக்கிற பிரமனையும்
கண் நுதலானொடும் — நெற்றிக்கண்ணனாகிய சிவபிரானையும்
தோற்றி — தோற்றுவித்து
(அவர்கள் முதலாக)
அமலம் தெய்வத்தோடு — ஸாத்விகர்களான தேவர்களோடு கூடின
உலகம் — உலகங்களையும்;
ஆக்கி — படைக்குமவன்;
(ஆக இப்படிப்பட்ட எம்பெருமான்)
என் நெற்றி உளான் — எனது நெற்றியிலே யானான்

* * *—பிரமன் முதலாகப் பிபீலிகா பர்யந்தமாக ஸகல ஜகத்தையும் படைத்தருளின கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளே புகுந்தருளினான்; நானும் அவனை என் கண்

களாற் காணப்பெற்றேன், அவனும் தன்னுடைய குளிர்ந்தழகிய திருக்கண்களாலே என்னுடைய ஸகல தாபங்களும் தீரும்படி என்னைக் குளிர நோக்கியருளாநின்றான். இப்படியே மற்றுமுள்ள செவி முதலிய கரணங்களாலும் அவனையே அநுபவிக்கப்பெற்றேன்: கண்ணுக்கே அவன் வந்திருந்த இருப்பு எனக்கு ஸாத்மிக்கவாறே பின்னை என் நெற்றியுள் நின்றருளினான் என்றவாறு.

ஆரலங்காக விரிக்கும் = இதுவரையில் அவனைக் காண முடியாதபடி தோஷங்கள் நிரம்பிக்கிடந்தன; அவை அவனது கடாக்ஷவிசேஷமடியாக மாய்ந்தனவாதலால் இன்று காணப்பெற்றேன் என்று கருத்து.

ஐம்புலனும் அவன்மூர்த்தி = செவி வாய் கண் மூக்கு உடல் என்பன ஐம்புலன்கள்: முதலடியில் காண்பன் என்றமையால் கண் பகவத்விஷயத்திலே பரவணமானமை அநேக சொல்லப்பட்டதாதலால் மற்ற நான்கு கரணங்களும் அந்தக் கண்போலவே அவ்விஷயத்திலேயே அவகாஹித்தமை சொல்லுதல் இங்கு விவக்ஷிதம். கீழ்நாள்களிலெல்லாம் விஷயாந்தரங்களிலே ஊன்றிக்கிடந்த கரணங்கள் யாவும் இன்று அவனிட்ட வழக்காம்படி அவனுக்கு விதேயமாய் அநேகப்பணிபோந்தனவென்கை. (9)

நெற்றியுள்நின்றென்னையாளும் நிரைமலர்ப்பாதங்கள்சூடி *
கற்றைத்துழாய்முடிக்கோலக் கண்ணபிரானைத்தொழுவார் *
ஒற்றைப்பிறையணிந்தானும் நான்முகனுமிந்திரனும் *
மற்றையமரருமெல்லாம் வந்தெனதுச்சியுளானே. * (10)

ஒற்றை பிறை அணிந்தானும்	சந்திரசேகரனாகிய சிவபெருமானும்
நான்முகனும்	— பிரமதேவனும்
இந்திரனும்	— தேவேந்திரனும்
மற்றை அமரரும் எல்லாம்	மற்றுமுள்ள எல்லாத் தேவர்களும்
வந்து	—கிட்டி,
நெற்றியுள் நின்று என்னை ஆளும் நிரை மலர் பாதங்கள் சூடி	நெற்றியில் படிந்திருந்து என்னையாள்கின்ற மலரொழுங்கமைந்த திருவடிகளை (த்தங்கள் தலையிலே) சூடிக்கொண்டு
கற்றை துழாய் முடி கோலம் கண்ணபிரானை	செறிந்த திருத்துழாயாகிற வளையமணிந்த எம்பெருமானை
தொழுவார்	— வணங்காநிற்பார்கள். (அத்தகைய பெருமைவாய்ந்த எம்பெருமான்)
எனது உச்சி உளான்	என் தலையின்மேலேயானான்.

* * *— பிரமன் சிவனிந்திரன் முதலான மஹான்களுங்கூடத் தன்னைப் பெறுதற்கு ஸமயம் எதிர்பார்த்திருப்பாராயத் தடுமாறும்படியிருக்கிறவன் தான் என்னைப் பெறுகைக்கு அவஸரம் பார்த்துவந்து என் தலைமீது ஏறிவிட்டானென்கிறார்.

நெற்றியுள்நின்று என்னை யாளும் என்பது நிரைமலர்ப்பாதங்களுக்கு விசேஷணம். என்னுடைய நெற்றியிலே [ஊர்த்துவ புண்ட்ரரூபமாக] இருந்துகொண்டு என்னை ஸ்ரீவைஷ்ணவதிலகனாக ஆக்கிய திருவடிமலர்களைத் தாங்கள் சூடிக்கொண்டு ஒற்றைப்பிறையணிந்தானும் நான்முகனுமிந்திரனும் மற்றையமரருமெல்லாம் கண்ணபிரானைத் தொழுவார் என்கிறார். இதனால் ஆழ்வார் ஹரிபாதாகாரமான ஊர்த்துவபுண்ட்ரமே சாத்திக்கொண்டிருந்தவர் என்பதும், அதுதானும் ஏகபாதாகாரமன்று, பாதத்வயாகாரம் என்பதும் ஸ்பஷ்டமாகும். .. .. (10)

உச்சியுள்ளேநிற் நம்தேவதேவற்குக் கண்ணபிராற்கு *
இச்சையுள்செல்லவுணர்த்தி வண்குருகூர்ச்சடகோபன் *
இச்சொன்னவாயிரத்துள் இவையுமோர்பத்தெம்பிராற்கு *
நிச்சலும்விண்ணப்பஞ்செய்ய நீள்கழல்சென்னிபொருமே. * (11)

உச்சி உள்ளே நிற்கும்	(கீழ்ப்பாட்டிற் கூறியபடி) என் தலைமீதிருப்பவனும்	இவையும் ஓர் பத்து	இந்த அத்விதீயமான பத்துப் பாசுரங்களையும்
தேவதேவற்கு	— தேவாதிதேவனும்	எம் பிராற்கு	— எம்பெருமானுக்கு
கண்ணபிராற்கு	கண்ணனாகத் திருவவதரித்தவனுமான பெருமானுக்கு	விண்ணப்பம் செய்ய	(ஒருகால்) விண்ணப்பஞ் செய்யுமளவில்
இச்சை உள் செல்ல உணர்த்தி	(தன் பக்கலிலே அவன் பண்ணின) ஆதரத்தைத் தாம் அறிந்தபடியைத் திருவுள்ளத்திலே பட அறிவித்து	நீள் கழல்	(உலகமளக்க நீண்ட (அவனது) திருவடிகளானவை
		நிச்சலும்	— எப்போதும்
வண் குருகூர்	சடகோபன் சொன்ன—,	சென்னி	— தலையிலே
இ ஆயிரத்துள்	இத்திவ்யப்ரபந்தத்தினுள்	பொரும்	— வந்து சேரும்

* * * — இத்திருவாய்மொழியை எம்பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்வார்தலையிலே அப்பெருமானது திருவடிகள் நாடோறும் வந்து சேருமென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். கீழே தம்முடைய ஒவ்வொரு அவயவத்திலும் முறையேவந்து சேர்ந்து முடிவாக முடிமீதுவந்துசேர்ந்த பெருமானுக்கு இனி எங்கும் போக்கிடமில்லையென்பது தோன்ற "உச்சியுள்ளே நிற்கும்" என்கிறார். சென்னிப்பூவான எம்பெருமான் என் சென்னிக்கு அப்பால் போக்கிடமில்லையென்று துணிந்து இங்கே படுகாடுகிடக்கின்றானென்கை. என்னுச்சியுள்ளே நிற்கையாலே தான் தேவதேவனாயினானென்பதும் ஆழ்வார்க்கு விவக்ஷிதமென்ப; தேவதேவனாயிருக்கின்ற தான் என்னுச்சியுள்ளே நிற்பதை ஒரு பேறாகக்கருதுகின்றானே! இது என்ன சீலம்! என வியந்தவாறுமாம்.

இத்திருவாய்மொழியில் ஒவ்வொரு பாசுரத்தாலும் எம்பெருமான் தமது ஒவ்வொரு அவயவத்திலே வந்து சேர்ந்தனைகைப் பேசியவிது, எம்பெருமானுக்குத் தம்மிடத்தில் அவ்வளவு ஆவல் இருக்கின்றமையை யறிந்து கூறியபடி என்பதை யுணர்த்துகின்றார் இச்சையுட் செல்லவுணர்த்தி என்பதனால்.

"இவையுமோர்பத்து எம்பிராற்கு விண்ணப்பஞ்செய்ய, நீள்கழல் நிச்சலும் சென்னிபொரும" என்று அந்வயிப்பது. இது கற்பார், தமக்குப் பாங்கான ஸமயத்திலே ஒருகால் விண்ணப்பஞ்செய்யப்பெறில், ஆசாலேசமுடையாரிருந்தவிடத்திலே செல்லவல்ல திருவடிகள் எப்போதும் அவர்களது சென்னிக்கு அணியாமென்றவாறு.

ஆழ்வார்க்குக்கிடைத்த பேறு அவரடியார்க்கும் பேறாமெனக. (11)

ஒன்பதாந்திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி முதற்பத்து பத்தாந் திருவாய்மொழி — பொருமாநீள்படை.

அவதாரிகை. எம்பெருமானுடைய அநுக்ரஹம் நிர்ஹேதுகம் என்பது இத்திருவாய்மொழியில் அநுபவித்தருளிச்செய்யப்படுகிறது. கீழ்த் திருவாய்மொழியில் எம்பெருமான் தம்மோடே அவயவங்கள்தோறுங் கலந்த கலவியை அருளிச்செய்த ஆழ்வார் அந்தக் கலவியால் தமக்குப் பிறந்த அளவிலாத ஆனந்தத்தை இத்திருவாய்மொழிமுகத்தால் வெளியிடுகிறார் என்று இங்ஙனே சில ஆசார்யர்கள் நிர்வஹிப்பதுண்டு. பட்டர் விசேஷித்து நிர்வஹிப்பராம், எங்ஙனேயெனனில்; கீழ்த்திருவாய்மொழியில் "வந்து என துச்சியுளானே" என்றும் "உச்சியுள்ளேநிற்குந் தேவதேவற்கு" என்றும் தலைக்கொண்ட அநுபவம் தமக்குக் கிடைத்ததாக ஆழ்வாரருளிச்செய்தார். இனி அவ்வநுபவத்திற்காட்டிலும் ஏற்றமாகச் செய்துகொடுக்கக்கூடிய வேறு அநுபவம் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. அவ்வநுபவம் இடையறாது தொடர்ந்து செல்லுமாறு செய்து கொடுக்கவேண்டுமத்தனையே யுள்ளது. அது எம்பெருமான் திருவுள்ளத்தைப் பொறுத்த விஷயம். அது நிற்க. ஆழ்வார் கீழ்த் திருவாய்மொழியில் தமக்குப் பிறந்த பேற்றை ஆராய்ந்துபார்த்து இப்போது நமக்குக் கிடைத்தபேறு மிகவுங் கனத்திருக்கின்றது; இதிற்காட்டிலும் உத்தமமான பேறு வேறொன்றில்லை: இத்தகைய பேறு நமக்கு வந்த வழி என்ன? என்று விமர்சிக்கத்தொடங்கினார். இப்பேற்றிற்குத் தகுதியாயிருப்பதொரு நன்மை [அதாவது * இதற்குத் தக்க ஸாதநாநுஷ்டாநம்] தம்மிடத்தில் ஒன்றுமில்லையென்பதைத் தெரிந்துகொண்டார்; தம் தலையில் ஏதேனுமிருந்தாலும், அத்வேஷமோ ஆபிமுக்யமோ இருக்குமேயன்றி வேறொன்றிருப்பதாகக் காணவிடமில்லை. அவை ஸாதனமாக நினைக்கவொண்ணாதவை; இத்தலையிலே பரமபக்தியளவும் பிறந்தாலும் நம்மிடத்திலே ஸாதனமாக மதிக்கலாவதொன்றில்லையே; ஒருவன் ஓர் எலுமிச்சம்பழத்தைக் கொடுத்து ராஜ்யத்தைப் பெற்றால் அதற்கு அது விலையாக நினைக்கலாகுமோ? எம்பெருமானடியாக நமக்குக் கிடைக்கும் பேற்றுக்கு இத்தலையில் ஒரு ஸாதனமும் நிரூபிக்க வொண்ணாதே; 1. "வரவாறொன்றில்லையால் வாழ்வு இனிதால்" என்று ஆழ்வார்தாமே அருளிச்செய்யும் படியாயிற்றே. சேதநனை முதலிலே ஸ்ருஷ்டிக்கிறபோது 'இவன் தீயவழியைத் தப்பி நல்வழிபோகவேணும்' என்று உபகரணங்களைக் கொடுத்துவிடுகையாலே சேதநன் தலையால் பிறந்த நன்மைக்கும் அவனேயன்றோ மூலகாரணமாயிருக்கத் தகுதியுடையான்; புத்தி முதலிய ஸகல பதார்த்தங்களுக்கும் நிர்வாஹகனும் அவனேயாகையாலே அத்வேஷம் முதலாகப் பரமபக்தியீறாக எல்லா நன்மைகளையும் தானே பிறப்பிப்பான்; ஆகவே இப்படி எம்பெருமான் நிர்ஹேதுகமாகப் பண்ணிக்கொடுத்த பரமோபகாரம் என்னே! என்று உருகி உள்குழைந்து அநுஸந்திப்பதென்று ஒன்றுண்டே, அதுதான் இத்திருவாய்மொழியிற் செல்லுகிறது என்று.

கீழ்த் திருவாய்மொழியில் உன்மஸ்தகமாகப் பிறந்த கலவியின்பத்தை நினைத்து உருகுகிறாரென்பது மற்ற ஆசார்யர்களின் நிர்வாஹத்திற்கும் பட்டர் நிர்வாஹத்துக்கும் ஒக்கும். நிர்ஹேதுகத்வாநுஸந்தானத்தையும் கூட்டி ரஸிப்பிக்கை பட்டர் நிர்வாஹத்திற்குத் தனியேற்றம். இந்த நிர்வாஹத்தை ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகனும் ஆதரித்தருளினாரென்பது தாத்பர்யரத்நாவளியில் * **ஆத்மாவித்தம் பரத்வாதித் யாதி**ச்லோகத்தில் **அவ்யாஜோத்தாரபாவாத்"** என்றருளிச்செய்ததனால் ஸ்பஷ்டம்.

1\. பெரிய திருவந்தாதி.—56.

பொருமாநீள்படை ஆழிசங்கத்தொடு *
திருமாநீள்கழல் ஏழுலகுந்தொழ *
ஒருமாணிக்குறளாகி நிமிர்ந்த * அக்
கருமாணிக்கம் என்கண்ணுளதாகுமே * ... ... (1)

பொரு	— போர்செய்யவல்ல	ஒரு மாணி குறள் ஆகி நிமிர்ந்த	ஒப்பற்ற பிரமசாரிவாமனனாய் வளர்ந்தருளின
மா	— பெருமைதங்கிய	அ கரு மாணிக்கம்	நீலமணிபோன்ற அப் பெருமான்
நீள் படை	— சிறந்த ஆயுதமாகிய	என் கண் உளது ஆகும்	எனது கண்ணுக்கு இலக்காயினன்
ஆழி சங்கத்தொடு	— சங்கு சக்கரங்களோடுகூட		
திரு மா நீள் கழல்	(தனது மிகச்சிறந்த திருவடிகளை		
ஏழ் உலகும் தொழ	ஸகலலோகமும் தொழும்படியாக		

* * * —இத் திருவாய்மொழியிற் சொல்லுகிற அர்த்தத்திற்கு இப்பாசுரம் ஸங்க்ரஹமென்னலாம். மஹாபலியானவன் 'எம்பெருமான் நம்மிடத்திற்கு அழகிய திருக்கோலங்கொண்டு எழுந்தருளப்போகிறான்' என்று கனவிலும் கருதாதிருக்கையில், அவன் பக்கலில் தானே யாசகனாய்ச் சென்று நின்றாற்போலே எனக்கு நினைவின்றியேயிருக்கத் தானே வந்து தன் வடிவழகை என் கண்ணுக்கு இலக்காக்கினான்! என்று அவனது நிர்ஹேதுக விஷயீகாரத்தைச் சிந்தித்து உருகிப் பேசுகின்றார்.

பொருமாநீள்படையாழிசங்கத்தொடு = "என்னிதுமாயம் என்னப்பனறிந்திலன், முனைவண்ணமே கொண்டளவாயென்ன, மன்னு நமுசியை வானிற்சுழற்றிய" என்கிறபடியே, உலகளந்த காலத்தில் தடைசெய்த நமுசிபோல்வார் மீது அடல் காட்டினமை பொரு என்றவிடத்து விவக்ஷிதம். "இடங்கை வலம்புரி நின்றார்ப்ப எரிகான்று அடங்காரொடுங்குவித்ததாழி. விடங்காலுந் தீவாயரவணைமேல் தோன்றல் திசையளப்பான, பூவாரடிநிமிர்த்தபோது" என்ற பூதத்தாழ்வார் பாசுரமுங் காண்க.

இனி, பொரு என்பதற்கு, 'பகைவர்மீது போர் செய்கிற' என்ற பொருள் கொள்ளாது, தம்மில் தாம் போர்செய்கிற' என்றும் பொருள் கொள்ளலாம். எம்பெருமானுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்கள் அஸ்தானத்திலும் அச்சத்தை விளைவிப்பனவாதலால், திருவாழியாழ்வான்மீது திருச்சங்காழ்வான் அதிசங்கைகொள்ளுதலும் திருச்சங்காழ்வான்மீது திருவாழியாழ்வான் அதிசங்கை கொள்ளுதலும் ப்ராப்தம். சித்திரகூட மலைக்குவந்து ஸ்ரீராமபிரானைத் தொழவேணுமென்று பரமபக்தியோடு வருகின்ற பரதாழ்வானை குஹப்பெருமாளும் பரத்வாஜமஹர்ஷியும் இளையபெருமாளும் அதிசங்கித்தது முதலானவை இங்கு நினைக்கத்தக்கன.

ஆக இப்படிப்பட்ட திவ்யாயுதங்களை ஏந்தின அவ்வழகையும் தன் திருவடியையும் அனைவருங்கண்டு தொழும்படியாக விலக்ஷணவாமந ப்ரஹ்மசாரியாய்க்கொண்டு வளர்ந்த அக்கருமாணிக்கம் அவ்வழகோடே என் கண்ணுளதாயிற்று என்றாராயிற்று. . ... (1)

கண்ணுள்ளேநிற்கும் காதன்மையால்தொழில் *
எண்ணிலும்வரும் என்னினிவேண்டுவம் ? *
மண்ணும்நீரும் எரியுநல்வாயுவும் *
விண்ணுமாய்விரியும் எம்பிரானையே. * ... ... (2)

மண்ணும் நீரும் எரியும் நல் வாயுவும் விண்ணும் ஆய்	பூமிமுதலிய பஞ்ச பூதங்களையும் சரீரமாகவுடையனாய்க் கொண்டு	கண்ணுள்ளே நிற்கும்	(அவன்) நான் காணும்படியாக இருப்பன்;
விரியும்	—ஜகத்தாகப் பரம்புகின்ற	எண்ணிலும் வரும்	ஒன்று இரண்டு என்று எண்ணினாலும் வந்து நிற்பன்;
எம் பிரானை	— எம்பெருமானை	என் இனி வேண்டுவம்	இனிமேல் என்னகுறை?
காதன்மையால் தொழில்	பக்தியோடு தொழுதால்		

* * * — எம்பெருமான் அடியார்களுக்குக் காட்சி தருந்தன்மை எப்படிப்பட்டதென்றால், பரமபக்தியுக்தர்க்கு முகங்காட்டுவதுபோலவே எண்ணிக்கையிலே தன்னைக் குறிப்பிடுமவர்களுக்கும் முகங்காட்டுந்தன்மை யுள்ளதென்று இப்பாட்டில் கூறப்படுகின்றது [காதன்மையால் தொழில் கண்ணுள்ளே நிற்கும்] காதன்மையாவது பிரிவில் தரிக்கமாட்டாத பக்தி, அத்தகைய பக்தியோடு தொழுதால் அவர்களது கண்வட்டத்துக்கு அப்பால் போகமாட்டாதேயிருப்பான். [எண்ணிலும் வரும்] ஒன்று இரண்டு மூன்று என்று எண்ணிக்கொண்டேபோனால் 'இருபத்தாறு' என்னுமளவில் தன்னைக்குறித்ததாகக் கொண்டுவந்து நிற்பன்; 1. "பொங்கைம்புலனும் பொறியைந்துங் கருமேந்திரியமைம்பூதம், இங்கிவ்வுயிரேய பிரகிருதிமானாங்காரமனங்களே" என்கிறபடியே இருபத்திநான்கு தத்துவங்களுக்குமேல் இருபத்தைந்தாவது தத்துவம் ஜீவாத்மா, இருபத்தாறுவது தத்துவம் பரமாத்மா என்பது சாஸ்திரஸித்தாந்தமாதலால், ஒருவன் இதனையறியாமல் ஏதோ காரியப்பாடாக ஒன்று முதலாக எண்ணிக்கொண்டுபோந்து இருபத்தாறளவிலே வந்தால் அந்த எண் தன்னைக்குறித்ததாக எம்பெருமான் வந்து நிற்பன் என்கிறவிது — ஏதேனுமொரு வியாஜத்தையிட்டு எம்பெருமான் நம்மைக் கைக்கொள்வதில் மிக்க ஆற்றமுடையவன் என்பதைக்காட்டும். ஸ்ரீவசநபூஷணத்தில் நான்காவது பிரகரணத்தில் "த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க" என்று தொடங்கும் முதல் சூர்ணிகையிலே இவ்வர்த்தம் விரியக்காணத்தக்கது. "எண்ணிலும் வரும்" என்பதற்கு மற்றும் பலபடியும் பொருளுரைப்பர்.

என் இனி வேண்டுவம் = ஸர்வேச்வரனுடைய இயல்வு இதுவானபின்பு ஹிதாம்சத்தில் இனி நமக்கொரு குறையுண்டோ? பரமபக்திக்கும் பரிகணனைக்குமொக்க முகங்காட்டுவானானபின்பு இனியென்னகுறை?

மண்ணும் நீருமெரியு நல்வாயுவும் விண்ணுமாய் விரியுமெம்பிரானைக் காதன்மையால் தொழில்... .. என்று அந்வயிப்பது. 'எம்பிரானை' என்றதில் இரண்டாம் வேற்றுமையுருபைத்தள்ளி முதல் வேற்றுமையாகவே கொள்ளவுமாம். . . (2)

1. திருவாய்மொழி 10-7-10

எம்பிரானை எந்தைதந்தைதந்தைக்கும்
தம்பிரானை * தண்டாமரைக்கண்ணனை *
கொம்பராவுநுண்ணேரிடைமார்வனை *
எம்பிரானைத்தொழாய் மடநெஞ்சமே! * ... ... (3)

மடநெஞ்சமே	— விதேயமான மனமே!	அராவு	— ஸர்ப்பத்தினும்
எம் பிரானை	— எமக்கு உபகாரகனும்	நுண்	— நுட்பமான
எந்தை தந்தை தந்தைக்கும் தம் பிரானை	(நம்மளவில் நில்லாமல்) நம் குலத்திற்கெல்லாம் நாதனாயிருப்பவனும்	நேர்	— நேர்த்திபொருந்திய
		இடை	இடையை யுடையவளான பிராட்டியை
தண் தாமரை கண்ணனை	குளிரக்கடாக்ஷிக்கின்ற தாமரை போன்ற திருக்கண்களை யுடையவனும்	மார்பனை	— மார்பிலே உடையனுமான
		எம்பிரானை	— எம்பெருமானை
கொம்பு	— வஞ்சிக்கொடியினும்	தொழாய்	— வணங்குவாயாக.

* * * — எம்பெருமானுக்கு அடியார் திறத்தில் அளவிறந்த நீர்மைக்குக் காரணம் பிராட்டி ஸம்பந்தமேயென்று அதனை யநுஸந்தித்து அந்தத் திருமாலைத் தொழாய நெஞ்சே யென்று திருவுள்ளத்திற்கு உரைக்கிறார். எம்பெருமானுடைய விஷயீகாரம் தம்மொருத்தரோடே பர்யவஸித்துவிடாமல் 1. "கேசவன்தமர் கீழ்மேலெமரேழெழு பிறப்பும் மாசதிரிதுபெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா" என்னுமாபோலே ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் ஏறிப்பாயுந் தன்மையை அநுஸந்தித்த ஆழ்வார் "எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும் தம்பிரானை" என்று அழகாகப்பேச, அப்பாசுரத்தின் போக்யதையைக்கண்ட எம்பெருமான் 'இப்படி ஏத்துகிறவன் ஆர்?' என்று குளிரக் கடாக்ஷிக்கவே "தண்டாமரைக் கண்ணனைக்" என்று அக்கடாக்ஷத்திற்கு ஒரு பாசுரமிட்டார்.

குற்றமே வடிவான நம்மீது எம்பெருமான் இவ்வளவு விசேஷ கடாக்ஷஞ் செலுத்தக் காரணமில்லையே! என்ன காரணமென்று ஆராய்ந்துபார்த்து, கடாக்ஷிக்கச் செய்ய வல்ல பெரியபிராட்டியார் அருகே யிருக்கின்றாளென்பதுணர்ந்து அதனைப் பேசுகிறார் "கொம்பராவு நுண்ணேரிடை மார்பனை" என்று. மாதர்களின் இடைக்கு வஞ்சிக்கொம்பையும் அரவையும் உவமை கூறுதல் கவி மரபு.

இவ்விடத்து ஈடு முப்பத்தாறாயிரப்படியிலும் இருபத்திநாலாயிரப்படியிலும் "அரவு என்கிற வித்தை அராவு என்று நீட்டிக் கிடக்கிறது; நச்சராவணை என்னக்கடவதிறே" என்கிற வாக்கியம் காணப்படுகிறது. பெரியாழ்வார் திருமொழியில் (1-3-5.) "வழுவில்கொடையான் வயிச்சிரவணன்" என்ற விடத்திற்கு நாம் உரையிடுமிடத்து எழுதியுள்ள விஷயங்கள் இங்கு நோக்கத்தக்கன. "குறியதன்கீழ் ஆக் குறுகலுமதனோடு, உகரமேற்றலுமியல்புமாந் தூக்கின" என்ற நன்னூற் சூத்திரத்தின் பொருளை ஆராய்ந்தால் மேற்குறித்த வாக்கியம் ஆசாரியர்களருளிச்செய்ததாயிருக்கத் தகுதியில்லை யென்றும், காலக்ஷேபபரர்களால் ஓலை ஸ்ரீகோசங்களில் டிப்பணியாக எழுதி வைக்கப்பட்டுப் பிறகு வியாக்கியான பங்க்தியாகவே சேர்த்துச்சிடப்பட்டது போலு

1. திருவாய்மொழி, 2—7—1.

மென்றும் கருதத்தக்கதாக உள்ளது என்று பெரியோர்கள் திருவுள்ளம் பற்றுகின்றனர்: மேற்குறித்த ஸூத்திரமடங்கிய நன்னூல் கிரந்தம் ஆசாரியர்களின் காலத்தில் இல்லாதிருக்கலாமென்றும், அந்த ஸூத்திரத்தில் உணர்த்தப்படும் பொருள் ஒருசாரார் கொள்கையாயிருக்கலாமென்றும் அபிப்பிராயங்கொண்டு விவாதாஸ்பத வாக்கியம் உள்ளதுதானென்பாருமுளர்.

கொம்பும் அரவும் என்று உம்மைத் தொகையாகக் கொள்ளுதலின்றியே கொம்பை அரவுகின்ற நுண்ணிடை என்றுரைத்தலுமொன்று. வஞ்சிக்கொம்பை வென்ற என்பது தாற்பரியம். ... ... (3)

நெஞ்சமே! நல்லைநல்லை உன்னைப்பெற்றால்
என்செய்யோம்? * இனி யென்னகுறைவினம்? *
மைந்தனை மலராள்மணவாளனை *
துஞ்சும்போதும்விடாது தொடர்கண்டாய். * ... ... **(4)**

நெஞ்சமே — மனமே!

நல்லை நல்லை — நீ மிகவும் நன்மையையுடையை;

உன்னை பெற்றால்—உன்னை உதவியாகப் பெற்றால்

என் செய்யோம் — எதைத்தான் செய்து முடிக்க மாட்டோம்; (எதையுஞ்செய்து முடிக்கலாம்)

இனி என்ன குறைவினம் — இனி என்ன குறையை யுடையோம்?

மைந்தனை — நித்யயௌவன முடையவனும்

மலராள் மணவாளனை — திருமகள் நாதனுமான எம்பெருமானை

துஞ்சும் போதும்—நான் அகன்று மறந்த போதும்

விடாது தொடர் — நீ விடாமல் தொடர்ந்து நில்; (கண்டாய்—முன்னிலையசை)

* * * — "எம்பிரானைத் தொழாய் மடநெஞ்சமே!" என்று கீழே தானுசொன்னவாறே மேல்விழுந்து தொழுத நெஞ்சைக் கொண்டாடி, என்றைக்காவது நான் நைச்சியானுஸந்தானம் பண்ணிப் பிரியப் பார்த்துவிட்டாலும் நீ எம்பிரானை விடாமலே தொடரவேணுமென்று அந்த நெஞ்சையிரக்கிறார். சொன்ன காரியத்தையுடனே செய்த நன்மக்களைத் தாய் தந்தையர் மடியிலே வைத்துக் கொண்டாடுதல்போல இவரும் தமக்குப் பரமவிதேயமான நெஞ்சை **நல்லைநல்லை** யென்று கொண்டாடுகிறார். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;— "**நல்லைநல்லை**யென்கிற விப்ஸைக்குக் கருத்து என்னென்னில்; இவர்தாம் அவன் பக்கல் தூதுவிடுமாபோலே தனக்கு இவர் தூதுவிடவேண்டும்படி இவர் தம்மைவிட்டு அவன் பக்கலிலே நிற்கவல்ல நெஞ்சாகையாலே, "என்னெஞ்சினாரைக் கண்டாலென்னைச் சொல்லியவரிடை நீரின்னஞ் செல்லீரோ" என்னும்படி முந்துற்ற நெஞ்சாகையாலே நல்லைநல்லை யெனகிற மிகை."

எம்பெருமான் பக்கலில் நாரை கொக்கு கிளி பூவை முதலியவற்றைத் தூதுவிடுதல் போலவே, அவனிடத்துச் சென்ற தமது நெஞ்சைக் குறித்தும் 1. "அன்னஞ்செல்வீரும் வண்டானஞ்செல்வீருந் தொழுதிரந்தேன்" என்று சில பறவைகளை யாசித்துத் தூதுவிட வேண்டும்படியிருத்தலால் இத்தகைய வைலக்ஷண்யந் தோற்றுமாறு **நல்லைநல்லை** என்றிரட்டித்துக் கூறப்பட்டதென்றவாறு.

1. திருவிருத்தம்—30.

உன்னைப்பெற்றால் என் செய்யோம் = நீ எனனோடு ஒத்திருந்த பினபு எனக்குச செய்யமுடியாததுண்டோ? பேறு தருகைக்கு எம்பெருமானுண்டு; விலக்காமைக்கு நீயுண்டு; இனிச்செயய முடியாததுண்டோ? என்று சொனனவாறே, சிறிது ஆராய்ந்து பார்த்தார்; "உன்னைப்பெற்றாலென்செய்யோம்" என்று சொல்லுவதற்கே ப்ரஸக்தி யில்லையே; ஸாத்யமான அமசம ஏதாவது இருந்தாலன்றோ அங்ஙனஞ் சொல்லவேண்டும; நெஞ்சு அநுகூலித்திருப்பது தானே பறறாசாக எம்பெருமான் எல்லாஞ்செய்து முடிப்பானாதலால் இனியொரு குறையுமில்லை யெனறுணர்ந்து அதனை வெளியிடுகிறார் **இனியென்ன குறைவினம்** எனறு.

குறைவினம் = குறையுடையோம். இனிமேல் நெஞசுக்கு எனன காரியமெனன, ஒனறு விதிக்கிறார பினனடிகளில்; நான் அவனைக் கிட்டினவாறே "வளவேழுலகினமுத லாய" எனகிற திருவாயமொழியிறபடியே நைசசியாநுஸந்தானம பணணி அகலப பார்பபதொன்றுண்டு; அப்போது அவனை நீ விடாதேகிடாய என்கிறார்.

துஞ்சும்போதும் = துஞ்சுதலாவது உறஙகுதல்; இச் சொல் விநாசபரியாயமாக வே பெரும்பாலும பிரயோகிககபபடும; ஆழவார் தமககு விநாசமாக நினைபபது பகவத் விச்லேஷத்தையே யாதலாலும, நிர்ஹேதுக விஷயீகார ஸக்தனாகிய பகவான் இனித் தான் அகலமாட்டாமையாலும, நைச்சியாநுஸந்தானம பணணித் தாமே அகலத் தேடுவராதலாலும் அந்த ஸமயத்திலும நெஞ்சு அவனை விடாது தொடரவேணு மென்பதே இங்கு விவக்ஷிதமென்க. ... . (4)

கண்டாயேநெஞ்சே! கருமங்கள்வாய்க்கின்று * ஓர்
எண்டானுமின்றியே வந்தியலுமாறு *
உண்டானை உலகேழுமோர்மூவடி
கொண்டானை * கண்டுகொண்டனைநீயுமே. * . .. ... (5)

நெஞ்சே	— மனமே!,
கருமங்கள் வாய்க்கின்று	காரியங்கள் பலிக்குமிடத்தில்
ஓர் எண் தானும் இன்றியே	(நமமுடைய) நினைவு ஒன்றுமேயில்லாமல்
வந்து இயலும் ஆறு	பலித்துவருகிறபடியை
கண்டாயே	— பார்த்தாயோ?
(எங்ஙனே யெனின்)	
உலகு ஏழும்	— ஏழு லோகங்களையும்
உண்டானை	— (பிரளயத்தில்) விழுங்கினவனும்
ஓர் மூ அடி கொண்டானை	(மற்றொருகால் அவ்வுலகங்களை) மூன்றடிகளாலே அளந்துகொண்டவனுமான பெருமானை
நீயும் கண்டு கொண்டனை	நீயும் காணப்பெற்றாயன்றோ?

* * * — இத்திருவாயமொழியை நிர்ஹேதுக விஷயீகாரபரமாக பட்டர் நிர்வஹித்த தறகு இப பாசுரமே நிதானமா யிருக்கும். கீழ இரண்டாம் பாட்டில் "எண்ணிலும வரும" என்று பரஸதுதமான எண தானுமில்லாமல் அவனே மேல்விழுந்து விஷயீ கரித்தபடியை நெஞசுககு ஊதலிக்கிறார்.

நெஞசமே! ஜ்ஞான பரஸாத்வாரமான உனககு நான் சொல்லவேண்டுமோ? நான சொனனபடியே பலன் கைபுகுநதமை கண்டாயே; காரியம பலிக்கத் தொடங்கி விட்டால் அசிந்திதமாகவே பலித்துத் தீருமென்று உலகஞ் சொல்லுகிறபடியே

பலித்துவிட்டதுகாண் என்றார்; அப்படி என்ன பலித்துவிட்டது' என்ன; பின்னடிக ளாலே அதனை நிரூபிக்கிறார். பிரளயங்கொண்ட ஜகத்துக்கு 'அவன் நம்மை வயிற்றிலே வைத்து நோக்கியருளவான' என்னும் நினைவு உண்டோ? அவன் ஒருமாணிக்குறளாகி நிமிர்ந்து உலகங்களை அளக்கிறபோது நம் தலையிலே திருவடிகளை வைக்கப்புகாநின் றான்' என்றும் நினைவுண்டோ? அப்படி நீயும் நினையாதிருக்க அவனைக் காணப்பெற் றாயே! வேறு என்ன பிரதானம் வேண்டும்? ... (5)

நீயும்நானும் இந்நேர்நிற்கில் மேல்மற்றோர்
நோயுஞ்சார்கொடான் நெஞ்சமேசொன்னேன் *
தாயுந்தந்தையுமாய் இவ்வுலகினில் *
வாயுமீசன் மணிவண்ணனெந்தையே. * .. .. (6)

நெஞ்சமே — மனமே!
நீயும் நானும் — நீயும்நானுமாக
இ நேர் நிற்கின் — இந்த நிலையிலே நின்றால்
மேல் — இனிமேல்;
இ உலகினில் — இவ்வுலகத்தில்
தாயும் தந்தையும் ஆய் — மாதாவும் பிதாவுமாகி
வாயும் — அவதரித்துள்ளவனும்
மணி வண்ணன் — நீலமணிவண்ணனும்
எந்தை — எமக்கு ஸ்வாமியுமாகிய
ஈசன் — ஸர்வேச்வரன்
மற்று ஓர் நோயும் சார்கொடான் — வேறொரு துன்பமும் அணுக வொட்டான்;
சொன்னேன் — இது உண்மையாகச் சொன் னேன்.

* * * — "விடாது தொடர்கண்டாய்" என்ற ஆழ்வாரை நோக்கி நெஞ்சானது, நான் விடாது தொடர்கிறேன். அவன் விட்டால் செய்வதென்? என்ன; நைச்சியாநுஸந் தானம்பண்ணி நாம் அகலாதொழியில் நம்மை யொருநாளும் அவன் விடானென்கிறார்.

தாயைப்போல் ப்ரியமே நடத்துபவனும் தந்தையைப்போல் ஹிதமே நடத்து பவனும் இந்த லோகத்தி லவதரித்து வந்து தன்னுடைய நிருபாதிக ஸ்வாமித்வமே யடியாகத் தன்னுடைய நீலரத்னம்போலே யிருக்கிற வடிவை எனக்கு உபகரித்து அவ் வழியாலே என்னை யடிமைகொண்ட ஸ்வாமியானவன், நெஞ்சே! எனக்குக் காரணமா யிருக்கின்ற நீயும் உன்னைக் கரணமாகவுடைய நானும் இப்போதுள்ள நிலையிலேயே நிலை நின்றிருப்போமாயின் மேலுள்ள காலமெல்லாம் ஸ்வாநுபவமொழிய மற்றும் நோயா யிருப்பதொன்றையும் சேரக்கொடான்; இப்பரமார்த்தத்தை யுனக்குச் சொன்னேன் என்கிறார். .. .. (6)

எந்தையேயென்றும் எம்பெருமானென்றும் *
சிந்தையுள்வைப்பன் சொல்லுவன்பாவியேன் *
எந்தையெம்பெருமானென்று வானவர்
சிந்தையுள்வைத்து * சொல்லும்செல்வனையே. ... ... (7)

வானவர் — நித்யஸூரிகள்
எந்தை எம்பெருமான் என்று — 'எந்தையே! எம்பெருமானே!' என்று
சிந்தையுள் வைத்து — மனத்தினால் சிந்தித்து
சொல்லும் — வாயினால் தோத்திரஞ் செய்யப்பெற்ற
செல்வனை — ஸ்ரீ மானாகிய எம்பெருமானை
பாவியேன் — பாவியாகிய நான்

எந்தையே என்றும்	எந்தையே! என்றும்	சிந்தையுள் வைப்பன்	மனத்தில் வைப்பேன்
எம்பெருமான் என்றும்	எம்பெருமானே என்றும்	சொல்லுவன	— வாயினாலுஞ் சொல்லுவேன்.

* * — = ந அச்லீலம் கீர்த்தயேத்” என்று வேதபுருஷன் சொன்னான், அச்லீலமான விஷயத்தை வாயினால் சொல்லக்கூடாது என்றபடி. ஏதச்சியாநுஸந்தானம் பண்ணி அவனை விட்டுப்பிரிதல் என்கிற அச்லீலத்தை இவர் தாமே ¶ ப்ரஸ்தாவித்தமையால் அப்படியே வந்து புகுந்தது, அயோக்யன் என்று அகலுகிறாரிப்பாட்டில். அவனுடைய மேன்மையையும் தம்முடைய தாழ்வையும் பார்த்து * அயர்வறுமமரர்கள் தங்கள் சிந்தையுள்ளே வைக்கவும் தங்கள் வாயாலே துதிக்கவும் வாய்ந்த பெருமானை என் சிந்தையிலும் என் வாக்கிலுங் கொண்டு கெடுத்தேனித்தனை; என்ன பாவியோ நான் என்று தம்மைத் தாமே வெறுத்துக்கொள்ளுகிறார். (7)

செல்வநாரணனென்ற சொல்கேட்டலும் *
மல்குங்கண்பனி நாடுவன்மாயமே *
அல்லுநன்பகலும் இடைவீடின்றி *
நல்கியென்னைவிடான் நம்பி நம்பியே. ... ... (8)

செல்வம் நாரணன் என்றசொல்	ஸ்ரீமந் நாராயணன் என்கிற வார்த்தையை	மாயமே	—இது ஆச்சரியமே;
கேட்டலும்	— கேட்டவளவிலே	நம்பி	எல்லாவற்றாலும் நிறைந்த அப்பெருமான்
கண்	— கண்களானவை	நல் அல்லும் பகலும்	—நல்ல இரவும் பகலும்
பனி மல்கும்	— நீர் ததும்புகின்றன	இடை வீடு இன்றி	— இடைவிடாமல்
நாடுவன்	(எங்குற்றாய் எம்பெருமான்! என்று அவனைத்) தேடாநின்றேன்;	நல்கி	— கிருபை பண்ணி
		நம்பி	—என்மேல் விருப்பங் கொண்டு
		என்னை விடான்	— என்னை விடாதிருக்கிறான்.

* * * — விலக்ஷணர்கள் தாமே ஈடுபடுத்தற்குரித்தான பகவத் விஷயத்தில் தாம் ஈடுபடுவது தகாதென்று உறுதிகொண்ட ஆழ்வார், பகவத் விஷயம் நடையாடாததோரிடத்திலே கிடக்கவேணுமென்று போய் ஒரு குட்டிச்சுவரிலே முட்டாக்கிட்டுக் கொண்டு கிடந்தாராம்; அங்கே பெருஞ்சுமை யெடுத்துப்போகிற ஒரு வழிப்போக்கன் சுமை கனத்ததனால் அதனைக் கீழே தள்ளுமவன் ‘ஸ்ரீமந்நாராயணா!’ என்று சொல்லிக்கொண்டே தள்ளினானாக, அச் சொல் செவிப்பட்ட மாத்திரத்திலே தம்முடைய கரணங்கள் மீண்டும் பகவத்விஷயத்தில் பரவசமானபடியைக் கண்டு வியக்கிறார். ஆழ்வாருகில் பரஹ்மசாரி நாராயணன் பேர் சொல்லுவாரில்லாதலால் வழிப்போக்கனும் ஸ்ரீமந்நாராயணாவென்றே சொன்னானாயிற்று. அச் சொல் காதிற்பட்ட மாத்திரத்திலே கண்கள் பரவசமாய்ப் பனிமல்க, நெஞ்சும் எங்குற்றாய் யெம்பெருமானென்று தேடப்புகுந்தது; இப்படி நான் அவனை விட்டொழியவேணுமென்று ஸங்கல்பித்தாலும் விடமாட்டாதபடி யாவதற்குக் காரணமேதென்னில்; அவன் என்னை விடமாட்டாமையே என்கிறார்.

[அல்லும் நன்பகலும்.] நல் என்ற அடைமொழி அல்லிலும் பகலிலும் அந்வயிக்கக்கடவது.

¶ நான்காம் பாட்டில் “அருசும் போதும்” என்றதனால்

தம்முடைய விருப்பமில்லாதிருக்கச் செய்தேயும் தம்முடைய கரணங்களுக்கு பகவதநுபவமே யாத்ரையாம்படி அவன் மேல்விழுகிற காலமாதலால் நல்ல இரவும் நல்ல பகலுமென்கிறார். ... ... (8)

நம்பியைத் தென்குறுங்குடிநின்ற * அச்
செம்பொனேதிகழும் திருமூர்த்தியை *
உம்பர்வானவர் ஆதியஞ்சோதியை *
எம்பிரானை யென்சொல்லிமறப்பனோ? * ... ... (9)

நம்பியை	—கல்யாண குண பரிபூர்ணனும்	ஆதி	—காரணபூதனும்
தென் குறுங் குடி நின்ற	திருக்குறுங்குடியிலே நிற்பவனும்	அஞ் சோதியை	—அழகிய ஒளியுருவனுமாகிய
அ செம்பொனே திகழும் திரு மூர்த்தியை	அழகிய செம்பொன் போலவே பிரகாசிக்கின்ற திருமேனியை யுடையவனும்	எம் பிரானை	—எம்பெருமானை
		என் சொல்லி	—என்னவென்று
உம்பர் வானவர்	—மேலான நித்ய ஸூரிகளுக்கு	மறப்பன்	—மறப்பேன்.

* * * — அவன் விடாதிருந்தாலிருக்கட்டும்; நீர் அவனை மறந்து ஸம்ஸாரிகளைப் போலே * உண்டியே உடையே உகந்தோடித் திரியமாட்டீரோ வென்னன, நான் எதையிட்டு அவனை மறப்பது? மறக்குமவகை தெரியவில்லையே யென்கிறார்.

நம்பியைத் தென்குறுங்குடிநின்ற = பரமபதத்திலும் எம்பெருமான் ஸகல குணங்களும் நிரம்பப்பெற்றவனாயினும் அங்கு எம்பெருமானிற் குறைந்தாரில் லாமையாலே வாத்ஸல்யம் ஸௌசீல்யம் முதலிய எண்ணில் பல்குணங்கள் உபயோகப்படாமே கிடந்து இந்நிலத்தில் அர்ச்சாவதாரங்களில் இருட்டறையில் விளக்குப்போலே பிரகாசிப்பன வாதலால், பரிபூர்ணன் என்னும் பொருளையுடைய **நம்பி** என்னுஞ் சொல் அர்ச்சாவதாரத்திலே அமையக்கிடக்கின்றதென்க.

அச் செம்பொன் = பத்துப் பாட்டுள் பெரும்பாணாற்றுப் படையில் "அவ்வாய வளர்பிறை" என்பதற்கு "அழகிய இடத்தையுடைய வளரும் பிறை" என்றும், நெடுநல்வாடையில் "அவ்விதழவிழ்பதம்" என்பதற்கு "அழகிய இதழ்கள் விரியுஞ் செவ்வி" என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியார் உரையெழுதிப் போந்தமை கொண்டு இங்கு "அச் செம்பொன்" என்பதற்கு "அழகிய செம்பொன்" என்று பதவுரை கூறப்பட்டது. இனி, அகரத்தைச் சுட்டாகக் கொண்டு உரைத்தலுமாம்.

அயர்வறுமமரர்களோடேகூடத் திருக்குறுங்குடியிலே நின்றருளித் தன்னுடைய ஒப்பற்ற வடிவழகைக் காட்டி என்னைத் தோற்பித்துத் தன் பக்கலிலே விழவிட்டுக்கொண்டான்; இனி எங்ஙனே அவனை நான் மறக்கும்படி? பூர்த்தி யில்லாதவனென்று மறக்கவோ? ஸமீபஸ்தனல்லன் என்று மறக்கவோ? வடிவழகில்லையென்று மறக்கவோ? மேன்மையில்லையென்று மறக்கவோ? எனக்கு உபகாரஞ் செய்பவனல்லன் என்று மறக்கவோ? எதையிட்டு மறப்பேனென்கிறார்.

குறுங்குடி = இது பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் ஒன்று. குறுகியவனான வாமனனது க்ஷேத்ரமாதலால் இத் தலத்திற்குக் குறுங்குடியென்று பெயர் வந்ததென்பர். இத்தலத்திலுள்ள எம்பெருமான்களுள் ஒரு எம்பெருமான் ஸ்ரீபாஷ்யகாரர் பக்கலிலே திருமண்காப்பு சாத்திக்கொண்டு வேதாந்தார்த்தமுங்கேட்டு சிஷ்யனாய் 'நாமும் நம்மிராமாநுசனையுடையோம்' என்கையாலே அப்பெருமானுக்கு வைஷ்ணவநம்பி யென்று திருநாமம். ஆனது பற்றியே 'வைஷ்ணவ வாமந க்ஷேத்ரம்' என்றும் இத்தலம் வழங்கப்படும். நம்மாழ்வார் திருவவதாரத்திற்குக் காரணமாயிருந்தவரும் இத்தலத்து நம்பியே.

செம்பொனேதிகழுந் திருமூர்த்தி = எம்பெருமானுடைய வடிவு காளமேக நிபசியாம மென்று வருணிக்கப்பட்டிருக்க, 'செம்பொனே திகழுந் திருமூர்த்தி' என்று இங்குச் சொன்னது தேஜஸ்ஸின் மிகுதியைப் பற்றவென்க. "கநகமரதகாநுஜநத்ரவாணும் மதநஸமுத்தித ஸாரமேளநோத்தம், ஜயதி கிமபி ரூபமஸ்ய தேஜ:" என்ற ஸுந்தரபாஹுஸ்தவ ஸூக்தியும், "த்ருதகநகஜகிரிபரிமிலதுததிப்ரசலிதலஹரிவதஹ மஹ மிகயா, ஸ்நபயதி ஜநமிம மபஹரதி தம: பணிசயமரதக மணிகிரணைகண:" என்ற ஸ்ரீரங்கராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியும் காணத்தக்கன. ... . (9)

மறப்பும்ஞானமும் நானொன்றுணர்ந்திலன் *
மறக்குமென்று செந்தாமரைக்கண்ணொடு *
மறப்பறவென்னுள்ளே மன்னினான்தன்னை *
மறப்பனோ வினி யானென்மணியையே. ... ... **(10)**

மறப்பும் ஞானமும் ஒன்று — மறத்தலும், அறிதலுமாகிய ஒன்றையும்
நான் உணர்ந்திலன் - நான் அறியேன்;
(இப்படியிருக்க)
மறக்கும் என்று — இவன் நம்மை மறந்துவிடுவான் என்று நினைத்து
செம் தாமரை கண்ணொடு — செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களோடு
மறப்பு அற —மறப்புக்கு அவகாசமில்லாதபடி
என் உள்ளே — எனது நெஞ்சினுள்ளே
மன்னினான் தன்னை - நிலைபெற்றிருந்தவனை
என் மணியை — எனது நீலரத்னமாகிய எம்பெருமானை
இனி யான் மறப்பனோ — இனி நான் மறப்பேனோ? (ஒருநாளும் மறவேன்)

* * * —வருந்தியாகிலும் அவன் பக்கலில் நின்றும் நெஞ்சை மீட்டு அவனை மறந்திருந்தாலோவென்ன, தன்னை நான் மறவாமைக்காகத் தன்னுடைய அழகிய திருக்கண்களோடேகூட என்னுள்ளே புகுந்து எனக்கு மிகவும் எளியனாய்க்கொண்டு 'இனிப் பேரேன்' என்றிருந்தருளினானாதலால் அவனை நான் மறக்கவிரகில்லையே யென்கிறார்.

மறப்பும் ஞானமும் நானொன்று உணர்ந்திலன் = மறப்பென்றும் ஞானமென்றும் ஒன்றுமறிந்திலேன்நான். நான் ஒரு சேதநனாயிருந்து, நினைத்தது என் அதீனமாயிருந்தாலன்றோ மறப்பும் என்னதீனமாவது; அசித்கல்பனாயன்றோ நானிருந்தது. இப்படிப்பட்ட நான் நினைந்தேனாகவும் நினைவையும் என் தலையிலே யேறிட்டு 'பிறந்த

ஞானத்திறந்து இடைவீடு வரவொண்ணாது' என்றுபார்த்து அழகிய திருக்கண்களாலே குளிர நோக்கிக்கொண்டு தன்னைப்பற்றி யெனக்குவரும் மறப்புப்போம்படி என்னுள்ளத்தினுள்ளே நித்யவாஸம் பண்ணுகிறவனை எங்ஙனே மறப்பேன்?

ஈற்றடிக்கு கருத்து காண்மின்—; "பெருவிலையனான ரத்னம் கைபுகுந்தால் அத்தை முடிந்து அநுபவியாதே உதறுவர்களோ? . ... (10)

மணியைவானவர்கண்ணனைத் தன்னதோ
ரணியை * தென் குருகூர்ச்சடகோபன் * சொல்
பணிசெயாயிரத்துள் இவைபத்துடன் *
தணிவிலர்கற்பரேல் கல்விவாயுமே. .. .. .. (11)

மணியை	—நீலமணிபோன்றவனும்	ஆயிரத்துள்	—ஆயிரத்தினுள்
வானவர் கண்ணனை	நித்ய ஸூரிநாதனும்	இவை பத்து	— இப்பத்துப் பாட்டையும்
தன்னது ஓர் அணியை	தனக்குத்தானே ஒராபரணமாயிருப்பவனுமான பெருமானைக் குறித்து	உடன்	—கருத்துடன்
		தணிவு இலர்	— த்ருப்தி பெறாதவர்களாய்
தென் குருகூர் சடகோபன்:—;		கற்பர் எல்	—கற்பாராயின் (அவர்களுக்கு)
சொல் பணி செய்—	வாசிக கைங்கர்யஞ்செய்த	கல்வி வாயும்	— ஞானம் நிரம்பும்.

* * * — இப்பதிகத்தைக் கற்பவர்கள் ஒப்புயர்வற்ற புருஷார்த்தமான பகவத் கைங்கரியத்தைப் பெறுவரென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது

மணியை = மணிக்கும் எம்பெருமானுக்கும் ஒப்புமை பலபடிகளாலே சொல்லத் தகுதியுண்டு. மணியாவது ரத்னம்; அது தன்னைப் பெற்றவர்களையும் பெற விருப்பமுடையாரையும் இரவும் பகலும் கண்ணுறங்கவொட்டாது; எம்பெருமான் படியும் அப்படியே; "கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே" என்கிறபடியே காண்பதற்குமுன்பு முமுக்ஷுக்களை யுறங்கவொட்டான்; கண்டபின்பும் * **ஸதாபஶ்யந்தி** யாகையாலே நித்யமுக்தர்களை உறங்கவொட்டான.

ரத்னம் எவ்வளவு விலையுயர்ந்ததாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம்படியிருக்கும்; எம்பெருமானும் பரத்வத்தை மறைத்து ஸௌலப்யத்தைக் காட்டுவனிறே.

ரத்னம், கடல் மலை முதலிய இடங்களில் உள்ளது; எம்பெருமானும் திருப்பாற்கடல் திருமலை முதலான இடங்களில், "மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய்." என்கிற படியே யுள்ளன.

ரத்னமானது தன்னையுடையவனை மார்பு நெறிக்கப்பண்ணும்; எம்பெருமானும் அப்படியே: "எனக்காரும் நிகரில்லையே" "மாறுளதோவிம்மண்ணின்மிசையே" "எனக்கென்னினி வேண்டுவதே" "இல்லையெனக் கெதிரில்லையெனக் கெதிரில்லை யெனக்கெதிரே" என்று செருக்கிப் பேசுவர்களிறே எம்பெருமானையுடையார்.

ரத்னமானது தன்னைக் கைக்கொண்டவனை உலகமெல்லாம் அநுவர்த்திக்கும்படி பண்ணும்; எம்பெருமானும் அப்படியே; "மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச" இத்யாதிகள் காண்க.

ரத்னமானது இடையில் ஒரு புருஷனைக்கொண்டே வாங்கப்படும்; எம்பெருமானும் அப்படியே; புருஷகாரமின்றிப் பெறமுடியாதிறே எம்பெருமானை. "வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" இத்யாதி.

ரத்னமானது சிலசில ஆச்ரயங்களில் அதிகமான மதிப்புப் பெறும்; எம்பெருமானும் அப்படியே, ஆழ்வார்கள் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட திருப்பதிகளிலேயிறே எம்பெருமானுக்கு மதிப்பு அதிகம்.

ரத்னம் ஒளியைவிட்டு இராது; எம்பெருமானும் பிராட்டியைவிட்டு இரான்; "தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ" இத்யாதிகள் காண்க.

ரத்னமானது தன்னையிழந்தவனைக் கதறிக்கதறியழப்பண்ணும்; எம்பெருமானும் அப்படியே; ஸ்ரீராமரத்னத்தையிழந்த பரதாழ்வான் ஸபையிற் புரண்டு கதறியழுதமை ஸ்ரீராமாயணத்தில் ப்ரஸித்தம். 'பழுதே பலபகலும் போயின' வென்று கதறியழுவர் விவேகமுடையார், 1. "இன்பத்தையிழந்த பாவியேனெனதாவி நில்லாதே" 2. "எழில் கொள் நின்திருக் கண்ணிணை நோக்கந் தன்னையுமிழந்தேனிழந்தேனே" 3. "உன்னைக் காண்பான் நானலப்பாய் ஆகாயத்தை நோக்கியழுவன்" என்றபடியெல்லாம் கதறுவர்கள்—இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்கள் கண்டுகொள்க.

வானவர்கண்ணனை = கீழ் 'மணியை' என்பதனாற்சொன்ன எளிமைக்கு எதிர்த்தட்டான மேன்மை இதனாற் சொல்லப்படுகிறது. பரத்வத்தைக்கண்டு அஞ்சுமவர்கட்கு ஸௌலப்யத்தை மூதலிப்பதும், ஸௌலப்யத்தை நோக்கி அநாதரிக்க நினைப்பார்க்குப் பரத்வத்தை நிரூபணம்பண்ணித் தெளிவு பெறுவிப்பதுமேயன்றோ ஆழ்வார்களுக்குப் பணி.

தன்னதோரணியை = தனக்குத்தானே ஆபரணமாயிருப்பவன். பெருமாள் ஆபரணங்களை அணிந்துகொள்வது அவ்வாபரணங்களுக்கு அழகு கொடுக்கைக்காகவேயல்லது அவற்றால் தான் அழகுபெறுவதற்கன்றே. "ஆபரணத்துக்கு அழகுகொடுக்கும் பெருமாள்!" என்று அழகியமணவாளனுக்குக் கட்டியம். "நிம் நு ஸ்வயம் ஸ்வாத்ம விபூஷணம் பவந் அஸாவலங்கார இதீரிதோ ஜநை:" என்ற ஸுந்தர பாஹுஸ்தவமுங் காண்க.

இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயமாக நம்மாழ்வார் வாக்கினாலே அடிமை செய்ததாகிய ஆயிரத்தினுள் இத்திருவாய்மொழியைக் கருத்துடன் கற்பவர்கட்கு ஞானபலம் கைகூடும் என்றதாயிற்று.

---

1. பெருமாள் திருமொழி. 2, பெருமாள் திருமொழி. 3, திருவாய்மொழி 5—8—4.

கல்வி வாயும் என்பதற்கு இரண்டுவகையாகப் பொருளுரைப்பர்; ஞானமுண்டாகுமென்பது ஒரு பொருள்; ஞானம் ஸபலமாகுமென்பது மற்றொரு பொருள். "ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு". என்கிறபடியே ஞானமானது பகவத்விஷயத்தைப்பற்றினதாகவே யிருக்குமாதலால் அது ஸபலமாகையாவது கைங்கர்ய பரியந்தமாகை. . .. . (11)

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்

இயற்றிய

திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகையில் முதற்பத்து முற்றிற்று.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

Printed at The Forward Printers, 40, Sarangapani koil East Street, KUMBAKONAM.